Volume XXXI Part II

ANNALS OF ORIENTAL RESEARCH

UNIVERSITY OF MADRAS

MADRAS UNIVERSITY
POST-CENTENARY SILVER JUBILEE
AND
MAHAKAVI SUBRAMANIA BHARATHIAR CENTENARY MEMORIAL VOLUME

Editor-in-Chief
Prof. Dr. N. SANJEEVI
Head, Dept. of Tamil Literature
University of Madras

UNIVERSITY OF MADRAS
1983

© University of Madras, 1983

Copies of the Annals of Oriental Research can be had from:

THE REGISTRAR
UNIVERSITY OF MADRAS
MADRAS-600 005

8217
20.3.87
410
SAN

Books for review, exchange etc. may be sent to:

Dr. N. SANJEEVI, M.A., M.Litt., Ph.D.,
EDITOR-IN-CHIEF, ANNALS OF ORIENTAL RESEARCH,
UNIVERSITY OF MADRAS,
UNIVERSITY ANNEXE, MARINA, MADRAS-600 005.

Printed at
Rathnam Press, 41, Badrian Street, Madras-600 001.

Annals of Oriental Research

EDITORIAL BOARD

Dr. N. SANJEEVI *Editor-in-Chief*	*Tamil Literature*
Dr. C. BALASUBRAMANIAN	*Tamil Language*
Dr. G. APPA RAO	*Telugu*
Dr. K. M. PRABHAKARA VARIAR	*Malayalam*
Dr. KUSHALAPPA GOWDA	*Kannada*
Dr. N. VEEZHINATHAN	*Sanskrit*
Dr. NAJMUL HODA	*Arabic, Persian and Urdu*
Dr. S. N. GANESAN	*Hindi*

FOREWORD

DR. M. SANTAPPA, Ph.D (Lond.), Ph.D., (MANCH.), F.N.A., F.A SC,.F.R.I.C.
(Vice-Chancellor, University of Madras)

The Oriental Research Institute of the University has been bringing out the compilation of research papers contributed by the staff of the institute under the title "Annals of Oriental Research" for the past several decades. The present volume XXXI is being presented as the "Madras University Post-Centenary Silver Jubilee and Mahakavi Subramania Bharathiar Centenary Memorial" volume.

On this occasion, it may be appropriate to quote the following : "Education is that which liberates. It should, therefore, not only train the intellect but bring grace into the heart of man. Mental slums are more dangerous to mankind than material slums. No University can regard itself as a true University unless it brings out young men and women who are not only learned but whose hearts are full of compassion for suffering humanity. We should, therefore, try to integrate with our daily lives the values on which the edifice of our social structure stands—the values of socialism, secularism and democracy. University education should, therefore, foster reverence for life and talent for growing without exploiting others".

I have no doubt in my mind that the above ideals have been fostered and nurtured by the University during the 125 years of its existence. Bharathiar, one of the greatest national poets of modern times, also stood for these ideals.

It is therefore quite appropriate that the Editor-in-chief Prof. N. Sanjeevi and the Editorial Board have thought it fit to bring this volume as the "Madras University Post-Centenary Silver Jubilee and Mahakavi Subramania Bharathiar Centenary Memorial Volume". The articles and research papers published maintain the quality of research evidenced in earlier volumes Much effort and pain have been taken to present the various aspects of Bharathiar's poems and also themes of nationalism which were dear and near to the heart of Poet Bharathiar. I congratulate Prof. N. Sanjeevi and his Editorial Board for the commendable work done by them.

(Sd.) M. SANTAPPA

A WORD OF THANKS

This Memorial Volume of the Annals of Oriental Research is different in content from the regular issues. Brought out as a special volume with the dual purpose of commemorating the Post-Centenary Silver Jubilee of the University and the Birth Centenary of Mahakavi Subramania Bharati, the editing has been selective.

This issue contains the papers presented in the Seminar on *Bharati and Nationalism in Indian Poetry* held on the 16th and 17th December, 1981 and a few papers on related subjects received from others on request. As the Convener of the Seminar, I deem it my duty to expess our thankfulness to the authorities of the University for permitting to conduct the Seminar and to the Vice-Chancellor Dr. M. Santhappa for the keen interest he took in it. My thanks are due to Dr. N. Sanjeevi, Professor & Head of the Department of Tamil Literature for giving all encouragement, support and co-operation, even by helping with funds in exigency and for taking initiative, as the Editor of the Annals of Oriental Research, to publish all the papers in this special volume of the journal. I thank all the participants of the Seminar and the scholars who have later contributed papers for this issue. I have a word of apology to those colleagues who could not contribute papers to this issue of the Annals of Oriental Research due its restrictiveness of the subject.

Covering the diverse aspects of the creative works of Bharati and the different features of Indian nationalism as depicted in the poetry of various languages, it is hoped, that this volume will be a fitting memorial for the great poet of all times.

S. N. GANESAN
Convener
Seminar on Bharati and Nationalism in Indian Poetry.

பொருளடக்கம்

எண்	தலைப்பு / ஆசிரியர்		பக்கம்
1	பாரதியாரின் பாடல்களில் நாட்டுப்பற்று டாக்டர் ந. சஞ்சீவி	...	1—11
2	பாரதியின் தொலைநோக்கு டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	...	1—10
3	பாரதியின் தேசிய ஒருமைப்பாடு டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்	...	1— 8
4	பொருள் புதிது டாக்டர் பொன். சௌரிராசன்	...	1— 3
5	'பாரதியும் கவிமணியும்'—ஓர் ஒப்பாய்வு டாக்டர் சு. பாலச்சந்திரன்	...	1— 7
6	வெளிநாட்டார் கண்ணோக்கில் பாரதியார் டாக்டர் கு. மோகனராசு	...	1—11
7	பாரதியின் நடையியற் சிந்தனைகள் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி	...	1—10
8	பாரதியார் பாடல்களில் தேசியம் டாக்டர் என். ஜெயராமன்	...	1—19
9	பாரதியாரும் பாரத முஸ்லீம்களும் பேராசிரியர் சி. நயினார் முகம்மது	...	1—13
10	தேசியம் வளர்த்த பாரதி டாக்டர் திருமதி சு. சிவகாமசுந்தரி	...	1—13
11	பாரதியின் கண்ணன் பாட்டில் உள்ளடக்கம் டாக்டர் சி. கனகசபாபதி	...	1—16
12	விடுதலை வேள்வியில் பாரதியின் பணி ச. மெய்யப்பன்	...	1— 8

13 பாரதி: குவெம்பு—ஓர் ஒப்பீடு ... 1— 8

செ. இராமசாமி

14 பாரதியாரின் சிறுகதைகள் ... 1— 9

டாக்டர் ஆறு. இராமநாதன்

15 கண்ணன் பாட்டில் பக்தியின் பல நிலைகள் ... 1—16

திருமதி சு. வள்ளியம்மாள்

16 பாரதியின் சர்வதேச நோக்கு ... 1— 8

இரா. இரகுபதி

17 பாரதியாரின் உரைநடையில் தமிழ் இலக்கியக் குறிப்பு ... 1— 8

செல்வி க. விசயா

18 தமிழ் இந்திக் கவிதை இலக்கியங்களில் பாரதியார், பாரதேந்து ஆகியோருக்குப் பிற்பட்ட கவிஞர்களின் தேசிய உணர்வு ... 1— 8

திருமதி ஜெயலக்ஷ்மி சுப்ரமணியன்

19 " மேதினியிற் சோதி விளக்கு " (பாரதிதாசன் பார்வையில் பாரதி) ... 1— 5

கு. மங்கையர்க்கரசி

20 Bharathi—Poet Revolutionary ... 1—12

Prof. Dr. Singaravelu

21 Syntactic Study on Bharati's Poems ... 1— 9

A. P. Thasarathan

22 Indian Culture in Subramanya Bharathi's Works ... 1— 8

Dr. N. Sundaram

23 Nationalism in Telugu Poetry ... 1— 9

Dr. D. Anjaneyulu

24 The Resurgent Andhra ... 1— 5

K. Suryanarayana

25 Nationalism in Kannada Poetry ... 1—11

Dr. A. Srikrishna Bhat

26 M. Govinda Pai-A National Poet in Kannada ... 1— 5

B, Harikrishna Bhat

27 Nationalism in Malayalam Poetry ... 1— 8

Dr. V. Padmavathi

28 Nationalism in Vallathol and Bharati A Comparative Study ... 1— 5

Dr. K. A. Kalavathi

29 Nationalism in Marathi Poetry ... 1— 6

Kavyabhushan P. R. Rukmaji Rao

30 Nationalism in Oriya Literature ... 1— 9

Godabarisha Mishra

31 Nationalism and Urdu Poet Akbar Allahabadi ... 1— 9

Dr. Najmul Hoda

32 Nationalism in Urdu Poetry ... 1—10

Dr. Syed Waheed Ashraf

33 Influence of Mahatma Gandhi on Arab National Movement and its Impact in Modern Arabic Literature ... 1— 4

P. Nisar Ahmed

34 Nationalism and Dr. Mohamed Iqbal ... 1— 8

Syed Safiullah

35 Nationalism in the Poetry of Mahakavi Subramanya Bharati and his Contemporary Hindi Poets ... 1—12

Dr. K. R. Nanjundan

36 Social Awareness in 'Bharati' and 'Bharatendu' ... 1—12

Dr. T. S. Kuppusamy

37 Bharati and Ancient Indian Scriptures ... 1— 9

Prof. P. Thirugnanasambandhan

38 Nationalism in Sanskrit Poetry ... 1— 4

Dr. K. K. Raja

39 संस्कृताधिष्ठितात्मा भारतिः ... 1— 8

R. Thangaswami

REVIEW ... 1—13

பாரதியாரின் பாடல்களில் நாட்டுப்பற்று

டாக்டர் ந. சஞ்சீவி
பேராசிரியர்—தலைவர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

பாரதியாரின் நாட்டுப்பற்று தனிச்சிறப்பு—தலைச்சிறப்பு வாய்ந்தது. பாரதி மகாகவி என்று போற்றப்படினும் தேசியக்கவி என்றே பெரிதும் நேசிக்கப்படுகிறார்—இல்லை—தேசியக்கவி என்றே அறிமுகப்படுத்தப்பட்டார். பாரதியார் பாடல்களின் நுட்பதிட்பங்கள் பண்டிதர்களும் போற்றும் பண்பு பெற்றவைதான். ஆனால் அவர் மக்கள் கவியாக மதிக்கப்படுவது அவருடைய நாட்டுப்பற்றுப் பாடல்கள் காரணமாகத்தான். காரணம், தமிழ் இலக்கிய வரலாற்றில் மொழி, பண்பாடு முதலிய பலவகையாலும் அயல வராகிய ஆங்கிலேயரை எதிர்த்து எழுந்த இந்திய தேசிய இயக் கத்தின் முன்னோடி—முதல் தேசியக் கவிஞர்—தமிழகம் செய்த தவத்தால் பிறந்த தனிப்பெருங் கவிஞர்—பாரதியே ஆவார்.

பாரதியார் பாடல்களில் நாட்டுப்பற்று பெற்றிருக்கும் இயல்பு களுள் சிலவற்றையேனும் அவற்றிற்குரிய ஓரோர் சான்றுடனேனும் இக்கட்டுரையில் காண்போம். முதலாவது பாரதியின் நாட்டுப் பற்றுக்கு அடிப்படையாக விளங்கியது அவர்தம் தாய் நாட்டின் இயற்கைவள ஈடுபாடு.

சான்று:

மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே? (23)

இரண்டாவது: இனிய பொழில்களும், நெடிய வயல்களும் நிறைந்த பாரத நாட்டின் பழம் பெருமையில் ஈடுபாடு.

சான்று:

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு
ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
(பாருக்குள்ளே) (20)

மூன்றாவது பழம்பெருமை மிக்க தம் தாய்நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் ஈடுபாடு.

சான்று :

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ? **(19)**

குறைகளையும் குற்றங்களையும் வெறுக்க வேண்டிய அளவிற்கே வெறுக்க வேண்டும். அவற்றின்மேல் உள்ள வெறுப்பால் அவற்றை உடையோரை அறவே வெறுத்தல் அடாது—ஆட்களைத் தீர்ப்பதினும் அவர்தம் பண்புகளைத் திருத்துவதே அறிவுடைமை. இவ்வுண்மைக்கு-இச்சிறந்த வகை நாட்டுப்பற்றுக்கு-இதோ பாரதியின் தேசிய கீதங்களில் காணப்படும் முதல் பாட்டே சான்று :

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்
(வந்தே)

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தவர் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே)

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி? ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ?
(வந்தே)

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

எப்பதம் வாய்ந்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (வந்தே)

புல்லடி மைத்தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி
(வந்தே) 18

பகுத்தறிவுடைய ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் இயற்கையாக எழக்கூடியது நாட்டுப்பற்று. காரணம் தன்னை ஒருவன் தனித்துக் காத்துக்கொள்ள இயலாது—அதிலும் நாட்டில் வாழ்ந்து கொண்டு. எனவேதான் அவன் மனம் நாடுவது இனம். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்னும் பாரதியின் வாக்கும் அதையே விளக்கி வலியுறுத்துகிறது. இந்த இன ஒற்றுமை அடிப்படை மனக் காப்புக்கு எழும்போதுதான் நாட்டுப்பற்று பெரிதும் பற்றுநாட்டம் உடையதாகிறது. அவ்வகையில்தான் அடிமைப்பட்டுக் கிடந்த பாரத தேசந்தன்னை விடுவிக்க எழுந்த வேள்வித்தீ பாரதியின் உள்ளத்திலும் பற்றி எரிந்தது. இதற்கு ஒரு சிறந்த சான்று:

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ?—உயிர்—வெல்லமோ?
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீதமோ?—பிடி—வாதமோ?
பாரதத்திடை அன்பு செலுத்தல்
பாபமோ?—மனஸ்—தாபமோ?

கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்ற மோ ?—இதில்—செற்றமோ ?
ஒற்றுமை வழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட் டோம்—நன்கு—தேர்ந்திட்டோம் ;
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெலாம்
மலைவு றோம் ;—சித்தம்—கலைவுறோம் **(67)**

மேற்கண்ட பாடலில் நாட்டுப் பற்றுக்கு ஓர் உண்மை அடிப்படை பொருளாதார வளமை, வறுமை பற்றிய சிக்கல் என்பது விளங்கும்.

நாட்டுப்பற்று அடிப்படையிலான தம தாய்நாட்டின் விடுதலை என்பது வெறும் அயலாட்சியில் இருந்து பெறும் விடுதலை மட்டுமில்லை என்பதைப் பாரதி நன்ருக விளங்கிக் கொண்டிருந்தார். புதிய பாரதம்—பொருளாதார வளம் நிறைந்த பாரதம்—சாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லாத பாரதம்—உரிமையும் உறவும் ஒருங் கிணைந்த பாரதம்—மனிதர் உணவை மனிதர் பறிக்காத பாரதம் (மட்டுமல்லாமல்)—மனிதர் நோகவும் மனிதர் பார்க்காத மாண்பு மிக்க பாரதம்—உருவாக வேண்டுமென்று கனவு கண்டார் ; திட்டங்கள் தீட்டினர்.

சான்றுகள் வருமாறு :

வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பலபொருளும் குடைந் தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம் **22**

கன்னடர் ஒட்டியரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடையார் இந்துஸ் தானத்து மல்லர்,
....

சேர்ந்ததைக் காப்பது காணீர் ! அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க ! **(36)**
....

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ? (40)

விடுதலை! விடுதலை! விடுதலை!
பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை!

திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே (விடுதலை)

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்தது கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமான மாக வாழ்வமே! (விடுதலை)

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே (விடுதலை) (56)

மகாகவி பாரதியின் நாட்டுப்பற்று, தத்துவ அடிப்படையில் குறுகிய எல்லையுடையது இல்லை. தம் தாய்நாட்டு விடுதலையைப் போலவே அவர் உலக நாடுகளின் விடுதலையையும், பிற நாடுகளில் உள்ள இந்தியர்களின் பொருளாதார விடுதலையையும் விரும்பினார்.

சான்றுகள் :

1. இத்தாலி நாட்டு மாஜினியின் பிரதிக்கிணை எனும் தலைப்பில் அவர் எழுதியுள்ள பதினைந்து பாடல்கள் (82-85).

2. விழுந்துவிட்ட பெல்ஜியத்திற்கு வாழ்த்தாக அவர் எழுதியுள்ள ஒன்பது பாடல்கள் (86-88).

3. புதிய ரஷ்யாவைப் போற்றி அவர் பாடியுள்ள ஆறு பாடல்கள்.

4. கரும்புத் தோட்டத்திலே என்ற தலைப்பில் பீஜித் தீவில் இந்தியப் பெண்கள் படும் இன்னல்கள் (89-90).

(இவ்வாறு பாரதி பாடியுள்ள இத்தலைப்புகளை வேறு இந்தியப் புலவர்கள் யாரேனும் பாடியுள்ளார்களா என்ற ஒப்பு / உறழ்வு இலக்கிய ஆய்வுக்கு இன்றியமையாதது).

பாரதியின் நாட்டுப்பற்றை இன்னும் ஒரு கோணத்தில் பார்க்கலாம். அவர் தம் காலத்தில் வாழ்ந்த நாட்டுப்பற்றும் தியாக உணர்வும் நிறைந்த தலைவர்களைப் போற்றியிருப்பது போலவே தம் காலத்திற்கு முன் வாழ்ந்த வீரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் இதிகாச நிகழ்ச்சிகளையும் மறுபடைப்புச் செய்யும்போது தம் காலத்து நாட்டுப்பற்று உணர்வும் எதிரொலிக்கப் பாடுகிறார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தம் மனோன்மணியத்தில் கேரள நாட்டுத் தமிழர்கள் உரிமைக்களமாகிய நாஞ்சில் நாட்டின் விடுதலையைத் தம் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சேர பாண்டியர் போரில் ஒரு கோரிக்கையாக்கியது போல, கோரிக்கையாக்கும் உத்தியைப் பாரதியார் தம் பாடல்களில் பின் பற்றியுள்ளார் எனலாம். இதற்குப் பலரறி சான்று : பாஞ்சாலி சபதம். சிலரறி சான்றுகள் : அ. சத்ரபதி சிவாஜி தம் படை வீரர்களுக்கு நிகழ்த்திய உரை (57-62). இது மனோன்மணியத்தில் ஜீவகன் தம் படை வீரர்க்கு நிகழ்த்தும் உரையோடு ஒப்புநோக்கத் தக்கது. ஆ. குருகோவிந்தரின் வீர முழக்கம் (70-76).

மகாகவி பாரதி வெறும் கவிஞர் மட்டுமல்லர் ; மிகச் சிறந்த தத்துவஞானி. அவ்வகையில் சுதந்திரத்தின் தத்துவத்தை மட்டுமே தனிப்பட அவர் பாடியிருக்கும் பான்மையை 'இதந்தரு மனையின் நீங்கி' என்று தொடங்கும் அவர்தம் சுதந்திர தேவியின் துதியில் சிறப்பாகக் காணலாம். அதில் ஒரு பாட்டு :

தேவி! நின்னெளி பெருத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? கைம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றே நின்தன்
பாலனம் படைத்தி லாதார்! **(55)**

பாரதியின் நாட்டுப்பற்றை நுண் ஆடியில் (Microscope) காண்பது போல் காணவும் காணலாம்; தொலை ஆடியில் (Telescope) காண்பது போலவும் காணலாம். நடிப்புச் சுதேசிகளைப் பற்றியும் தம் காலத்துத் தியாகத் தலைவர்களைப் பற்றியும் அவர் பாடியிருப்பது முன்னதற்குச் சான்று. சுதந்திரப் பெருமை (52), சுதந்திரப் பயிர்(53), சுதந்திரத் தாகம் (54), சுதந்திர தேவியின் துதி (54-55), சுதந்திரப் பள்ளு (56-57) முதலான தலைப்புகளில் அவர் பாடியிருக்கும் பாடல்கள் பின்னதற்குச் சான்றாகும்.

பாரதியார் அவர்தம் சீடர் பாரதிதாசனைப்போல நாத்திகக் கவிஞர் இல்லை. (இந்த உண்மை குருவைப் போலவே சீடனும் 'குரு முட்டையாக' இருக்க வேண்டும் என்று எண்ணும் சில பாரதிதாசப் போலிச்சீடர்கள் முதலில் சிந்தித்தல் பயன்தரும்). ஆத்திகராகிய பாரதியார் மானுடராகியத் திலகரைத் தெய்வத்திற்கு நிகராகப் போற்றும் பெற்றியினை ஈண்டுக் கருதுதல் தகும். சான்று:

நெஞ்ச கத்தொர் கணத்திலும் நீங்கிலான்
நீத மேயொர் உருவெனத் தோன்றினோன்;
வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனதிற் கொதிக்கின்றோன்;
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டி ழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோதும் பெயருடை யாரியன் **(79)**

பக்திப் பார்வை கொண்ட பகுத்தறிவுப் பாரதியார் தெய்வீகத்தையும் தேசீயத்தையும் இணைத்துப் புதுவகை இலக்கியங்களையே படைத்தது அவர் தமிழ் இலக்கியத்திற்கும், இந்திய இலக்கியத் திற்கும் வழங்கிய பெருங்கொடையாகும். ஒரு பெருஞ்சான்று மகாகவி பாரதியார் பாடியுள்ள பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியாகும்.

இத்துடன் ஒருங்கு வைத்து எண்ணத்தக்க இரு மரபுவழி மறு மலர்ச்சிப் பாடல்கள் பாரத மாதா நவரத்ன மாலையும் (30-33), பாரத தேவியின் திருத்தசாங்கமும் (33-34) ஆகும். கொடிக்கவி மரபை ஒட்டியதாகத் தாயின் மணிக்கொடியையும் (35-36) பார்க்கலாம்.

பல புதுவகைப் பாடல்களில் நாட்டுப்பற்றை ஊட்டியிருக்கும் பாரதியின் பாநலத்திற்குச் சான்றுகளாக 'நெஞ்சு பொறுக்குதிலையே' (36-38) என்ற நொண்டிச் சிந்தையும், போகின்ற பாரதத்தைச் சபித்தும் வருகின்ற பாரதத்தை வாழ்த்தியும் 'போ போ' என்றும் 'வா வா' என்றும் அவர் பாடியிருக்கும் பாடல்களையும் (38-40), பாப்பாப் பாட்டு (202-203), முரசு (204-207), புதிய ஆத்திசூடி (200-202) என்ற தலைப்பில் அவர் பாடியிருக்கும் பாடல்களையும் குறிக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்குவது புதிய கோணங்கி என்ற தலைப்பில் அவர் பாடியிருக்கும் பாட்டு. இது பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்களால் அவர்தம் தமிழிலக்கிய வரலாற்றில் (342) தனிச் சிறப்புடையதாகப் போற்றப்படுதல் கருதத்தக்கது.

பக்திப் பார்வை கொண்டு இந்திய அரசியல் விடுதலையை மட்டும் பாரதி பார்க்கவில்லை. இந்தியப் பொருளாதார விடுதலையையும், பொதுவுடைமை வாழ்வினையும் பாரதியார் கீதையின் பாதையிலேயே கண்டு கவி பாடியுள்ளார். இந்நோக்கும் போக்கும் சமதர்மமும் சன்மார்க்கமும் ஒன்றவேண்டும்—மார்க்சியமும் காந்தியமும் மருவவேண்டும்—சன்மார்க்கத்திற்கும் சன்மார்க்க உயிருக்கு உடல் சமதர்மம் என்ற திரு. வி. க. தலைமுறையில் அழுத்தமுற்ற கருத்துகளுக்குப் பாரதியே முன்னோடிச் சான்று.

பாரத சமுதாயம் வாழ்கவே!—வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே!—ஜய ஜய ஜய! (பாரத)

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை—வாழ்க! (பாரத)

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க! பாரத(40-41)

பாரதியின் நாட்டுப்பற்று பற்றிய சிந்தனையில் மிகச் சிறப்பானதும் இன்றும்/இன்னும் இன்றியமையாததாய் இருப்பதுமான ஒன்று, நாட்டுப்பற்றுக்கு முரணாகாதது மொழிப்பற்று என்னும் அவர் கொள்கையே. இதற்கு மூன்று சான்றுகள் :

(அ) வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம் (18)

(ஆ) தாயின் மணிக்கொடி பாரீர்!
....
பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்
துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும் (35-36)
சேர்ந்ததைக் காப்பது காணீர்!
—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள் (27)

இக்கட்டுரையில் இறுதியாகவும் உறுதியாகவும் குறிப்பிடத் தக்க பாரதியின் நாட்டுப்பற்றுப் பாடல்களில் தலையாய இயல்பு ஒன்று உண்டு; அது அண்ணல் காந்தியடிகளைப் போலவே அமரகவி பாரதியும் (நாட்டுப்பற்று அடிப்படையிலான) அரசியல் விடுதலை-ஆன்மீக விடுதலைக்கு ஓர் அடிப்படை என்றே ஓர்ந்தார்; தேர்ந்தார் என்பது. இவ்வுண்மை அவர்தம் ஞானப்பாடல்கள் பலவற்றிலும் நன்கு விளங்கும். ஒரு சான்று:

பல்லவி

வேண்டுமடி எப்போதும் விடுதலை, அம்மா;

சரணங்கள்

தூண்டு மின்ப வாடை வீச துய்ய தேன்கடல்
சூழ நின்ற தீவிலங்கு சோதி வானவர்
ஈண்டு நமது தோழ ராகி எம்மோ டமுதமுண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடு மின்பம் அனைத்தும் உதவ (வேண்டுமடி)

விருத்தி ராதி தானவர்க்கு மெலிவு தின்றியே,
விண்ணு மண்ணும் வந்து பணிய மேன்மை துன்றியே
பொருத்த முறநல் வேத மோர்ந்து
பொய்ம்மை தீர, மெய்ம்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வையம் முழுதும் வண்மை பொழிய (வேண்டுமடி)

பண்ணில் இனிய பாடலோடு பாயு மொளியெலாம்
பாரில் எம்மை உரிமை கொண்டு பற்றி நிற்கவே,
நண்ணி யமரர் வெற்றி கூற
நமது பெண்கள் அமரர் கொள்ள
வண்ண மினிய தேவ மகளிர்
மருவ நாமும் உவகை துள்ள. (வேண்டுமடி)

(181-182)

இவ்வாறு ஆன்ம விடுதலை உள்ளிட்ட பன்முக / பல்வகை நோக்குடைய பாரதியின் நாட்டுப்பற்று ஆன்மிக விடுதலைக்கும் உரிய இறுதி / உறுதி நெறியை பின் வருமாறு எடுத்துரைப்பது இந்நாள் உலகப்புகழ் பெற்ற மெய்ப்பொருள் மேதையாகப் போற்றப் படும் ஜே. கிருஷ்ணமூர்த்தியும் வியந்து மகிழ்தற்குரியதாகும். பாரதியின் உயர்-உண்மை விடுதலைப் பாட்டு வருமாறு:

கடமை புரிவா ரின்புறு வார்
என்னும் பண்டைக் கதை பேணோம்;
கடமை யறியோம் தொழிலறி யோம்;
கட்டென் பதனை வெட்டென் போம்;
மடமை, சிறுமை, துன்பம், பொய்,
வருத்தம், நோவு, மற்றிவை போல்
கடமை நினைவுந் தொலைத் திங்கு
களியுற் றென்றும் வாழ்குவமே

ஆம், கடமை நெறியே கடவுள் நெறியாகும் நிலையையும் கடந்த விழுமிய விடுதலை நெறி இதுவாகும்.

குறிப்பு

பலரும் அறிந்து வியந்து மகிழும் வகையில் 1921–க்கு முன்பே இன்னும் நம்முடன் இருக்கும் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றி அமரகவி பாரதியார் சின்ன சங்கரன் கதையில் (பூம்புகார் பிரசுரம், பாரதி கதைகள், பக்கம் 433.) குறித்திருப்பது வருமாறு :

> அன்னிபெஸண்ட் வளர்க்கிற (நாராயணய்யர் இடங்கொடாத) கிருஷ்ணமூர்த்திப் பையன் (அதே விஷ்ணு) அவதாரம்.

1. இக்கட்டுரையில் எனக்குத் தெரிந்த வரையில்/வகையில் பாரதியாரின் நாட்டுப்பற்றின் அடிப்படைகள் இனங்காணப்பட்டுள்ளன.

2. இக்கட்டுரையில் சான்றுகும் பாரதியார் பாடல்களையும் / பாடற் பகுதிகளையும் ஒட்டி இடப்பட்டுள்ள எண்கள் பூம்புகார்ப் பிரசுரப் பாரதியார் பாடல்கள் தொகுப்பில் உள்ள பக்க எண்கள்.

3. இக்கட்டுரைக்குத் தலைப்புத் தந்து எழுதுமாறு முதற்கண் பணித்த ‘கலைக்கதிர்’ ஆசிரியரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைத் தமிழ் இலக்கியத்துறை, தமிழ் மொழித்துறை என்று விரிவுபடுத்திய துணைவேந்தர் பெருந்தகையுமாகிய பேராசிரியர் டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கட்கு உளமார்ந்த நன்றி.

காணிக்கை

பல்கலைக்கழக நிலையில் பாரதி ஆய்வுக்கு முன்னோடியாக விளங்கும் பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கட்கு.

தொல் பொருள் ... நூலகம் - சென்னை.
எண் ....
தேதி ....

பாரதியின் தொலைநோக்கு

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005.

முப்பத்தொன்பதே ஆண்டுகள் வாழ்ந்த பாரதியார் நாட்டிற்கும் மொழிக்கும் மக்களுக்கும் உழைத்த உழைப்பு மிகுதியாகும். பொருள் உடையவர்களைப் பார்த்துப் பாராட்டுப் பாடல்கள் பாடி அவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்து அவர்கள் தரும் பொருளால் வாழ்ந்து வருவதே புலவர் தொழில் என்றிருந்த அவல நிலைமையினை மாற்றியமைத்தவர் மகாகவி பாரதியார் ஆவர். பாரதியும் எட்டையபுர அரசருக்குச் சீட்டுக்கவி எழுதியவர்தாம். ஆயினும் அவர் பாடலில் கவிமிடுக்கு இருந்தது. எட்டையபுர சமத்தானப் புலவர்களால் இளம் வயதிலேயே பாராட்டப்பெற்ற பாரதியார், அவர்களால் பாரதியார் என்ற பட்டமும் வழங்கப் பெற்றார். சமத்தானத்துப் புலவர்கள் போல் வாழாமல் பாரதி புதுமைக் கருத்துகளுடன் வாழ்ந்தார். ஒருமுறை எட்டையபுர மன்னர் பாரதியார் சென்னை செல்லும்போது கொடுத்த பணம் முழுவதிற்கும் புத்தங்களாக வாங்கிவந்து விட்டார். தம் மனைவிக்கு ஒரு புடவை வாஙகி வந்து அவர்தம் மனத்தை மகிழச் செய்ய வேண்டுமே என்ற எண்ணங்கூடப் பாரதிக்கு எழவில்லை. எல்லா வகைகளிலும் பாரதியார் புதுநோக்கிலும் புதுப்போக்கிலும் திகழ்ந்தார் என்பதனை அவருடைய இளமைக்கால வாழ்வு தொடங்கியே நன்கு காணலாம்.

பாரதியார் மறைந்து அறுபது ஆண்டுகள் கடந்துவிட்டாலும் இன்னும் அவர் சிந்தனைகள் செயலுருவம் பெறவில்லை என்பதனைப் பார்க்கிறோம். எனவே பாரதியார் இன்றைக்கும் நமக்கு வேண்டியவராகபபடுகிறார். அவருடைய பாடல்கள் இன்றும் நடப்புப் பொருத்தம் உடையனவாக, கால இயைபு உடையனவாக அமைந்து துலங்குவதனைக் காணலாம். எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராகவும், கால காலத்திற்கும் அவர் தந்த கருத்துக் கருவூலங்கள் மனபதைக்கு—மனித சமுதாயத்திற்கு உரமூட்டுவனவாகவும் அமைந்திலங்கக் காணலாம்.

முதலாவதாக நாட்டு மக்கள் நலமுற்று வாழ ஒற்றுமை என்னும் உயர் பண்பினைப் பெற்றவர்களாக வேண்டும் என்பது பாரதியாருடைய திண்ணமான எண்ணமாகும். ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த திருவள்ளுவர் பெருமான்,

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள்)

என்றார். பாரதியார் இந்தக் கருத்தினைப் பல கோணங்களில் நின்று வலியுறுத்தக் காணலாம். பல்வேறு வண்ணங்களையுடைய பூனைக் குடும்பம் ஒன்றனை எடுத்துக் கொண்டு பலவேறு எண்ணங்களை யுடைய மனிதர்களிடையில் ஒற்றுமை மலர வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரமன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றமென்றும் சொல்லலாமோ?

என்று வினவிடுதுதுப் பின்வருமாறு விடையையும் கூறி, ஒற்றுமை யுணர்வை உறுதிப்படுத்துகிறார் பாரதியார்.

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள், செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்

சாதிக்கொடுமைகளால் இன்னும் நாட்டின் பல்வேறு பகுதி களிலும் கலவரங்கள் நடைபெறுவது இன்றும் நிற்கவில்லை. இந்த நிலைமையில் பாரதி அன்றே கூறிய அறிவுரைகளை நோக்குவோம்.

சாதிப்பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வர்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தனில் செழித்திடும் வையம்

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, வாழும் நெறியாலேயே ஒருவர் மதிக்கப்பட வேண்டும் என்று கருதினார் பாரதியார். எனவே அவர்

நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் இந்த
நாட்டினில் இல்லை; குணம்நல்லதாயின்
எந்தக் குலத்தரேனும் உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்

என்று பாடினார்.

பெரியவர்களுக்குச் சொல்லிச் சொல்லி அலுத்துப்போன பாரதியார் பாப்பாவுக்குப் பாட்டுச் சொல்லி அப்பாட்டில் வாழும் உயர்நெறியினை உணர்த்துகின்றார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி கல்வி அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரேயே

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே—ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
ஆடுவோமே

என்று நம்பிக்கையுடன் சுதந்திரம் அடைந்து விட்டதாகவே பாடியவர் பாரதியார் ஆவர். அவர் கண்ட சுதந்திர நாட்டில் மக்கள் அனைவரும் பின்வருமாறு வாழ்வார்கள் என்று கனவு கண்டார் பாரதியார்.

பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை

என்று விடுதலைப் பண்ணிசைத்து,

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே

என்று சமத்துவக் குரல் கொடுத்து,

மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே

என்றும்,

ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்றும் அன்பு முழக்கம் செய்கிருர் பாரதியார். இந்தக் கருத்துக் கொண்ட காரணத்தினுலேதான் பாரதியார் உயிருள்ள பொருள் களேயும், உயிரல் பொருள்களேயும் ஒன்ருகக் கண்டு உலக உயிர்கள் அனேத்தும் ஒன்று என்று தெளிந்து ஆன்ம நேய ஒருமைப்பாட்டினே இசைக்கக் காணலாம்.

காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலேயும் எங்கள்கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறிலே
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாட்டு அவருடைய பரந்துபட்ட சிந்தனேயை விளக்க வில்லேயா ?

அடுத்தபடியாக மனித இனத்தின் சரிபாதிப் பகுதியான பெண்கள் அடிமைகளாய் நடத்தப்படுவதைக் கண்டு கொதித் தெழுந்தவர் பாரதியார். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப் பெதற்கு ?", "பெண் புத்தி பின் புத்தி", "தையல் சொல் கேளேல்" "சேலே கட்டிய மாதரை நம்பிஞல் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே" என்றெல்லாம் புன்மொழிகள் எழுந்ததனே எண்ணிப் பார்க்கிற பாரதி,

பெண்ணுக்கு விடுதலே நீர் இல்லேயென்ருல்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லே

என்று வன்மையுடன் உரைக்கின்ருர்.

பெண்டாட்டி தன்னே அடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ ?

என்று கேள்வி கேட்டு,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிபேணு வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றைக் குத்தி
காட்சி கொடுத்திடலாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடும் காணீர்

என்று விடையயும் விளக்கமாகத் தருகின்றார். எனவே 'புதுமைப் பெண்'ணைப் படைத்துத் தம் கவிதையில் உலவ விடுகின்றார். பாரதி படைக்கும் புதுமைப்பெண்ணைக் காண்போம்.

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக்கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்
காத்து மானிடச் செய்கை யனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தியான் மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ

இந்தப் புதுமைப் பெண்கள் 'சாதம் படைப்பதோடு தெய்வச் சாதி படைக்கவும்' கூடியவர்கள். எனவே அவர்கள்,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்று கொம்மாளமிட்டுக் கும்மியடிக்கிறார்கள். இப்புதுமைப் பெண்கள் "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்று வாழ்பவர்கள் அல்லர். இவர்களுக்கும் உயர்ந்த குறிக்கோள்கள் உண்டு. அக்குறிக்கோள்கள் தாம யாவை? அவர்கள் வாயா லேயே கேட்போம்:

காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

எனவேதான் பாரதியார் பெண்ணுரிமை பேணிய கவிஞராக, பெண் விடுதலை எனும் வைகறை வானிற்குப் பூபாளம் இசைத்த இசைவாணராகத் துலங்குகின்றார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக் குளே

தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்று பாரதி முழங்கிய முழக்கம் இன்றும் தேவைப்படுகின்றது.

மூன்ருவதாக, பாரதத் திருநாட்டில் வாழும் பலர் இன்றும் நாட்டுப் பற்று அற்றவராக விளங்குவதனைக் காண்கிருேம். அன்னியஞன ஆங்கிலேயன் ஆட்சியே மேல் என்ற அளவிற்குக் கூட அன்னிய மோகம் பிடித்து, விடுதலை வேட்கையற்று வாழும் விந்தை மனிதர் பலரை நாம் காண்கிருேம். எனவே நாட்டுப் பற்றை முதாவதாக நாட்டு மக்கள் நெஞ்சில் பற்றுமாறு வகை செய்கின்ருன். பாரதி நாட்டுப்பற்றை நலங்கொள மக்கள் உளங் கொள ஊட்டும் முறை சற்றுப் புதுமையானது என்று கூடச் சொல்லி விடலாம். நம் முந்தையோர்—முன்னேர் பலரும் மகிழ்ந்து வாழ்ந்தது இந்த நாட்டிலே என்றும், அவர்கள் மாட்சியுடன் வாழ்நததும் மீட்சியடைய முடியாமல் முடிந்ததும் இந்த நாட்டிலே என்றும், முன்னேர்கள் எண்ணிய எண்ணங்கள் அவர்கள் சிந்தனையில் முகிழ்த்ததும் இந்த நாட்டிலேதான் என்றும் உணர்வுப் பாங்கில் உரைக்கின்ருர் கவிஞர்.

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே

என்னும் பாடல், புதுவது கிளந்த-தமிழிற்குப் புதுவரவாய் அமைந்த பாடலாகும்.

பாரதமணித் திருநாட்டை இவ்வாறு பாங்குறக் கண்டவர், செந்தமிழ்த் திருநாட்டையும் சிறப்புறக் காட்டுகின்ருர்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்னும் அடிகள் மந்திர அடிகளன்ருே?

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று கூறி,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து—
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

என்றும் பாடித் தமிழர்க்குத் தமிழ்நாட்டுப்பற்றை ஊட்டுகின்றார்.

அடுத்து, தமிழ்மொழிப் பற்றினைத் தமிழர்க்கு ஊட்டுகின்ற தொண்டில திளைக்கின்றார் பாரதியார். பாப்பாவுக்கும் விளங்கும் வகையில் எளிய தமிழில் தமிழின் ஏற்றத்தினை எடுத்துரைக்கின்றார் அவர்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்று தமிழ்மொழியின் அருமையை விளக்குகின்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று கூறி,

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரைத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்றுதமிழர் ஆற்றவேண்டிய அருங்கடனையும் புலப்படுத்துகின்றார்.

வந்த பாடில்லை பாரதி மறைந்து அறுபது ஆண்டுகளாகியும் இன்னும் தமிழில்—தமிழ் நாட்டில் அறிவியல் முன்னேற்றம் இல்லை இதனை அன்றே உணர்ந்து பின் வருமாறு பாடினார் பாரதி.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குசேர்ப்பீர்

என்று ஆக்க வழியில் வளர்வதற்குரிய அருஞ்செயல்களைப் புலப் படுத்தினர். அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள செயல்கள் இன்றும் முற்றும் நிறைவேருமல் நின்று கொண்டிருப்பதனைக் காணலாம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

பாரதியார் உழவினையும் தொழிலினையும் போற்றியவர். சுறு சுறுப்பாக உழைக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர். 'சோம்பல் மிகக் கெடுதி' என்று சொன்னவர். எத்தித் திரிபவரை வெறுத்தவர். எனவே வீணுக்கு உழைக்காமல், வீணருக்கு உழைக்காமல் வாழ வேண்டும் என்று வற்புறுத்தினர் பாரதியார்.

எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

என்ற நிலை ஏற்பட்ட பிறகு, 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமும்', 'மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையும்' இருக்கக்கூடாது என்று பாரதியார் உறுதியாக எண்ணினர். எனவே புரட்சிச் சமுதாயத்தைப் பின்வருமாறு தம் அகக்கண்ணுல் கண்டார்.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை

என்று கூறி,

இனியொரு விதிசெய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்

என்று ஆவேசமாக முழங்கினர்.

கல்வி வளர்ச்சியே மனவளர்ச்சிக்கு வழி வகுக்கும். எனவே,

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி

என்று கூறி,

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று கூறி,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றார்.

"மக்கள் ஆக்காத மனுவேந்தர்கள் கவிஞர்கள்"
என்பார் கவிஞர் ஷெல்லி. அம்முறையில்
பாரதியாரும் எதிர்காலச் சிந்தனையோடு—தொலைநோக்கோடு பல அரசியல் சிந்தனைகளை நம்முன் வைத்துள்ளார்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

என்னும் கவியின் கூற்று எதிர்காலக் கனவன்றோ?

வடநாட்டில் இன்றும் அடிக்கடி நேரும் பெருவெள்ளத்தால் ஆற்றுப் பெருக்கெடுத்து ஊர்களும் நிலங்களும் அழிகின்றன. தென்னகத்தில் கடுங்கோடையில் பல ஊர்களில் குடிக்கும் தண்ணீருக்கும் பற்றுமை ஏற்பட்டு மக்கள் சொல்லொணுத் துன்பத்திற்கு ஆட்பட்டு அல்லல் உறுவதனைக் காணலாம். பாரதி அன்றே இதை உணர்ந்தவர்போல்,

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்

என்று பாடினுர்.

இவ்வாறு பாரதியாரின் தீர்க்க தரிசனம், அரசியல், சமூகம், பொருளாதாரம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்று பல துறைகளிலும் பளிச்சிடக் காணலாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறுவது போலப் பாரதியார் 'காடு கமழ வரும் கற்பூரச் சொற்கோ'வாகவும், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா'வாகவும், 'புதிய அறம் பாடவந்த மறவனுகவும்' துலங்குகின்ருர் எனலாம். பாரதியின் தொலைநோக்கு அவர்தம் மதிநலம் காட்டும்; அவர் பாடல்கள் இன்றைக்கும் பொருத்தமாயிருப்பது அவர்தம் தொலைநோக்குச் சிந்தனையை உணர்த்தா நிற்கும். எனவே பாரதி 'பாட்டுக் கொரு புலவனுகவும்', 'நாட்டு மக்கள் வாட்டம் நீக்க வந்த கவிக் குயிலாகவும்', புரட்சி நோக்கும் புத்துலகச் சிந்தனையும் கொண்ட அறிஞராகவும் விளங்குகிருர் என்பது வெள்ளிடைமலை. எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராவார்.

பாரதியின் தேசிய ஒருமைப்பாடு

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

சென்னை.

இரண்டு நூற்றாண்டிற்கு முன்பு, இந்தியா பல அரசர்களால், குறுநில மன்னர்களால், ஜமீன்தார்களால் ஆளப்பட்டு வந்தது. இவைகளை இணைத்து 'இந்தியா' என்ற ஒருமைப்பாட்டை நமக்குத் தந்தவர்கள் வெளிநாட்டினர். இந்தியா நமக்குரியதே, அது வெளிநாட்டினர்க் குரியதன்று என்ற உணர்வு காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை ஒவ்வொரு இந்தியனுக்கும் தோன்று வதற்கு அடிப்படையாக இருந்தது நம்முடைய அடிமை வாழ்வு தான். ஆயினும் வெளிநாட்டினர் தந்த பல நன்மைகளுள் ஒன்று 'இந்தியா' என்ற ஒருமைப்பாட்டு உணர்வை நம் உள்ளத்தில் ஊன்றியமை.

மனிதர்களைப் பொறுத்தவரை சாதி, இனம், மொழி, நிறம் போன்ற பல நிலைகளில் வேறுபடுகின்றனர். ஆயின், உள்ளத் தாலும் உயிராலும் ஒன்றுபடுகின்றனர். மனித இனம் உலகம் முழுவதுமே உயிரால் ஒன்றுபடுகின்றது. தமிழன், இந்தியனாகி, உலகனாகும்போது, அவன் முழுநிலை அடைகின்றான். மனம் விரிய விரிய அவன் உலகில் ஒருவன் என்ற உணர்வு அவனுக்கு ஏற்படுகின்றது.

இந்திய நாட்டில் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களுள் பலர் நாட்டு உரிமைக்காகக் கவிதைகள் எழுதினர். ஆனால் பாரதி மட்டும்தான் இந்திய ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் மிகவும் வலியுறுத்தி இந்திய மக்களுக்கு வெளிப்படுத்தினார். இராவணனுக்குப் பத்து முகங்கள்—இருபது கைகள்—ஆனால் இந்தியனுக்கு 30 கோடி முகங்கள், 60 கோடித் தோள்கள்—உடம்பு ஒன்றுதான்—சிந்தனை ஒன்றுதான் என்று பேசினார் பாரதி.

முப்பது கோடி முகமுடையாள்—எனில்
மொய்ம் புறம் ஒன்றுடையாள்
செப்பு மொழி பதினெட்டுடையாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.

இதனையே,

முப்பது கோடி வாய்நின் இசை முழங்கவும்
அறுபது கோடித் தோள் உயர்ந்து உனக்கு ஆற்றவும்
திறனிலாள் என்றுஉனை யாவனே செப்புவன்
அருந்திற லுடையாய் அருளினைப் போற்றி.

என இந்தியர்கள் ஆற்றலுடையவர்கள்—இணைந்தால் எதையும் செய்யக் கூடியவர்கள் என்பதை அவர் உணர்த்தினார். அதனால் தான் மன ஒற்றுமையால் கத்தியின்றி யுத்தமின்றி இந்திய நாட்டின் உரிமையைப் பெற்றோம்.

இந்திய நாட்டின் ஒற்றுமையை நம் தாயின் மணிக்கொடியைப் பாதுகாக்கக் கீழே நிற்கின்ற வீரர்களைப் பற்றி பாரதி நினைக்கும் போது 'திருப்பூர்க் குமரனின்' நினைவு நம் உள்ளத்தில் எழுகின்றது. செந்தமிழ் நாட்டுப் பொருநர், சேரன் தன் வீரர், சிந்தை துணிந்த தெலுங்கர், தாயின் சேவடிக்குப் பணி செய்யும் துளுவர், போரினில் காலனும் அஞ்சும் மராட்டர், பொற்புடை இந்துஸ் தானத்து மல்லர், மாதர்கள் கற்புள்ள வரையும் பாரில் மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர், துஞ்சும் பொழுதினும் தாயின் பதம் தொண்டு நினைந்திடும் வங்கத்தினர்—இவர்களை எல்லாம் தாயின் மணிக்கொடியின் கீழ்க் காண்கின்றார் பாரதி. எல்லா மாநிலத்தவரும், கொடியையே காப்பாற்ற இவ்வாறு திரண்டு நின்றால், நாட்டைக் காப்பாற்ற எவ்வாறு நிற்றல் வேண்டும் என்பதை நம்மையே கற்பனை செய்யுமாறு விட்டுவிடுகின்றார்.

இந்திய இலக்கியங்களில் இராமாயணமும் பாரதமும் எல்லா இந்திய மொழிகளிலும் உள்ளன. இவை இரண்டைத்தான் இந்திய இலக்கியங்கள் என்று பொது நிலையில் கூற இயலும். அங்கும் பாஞ்சாலியை இந்தியாவாக உருவகித்து, சகோதரரின் ஒற்றுமை யின்மையால் பாஞ்சாலி பட்ட துன்பத்தையும் நமக்கு எடுத்து உரைக்கின்றார். அங்கே குடும்ப ஒற்றுமை, சகோதர ஒற்றுமை தேசிய ஒருமைப் பாட்டிற்குக் காரணமாக இருக்கின்றது என்று கூறுகின்றார்.

கலப்பு மணம், சாதி ஒழிப்புக்கு நல்ல கருவியாக அமை கின்றது. இந்தியாவில் பல சாதிகள் இருந்தாலும் அவர்கள் சீனத்தவராக முடியாது; அதனால் நாம் ஒன்றே என்று பேசு கின்றார். தமிழர்களில் சாதிவிட்டு சாதி திருமணம் செய்தல் மட்டுமல்ல, மாநிலத்தின் இணைப்புக்களையே-மாநிலக் கலப்புத் திருமணத்தால் செய்துவிட முடியும் என்று அவர் செப்புகின்றார்.

மொழியால் மன வேறுபாடு கூடாது என்பதற்காகத்தான் பலமொழி களைப் பாரதி கற்றார். தமிழிசையைப் போற்றினாலும், தெலுங் கிசையைப் பாராட்டுவதில் மகிழ்ந்தார். இதனையே,

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்.

என்று பேசுகின்றார்.

கங்கையையும் காவிரியையும் இணைப்பதற்கு அந்தக் காலத்தி லேயே கனவு கண்டார் பாரதி. அதனால்தான் பழங்காலப் பண்ட மாற்று முறையில் கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டத்தைக் காவிரி வெற்றிலைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்று பேசினார். பழங்காலத்தில் பஞ்ச திராவிடம் என்று கூறும்போது, மராட்டிய மொழியையும் திராவிட மொழிகளுள் ஒன்றாகக் கூறுவது மரபாக இருந்தது. இப்போதும் மராட்டிய மொழிக்குத் தாய் தமிழே என்று ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது. அதனால்தான் சிங்க மராட்டியர் கவிதைகளைக் கொண்டு, யானை வளமுடைய சேர மலை நாட்டுத் தந்தங்களை அவர்களுக்குப் பரிசாகத் தரலாம் என்று பேசு கின்றார். அதே போன்று, ரஜபுத்ர வீரர்களுக்குக் கன்னட நாட்டுத் தங்கத்தைப் பரிசாகத் தரலாம் என்றும் பேசுகின்றார். இந்தியாவில் ஒரு மூலையில் நடைபெறுகின்ற செய்தி மற்றொரு மூலைக்கு உடனே தெரியவேண்டும் என்ற உணர்வு பாரதியிடம் இருந்தது. பாரதி வெறும் கவிஞன் மட்டுமில்லை; ஒரு தீர்க்கதரிசி. விஞ்ஞான உணர்வோடு அனைத்தையும் அணுகுகின்ற ஆற்றல் உடையவர். இதனையே.

காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

என்று பாடுகின்றார்.

சாதி ஒழிப்புக்குப் பூனைக்குட்டியின் கதையைக் கூறி, இன மொழி மாநில வேறுபாடுகளை நீக்குகின்றார். வெள்ளை நிறத்துப் பூனை, கறுப்பு, சாம்பல், சிவப்பு போன்ற பல வண்ணக் குட்டி களைப் போடுகின்றது. தாய்ஒன்றுதான்-குட்டிகள் பல. இந்தியா ஒன்றுதான்-மொழிகள் பல-இனங்கள் பல-சாதி இரண்டொழிய வேறில்லை என்ற அவ்வையின் சொற்களை அமிழ்தமாகக் கூறி, நேர்மையவர் மேலர், கீழவர் மற்றோர் என்று பேசுகின்றார்.

தேசிய ஒருமைப் பாட்டிற்கு வழிவகுக்கும் கூறுகள் பலவாக அமையலாம். வேற்றுமைகள் அனைத்தும் நீங்கிய ஒற்றுமை அடிப்படைக் கூறாக அமைகின்றது. இவ்வேற்றுமை அற்ற நிலைக்குப் பிறப்பு வேறுபாடும் இனவேறுபாடும் இல்லாத சமுதாய நிலையும், தகுதி வேறுபாடும் செல்வ வேறுபாடும் இல்லாத மக்கள் நிலையும், காரணமாக அமைவதைப் 'பாரத சமுதாயம்' என்ற பகுதிப் பாடல் காட்டுகின்றது.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே!

இந்தியாவின் பழம் பெருமைகளுள், தத்துவக் கருத்துகளும், ஒரே இறைமை பற்றிய சமய எண்ணங்களும் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் அளிக்கலாம் என்ற எண்ணத்தினராகக் கவிஞர் அமைவதையும், அவர் பாடல்கள் காட்டுகின்றன.

எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகுக் களிக்கும்

என்பதால் ஆத்மீக ஒருமைப்பாடும், தேசீய ஒருமைக்கு வழி வகுக்கும் என்பது புலப்படுகின்றது. பாரதமாதா நவரத்தின மாலையில்,

அன்னையே அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணி முத்துப் போன்ற மணி மொழிகளாலே
பன்னிநீ வேதங்கள் உபநிடதங்கள்
பரவுபுகழ்ப் புராணங்கள் இதிகாசங்கள்
இன்னும்பல நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண் காலங்கொன்ற
விருந்துகாண் கடவுளுக்கோர் வெற்றிகாணே

என இந்தியாவைப் புகழுங்கால், அதன் வளமையில் பெருமை கொண்டு, அறிவுப் பழமையில் மாட்சி கொண்டு, தான் இந்தியன் என்பதில் பெருமதிப்புக் கொண்டு ஒவ்வொரு மனிதனும் ஒற்றுமைப் பட முன்வந்து, விடுதலைக்கு உழைப்பதில் ஆர்வம் கொள்ள வழி வகுக்கின்றார்.

இந்தியாவின் பெருந்தலைவர்கள் பலரைப் புகழ்ந்து பாடல் இயற்றிய பாரதி, அதன் வாயிலாகவே வேற்றுமை மறந்து உயர்ந்தவரைப் பாராட்டும் ஒற்றுமைக்கு வழிவகுக்கின்றார். அரசியல்-மதத் தலைவர்களாக-சிவாஜி, கோகலே, குருகோவிந்தர், தாதாபாய் நவரோஜி, திலகர், லாலா லஜபதிராய், காந்தி எனப் பலரைப் பாடி, அவர் உழைத்த ஒருமைப்பாட்டின்பால் நம்மையும் செலுத்த வழிகோலுகின்றார்.

இயற்கையில் ஒற்றுமையைக் கண்ட கவிஞர், இயற்கையின் ஒரு கூறாக அமைந்த மனிதன் தன் செயற்கை வாழ்வு காரணமாக ஒற்றுமையிழந்து முரண்பட்டுப் பிரிவினைகள் செய்து முன்னேற்றம் இழந்ததைக் கண்டு வருந்துகின்றார். எனவே இயற்கைக் காட்சியையே உயர்த்தி மொழிந்து மக்களின் ஒருமைப்பாட்டிற்கு எடுத்துக் காட்டாக்கி-வழிகாட்டியாக்கித் தருகின்றார் எனலாம்.

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்.

எந்தப் பாடலைப் பாடினாலும், எந்தப் பொருளைப் பேசினாலும் உந்து சக்தியாக ஊக்க ஆற்றலாகக் கவிஞருக்குத் தேசிய ஒருமைப் பாட்டு எண்ணம் இருந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. பெண்மையின் அடிமைத்தளை தகர்த் தெறியப்படும்போது, அடிப் படை மன ஒருமைப்பாடு அமைந்து, அது தேசீய ஒருமைப்பாட்டுக்கு நிச்சயம் வழிகோலும் என்ற எண்ணத்துடன்தான் பெண் விடுதலையைக் கவிஞர் மிகுதியாகப் பேசுகின்றார் எனலாம்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக் குளே

தாதர் என்ற நிலமை மாற்றி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே.

சக்தி வழிபாடும், பாரதத்தைத் தாயாகப் போற்றியதும், பாஞ்சாலியின் அவல நிலையைக் காட்டியதும் எல்லாம் வாயிலாக இதனையே பெருக உரைத்து ஒருமைப்பாட்டிற்கு வழிகோலினார் போலும்.

தொழில் வளம் பெருகி, அனைவரும் தொழிலில் ஈடுபடும் போதும் கல்வி அறிவினை எல்லோரும் பெறும் வாய்ப்பு அமையும் போதும், தன்னிறைவும் மனவிரிவும் ஒவ்வொரு மனிதனும் பெற வாய்ப்பமைந்து, அடிப்படையில் ஒருமைப்பாடு ஏற்படலாம் எனக் கனவு காண்கின்றார் கவிஞர்.

திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே
ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே.

பொருளாதார சமத்துவம், பலவேறுபாடுகளை அகற்ற வல்லது; வேறுபாடற்ற மனங்கள் இணைப்புக்கு வழி கோலுகின்றன; இணைந்த மனங்களால் ஒற்றுமை விளைகின்றது. ஒற்றுமையின் கனிவில் ஒருமைப்பாடு பிறக்கின்றது. துன்புறும் ஒருவனுக்காகவே அனைவரும் கூட்ட முடியும் என்றால்,

இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

என முழங்க முடியுமென்றால், அயலார் ஆட்சியில்—அடிமைத் தனத்தில் துன்புறும் அனைவரும் ஒன்றுபடுவது எத்துணை இயல் பானது, தேவையானது என்பதை உணரச் செய்கின்றார் கவிஞர். இக்கருத்தில் இவர் கொண்ட உறுதியை,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்.

என அறிவுறுத்துவதில் காண்கின்றோம்.

பெரியவருக்கு மட்டுமன்றிக் குழந்தைகளுக்கும் இவ் அறிவுரை ஏற்புடையது—அவர் வளர்ச்சியில் செம்மை சேர்க்கும் பண்புடையது என்பதைக் 'கூடி விளையாடு பாப்பா' எனவும், 'கொத்தித் திரியும் அந்தக் கோழி, அதைக் கூட்டி விளையாடு பாப்பா' எனவும் கூறுவதில் காண்கின்றோம். குழந்தைக்குத் தமிழகத்தை அறிமுகப்படுத்துவதுடன்,

வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா

என இந்தியாவைப் பிஞ்சுள்ளங்களில் உருவாக்குகின்றார். வேதமும் வீரரும் உடைய இந் நாட்டினைத் தெய்வமென்று கும்பிடவும் வழி காட்டுகின்றார்.

புதிய ஆத்திசூடியிலும், கூடித் தொழில் செய், ஒற்றுமை வலிமையாம், தேசத்தைக் காத்தல் செய்—என அறிவுரை வழங்கு வதிலும், எச்சூடியிலும்—எப்பாடலிலும் இவர் ஒருமைப்பாட்டை அடியுணர்வாகக் கொண்டது புலப்படுகின்றது.

எதிர் அரசின் ஆட்சியின்கீழ் அழுந்துண்டு வாழ்ந்தபோதும், வெளிப்படையாகப் பல புரட்சியெண்ணங்களை, எதிர்ப்புகளைத் தெரிவிக்க முடியாத சூழலிலும், பல மறைமுக அணுகுதல்கள் வாயிலாகத் தன் பாடல்களில் இத் தேச ஒருமைப்பாட்டிற்குரிய அடிப்படை எண்ணங்களைக் கவிஞர் தருகின்றார் எனலாம். நில ஒருமைப்பாடும், குல ஒருமைப்பாடும், கல்வி ஒருமைப்பாடும்,

பற்றிய எண்ணங்கள் எல்லாம் விரவ இப்பாடல் கருத்துகள் பொருந்துகின்றன. பிளவுபட்டுக் கிடந்த மாநிலங்கள் எல்லாம், மொழிகள் எல்லாம், மக்கள் எல்லாம் தங்கள் அடிப்படை வேறு பாடுகளை மறந்து, பிரிவினை கடந்து முதற்படி முன்னேற இக் கருத்துகள் உதவுகின்றன. பொது எதிரிக்கு எதிராக இணைவு ஏற்பட்டு, விடுதலை வாங்கும் தேவை தோன்றியது அடிப்படை யாக அமைந்தபோதும், இதன் பின் விளைவாக ஒற்றுமையும், மன வேறுபாடின்மையுமுள்ள ஒரு சமுதாயம் உருவாக உதவுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனும் தன் அயலானுடன் ஒப்புரவு ஆகும் போது, ஒவ்வொரு குடும்பமும் தம் தாயாதியுடன் பகைக்காது இணைவுறும்போது, உறவு எல்லைகளை விட்டு மனப்பரப்புக் கொண்டு சமுதாய எண்ணம் ஏற்பட முனையும்போது, நாட்டு ஒற்றுமைக்கும், ஒப்புமை உணர்வுக்கும் வழி ஏற்பட்டு, தேசிய ஒருமைப்பாட்டிற்கு வாய்ப்பும் வழியும் அமைகின்றது. இத்தகு பல்நிலை அணுகுதல் வாயிலாகப் புதுமைக் கவிஞர் பாரதியும் முயற்சி செய்தமையை அவர் பாடல்கள் காட்டுகின்றன.

பொருள் புதிது

டாக்டர் பொன். சௌரிராசன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி-2.

தன்னை உணர்ந்து தன்னைச் சுற்றி வாழும் மக்கள் துயரங்களுக்காக உருகித் தான் வாழும் காலத்தின் கோலத்தைக் கணித்தறிந்து நாட்டின் நிலையை நுணுகி நோக்கிக் கவிதை பாடிய சான்றோர் அமரகவி பாரதி ஆவார். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப் பற்றிப் பிறர் எவரும் அறியாத அளவு தன்னைப் பற்றித் தானறிந்து கவிபாடும் தன்விழிப்பு அவரிடம் அமைந்திருந்தது. இதனை,

சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை யெந்நாளு மழியாத
மாக் கவிதை [1]

எனும் அவர்தம் இப்பாடல் அடிகளே காட்டும். இவ்வாறு சுவையில், பொருளில், வளத்தில், சொல்லில், வடிவில் புதுமை பல செய்து தமிழ்க்கவிதை உலகில் ஒரு புது யுகத்தைத் துவக்கி வைத்த பெருமை பாரதியாருக்கே உரியது. அவர் பாடலில் அமைந்துள்ள பாடுபொருளின் புதுமையைப் பற்றியது இந்தக் கட்டுரை.

பாடுபொருளாக அவர் கொண்டவற்றுள் தேசீயம், பெண் உரிமை, இயற்கையைப் பொருளாகக் கொண்ட பாடல்கள் முதலியவற்றோடு அவர் பாடிய குயில் பாட்டும் அடங்கும்.

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகமாகக் [2]

கொண்ட சங்க காலத்தில் மன்னனைச் சூழ்ந்து மன்னனுக்காக மக்கள் வாழ்வு அமைந்திருந்தது. சேர சோழ பாண்டிய வேந்தர் மூவரையும் ஒற்றுமையோடு காண ஔவையார் கொண்ட ஆர்வமும் மூவேந்தர் நாடுகளையும் ஒரு தமிழ் நாடாக உருவாக்க விழைந்த இளங்கோவின் இதயதாகமும் நாட்டின் நலம் பற்றியதாயினும் மன்னனையே மையமாகக் கொண்டது என்பதில் சிறிதும் ஐயம்

இல்லை. மாமன்னராட்சியோ சிறுசிறு குறுநில வேளிராட்சியோ பாடுபொருளாகத் தமிழில் தொடர்ந்து வந்த மரபு பாரதியார் பாடலில் மாறுபடக் காண்கிறோம். 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' எனும் வடலூர் வள்ளலார் குரலிலும் மன்னர்தம் ஆட்சி மறுப்போ மக்கள் ஆட்சியின் மலர்ச்சியோ இடம் பெறவில்லை. என்பது தெளிவு. எனவே, மக்கள் ஆட்சியை/நாட்டு விடுதலையை/தேசீய உணர்வைப் பாடுபொருளாக அமைத்துப் புதுமை செய்த பாங்கு பாரதிக்கே உரியது.[4]

சங்ககாலப் பாடல்களின் மூலம் பெண்கள் பெற்றிருந்த சீர்மையும் சிறப்பும் உணர முடிகின்றது. என்றாலும் பெண் ஆணுககுச் சரிநிகர் சமான உரிமை பெற்று விளங்கவில்லை இடைக்காலத்திலோ பெண்கள் பேய் என்று இழித்துரைக்கப் பெற்ற பாடல்கள் பலவற்றைத் தமிழில் காணலாம். காதலைச் சிறப்பித்தும், கற்பை இரு கட்சிக்குப் பொதுவில் வைத்தும் அறிவிலும், செயலிலும் பெண்ணுக்கு உரிமை உண்டு என்னும் புதுப்பொருளில் பாடிய சிறப்பும் பாரதிக்கே உண்டு; புதுமைப் பெண், பெண்கள் வாழ்க, பெண்கள் விடுதலைக் கும்மி முதலியன அத்தகையன.

இயற்கையை வாழ்க்கையின் விளக்கமாக வாழ்வோர்க்கு வழிகாட்டியாக, காதலர் நெஞ்சக் குறிப்பை உணர்த்துவதாகப் பாடுவதே பண்டை மரபாக இருந்தது.[5] ஆனால் இயற்கையை இயற்கைக்காகவே பாடுகின்ற பாடல்களை முதலில் பாடியவரும் பாரதியாரே. புயற்காற்று, மழை, நிலாவும் வான்மீனும் காற்றும் முதலிய பாரதியார் பாடல்கள் இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்டன.

'இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்'[6] என்னும் அறிவுடை நம்பியின் பாடல் இல்லற வாழ்வில் குழந்தை தரும் இன்ப நிறைவைப் புலப்படுத்துவதுதான். கண்ணனின் பிள்ளைப்பருவ ஆடல்கள் குறித்துப் பெரியாழ்வார் பாடியுள்ள பாடல்களும் குழந்தையின் இயல்புகளைச் சுட்டிக் காட்டுவனவே. பின்னர்த் தோன்றிய பிள்ளைத் தமிழ்ப்பாடல்களிலும் குழந்தைகளின் இயல்புகள் சில, செயல்கள் பல சிறக்க அமைந்துள்ளன. என்றாலும் குழந்தை பாடுதற்கு உரிய பொருள் அமைந்த பாடல்களைப் பாடிய வகையிலும் பாரதியாரே முன் நிற்கின்றார் பாப்பா பாட்டு' 'முரசு' காண்க.

குயிலை மையமாக வைத்து அவர் பாடிய குயில் பாட்டு, தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுமை சேர்க்கும் ஒன்றாகும் என்பது இங்கு கருதத்தக்கது. இவ்வாறு பாடுபொருள் பலவற்றைத் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்திய முதன்மைச் சிறப்பு பாரதியாருக்கே உரியது என்பது உண்மையாகும்.

குறிப்புகள்

1. பாரதியார் பாடல்கள்—வெங்கடேச ரெட்டப்ப பூபதிக்கு எழுதிய சீட்டுக்கவி–2, பாடல்-3.
2. புறநானூறு, 186.
3. திருவருட் பயன், ஆறும் திருமுறை, சமரசநிலைப்பாடல்-5.
4. காண்க: பாரதியாரின் தேசியப் பாடல்கள்.
5. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வ., பக். 30.
6. புறநானூறு, 188.

'பாரதியும் கவிமணியும்'—ஓர் ஒப்பாய்வு

டாக்டர் சு. பாலச்சந்திரன்
இளநிலைப் பேராசிரியர், தமிழிலக்கியத்துறை

பாரதியார் 1882-ஆம் ஆண்டு முதல் 1921-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளை 1876-ஆம் ஆண்டு முதல் 1954-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். பாரதியார் வாழ்ந்த காலம் கவிமணி வாழ்ந்த காலத்திற்குள் அடங்கும். இருவரும் இயற்கையாய் அமைந்த மாபெரும் படைப்புக் கவியாற்றலும் கலையாற்றலும் படைத்தவர்கள்; உலகப் படைப்பில் காணப்படும் எதையும் தாம் கண்டவுடன் உள்ளம் நெகிழ்ந்து உருகிக் கனிந்து உயர்ந்த அனுபவ நிலையை அடைபவர்கள்; செழுமையான வள மான முன்மைத்திறம் (originality) வாய்ந்தவர்கள்; புனைவியல் கவிதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர்கள்; வளமான படைப்புக் கற்பனைத்திறம் கொண்டவர்கள்; பொருளுக்கேற்ற மிகப் பொருத்த மான கவி வடிவம் தந்து கவிதைக் கலையை நிலைத்த பண்புடைய தாக்கி மானிடம் உய்ய வழங்கியவர்கள்; காந்தியடிகளிடத்தில் நிறைந்த பற்றுக் கொண்டவர்கள்; இயற்கையில் இறைவனைக் கண்டவர்கள்; தங்கள் பாட்டுத்திறத்தால் இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும் என்ற பெரிய கோட்பாடு கொண்டவர்கள். ஆயின், பாரதியார் பாடல்கள் பலவும் புயற்காற்றின் வீச்சைப் போன்றவை; கவிமணியின் பாடல்கள் பலவும் மெல்லென வீசும் தென்றல் காற்றைப் போன்றவை. கவிதையின் அமைப்பிலும் சொற் றொடர்ப் பாங்கிலும் பாரதியாரின் கவிதைகள் பலவும் விரைந் தோடி வரும் அருவியைப் போன்றவை; கவிமணியின் கவிதைகள் பலவும் அழகாய் ஓடும் ஆற்றொழுக்கைப் போன்றவை. ஆற் றொழுக்கைப் போன்ற கவிதைகள் பலவும் படைத்த கவிமணி கூட, பாரதியாரின் பாட்டைப் பற்றி,

> *"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்*
> *பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினனடா*
> *கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக்*
> *கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா"* [1]

என்று ஒரு பட்டிக் காட்டான் வாயிலாகப் பாடுகின்றார். இங்ஙனம் பாடும்போது கீர்த்தனைகள் இயற்றுவதில் வல்லவரான கவிமணி கண்ட பாரதியைக் காணுகின்றோம்.

பாட்டுக்கொரு புலவன் பாரதி

பாட்டைப் படைத்த புலவர் பலர் இருக்க, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று பாரதியை மட்டும் தனித்துச் சிறப்பித்துப் பாடுவதற்குரிய காரணங்கள் எவை என்ற ஒரு வினா நம் உள்ளத்தே எழுகின்றது. பாரதியின் படைப்புக்களை முழுமையாக நோக்கும் போது பின் வரும் காரணங்கள் பற்றிக் கவிமணி அங்ஙனம் பாடியுள்ளார் என்று நாம் ஊகித்துணர்ந்து கொள்ளலாம்.

1. குற்றம் நீங்கிய பழமையையும் நிறை மிகுந்த புதுமையையும் பாரதியார் முறையாகக் காட்டியுள்ளார்.

2. உலகக் கவிஞர் அனைவர் படைப்புகளும் ஐந்து பெரிய பொருளையே மையமாகக் கொண்டு அமையும்.

அவையாவன :

(அ) சமுதாய வாழ்வு (Social life)

(ஆ) நாட்டு வாழ்வு (National life)

(இ) மானுடம் (ஈ) இயற்கை (உ) இறைமை.

கவிஞர் ஒவ்வொருவரும் இவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ பாடுந்திறன் பெற்று விளங்குவர். ஆயின், பாரதியாரோ இவ் வைந்தையும் ஆழ நோக்கி அதனதன் கூறுகளை முழுமையாகவும் நிறைவாகவும் பாடுந்திறன் பெற்றிருந்தார்.

3. தம் பாட்டுப் பொருளைக் கற்றவரேயன்றி மற்றவரும் எளிதில் புரிந்து கொண்டு கலை இன்ப அனுபவத்தில் ஆழ்வதற்கு ஏற்றபடி, பாரதியார் மக்கள் பேச்சு வழக்கில் இயற்கையாக நடமாடிய, ஆனால், தரமான சொற்களைத் தம் கவிதைகளில் அரிதாக ஆண்டுள்ளார். இனிய கிராமிய இசைப்பபாட்டு மெட்டுக்களையும் சந்தங் களையும் அற்புதமாக யாப்புறுத்தியுள்ளார்; அங்ஙனம் யாப்புறுத்திக் கவிதைக் கலையால விளையக்கூடும் சுவை களையும் பயன்களையும் முழுமையாக நிறைவேற்றிக் காட்டியுள்ளார்.

4. உரிமை வாழ்வுக்காக இடையறுது போராடும் ஒரு போராட்ட உணர்ச்சி தம் கால மக்களிடையே கிளர்ந் தெழுந்து பரவுவதற்கும் சமுதாயச் சீர்திருத்தச்

சிந்தனைகள் மலர்வதற்கும் புதிய புதிய பொருளாதாரச் சிந்தனைகள், திட்டங்கள் உருவாவதற்கும் பாரதியார் தம் கவிதையை மிகமிக ஆற்றல் சான்ற ஒரு கலைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

5. ஒரு கவிதையை நாம் பயின்ற பின் 'இவரைப்போல் இதுவரைக்கும் இதைப்பற்றி இந்த முறையில் எவரும் சொன்னதில்லை' என்று நாம் சொல்வதற்கு எந்த ஒன்று முழுமுதல் காரணமாக அக்கவிஞரிடம் அமைகின்றதோ அதுவே 'முன்மைத் திறம்' (originality) எனப்படும். முன்மைத்திறமும் அதனால் விளையும் கலையாக்கப் பேராற்றலும் பாரதியாரிடம் மிகமிக வளமாகக் காணப் படுகின்றன.

கவிதை பற்றிய கருத்தில் ஒற்றுமை

ஒரு குறிப்பிட்ட கவிதை இன்ன பொருளைப் பற்றித்தான் அமைய வேண்டும் என்பதில்லை. எந்தப் பொருளைப் பற்றியும் அமையலாம் என்பது பாரதிக்கும் கவிமணிக்கும் உள்ள ஒரு பொதுக் கருத்தாகும். பொருள் எதுவாய் இருப்பினும் அதனைப் பாடும் கவிஞன் உள்ளத்தே 'உண்மை ஒளி' இருத்தல் வேண்டும் என்பதை இருவரும் சுட்டியுள்ளனர். பாரதியார்,

"உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்"[2]

என்று பாட, கவிமணியோ

"உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"[3]

என்கின்றார். முன்னதன் விளக்கமோ பின்னது என்று நாம் சிந்திக்கும் அளவுக்கு இவ்வரிகள் அமைந்துள்ளன.

இருவரும் பாடியுள்ள பொருள்கள் :

தமிழ் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இயற்கை, மழலையுலகம், ஒன்றை வாழ்த்தல், ஒருவரை வாழ்த்தல், பக்தி நெறி, வாழ்க்கைத் தத்துவங்கள், சமுதாயச் சீர்திருத்தம், அன்புநெறி, அருள்நெறி, சமய ஒருமைப்பாடு, பொதுவுடைமைப் போக்கு ஆகியவற்றைக்

குறித்துப் பாரதியாரும் பாடியுள்ளார்; கவிமணியும் பாடியுள்ளார். ஆயின், கவிமணியின் நாட்டுப் பற்றுப் பாடல்கள் அவருக்கு ஈட்டித் தந்த புகழை விட பாரதியாரின் நாட்டுப் பற்றுப் பாடல்கள் அவருக்கு ஈட்டித் தந்த புகழே மிகுதியாகும். இவ்வாறே பாரதி யாரின் குழந்தைப்பாடல்கள் வகையில் அவருக்குள்ள சிறப்பை விடக் கவிமணியின் குழந்தைப் பாடல்களால் அவருக்குள்ள சிறப்பே மிகுதியாகும்.

இருவருக்குமுரிய பொது நோக்கங்கள் :

பாரதியாரும் கவிமணியும் இந்திய நாட்டையும் அந்நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளையும் நேசிக்கும் மனநிலையில்ஒன்றுபட்டவர்கள். ஆயின், இந்திய நாட்டு எல்லைகளையும் இயற்கைகளையும் அருமை பெருமைகளையும் பாரதியார் விரித்துக் கூறும் அளவுக்குக் கவிமணி விரித்துக் கூறவில்லை.

இந்நாடு ஒன்றுபட்டு விளங்க வேண்டும் என்பதிலும் அவ் வொற்றுமைக்குக் கேடு செய்யும் சாதிமத பேதங்கள் ஒழிய வேண்டும் என்பதிலும் குறிப்பாகத் தீண்டாமைக் கொடுமை அடி யோடு ஒழிக்கப்படவேண்டும் என்பதிலும் தீண்டாமை மனித நேயக் கோட்பாட்டிற்கு முற்றிலும் வேறுபட்டது என்பதிலும் பாரதி யாரும் கவிமணியும் கருத்தொன்றியவர்கள்.

"ஒன்று பட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்" [4]

என்றும்

"நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்!
தகரென்று கொட்டு முரசே!—பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்!" [5]

என்றும்

"ஏழை யென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே" [6]

என்றும் பாரதியார் பாடும் பாடல்கள் இங்கு நினைவு கூரத் தக்கன. கவிமணியோ,

ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்[7]

என்றும்,

“கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய் பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ”[8]

என்றும்,

இந்தப் பிறப்பு வேண்டாம்—இதுவொழிய
எந்தப் பிறப்பும் வரட்டும்
ஜாதி வெறியினுல் வி-
ரோதிக ளாகி மக்கள்
வீதி வருவதும் அ—
நீதி என உரைக்கும் (இந்த)[9]

என்றும் பாடியுள்ளமையை நோக்குக.

‘தீண்டாமைப் பேய்’[10] என்ற தலைப்பிலும் “ஹரி ஜனர்க்காக வருந்துதல்”[11] என்ற தலைப்பிலும் கவிமணி பாடியுள்ள பாடல்களின் கருததுவேகம் பாரதியார் பாடல்களில் காணப்படும் கருத்து வேகத்திற்கு எந்த வகையிலும் குறையாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டின் சின்னமாக, நம் நாட்டு மக்களின் உள்ளத்தே இடையறுது நிலைத்து நிற்க வேண்டிய நாட்டுப்பற்றின் சின்னமாக, இந்தியச் சமுதாயம் முழுவதையும் நாம் ஒன்ருய் நினைந்து போற்று வதற்குரிய புற அடையாளமாக, தியாகம், தூய்மை, பசுமை ஆகியவற்றின் மொத்த உருவமாகப் பறக்கும் நாட்டுக் கொடி யிடத்தில் தாம் கொண்டிருந்த தணியாக் காதலைப் பாரதியாரும் கவிமணியும் மிக அழகுற வெளியிட்டுள்ளனர். “தாயின் மணிக் கொடி பாரீர்” என்று பாரதியார் பாடும் பாட்டும் ‘தேசியம் என்ற தலைப்பில் ‘தேசக் கொடியின் சிறப்பு’[12] என்ற உட்பிரிவில் கவி மணி பாடியுள்ள பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

தேசிய உணர்ச்சியின் ஒரு வெளிப்பாடு சுதேசிய இயக்கம். காந்தியடிகள் தலைமையிலான இந்திய விடுதலைப் போராட்டம் நடை பெற்ற காலத்தில், அச் சுதேசிய இயக்கத்தின் சின்னமாக விளங்கியது ‘கதர்’ ஆடை. சுதேசிய உணர்ச்சியைப் பற்றிப் பாரதியும் கவிமணியும் பாடியுள்ளனரெனினும் ‘கதர்’ பற்றிய கவி மணியின் பாடல்கள் அவருக்கு ஒரு தனிச் சிறப்பை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளன எனலாம். சான்று வருமாறு:

"அஞ்சு வயது மகள் கோலமிட்டால்—அதை
அழகில்லை என்றழிக்கும் தாயரும் உண்டோ!
பஞ்சு படுவதிலும் பெரும்பாடு—நாங்கள்
படுவதும் நீங்கள் அறி யாததோ? ஐயா"[13]

"குறுக்கு முறிய நெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை அடக்கிநெய்த கதராடை
மறுத்துநீர் தள்ளாமல் கொள்ளுவீரோ—எங்கள்
வயிற்றில் எரிதணியச் செய்குவீரோ"[14]

சுதேசிய இயக்கத்திற்கு இரு நிலைகள் உள்ளனவாகக் கொள்ளலாம்.

ஒரு நிலை :—நீண்ட காலமாக இத்தாய்த்திரு நாட்டில் வேரூன்றியுள்ள பண்பாடும் அப்பண்பாட்டைத் தமக்கே உரியதென்று தோள் தட்டிப் பெருமை பாராட்டும் பெருமித உணர்வும் கலந்த நிலை.

மற்றொரு நிலை :—மேற்கண்ட பெருநிலை வேராக அமைய, நம்நாட்டில், நம் மக்களின் கையினால் உருவாக்கப்படும் பொருள் களையே பயன்படுத்த வேண்டும் என்று நினைந்து செயல்படும் முனைப்பு நிலை.

இவ்விரு நிலையும் இந்திய நாட்டை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயரின் ஆட்சி ஒழிய வேண்டும் என்ற ஒரு குறிக் கோளையே மையமாகக் கொண்டவை. இதில் முதல் நிலையைப் பாரதியும் இரண்டாம் நிலையைக் கவிமணியும் சிறப்பாகப் பாடி யுள்ளனர்.

முடிவுரை :

இது காறும் கூறியவற்றால் பாரதிக்கும் கவிமணிக்கும் கவிதைக் கலையில் இருந்த பொதுப் பண்புகளும், அவரவர்க்குத் தனித்தனியே அமைந்த சிறப்புப் பண்புகளும் 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று கவிமணி இலக்கிய மதிப்பீடு செய்தமைக் குரிய காரணங்களும் பொருள் வகையில் இருவருக்கும் அமைந்த கருத்தொற்றுமையும் சுதேசிய இயக்கத்தின் இருவேறு நிலைகளை இவ்விருவரும் பாடியுள்ள போக்கும் புலனாகும்.

7

குறிப்புகள்

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும்,
பாரி நிலையம், சென்னை-1.
12-ஆம் பதிப்பு: 1967, பக்கம், 100.

2. பாரதியார், பாரதியார் கவிதைகள்—தமிழ், பா : 4,
இளங்கோ பதிப்பகம்,
14, உஸ்மான் ரோடு, சென்னை-17.
முதற் பதிப்பு: 1969.

3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,
மலரும் மாலையும், பா : 51.

4. பாரதியார், பாரதியார் கவிதைகள்,
பக், 17, பா. 4.

5. மேற்படி, பக். 178. பா, 8.

6. மேற்படி, பக். 49. பா. 2.

7. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,
மலரும் மாலையும், பா : 723.

8. மேற்படி, பா. 725.

9. மேற்படி, பா. 773, 775.

10. மேற்படி, பக்.166—169.

11. மேற்படி, பக். 165—166.

12. மேற்படி, பக். 181—183.

13. மேற்படி, பா. 894.

14. மேற்படி, பா. 899.

வெளிநாட்டார் கண்ணோக்கில் பாரதியார்

டாக்டர் கு. மோகனராசு, பி.எசி., எம்.ஏ., பிஎச்.டி.,
டிப். மானிடவியல், டிப். புவியியல், டிப். உயர்கல்வியியல்...
சென்னைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிமிக்க பெரும் பாவலர் பாரதியார். இவர் எல்லார்க்கும் புரிகின்ற எளிய தமிழில் எண்ணக் குவியல்களை எழுத்து வடிவாக்கி இனிய தமிழ் மொழிக்கு ஏற்றம் நல்கியவர்; இலக்கிய உலகில் எழுச்சி மிக்க புதிய பாதையை வகுத்துத் தந்தவர்; இந்திய மக்களின்—உலக மக்களின்—துயர் கண்டு, துடித்தெழுந்து, புரட்சிப் படைப்புகளைப் புவி வாழ வழங்கியவர்; காலத்துக்கு ஏற்ற கருத்துகளை வழங்கியதோடு அமையாமல், காலம் கடந்து நிற்கும் கருத்துகளையும் வழங்கி அழியாப் புகழ் பெற்ற உலகப் பெருங்கவிஞர். அன்னாரின் படைப்புகளைத் தமிழகம் மட்டுமல்ல, உலகமே போற்றிப் புகழ் கின்றது. அப்புகழ்ச்சிகளுள்—மதிப்பீடுகளுள்—ஒரு சிலவற்றை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியின் இலக்கியத் தொண்டு

ஏழு வயது முதற்கொண்டே பாக்கள் புனையும் ஆற்றல் மிக்க வராக விளங்கினார் பாரதி என்றும், தம்முடைய பதினொன் றாவது வயதிலேயே 'பாரதி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார் என்றும் அறிகிறோம்.[1] தொடக்க காலங்களில்—அதாவது ஏறத் தாழ இருபத்திரண்டு வயது வரையில்—பாரதியார் எழுதிய பாக்கள் கிடைக்கவில்லை. 1904 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் 'விவேகபாநு' என்னும் இதழில் வெளிவந்த 'தனிமை இரக்கம்' என்னும் தலைப்புடைய கவிதையே முதன்முதல் அச்சில் வெளி வந்த பாரதியின் கவிதையாகும்.

இன்று, நாம் அறியும் பாரதியின் பாக்கள் பெரும்பான்மையும், அவர் அரசியல் களத்தில் நின்றுகொண்டு நிகழ்த்திய 'இலக்கிய வேள்வி'யின் பயனாகக் கிடைத்த பாக்களே. அதனால் அவற்றில் அரசியல் உணர்வும் அரசியல் அடிப்படையிலான சமுகப் பண் பாட்டு உணர்வும் பெரிதும் இழையோடி நிற்கின்றன.

கற்பனை உலகில் சிறகடித்துப் பறப்பதை ஓரளவே தம் கவிதையின் கருவாகக் கொண்ட பாரதியார், பெரிதும் காலத்தின் 'தேவை'களைக் கருப்பொருளாகக் கொண்டே கவிபாடினார். அதனால் அறிஞர் பலர் போற்றும் சிறப்பைப் பெற்றார்.

> கவிதைகளில் தற்கால அரசியல் மற்றும் சமுதாய மெய்ம்மைகளை அறிமுகம் செய்து, இலக்கியத்துக்கும் சமுதாய—அரசியல் சிந்தனைகளுக்கும் சிக்கல்களுக்கும் இடையில் அதுவரை இருந்து வந்த தொடர்புவகை இடைவெளியை-பாழ்குழியை-நீக்கியதால் பாரதியாரின் கவிதைகள் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன

எனத் தெளிந்துரைக்கின்றார் முனைவர் கமில் சுவலபில் அவர்கள்.[2]

காலத்துக்கேற்ற கருத்துகளைக் கருப்பொருள்களாகக் கொள்ளும்போதும், 'நிரந்தரமான சில உண்மைகளுக்கிணங்க வாழ்க்கைப் பொருளை விளக்கி வரைவிலக்கணம் சமைப்பது மகா கவியின் பொறுப்பாகிறது. 'அந்த மகத்தான பொறுப்பைத் தமது உணர்ச்சி வேகமிக்க தனிப்பாக்களால் செய்து முடித்துள்ளார் பாரதியார்' என்று கூறி, பாரதியார் 'மகாகவி' என்பதற்கான காரணத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றார் முனைவர் க. கைலாசபதி அவர்கள்.[3]

பாரதியாரை 'மகாகவி' என்று குறிப்பிடும் இந்த நேரத்தில், ஓர் உண்மையினையும் நாம் நினைவு கொள்ளுதல் வேண்டும். 'பாரதி மகாகவியா? இல்லையா?' என்னும் சிக்கல், ஒரு கால கட்டத்தில் தமிழகத்திலேயே எழுந்தது என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். அதன் எதிரொலியை டாக்டர் கமில் சுவலபில் அவர்களிடமும் காணுகின்றோம். இவர் 1973-இல் தாம் எழுதிய, 'The Smile of Murugan on Tamil Literature of South India' என்னும் நூலில், பாரதியாரை 'மகாகவி' என ஏற்க மறுக்கின்றார். இவருடைய மறுப்புரைகளின் மொழி பெயர்ப்புகள் வருமாறு.[4]

> பாரதி மிகப் பெருங்கவிஞர்களுள் ஒருவரல்லர் (இதனை ஏற்றுக் கொள்ளும் துணிவு நமக்கு வேண்டும்)—அவர் ஒரு வியாசரோ, ஒரு வால்மீகியோ, ஒரு கம்பரோ, ஆகார்; ஒரு தாகூருங் கூட ஆகார்.

> வால்மீகி, காளிதாசன், இளங்கோ, கம்பன் முதலிய இந்தியக் கவிஞர்கள் சிலருடன்—தாகூர் மற்றும் வள்ளத்தோள் ஆகியோருடன் கூட—ஒத்த நிலையில் வைத்துத் கருதத்தக்க, பெரிய 'உலகக் கவியாக நான் சுப்பிரமணிய பாரதியை மதிக்க மாட்டேன்.

இவ்வாறு கூறும் இவரே, 1974-இல் தாம் எழுதிய 'A History of Indian Literature-Tamil Literature' என்னும் நூலில் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:[5]

> உண்மையான மகாகவியாக ஒப்புக் கொள்ளத்தக்க, தமிழ்நாட்டின் தேசியக் கவியாக, அடுத்த இரண்டு பத்தாண்டுகளில் பாரதியார் உருவாகின்றார்.

பாரதியார் பற்றி அயல்நாட்டார் கொண்ட கருத்து வளர்ச்சியினையும் ஓரளவு இஃது வெளிப்படுத்துகின்றது எனலாம்.

பாரதியார் உள்ளீட்டளவில் செய்த புரட்சியோடு இலக்கிய வடிவ அளவில் செய்த முயற்சிகளையும் அறிஞர்கள் பெரிதும் பாராட்டி உள்ளனர். மொழி மற்றும் இலக்கிய அளவில் தமிழுக்கிருந்த தளைகளை நீக்கி, அதன் ஆக்கத்திற்கான புது வழியை வகுத்துத் தந்ததில் பாரதியார் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாகக் குறிப்பிடுகின்றார் அறிஞர் ஹெல்கா ஆண்டன் அவர்கள்.[6] இவருடைய கருத்துடன் ஒத்த கருத்துடைய முனைவர் கமில் சுவலபில் அவர்கள், புராண பிரபந்தத தளைகளிலிருந்தும் தற்கால நடைமுறை உண்மைகளை வெளியிடுவதற்குத் தடையாக அமைந்த இடைக்கால இலக்கிய வகைகளிலிருந்தும் தமிழ் இலக்கியத்தைப் பாரதியார் விடுவித்ததாகக் கூறி, மகாகவிக்கு ஏற்றம் நல்குகிறார்.[7] மேலும், அரசியல் கருத்து வெளிப்பாடுகளுக்கு நாட்டுப்புற இலக்கிய வடிவங்களைத் தேர்ந்து, அவற்றிற்கு உயிரூட்டி மறுவாழ்வு அளித்தார் என்றும் கூறுகின்றார்.[8] பாரதியாரின் கவிதை, இந்தியக் கவிதை வளர்ச்சியில் புதிய போக்குகளின் வெளிப்பாடு' என்கிறார் அறிஞர் இ. டி. செலிசேவ் (E. D. Chelishev) அவர்கள்.[9]

பாரதியாரின் இலக்கியத் தொண்டுகளில், கவிதைப் பணியைப் போலவே குறிப்பிடத்தக்க சிறப்பிடத்தைப் பெறுவது அவரது உரைநடைப் பணியாகும். பாரதியின் உரைநடை பல்வேறு வகைப் பட்டது; முன்மைத் தன்மை (originality) வாய்ந்தது. ஆனால்

''பாரதியின் கவிதைகளையே புகழ்ந்த புகழ்ச்சி, அவர் உரை நடைக்கு ஆற்றியுள்ள தொண்டை மறக்குமாறு செய்து விட்டது''[10] என்கிறார் அறிஞர் ஆஷர் அவர்கள். இவர் கூற்று, பெரிதும் உண்மையே. இன்றும் கூட, பாரதி என்றாலே பலருக்கு அவருடைய கவிதைகளே முன் நிற்கின்றன. ஆனால், பாரதி பற்றிய எந்த ஆய்வும் அவருடைய உரைநடைகளையும் உள்ளடக்காமல் முழுமை அடையாது என்பதை இன்றைய ஆய்வுலகம் நன்கு அறிந்துள்ளது.

> பாரதியாரது எண்ணக் குவியல்கள், சிந்தனைத் துளிகள் உணர்ச்சிப் பொறிகள், ஆசாபாசங்கள்—முரண்பாடுகள் முதலியவற்றை அவரது வசனப் படைப்புக்களே தெளிவாகக் காட்டுகின்றன; காட்ட முடியும்.[11]

எல்லா இலக்கிய வெளிப்பாடுகளுக்கும் தமிழைத் தகுதி உடைய தாக்கியது பாரதியின் உண்மையான பெருமை ஆகும்; பாரதி தமிழுக்குத் தந்த மிக இன்றியமையாத கொடையாகும் என்கிறார் அறிஞர் கமில் சுவலபில்[12]

பாரதியின் மொழிநடை

தம்முடைய படைப்புகள் ஒவ்வொன்றின் வழியாகவும் சாதாரண மக்களையும் தட்டி எழுப்ப வேண்டும்—அவர்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணத் துடனேயே பாரதியார் தம் படைப்புகளைப் படைத்தார். அந்த எண்ணமே, அவர்தம் நடையின் எளிமைககு வழிவகுத்தது எனவும் கொள்ளலாம்.

பாரதியார் படைப்புகளைக் காணும்போது அவர் பண்டிதர் நடைக்கும பாமரரின பேச்சு நடைககும இடைப்பட்ட ஓர் எளிய மொழி நடையையே பெரிதும் பின்பற்றினார் எனக் கொள்ள இடம் உளது; சாதாரண மக்களிடையே வழங்கும் சொல்லாட்சிகள், மரபுத் தொடர்புகள், தொடர் அமைப்புகள் ஆகியவற்றையும் பாரதியார் போற்றிப் பயன்படுத்தி உள்ளார். பாரதியின மொழி நடையையும் அறிஞர் உலகம் ஆராய்ந்துள்ளது.

> பாரதி சிந்தனை வாதம் பேசும் கவிஞர்; தனது தனித் தன்மையைப் பெரிதாகக் கருதியவர். இருப்பினும், மக்கள் புரிந்து கொள்ளும் மொழிநடையில் அவர் மக்களிடம் பேசினார்.[13]

என்றும்,

'தம்முடைய கடைசிக்காலங்களில் பாரதியார் மரபு வழித்தான வடிவங்களுக்குத் திரும்பினார்; அவருடைய எழுத்தில் வடமொழிகள் கலப்பு மிகுந்து விளங்கியது'[14] என்றும் பாரதியின் மொழி நடையைப் பற்றிக் கூறுகின்றார் அறிஞர் கமில் சுவலபில் அவர்கள்.

அறிஞர் ஹெல்கா ஆண்டன் அவர்களும் பாரதியின் தெளிவான எளிமையான மொழிநடையைப் பாராட்டி, தமிழ் உரைநடை உருவாக்கத்தில் பாரதியார் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியுள்ளார் என எடுத்தியம்புகின்றார்[15]

பாரதியும் இயற்கையும்

கவிஞர்கள், இயற்கையின் குழந்தைகள்; இயற்கையொடு ஒட்டி உறவாடுபவர்கள்; இயற்கையின் நுட்பங்களை வண்ணக் கோலங்களில்—வகை வகையான கோணங்களில் கண்டு கண்டு மகிழ்ந்து, தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என எண்ணி, அவற்றைப் பாக்களில் வடித்து உலகுக்கு வழங்குபவர்கள். பாரதியாரும் இதற்கு விதி விலக்கானவர் அன்று.

அரசியல் எழுச்சிக்குரிய சிந்தனைகளுடனும், சமுதாய மறுமலர்ச்சிக்குரிய சிந்தனைகளுடனும் போராடிக் கொண்டிருந்த பாரதியார், அவ்வப்போது இயற்கையின் அரவணைப்பிற்குள்ளும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பாண்டிச்சேரி அதற்குத் தக்க களமாகவும் அமைந்தது.

பாரதிக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு நிலையை ஆய்ந்துள்ள அறிஞர் மகேஸ்வரி மகாதேவா அவர்கள் "பாரதியார் தம்முடைய கருத்துப் படிவங்களைப் பெரும்பான்மையும் இயற்கையை ஆழ்ந்து நோக்கும் நோக்கிலிருந்தே பெற்றார். இயற்கை, உயிர் வாழ்க்கை, அவற்றின் செயல்முறை ஆகியவற்றில் பேரன்புபூண்ட பாரதியாருக்கு அவை தாமாகவே வந்து வாய்த்தன"[16] என வரையறுத்துரைக்கின்றார். உற்று நோக்கி உய்த்து உணர்ந்த 'அழகின்' தூய்மையான—உண்மையான வெளிப்பாட்டைப் பாரதியின் கவிதைகளில் காண முடியுமென அறிஞர் ஜேம்ஸ் எச். கஸின்ஸ் (Hames H. Cousins) அவர்கள் கூறுகின்றார்.[17]

இயற்கையை அணுகியதில், பண்டைக்காலப் புலவர் பெருமக்களுக்கும் பாரதிக்கும் ஒருசிறு வேறுபாடு உண்டு. வேறுபாடு சிறியதாயினும் குறிப்பிடத்தக்க ஒன்றே. பண்டைப் புலவர் பெரு

மக்கள் இயற்கையின் அமைதி நிலையை, அழகை, வியந்து பெரிதும் போற்றி நின்றனர். ஆனால், பாரதியோ இயற்கையின் கட்டுப்பாடற்ற, கொந்தளிப்பான, சீற்றம் மிக்க கூறுகளையே பெரிதும் கவிதைகளில் வடித்துள்ளார். இவ்வேறுபாட்டை ஓரளவு ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றார் அறிஞர் மகேஸ்வரி மகாதேவா அவர்கள்.[18] இவ்வேறுபாட்டுக்குக் காரணம் பாரதியார் வாழ்ந்த அரசியல்—சமூகச் சூழல்களே எனலாம். சூழலின் சுழற்சிக்குள் சிக்கிய பாரதி தம் உள்ள எழுச்சிகளை இயற்கையில் கண்டதில் வியப்பில்லை அன்றோ?

பாரதியின் இந்தியக் கண்ணோக்கு

பாரதியார் காசியில் தங்கி இருந்த காலத்தில், வங்கத்தில் வீறு பெற்றிருந்த விடுதலை உணர்ச்சி, அவர் உள்ளத்தையும் பற்றிக் கொண்டது; இந்தியா, இந்திய ஒற்றுமை, இந்திய விடுதலை என்னும் எண்ணங்கள் உள்ளத்தில் வேர் கொண்டன. 1905ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் அவர் தீவிரமாக இறங்கினார். அதுமுதல் அவர் உள்ளத்தில், 'ஒன்றுபட்ட இந்தியா' என்னும் எண்ணமே முதன்மையிடம் பெற்றிருந்தது. அதனை அவருடைய எழுத்துகளில் தெளிவாக அறிய முடிகின்றது. 13-2-1906ஆம் நாளன்று, பாரதியார் பின்வருமாறு ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டிருந்தார்.

> எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின், பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப் பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார் களாயின் அவர்மாட்டு மிக்ககடப்பாடுடையவனாவேன்... தற்காலத்தே தமிழ்ப் புலமையில் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவராயின் அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.[19]

இந்த விண்ணப்பம், பாரதியார் எந்த அளவிற்கு இந்திய நாட்டின் மேல் தீவிரப் பற்றுடையவராக விளங்கினார் என்பதனை அறிவ தற்குரிய சான்றாகும். அவர் விண்ணப்பத்திற்குத் தமிழகம் செவி

சாய்க்கவில்லை போலும்! அதனால், பாரதியார் தாமே எழுதிய தேசியப் பாடல்களைத் தொகுத்து 1908-ஆம் ஆண்டில் 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் நூலையும், 1909-ஆம் ஆண்டில் 'ஜன்ம பூமி' என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். பாரதியாரின் இந்தியக் கண்ணோட்டத்தை ஆராய்ந்த அறிஞர் கமில் சுவலபில் அவர்கள்,

> அவர் எப்போதும் இந்தியாவை ஒரே நிலப்பகுதி என்ற கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறார்.[20]

எனத் தெளிந்துரைக்கின்றார். பாரதியார் இந்திய நாட்டுப்பற்றை ஒரு 'நவீன மார்க்கம்' என்றே கொண்டார்; அதிலே இறைமையைக் கண்டார். அதில் தம்மை இணைத்துக் கொண்டார் பாரதியார்;

> இந்திய விடுதலை, இந்திய மனிதனின் விடுதலை என்னும் அடிப்படைத் தேவையிலிருநதே சகல பிரச்சினை களையும் நோககினார்; அணுகினார்.[21]

என்று ஆய்ந்துரைக்கின்றார் முனைவர் க. கைலாசபதி அவர்கள்.

விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு, பாக்கள் பாடிய இந்தியக் கவிஞர்களின் பாடல்களை ஒப்பிட்டு நோக்கிய அறிஞர் இ. டி. செலிஷேவ் (E. D. Chelishev) அவர்கள், மேற்குறிப்பிட்ட கவிஞர்களுள் பலரும் தம் நிலப்பகுதி, தம் இனம், தம் சமயம் என்னும் குறுகிய எல்லைக்குள்ளே நின்று தம் விடுதலை வேட்கையை வெளிப்படுத்திக் கொண்ட வேளையில், எவ்வித வேறுபாடும் கருதாமல் 'இந்தியா' என்னும் ஒரே நோக்கில் கவிதை பாடித் தம் வேட்கையை வெளிப்படுத்தியவர் பாரதியார் எனப் புகழ் மாலை சூட்டி மகிழ்கின்றார்.[22] மேலும் அவர்,

> இந்திய அரசியல் முனைப்புடைய கருத்துகளையும், இந்தியச் சமுதாய அடிப்படையிலான பொருள பொதிந்த எண்ணங்களையும் வெளிப்படுததிய இந்தியக் கவிஞர் களுள் உண்மையில் பாரதியே முதன்மைக் கவிஞராக விளங்குகிறார்.[23]

என்று கூறுகின்றார்.

பாரதியின் உலகக் கண்ணோக்கு

உலகக் கண்ணோக்குடைய பல்வேறு இலக்கியங்களைத் தமிழ் போலும் பல்வேறு மொழிகளில் பெற்றுத் திகழ்வது இந்திய நாடு. ஆகவே, இம்மண்ணில் தோன்றும் உண்மையான கவிஞர்

எவருக்கும் உலகம் என்னும் பரந்து விரிந்த பார்வை எழுவது இயல்பு. திருக்குறள் முதலாய பல்வேறு அற நூல்களிலும் தோய்ந்த நெஞ்சம் பாரதி நெஞ்சம்; ஆகவே, உலகம் என்னும் உணர்வு அவர் உள்ளத்தில் தேங்கி இருந்ததில் வியப்பில்லை. இக்கருத்தின் அடிப்படையில், மலேசிய அன்பர் ஜைனுதீன் அவர்கள்,

> திருமூலரின் திருவாக்கையும், கணியன் பூங்குன்றனாரின் கவின மொழியையும், வள்ளுவரின் வாயுரையையும் திருநபியின் திருவசனத்தையும் தாரணிக்கு நினைவு படுத்தும் பாரதி, வேற்றுமையிலே ஒற்றுமை காண விழைகின்றார். எனவே அவர் அவணியைப் பொதுக் கண்கொண்டு நோக்கும் நிலை பூக்கிறது. இநத எண்ணப்பூ "ஒரே உலகததை" உருவாக்கும் ஒற்றுமை மணம் வீசும் உயரிய கவிதைகளை உருவாக்குகின்றது.[24]

எனக் கூறுகிறார். மேலும், பாரதியார் வாழ்ந்த காலம் ஆசிய எழுச்சியையும் உலக ஒற்றுமையயும் காண விழைந்த ஒக்காகுவா ககுஜோ, டாக்டர் சன்யாட்சென், இரவீந்திரநாத தாகூர், ஆனந்த குமாரசாமி முதலிய பெருமக்கள் வாழ்ந்த காலம்; உலக மனிதனின் நலம் என்ற பரந்த இலக்கை நோக்கி உலகம் நடையிட்ட காலம்; ஆகவே காலச் சூழலும் பாரதியின் உலகக் கண்ணோட்டத்திற்கு அடிப்படையாக இருந்திருக்கலாம். அன்றியும் அன்னை நிவேதிதா தேவி அவர்களின் தொடர்பும் பல ஞானியர்களின் தொடர்பும் பாரதியாரின் உலகளாவிய நோக்கிற்குத் துணை நின்றிருக்கலாம்; மேலும், பாரதியார் அவர்கள் செய்தித்தாள்கள் சிலவற்றில் ஆசிரியராக இருந்தது, உலகச் செய்திகளை அறிந்து கொள்ளவும் அவருடைய உலகக் கண்ணோட்டம் விரிவு பெறவும் காரணமாக இருந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

உலகம் என்னும் நோக்கு, பாரதியார் உள்ளத்தில் பல்வேறு சூழல்களால் வேரூன்றி நிலைத்திருப்பினும், அதனை விஞ்சும் அளவில் இந்தியா, இந்திய ஒருமைப்பாடு, இந்திய விடுதலை என்னும் உணர்வுகளே மேலோங்கி இருந்தன. அவற்றிற்கு உடனடியான தேவையும் ஏற்பட்டது. அதாவது, பாரதியாரைச் சுற்றி நின்ற உலகக் கண்ணோட்டம் என்னும் வட்டமோ பெரிதும் 'இந்தியா' என்னும் உணர்வை மையப்புள்ளியாகக் கொண்டே அமைந்திருந்தது எனலாம்.

> நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி.

என்று பாரதியாரே கூறுவது கருதத்தக்கதாகும்.

> முனைவர் க. கைலாசபதி அவர்கள், பாரதியாரோ தன்னை உருவாக்கிய சூழல் பெரும்பாலும் உயர்ந்தது எனக் கொண்டு, அதற்கு அநுசரணையாக உலகத்தைத் தழுவ முற்பட்டார்.[25]

எனத்தெளிவுப்படுத்தியிருப்பதும் இங்கு ஊன்றி உணரத்தக்கதாகும்.

பாரதியாரின் உலகக் கண்ணோக்கினை வெளிப்படுத்தும் கவிதைகளுள் ஒன்று 'புதிய ருஷியா' என்னும் கவிதையாகும். இக்கவிதையின் வழி வெளிப்படும் பாரதியின் உணர்வை உணர்ந்து மதிப்பிடும் அறிஞர் இ. டி. செலிஷேவ் அவர்கள்,

> புதிய ருஷியா என்னும் அரிய கவிதையைப் படைத்ததன் வழி, பன்மொழி இலக்கியங்களை உள்ளடக்கிய இந்தியாவில், உருசியப் புரட்சிக்கு மதிப்பளித்த கவிஞர்களும் முதல் கவிஞராகப் பாரதியார் விளங்குகின்றார்.[26]

எனக் கூறுகிறார்.

இம்மதிப்பீடு, உருசியா மண்ணில் தோன்றிய ஓர் அறிஞரின் வாயிலாகவே கிடைக்கின்றது என்பதும் இங்கு நினைவு கொள்ளத் தக்கதாகும்.

முடிவுரை

இதுவரை பிறநாட்டு அறிஞர்கள், தமிழ் மண்ணில் தோன்றிய மாபெரும் கவிஞர் பாரதியாரை எவ்வெவ்வாறு நோக்கி உள்ளார்கள் என ஓரளவு கண்டோம். எனினும், உலக அரங்கில் பாரதியாரின் புகழ் பரவ வேண்டிய அளவுக்குப் பரவவில்லை என்பதும், பாரதியாரை ஆராய வேண்டிய அளவிற்குப் பரந்த அளவில் பிற நாட்டு அறிஞர்கள் ஆராயவில்லை என்பதும் இக்கட்டுரையாளனின் கருத்தாகும்.

குறிப்புகள்

1. நாவலர் சோமசுந்தர பாரதியார், **சுதேச கீதங்கள்—முதற்பாகம்,** பாரதி ஆச்ரம வெளியீடு, சென்னை, 1922, ப. 6.

2. Kamil Veith Zvelebil, **A History of Indian Literature—Tamil Literature,** Otto Harrassowitz, Wiesbaden, 1974, p. 62.

3. க. கைலாசபதி, **இரு மகாகவிகள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, நான்காம் பதிப்பு 1574, ப. 85.

4. Kamil Zvelebil, **The Smile of Murgan on Tamil Literature of South India,** Leiden, E. J. Brill, 1973, pp. 286 & 337.

5. Kamil Veith Zvelebil, **A History of Indian Literature—Tamil Literatu:e,** op. cit., p. 61.

6. Helga Anton, 'Subramania Bharati's Ideas on the development of Tamil Literature', **Proceedings of the First Inrernational Conference Seminar of Tamil Studies, Vol. 2,** International Association of Tamil Research, 196), p. 238.

7. Kamil Zvelebil, op. cit , p. 278.

8. Kamil Veith Zvelebil, op. cit., p. 63.

9. E D. Chelishev, 'The Poetry of Subramanya Bharati, A Manifestation of New Tendencies in the development of Indian Literature', **Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies, Vol. 2,** op. cit., p. 90.

10. R. E. Asher, 'Some Land Marks in the History of Tamil Prose', Annals of Oriental Research, Vol. XXIV, 1973, p. 31.

11. க. கைலாசபதி, மு. நூ., ப. 19.

12. Kamil Zvelebil, op., cit., p. 278.

13. Ibid.

14. டாக்டர் கமில் சுவலபில், 'பாரதியும் வசனமும்', **தமிழகம் தந்த மகாகவி,** சீனி விசுவநாதன் (தொகு.), ஸ்ரீ புவனேசுவரி பதிப்பகம் சென்னை, 1978, ப. 323.

15. Helga Anton, op. cit., p. 245.

16. M. Mahadeva, 'Nature in Bharati's Poetry', **Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies**, Vol. 2, op. cit., p. 87.

17. James H. Cousins, மேற்கோள், **மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை**, சீனி விசுவநாதன் (தொகு.), வானவில் பிரசுரம், சென்னை, 1981, ப. 28.

18. M. Mahadeva, op. cit., p. 79.

19. பாரதியார், மு. நூ., ப. 61.

20. டாக்டர் கமில் சுவலபில், மு. நூ., ப. 324.

21. க. கைலாசபதி, மு. நூ., ப. 30.

22. E. D. Chelishev, op. cit., p. 90.

23. Ibid, p. 95.

24. பட்டர் வொர்த் ஜைனுதீன், **செந்தமிழ் தேனீ**, தமிழ்மணிப் புத்தகப் பண்ணை, சென்னை, 1981, ப. 20.

25. க. கைலாசபதி, மு. நூ., ப. 34.

26. E. D. Chelishev, op. cit., p. 95.

பாரதியின் நடையியற் சிந்தனைகள்

டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை-600 005.

முன்னோடிக் கவிஞர்

கவிதை காலத்திற்குத் தக்கவாறும், பாடுபொருளுக்கேற்பவும் வடிவங்களிலும் எடுத்துரைக்கும் உத்திகளிலும் பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பெற்றுவருகிறது. அவ்வாறே உரை நடையும் வரலாற்றுச் சூழல்களுக்கு ஏற்பப் புதிய சொல்லாக்கங்கள் சொற்றொடர் அமைப்புகள், செறிவு, நெகிழ்வு முதலானவற்றைப் பெற்று வளர்ந்து வருகின்றது.

தமிழ் மொழியில் புதியன படைத்தும், புதுமையை விரும்பியும் பற்பல வளங்களைச் சேர்த்தவர் பாரதி. கவிதையிலும் உரை நடையிலும் பல புதிய வகைகளையும், உத்திகளையும் உருவாக்கிய பெருங்கவிஞர். தமிழ்மொழியின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தவர். கவிதையிலும் உரைநடையிலும் இன்று பின்பற்றப்படுகின்ற அனைத்துப் புதிய சிந்தனைகளுக்கும் வடிவச் சோதனைகளுக்கும் முன்னோடியானவர் பாரதி.

புதிய சூழல்

சமுதாய மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய பாரதி, சமுதாயத்தையும் தேசியத்தையும் புதியமுறையில் அணுகியதைப் போலவே மொழி வளர்ச்சியிலும் புதிய புதிய சிந்தனைகளைக் கொண்டார். அவருடைய கவிதையிலும், உரைநடையிலும் பொருளை உணர்த்தும் முறைகளில் புதிய வேகம் அமைந்தது. மக்களனைவரையும் ஈர்த்துச் செல்லும் நெறியில் மொழிநடை அமைய வேண்டும் என்பதே பாரதியின் உள்ளக்கிடக்கையாகும். எனவேதான் அவருடைய படைப்புகளில் மொழிநடையைப் பற்றிப் பல வாறாகச் சிந்தனை செய்த பான்மையைக் காணமுடிகின்றது.

எளிய நடை

'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது

தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்...'[1] என்று பாரதி பாஞ்சாலி சபதத்தின் முனனுரையில் மொழிக்குப் புத்துயிர் தர வேண்டிய நிலையை வற்புறுத்துவார். அவர் தரும் இக்குறிப் பினால் எல்லா மக்களும் எளிதில் புரியும் எளியநடையே மொழி நடையாக விளங்க வேண்டும் என்பது பாரதியின் கொள்கை யாகத் துலங்குகின்றது.

'எண்பொருளவாகச் செலச்சொல்லி' என்று வள்ளுவப் பெருந்தகையும் உணர்த்தும் திறத்தில் ஒன்றான எளிமையை அறிவுத்திறனாகப் போற்றுவது எண்ணுதற்குரியது.[2].

முன்னையோர் மரபு

கவிதையின் அமைப்பு அதன் நடை முதலாயின குறித்துப் பாரதியின் சிந்தனை வருமாறு: 'கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை. காலம் மாற மாற, பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை'[3] என்னும் குறிப்பிலும் படைப் பிலக்கியக் கவிஞர்கள் தாம் தேர்ந்தெடுக்கும் சொற்களின தகுதியை உணர்ந்து எளியசொற்களைத் தேரும் நெறியினைப் புலப்படுத்துவார். எளிய செய்திகளையும் புரியாத நடையில் எழுதுவோரைக் குறை கூறி அந்நடையை 'அஸாதாரண அலௌகிக அந்தகார நடை'[4] என்று பாரதி குறிப்பிடுவார்.

உணர்ச்சி நடை

நடையின் வேறுபாட்டுக்குரிய காரணங்களுள் ஒன்றாக உணர்ச்சியையும் கொள்வர். கூறும் உணர்ச்சிககுத் தக்கவாறு சொற்களும், உணர்த்தும் விதமும் அமைவது இயலபே. பாரதியின் பாஞ்சாலி சபதத்தில தருமன் சூது ஆடுவதற்கு இணங்குகின்றான். தருமன் சூதாட்டத்திற்கு இணங்கியதையும், சூதாடும் நிகழ்ச்சி யையும் உணர்ச்சி மயமாகப் பாரதி வருணிப்பார்;

மாயச் சூதி னுக்கு—ஐயன்
மனமி ணங்கி விட்டான்
தாய முருட்ட லானார்—அங்கே
சகுனி யார்ப் பரித்தான்
நேய முற்ற விதுரன்—போலே
நெறியு ளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார்—தங்கள்
மதிம யங்கி விட்டார்[5]

என்று சகுனி ஆர்ப்பரிப்பதிலிருந்து தருமன் தன் பொருட்களை இழக்கும் வரையில் பாரதியின் பாடல்களில் உணர்ச்சி பெருக்கெடுத்தோடும். இறுதியாக,

மாடி ழந்து விட்டான்—தருமன்
மந்தை மந்தை யாக
ஆடி ழந்து விட்டான்—தருமன்
ஆளி ழந்து விட்டான்
பீடி ழந்த சகுனி—அங்கு
பின்னுஞ் சொல்லு கின்றான்
நாடி ழக்க வில்லை,—தருமா!
நாட்டை வைத்தி டென்றான்[6]

என்று தருமனிடம் கேட்பதாக அப்பகுதி அமைகின்றது. இப்பகுதி முழுவதிலும் சகுனியின் ஆணவமும், தருமனின் அவலமும் நன்கு சித்திரித்துக் காட்டப்படுகினறன. இப் பகுதிக்குப் பாரதியார் தம்முடைய முதல் பதிப்பில் தரும் குறிப்புரைகள் அவர்தம் நடையியற் கொள்கையினை நன்கு தெளிவுறுத்துவதாக அமைந்துள்ளன. அவர்தம் குறிப்புரை வருமாறு :

"பாட்டு 183 முதல் 95 முடிய
லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள், தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கிற பெண்கள், 'மாயக்காரனம்மா—கிருஷ்ணன் மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை, சூதாட்ட வருணனைக்கும் அதில் ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குதற்கும் இந்நடை மிகவும் பொருந்தியதென்பது எளிதிலே காணப்படும்"[7].

இங்கு சூதாட்ட வருணனை, பரபரக்கும் உணர்ச்சி முதலாய வற்றினை வெளிப்படுத்தும்போது பயன்படுத்துகின்ற பா அமைப் பினை நன்கு ஓர்ந்தும் ஆராய்ந்தும் பாரதி நடை குறித்த சிந்தனைகளை வழங்குகின்றார்.

வசன நடை

கவிதைகளைப் படைத்துப் பெரும்புகழ் பெற்ற பாரதியின் உரைநடைகளும் புதுமைத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றின. சிறுசிறு தொடர்களால் தம் எண்ணத்தை மக்களுக்கு எளிய நடையில் புலப்படுத்தியவர். உணர்ச்சி மிக்க கருத்துப் பிரசாரத்திற்கு அவர் தந்த உரைநடைச் சோதனைகள் பெரும் வலிவூட்டின. எனவே தமிழ் வசன நடை எப்படியிருக்க வேண்டும் என்பதைப் பாரதியார் ஆழ்ந்து சிந்தித்து அரிய கருத்துகளை நல்குகின்றார்:

'தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்து பல வருஷம் ஆகவில்லை. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடிய வரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் சரி, வார்த்தை சொல்லுகிறது மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது'[8] என்பது பாரதியின் கருத்தாகும். இதனுல் செயற்கையாகவன்றி இயற்கையாக மனத்துள் எண்ணு வதை அப்படியே எழுதுவது நல்ல நடை என்னும் கொள்கையினர் பாரதியார்.

நடை நெறிகள்

அவ்வாறே எழுதுமுன் நடை நன்கு அமைய என்னென்ன நெறிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதையும் பாரதியார் கூறுகின்றார்:

'பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங் களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிகப் பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும். சந்தேகமில்லை. ஆனாலும் ஒருவழியாக முடிக்கும்போது, வாய்க்கு வழங்குகிறதா என்று

வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்'[9]. வாய்விட்டுப் படிப்பதால் ஏற்படும் ஓசை நயங்களால் நடையினை மேலும் பொலிவூட்டச் செய்யலாம் என்பது பாரதியின் கருத்தாகும்.

நடையினிமையும் மனஒருமையும்

கூறும் பொருளை மனத்தினுள் நன்கு பதியவைத்து ஒன்றி யிருந்தால் நல்ல நடை அமையும் என்பர்.[10] 'சொல்லவந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனை இல்லாமலே நேரே எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால், பின்பு ஸங்கட மில்லை. ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடிந்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைர்யமுமிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும்; வாலைப் பிடித்து எவ்வளவு திரு கினாலும் எழுந்திருக்காது'[11] என்னும் பாரதியின் கூற்று நடை இனிமைக்கு மனஒருமை எவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தெளிவுறுத்தும். இதனையே டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் மேலை நாட்டுச் சான்றோரின் கருத்தாலும் எடுத்துக்காட்டி விளக்குவது ஒப்புநோக்கத்தக்கது.[12] புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை திட்பமும் நுட்பமும் அமைந்ததாகும். அவருடைய உள்ளத்தில் தெளிவு இருந்தால் நடையில் எளிமை விளங்கும் என்பர் மு. வ.

'வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமானது தட்டுத் தடை யில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிக மாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ்நடை எழுதும்'[13] என இக்காலத்திய தமிழ்நடையினையும் குறிப்பிட்டு, நடை நன்கு அமையப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளையும் பாரதி தம் கட்டுரையில் கூறுவது உளங்கொளத்தக்கது.

ஏற்ற சொற்கள்

பழந்தமிழ் முன்னையோர் காலத்திற்கேற்பச் சொற்களையும், பிறவற்றையும் ஏற்றுக் கொள்வதில் தயங்கினாரல்லர். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல'[14] என்னும் நெறியையே இலக்கணமாக ஏற்றுக் கொண்டனர். புதுமைச் சிந்தனைகளுக்கும் புதிய மரபுகளுக்கும் உரியவரான பாரதியும் புதியனவற்றை ஏற்றுப் படைப்பதுதான் மொழி வளர்ச்சிக்கு ஏற்றது என்பதை உணர்ந்தவர். எனவேதான் தம்முடைய கட்டுரையில் காலத்திற்கேற்ற சொற்களைப் பயன்படுத்துமாறு வேண்டுகின்றார்.

> 'கரடு முரடான கல்லும் முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றியது...நெடுங் காலத்துக்கு எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவியவை. காலம் மாற மாற, பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்த காலத்து ஜனங்களுக்குத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்.[15]

என்று அவர் எழுதும்போது மக்கள் பழக்கத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதும், புரியாத சொற்றொடர்களில் புலமை மிளிர எழுதுவது தேவையற்றது என்பதும் அவருடைய நடையியல் கொள்கைகளாக விளங்குகின்றன. தமிழ்ப் புலவர்கள் புரியாத வண்ணம் கடுநடையில் எழுதுவதைப் பிறிதோரிடத்திலும் அவர் எடுத்துரைக்கின்றார். அது வருமாறு:

> தமிழ்ப் புலவர்களிடம் போனால் நிகண்டுக்குக் கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகளை எழுதிக் கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது[16]

எனவே எளிய நடையிலே எடுத்துரைப்பதுதான் பாரதியின் கொள்கையாகத் துலங்குகின்றது.

தன் படைப்பில் இயற்கையாக அமைந்துவிட்ட சில கடுமை யான நடைகளுக்கும் கூடப் பாரதி படிப்போருடைய மன்னிப்பை வேண்டுகின்றார். அரவிந்தருடைய 'கடலுக்கு' என்னும் கவிதை மொழியாக்கததில் செய்யுள் அமைதிக்காக அவர் சில மொழி நடையைக் கையாள வேண்டியிருந்தாலும் கூட அதற்காக வருந்தி யிருக்கின்றார். அம்மொழியாக்கத்தில் அவர் தருகின்ற குறிப்புரை எளிய நடைக்காக அவர் கொண்ட முயற்சிகளைத் தெளிவாக்கும்.

> இம்மொழிபெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் தெளிவாகும் மிக எளிய நடையிலே அமைக்க வேண்டுமென்று சிரமப்பட்டிருக்கின்றேன். என்னையறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய 'கற்சற்' மொழிகள் விழுந்திருக் கின்றன. செய்யுள் அமைதி நாடி அம்மொழிகளுக்கு எளிய பிரதிபதங்கள் போடாமல் இருந்துவிட்டேன். இதன் பொருட்டும் படிப்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன்.[17]

'மிக எளிய நடை', 'அகராதிப் பண்டிதர்களுடைய 'கற்சற்' மொழிகள், 'எளிய பிரதி பதங்கள்' என்று பன்முறை அவர் வலியுறுத்திக் கூறி மக்களுக்குப் புரியும்படி எழுதும் நடை தான் சிறந்தது என்பார். மேலும் இனி எளிமை நடையினையே வலியுறுத்தி, 'யாவர்க்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடு வோருக்கு அதிகச் செல்வம் சேர மார்க்கமில்லையென்பது ப்ரத்யக்ஷம். எளிய நடையில் எழுதினால் அச்சுத்தொழிலும் பொது ஜனக் கல்வியும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும்' என்று தன்னுடைய கட்டுரையில் குறிப்பிடுவார்.[18] எளிய நடை பொருளையும் மிகுந்த அறிவையும் தரும் என மொழிநடையினையும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பார்க்கும் சமூக மொழியியல் அறிஞராகப் பாரதி இங்குத் துலங்குகின்றார் எனலாம்.

பாரதியின் நடைகுறித்த சிந்தனைகளுக்குக் காரணம்

இங்ஙனம் பாரதி மொழிநடை குறித்துப்பல அரிய கருத்து களைக் கூறுவதற்குக் காரணம் என்ன என்பதனை ஆராய்ந்த வ. வே. சு. ஐயர் அவர்கள் பினவருமாறு கருதுவர். ''இயற்கை யாகவே கவிதை நிரம்பிய பிரதிபையோடு கூடிய அவருக்குப் பழைய காவியங்களின் பழக்கமும், புதிய கல்வியின் வேகமும்,

பாரத தேசத்தின் புதியஜீவோதயமும் சேர்ந்து புதிய நடையையும் புதிய வழியையும் கற்பித்தன' என்று கூறுவர்.[19] இக்கூற்று முற்றிலும் உண்மை என்பதனைப் பாரதியாருடைய கட்டுரைகள் உணர்த்துகின்றன.

சப்பானியக் கவிதை நடை

'மாடர்ன் ரிவியூ' (Modern Review) என்னும் இதழில் அக் காலத்தே வெளிவந்த ஒரு கடிதத்தின் அடிப்படையில் பாரதி எப்படிக் கவிதை நடை அமைய வேண்டும் என்பது குறித்து எழுது கின்றார். 'உயோநே நோகுச்சி' என்னும் ஜப்பானியப் புலவர் அந்த இதழில் எழுதியுள்ளதாகப் பின்வரும் செய்தியைப் பாரதி தெரிவிக்கின்றார்! "மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண்சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலே இல்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்தாலும் தெளி வில்லாமையாலும் பல சொற்களைச் சேர்த்து வெறும் பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக் கொண்டு போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகம் இருக்கிறது. தம்முடைய மனத்திலுள்ள கருத்தை நேரே வெளியிடுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுதுவோரைக் காட்டிலும் சக்தி குறைந்திருக் கின்றார்கள். ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. 'கூடை கூடையாகப் பாட் டெழுதி அச்சிட வேண்டும்' என்று ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதை யெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையையே கவிதையாகச் செய்தோன்—அவனே கவி.

"கற்று முடிந்து வீட்டுக்குத் திரும்புகையிலே ஒரு சீடன் 'வாஷோமத் ஸுவே' என்னும் புலவரிடம் மூன்று ரியோ (அதாவது ஏறக்குறைய முப்பது வராகன்) காணிக்கையாகக் கொடுத்தானாம். இவர் ஒரு நாளுமில்லாதபடி புதிதாக வந்த இந்தப் பணத்தை வைத்துக் காப்பது தொல்லையாதலால் வேண்டியதில்லை என்று திரும்பக் கொடுத்து விட்டாராம். இவருக்கு காகா (Kaga) என்ற ஊரில் ஹொகூ ஷி என்றொரு மாணாக்கர் இருந்தார். இந்த ஹொகூஷியின் வீடு தீப்பட்டெரிந்து போய்விட்டது. அந்தச் செய்தியை ஹொகூஷிப் புலவர் தமது குருவாகிய 'வாஷோமத் ஸுவோ' புலவருக்குப் பின்வரும் பாட்டில் எழுதியனுப்பினார்.

தீப்பட்டெரிந்தது, வீழுமலரின் அமைதியென்னே !

"மலர் தனக்கு வாழுங் காலம் மாறிக் கீழே விழும்போது எத்தனை அமைதியுடன் இருக்கிறதோ, அத்தனை அமைதியுடன் ஞானி தனக்கு வருந்துன்பங்களை நோக்குகின்றான். வீடு தீப் பட்டெரிந்தது. ஆனால், அது பற்றித் தன் மனம் அமைதியிழந்து போகவில்லை' என்ற விஷயத்தை ஹொகூஷி இந்தப் பாட்டின் வழியாகத் தெரிவித்தார் ".[20]

ஜப்பானியப் புலவர் ஒருவரின் இக் கூற்றினைப் பாரதியார் நம்முடைய மொழிநடைக் கூறுகளுள் ஒன்றான 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்னும் நெறியுள் அடக்குவார். 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மை' யென்று நோகுச்சிப் புலவர் சொல்லுவதுடன் ஆங்கி லேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல் கிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது; 'கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்". கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ்நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது என்று நம்முடைய மரபிலே இந்நடை பெற்ற சிறப்பைத் திருக் குறள் சான்று காட்டிப் புலப்படுத்துகின்றார்.

வ. வே. சு. ஐயர் அவர்கள் கூறியது போலப் பழைய காவியங் களில் உள்ள புலமையும், புதிய செய்திகளும் பிறமொழிகளில் வரும் செய்திகளைக் கூர்ந்து நோக்கி ஆயுந்திறனும் பாரதிக்குப் புதிய வழியையும், புதிய நடையையும் கற்பித்தன. எனவேதான் மொழி நடை குறித்துப் பல அரிய செய்திகளைப் பாரதி நமக்கு வழங்கிய தல்லாமல் தாமும் அத்தகைய நடையில் தம் படைப்புகளைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு வழங்கினார்.

குறிப்புகள்

1. பாரதி, பாஞ்சாலி சபதம், முன்னுரை.
2. திருக்குறள், 424.
3. பாரதியார் கட்டுரைகள், பக். 56.
4. பாரதியார் கட்டுரைகள், பக். 56, 57.
5. பாரதியார் கவிதைகள், பக். 413.
6. பாரதியார் கவிதைகள், பக். 416.
7. பாரதியார் கவிதைகள் (1971), மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, பக். 468.
8. பாரதியார் கட்டுரைகள், (1977), பூம்புகார் பிரசுரம், பக். 252.
9. பாரதியார் கட்டுரைகள், பக். 252, 253.
10. இ. சுந்தரமூர்த்தி நடையியல் அறிமுகம், பக். 69.
11. பாரதியார் கட்டுரைகள், பக். 252, 253.
12. மு. வரதராசன், இலக்கியத்திறன், பக். 238.
13. பாரதியார் கட்டுரைகள், பக். 253.
14. நன்னூல், 462.
15. பாரதியார் கட்டுரைகள், பக். 56.
16. பாரதியார் கட்டுரைகள், பக். 57.
17. பாரதியார் கவிதைகள், பக். 702.
18. பாரதி நூல்கள் (கட்டுரைகள்), பக். 584.
19. வ. வே. சு. ஐயர் கட்டுரைகள், பக். 26.
20. பாரதியார் கட்டுரைகள், பக். 260, 261.

துணை நூல்கள்

1. சுந்தரமூர்த்தி, இ., நடையியல் அறிமுகம், அன்பு நூலகம், சென்னை, 1978.
2. திருக்குறள், கழகப் பதிப்பு, சென்னை, 1968.
3. நன்னூல், கழகப் பதிப்பு, சென்னை, 1953.
4. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.
5. பாரதியார் கவிதைகள், மெர்க்குரிப் புத்தகக் கம்பெனி, கோவை 1971
6. பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், சென்னை, 1981.
7. வரதராசன், மு, இலக்கியத்திறன், பாரி நிலையம், சென்னை, 1965.

பாரதியார் பாடல்களில் தேசியம்

டாக்டர் என். ஜெயராமன்

1.0 முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் மிகவும் இன்றியமையாத திருப்பு முனையை ஏற்படுத்தியவர்களுள் சுப்பிரமணிய பாரதியார் சிறப்பிடம் பெறுகிறார். தமிழ்நாடு, மொழி, இலக்கியம், சமுதாயம், சமயம் ஆகியவற்றையும் தேசிய உணர்வையும் எழுச்சியுறு கவிதைகளில் பாடினார். பழைய மரபு வழிப்பட்ட வடிவங்களையும் புதிய வடிவங்களையும் யாப்பையும் பயன்படுத்தித் தமிழுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டினார்.

அவரது வாழ்நாள் 11—12—1882 முதல் 12—9—1921 முடிய உள்ள 39 ஆண்டுக்காலமாகும். இக்கால கட்டத்தில் இந்திய விடுதலை இயக்கம் ஓரளவு தீவிரமடைந்திருந்தது.

1885-ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் ஆதரவில் அமைக்கப் பட்ட இந்திய தேசியக் காங்கிரஸ் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வலிமைசான்ற குழுவாக முதிர்ச்சி பெற்றது.

தொடக்க கட்ட விடுதலைப்போரில் சமுதாய அடிப்படை நன்கு அமையவில்லை. பாமரர் பங்கு பெறவில்லை. தியாக மனப்பான்மை, வீரஉணர்வு பாமரர்களிடம்தான் உள்ளன என்பதைத் தலைவர்கள் உணரவில்லை. மக்களனைவரும் ஒன்றுபட்டுத் தேசிய சமுதாயமாக உறுதிபெறவில்லை. பாமரரிடமிருந்து தலைவர்கள் விலகியே இருந்தனர்.[1]

1858 முதல் 1905 வரை உள்ள காலகட்டம் இடைக்காலம். இதுவே இந்திய தேசியத்துக்கு வித்திட்ட காலம்.

திலகர், லஜபதிராய், பிபின்சந்திரபால், அரவிந்தகோஷ் போன்ற தீவிரவாதிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். திலகர் நெறியில் தமிழ்நாட்டிலே கப்பலோட்டிய தமிழர் சிதம்பரம்பிள்ளை, சுப்பிர மணியசிவா, பாரதியார் மூவரும் விடுதலைப் போருக்கு விதை ஊன்றினர்.[2]

அண்ணல் காந்தியடிகள் வருவதற்கு முந்திய இந்தக் கால கட்டத்தில் போராட்டம் தீவிரமடையவில்லை.

1905-ல் வங்காளப் பிரிவினை வெளியிடப்படல், 1905-ல் அந்நியப்பொருளை ஒதுக்க முற்படும் சுதேசி இயக்கம் தொடங்கல், 1905-ல் சுயாட்சி வேண்டுமென முடிவுசெய்தல், 1919-ல் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கல், ஜாலியன் வாலாபாக் படுகொலை, காந்தி தலைமை ஏற்றல் ஆகியவை இக்கட்டத்தில் நடந்தவை.

1. 1 பாரதிக்கு முன்

விடுதலையைப் பற்றிப் பாடிய தமிழ்க்கவிஞருள் பாரதியே பெரிதும் போற்றப்பட்ட போதிலும் பாரதிக்கு முன் பாமரரிடையே கட்டபொம்மு கதை, சிவகங்கைச் சரித்திரக் கும்மி ஆகியவை வழங்கி வந்துள்ளன. மரபுவழிப் புலவர்கள் பாளையக்காரர்கள் ஆதரவில் பாராட்டுப் பாடல் பாடிக்கொண்டிருக்கப் பாமரர்கள் விடுதலையுணர்வுடன் வீர வணக்க முறையில் கட்டபொம்மனையும் பிறரையும் போற்றிப் பாடினர் என்பர்.[3]

'கருணையில்லா ஆட்சிக் கடுகி ஒழிக' எனப் பாடிய வள்ளலாரே தேசிய எழுச்சிக்குத் தமிழகத்தைப் பொருத்தவரையில் முன்னோடி என மொழிகிறார் ம. பொ. சி.[4]

1906-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் பாரதநாட்டைப் புகழ்ந்து பாடிய பாடல்களைத் தமக்கு அனுப்புமாறு பாரதி வேண்டுகோள் விடுத்தபோது ஒரு பாடல்கூட வரவில்லை என்பதிலிருந்து அக்கால நிலையை அறியலாம்.[5]

நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் ஜீவகவுழுதி வாயிலாகப் பாடிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் கூற்றுகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கவை. ஆயின் அவை இந்திய விடுதலையுணர்வை எண்ணத்தில் கொண்டெழுந்தவையா என்பது ஆய்வுக்குரியது. "பாரதியாரைப் பற்றி ஏற்கனவே தெரிந்து கொண்டதிலிருந்து இவரை ஓரளவு மனோன்மணீய ஆசிரியருடனும் சிற்சில அம்சங்களில் இராமலிங்க சுவாமிகளுடனும் ஒப்பிடக்கூடுமென்று எண்ணினேன்" எனும் பி. ஸ்ரீ. யின் கூற்று ஒப்புநோக்கத்தக்கது.[6]

பாரதியாரின் இலக்கியப்பணி எட்டையபுரம் அரசவைக் கவிஞராகத் (1902) தொடங்கிய போதிலும் பின்னர் அவர் அரசியலில் அதிக ஈடுபாடு காட்டியுள்ளார். '1907-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சூரத்துக் காங்கிரசுக்கு விஜயம் செய்து திரும்பியதும் பாரதியார் பாரத சக்தியின் சிப்பாயாகிவிட்டார்".[7]

காங்கிரஸ் மாநாடுகளில் கலந்துகொள்ளல், விடுதலை இயக்கத் தலைவர்களுடன் தொடர்புகொள்ளல், இந்தியா, பாலபாரதம் போன்ற இதழ்களை நடத்தல் முதலிய பணிகளில் ஈடுபட்டார். 'இந்தியா' இதழில் இவராற்றிய பணிக்காக ஆங்கில அரசின் கவனம் இவர் பக்கம் திரும்பியபோது புதுச்சேரிக்குச் செல்ல நேர்ந்தது.

பாரதியாரே திலகர் தலைமையிலான தீவிரவிடுதலை இயக்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

1905-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள்தான் முதன் முதலாக 'வங்கமே வாழிய' என்ற பாடலைப் பாரதியார் சுதேசமித்திரனில் வெளியிட்டார்.[8]

1907 டிசம்பரில் திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர் பாரதியின் பாடல்களில் மூன்றினை நான்கு பக்கச் சிறுதுண்டு வெளியீடாக 'சுதேசகீதங்கள்' என்னும் தலைப்பில் இலவசமாக அச்சிட்டு வழங்கினர். 1908-ல் 'ஸ்வதேச கீதங்கள்' எனும் தொகுதியை பாரதியார் வெளியிட்டார். இதுவே இவரது முதல் நூலாகும்.

இவரது பாடல்களில் தேசியப் பாடல்கள் என்று தொகுத்தளிக் கப்பட்டுள்ளவை 53 பாடல்களாகும் (பூம்புகார் பிரசுரம்).

National என்ற ஆங்கிலச்சொல்லைப் பாரதியார் ஜாதிய அறிவி என்றே மொழிபெயர்த்துள்ளார். தேசியம் என்பதையே ஜாதியம் என்றழைக்கும் பாரதி அதனை விளக்கும்போது "இந்தியாவிலே வளர்ந்து இந்நாட்டின் க்ஷேம லாபங்களையே தமது க்ஷேம லாபங்களாகவுடைய எல்லா வகுப்பினரும் ஒரே ஜாதியென்று, அந்த ஜாதி முழுமையும் உன்னதம் பெறுவதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டுமென்ற ஞானமே இந்திய 'ஜாதியஞானம்' என்று கூறப்படும்" என விளக்குகிறார்.[9]

இவர் பாடிய தேசியப்பாடல்களை

1. உலகளாவிய பாடல்கள்
2. இந்தியாவைப் பற்றின
3. தமிழ் பற்றியன

என மூன்றாக வகைப்படுத்தலாம். மேலும் விடுதலை இயக்கம் தொடர்பாகப் பிரிப்பதாயின்,

1. விடுதலை உணர்வைப் பாடுவன
2. விடுதலை இயக்கத் தலைவர்களைப் பாடுவன

எனப் பிரிக்கலாம். இவர் விடுதலை இயக்க நிகழ்ச்சிகள் எதனையும் குறிப்பிட்டுப் பாடவில்லை.

உலகளாவிய பாடல்களாக இவர் பாடியுள்ளவை

1. மாஜினியின் பிரதிக்கினை
2. பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து
3. புதிய ருஷியா
4. கரும்புத்தோட்டத்திலே

என நான்காம். உலக அரசியல் செய்திகளில் பாரதியார் கொண்டிருந்த ஈடுபாட்டினை அவரது 'இந்தியா' இதழ்த் தலையங்கங்கள் வாயிலாக உணரலாம். கொள்கைகளுக்காக எந்தத் தியாகங்களையும் செய்ய ஆயத்தமாகவும் ஒற்றுமையாகவும் உள்ள ஒரு நாடு எவ்வளவு வலிமைமிக்க அரசையும் எதிர்த்துப் போராடமுடியும் என்ற உண்மையை இந்திய மக்களுக்கு அயர்லாந்து, ரஷ்யா, எகிப்து, துருக்கி, சீனு ஆகிய நாட்டு மக்கள் நடத்திய போராட்டம் உணர்த்தியது.

"மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புதுநிலை எய்தினர்"

என்று விடுதலை பெற்ற பிற உலக நாடுகளை நினைவூட்டுவது குறிக்கத்தக்கது. பாரதியார் அவ்வுணர்வுகளைப் பாடும்போது நம் நாட்டு விடுதலை உணர்வைத் தூண்டும் வகையிலேயே வெளியிட்டுள்ளார்.

"எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டதுவாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன்றதா யிலக" (49)

"அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றுர்
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருத யுகம் எழுக மாதோ" (52)

இந்தியாவைப் பற்றியன

பாரதம் பற்றிய பாடல்களாகக் காணப்படுபவை 19. அவற்றுள் மொழிபெயர்ப்புப் பாடல்கள் 2. வங்காள நாவலாசிரியர் பக்கிம் சந்திரசட்டர்ஜியின் ' ஆனந்தமடம் ' என்ற நாவலில் வரும் பாடலைப் பின்பற்றியே பாரதி வந்தே மாதரம் எனும் பாடலை எழுதினார்.[11] ஜாதியகீதம் என்னும் தலைப்பில் அவர் பக்கிம் சந்திரரின் பாடல் ஒன்றை முதலில் மொழிபெயர்த்துப் பின்னர் அதனைத் திருத்திச் செம்மைப்படுத்தி வெளியிட்டுள்ளார்.

இந்திய நாட்டை அன்னையாகப் பாவிக்கும் மரபினை அரவிந்தரிடம் நாம் காணுகிறோம்.[12] பாரதியாரும் பாரதத்தை மாதாவாகக் கொண்டு பல பாடல்கள் பாடியுள்ளார்.

பழைய மரபில் பாடியவை

பாரதமாதாவைப் பாடல் தலைவியாகக் கொண்டு பழையமரபில் பாரதியார் பாடியவை

1. பாரதமாதா திருப்பள்ளிஎழுச்சி
2. பாரதமாதா நவரத்தினமாலை
3. பாரதமாதா திருத்தசாங்கம்.

பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியில் பாரதத்தாயினை அதன் புதல்வர்கள் எழுப்புவதுபோல் பாரதியார் பாடுகிறார் :

> *"தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்*
> *தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்*
> *விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே*
> *வியப்பிது காண்பள்ளி எழுந்தருளாயே"*

என்று பள்ளிஎழுச்சி பாடும்போது பாரதத்தின் பல்வேறு பெருமைகளை இடைமிடைந்து பாடுகிறார்.

பாரதமாதா நவரத்தினமாலையில் ஒன்பது வகையான பாடல்களில் ஒன்பது மணிகளின் பெயர்களை வைத்துப்பாடுகிறார். அதில் பவளம் இடம்பெறும் பாட்டில் காந்தியடிகள் பற்றி ரவீந்திரர் கூறிய கூற்றினை மேற்கோள் காட்டிக் காந்தியின் தரும நெறியினை விளக்குகிறார்.

பாரததேவியின் திருத்தசாங்கத்தில் பாரததேவி எனும் பெயர், ஆரிய நாட்டு எல்லை, காசிநகர், கங்கையாறு, இமயமலை,

சிங்கஊர்தி, குலிசப்படை, வேதமுரசு, பொற்றாமரைத்தார், வயிரக்கொடி ஆகிய பத்து உறுப்புகளை இசைப்பாடலில் பாடிப்பரவுகிறார்.

பழைய மரபில் பாரதத்தாயைப் போற்றிப் பாடும் பாரதி சில புதிய இசைப்பாடல் மரபிலும் பாரத அன்னையைப் பாடுகிறார். 'ஜயபாரத்' எனும் தலைப்பில் அன்னையை வாழ்த்திப் பாடும் கவிஞர் அப்பாடலிறுதியில்,

"சுதந்திரத்தி லாசை இன்று
தோற்றி னுள்மன் வாழ்கவே"

என்று முடிக்கிறார்.

அடுத்து பாரததேவியின் பல்வேறு புராண வேதப்பெருமைகளை அடுக்கிப் பேசுகிறார். 'எங்கள்தாய்' எனும் தலைப்பில் இந்தியத் தாயின் பழமையைக் கூறி இந்திய மக்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார்.

"முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்-இவள்
செப்புமொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று அன்றைய தேவையான ஒற்றுமை உணர்வை வலியுறுத்துகிறார். தொடர்ந்து 'வெறிகொண்ட தாய்' எனும் தலைப்பில் 'பேயவள்காண் எங்கள் அன்னை' என்று காளியாகவே பாரதமாதாவை உருவகித்து இறுதியில் பாரதப்போரை நினைவூட்டுகிறார். வீறுகொண்டு போராட வேண்டி இந்தியாவையே பாரதியார் இங்ஙனம் காட்டுகிறார்.

'வந்தேமாதரம்' எனும் பாடலுள் ஒற்றுமை உணர்வையும் விடுதலை வேட்கையையும் பாடுகிறார்.

"முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

என்றும்,

"தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலையைத் தூவென்று தள்ளி"

என்றும் அவற்றைப் பாடுகிறார்.

பொதுவான நாட்டுப்பற்றையும் அதற்குரிய காரணங்களையும் 'எந்தையும் தாயும்' என்று தொடங்கும் 'நாட்டு வணக்கம்' எனும் பாடலில் விளக்குகிறார்.

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு"

என்று பாரதநாட்டின் ஞானம், வீரம், பண்பு, பக்தி, இயற்கைவளம் ஆகிய சிறப்புகளைப் பாடுகிறார். அவ்வாறே 'எங்கள்நாடு' எனும் தலைப்பில் இமயமலை, கங்கையாறு, வேதங்கள் ஆகிய இந்தியப் பெருமைகளை எடுத்துரைக்கும் போதே இடையில்,

"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகிஇனி மண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்"

என்று குறிப்பாக அடிமை வாழ்வினை நினைவூட்டிப் போராட ஆயத்தப்படுத்துகிறார்.

'பாரததேசம்' எனும் தலைப்பில் பாரதியார் எதிர்காலத் திட்டங்களை நெடுக வருணிக்கிறார். தேசிய ஒற்றுமை, அறிவியல் வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், சமுதாய சீர்திருத்தம் ஆகியவற்றை இப்பாடல்களில் வலியுறுத்துகிறார் பாரதியார்.

இவ்வாறு எதிர்காலத்தைத் திட்டமிடும் பாரதியார் நிகழ்கால நிலையை எண்ணி நெஞ்சு பொறுக்காது பாடுகிறார் ஒருபாடலில்.

மூடநம்பிக்கை, அச்சம், ஒற்றுமையின்மை, சமயச்சண்டை, பொருளாதாரச் சீர்கேடு ஆகியவற்றில் உழலும் இந்தியரின் நிலையை அழகுறக் காட்டுகிறார் அப்பாடலில்.

பின்னர் 'போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்' எனும் பாடலில் இவ்விரு நிலைகளையும் இணைத்துப் பாடுகிறார்.

இவ்வாறு பாரதநாட்டின் பழம்பெருமை, இன்றைய நிலை, எதிர்காலத் திட்டம் ஆகிய மூன்றினையும் பாரதியார் எடுத்துக் காட்டுவதன் மூலம் மக்களிடையே விழிப்பினை ஏற்படுத்தி ஒற்றுமையை உண்டாக்கி விடுதலை வேட்கைகொண்டு, வீறு கொண்டு எழச்செய்ய வேண்டுமென விரும்புகிறார்.

'பாரத சமுதாயம்' எனும் பாடலில் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனும் மக்களாட்சித் தத்துவத்தையும் இணைத்துக் கூறுவதோடு ஒற்றுமை உணர்வையும் காட்டுகிறார்.

'தாயின் மணிக்கொடி' எனும் தலைப்பில் பாரதநாட்டுக் கொடியினைப் புகழும் பாரதியார் ஒற்றுமை உணர்வையே மையமாக வைத்துப் பாடுகிறார்.

"இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்"

என்று இந்து, முகமதியர் ஒற்றுமையைக் குறிக்கிறார்.

விடுதலைப்போரின்போது பிரசாரத்தில் சமயமணம் பெருமளவுக்கு வீசியது. 'அவர்கள் பண்டைக்கால இந்தியக் கலாசாரத்தைப் போற்றினரேயொழிய, வரலாற்றின் நடுக் காலத்திய இந்தியக் கலாசாரத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்திய தேசம் என்று அவர்கள் குறிப்பிட்டபோது இந்துக்கள் பற்றியே அவர்கள் எண்ணியது போலவே, இந்தியக் கலாசாரம் என்று குறிப்பிட்டபோது இந்துசமயம் பற்றியும், ஆரிய கலாசாரம் என்று அவர்கள் எதை நம்பினார்களோ அதைப்பற்றியுமே அவர்கள் எண்ணினது போலவும் அவர்கள் பேச்சும் செயலும் அமைந்திருந்தன' என்று கூறும்நிலை[13] பாரதி பாடல்களுக்குப் பெருமளவு பொருந்தியபோதிலும் அவர் இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் உணர்த்தத் தவறவில்லை.

"தீயினைக்கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"

(பல்வகைப். 3. முரசு. பக். 204)

என்று சர்வசமய சமரசத்தையும் வலியுறுத்திப் பாடுவது குறிக்கத் தக்கது. மேலும் அல்லாவைப் பற்றித் தனியே பாடியிருப்பதும் குறிக்கத்தக்கது.

விடுதலை உணர்வைப் பாடுவன

பாரதநாட்டைப் பற்றிய பாடல்களில் இந்தியாவின் பெருமை, இன்றைய நிலை, பெறவேண்டிய ஏற்றம் ஆகியவற்றையும் அதற்கு ஒற்றுமை உணர்வே அடிப்படை என்பதையும் கூறும் பாரதியார் விடுதலை உணர்வினைப் பற்றித் தனியே 6 பாடல்கள் பாடியுள்ளார்.

அவற்றுள் 4 பாடல்கள் (சுதந்திரப் பெருமை, சுதந்திரப் பயிர், சுதந்திர தாகம், சுதந்திர தேவியின் துதி) விடுதலை உணர்வின் இன்றியமையாமையை விளக்குகின்றன.

" கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ "

என்று விடுதலையின் சிறப்பைப் பேசும் பாரதி,

" தண்ணீர்விட் டோவளர்த்தோம் சர்வேசா
இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?"

என்று இறைவனை முறையிடும்போது பெரிதும் மனம் வருந்திப் பாடுகின்றார். விடுதலைப் போரில் மக்கள் படும் அவலநிலை, தலைவர்கள் சிறையில் படும் அவதி ஆகியவற்றை இறைவனிடம் முறையிடுகிறார். அவ்வாறே அடுத்த பாடலிலும்,

" தஞ்ச மடைந்தபின் கைவிடலாமோ
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ"

என்று இறைவனை வேண்டுகிறார்.

இவ்வாறு விடுதலை வேண்டி இறைவனைப் பாடும் பாரதி விடுதலையையே இறைவியாக்கிச் 'சுதந்திர தேவியின் துதி' பாடுகிறார்.

சுதந்திர தேவியைத் தொழும் பாரதி, அவளது அருள் பெருதார் அவலநிலையையும் முரண்படவைத்துப் பாடுகிறார்.

விடுதலை, சுதந்திரப் பள்ளு என்னும் இருபாடல்களிலும் நாடு விடுதலையடைந்ததாக எண்ணிப் பாடுகிறார் பாரதியார். விடுதலையடைந்த நாட்டில் விளையும் நன்மைகளை அடுக்கிப் பேசுகிறார். அப்பாடல்கள், பாரதியின் தொலை நோக்குணர்வைப் புலப்படுத்தும். அப்பாடல்களில் ஒன்று 'பள்ளர் களியாட்டம்' எனும் தலைப்பிலமைந்து பழைய பள்ளுப் பிரபந்தத்தை நினைவூட்டுவது போலமைந்துள்ளது.

விடுதலைத் தலைவர்களைப் பாடுவன

பாரதியார் தம் காலத்து விடுதலைப் போராட்டத் தலைவர்களான

1. தாதாபாய் நவுரோஜி
2. பூபேந்திரர்
3. திலகர்
4. லாலா லஜபதிராய்
5. வ. உ. சி.
6. காந்தியடிகள்

ஆகியோரை நேரடியாகப் பாடுகிருர்.

எண்பது வயதுடைய நவுரோஜியின் உணர்வையும் செயல்களையும் பாராட்டி,

"பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி
போற்புதல்வர் பிறந்து வாழ்க"

என்று வாழ்த்துகிருர்.

திலகரை நேரடியாகப் போற்றி இரு பாடல்கள் பாடுகிருர்.

"சேர லர்க்கு நினைவுக்கவுந் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
சீர டிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே"

என்று போற்றிப் புகழ்கிருர்.

நாடு கடத்தப்பட்ட தலைவர் லாலா லஜபதிராயினைப் பற்றியன இரு பாடல்கள். ஒருபாடலில் லாலா லஜபதியை விளித்துப் பாடும் பாரதி மற்ருெரு பாடலை லாலாலஜபதிராய், கூற்ருக வைத்து,

"வீடும் உறவும் வெறுத்தாலும் என்னருமை
நாடு பிரிந்த நலிவிற்கென் செய்கேனே"

என்று நாட்டை எண்ணிக் கூறுவதாகப் பாடுகிருர்.

சிறைபுகுந்த வ. உ. சிக்கு வாழ்த்தாக ஒருபாடல் பாடுகிருர்.

தலைவர்களைப் போற்றிப் பாடும் பாடல்களில் காந்தியைப் பற்றிப் பாடும் பாடல் குறிப்பிடத்தக்கதாகும். பிற தலைவர்களின் செயல்திறனையும் விடுதலை உணர்வையும் கண்டு கேட்டு உணர்ந்தவர் பாரதியார். திலகர் சகாப்தத்தில் வாழ்ந்த பாரதி காந்தி சகாபதத்தில் வாழும் பேற்றினைப் பெறவில்லை.

1919 மார்ச்சில் சென்னையில் இராசகோபாலாச்சாரியார் வீட்டில் காநதியடிகளைச் சந்தித்து அன்று மாலை தாம் பேசவிருந்த கூட்டத்துக்குத தலைமை தாங்குமாறு வேண்டினுர். வேறு வேலை

இருந்ததால் அவர் வேண்டுகோளுக்கு அடிகள் இசையமுடியவில்லை. உடனே பாரதியார் காந்தியடிகளின் இயக்கத்தை வாழ்த்திவிட்டு வெளியே வந்துவிட்டார்.[14]. இதுவே காந்தியடிகளுக்கும் பாரதியாருக்கும் ஏற்பட்ட உறவு.

ஆயினும் காந்தியின் ஆற்றலைச் சரியாக அளவிட்டுத் தொலை நோக்குடன் பாரதி போற்றிபுகழ்கின்றார்.

காந்தியடிகளைப் பற்றி 5 பாடல்கள் அடங்கிய 'மகாத்மா காந்தி பஞ்சகம்' எனும் பாடலைப்பாடி அண்ணலின் ஒத்துழையாமை நெறியையும் அறவழி அரசியலையும் போற்றுகிறார்.

நாடகமுறை

நேரடியாகத் தலைவர்களைப் போற்றிப் புகழ்வது தவிர நாடக பாவனை முறையில் பாரதியார் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

1. கோகலே சாமியார் பாடல்
2. தொண்டுசெய்யும் அடிமை
3. நாம் என்ன செய்வோம்
4. பாரததேவியின் அடிமை
5. வெள்ளைக்கார விஞ்ச் துரைகூற்று
6. தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி

ஆங்கிலேயர் கூற்றாக இரு பாடல்கள் உள்ளன. சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவதாக அமைந்த பாடலில்,

"தொண்டுசெய்யும் அடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா"

என்று தொடங்கி,

"ஒற்றுமை பயின்றாயோ, அச்சம் நீங்கினாயோ, ஜாதிச் சண்டை போச்சோ, சமயச்சண்டை போச்சோ" என்று கேட்பதன் மூலம் எதிர்மறை நிலையில் நின்று மக்களின் இழிநிலையைச் சுட்டி எழுச்சியூட்ட முனைகிறார்.

மற்றொரு பாடலில்,

"திலகன் ஒருவனாலே இப்படி யாச்சு
செம்மையும் தீமையும் இல்லாமலே போச்சு"

என்று தொடங்கி,

"சீமைத் துணியென்ருல் உள்ளம் கொதிக்கிருர்"

என்று சுதேசி உணர்வை வெறுத்துரைக்கும் வெள்ளையன் கூற்றைக் காண்கிறோம்.

கற்பனையாக வெள்ளையரைப் படைத்து மொழிந்த பாரதி உண்மையில் வ. உ. சிதம்பரம்பிள்ளைக்கும் நெல்லைமாவட்ட ஆட்சியாளருக்கும் நடந்த உரையாடலை இருபாடலாக எழுதி "ஆங்கிலேயன் தேசபக்தனுக்குக் கூறியது; தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறியது" என்று அன்று வெளியிட்டார்.[14a] இப்பொழுது அப்பாடல்கள் வ. உ. சிக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் நடந்த உரையாடல்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

"எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினுய்—விதை—தூவினுய்"

என்று குற்றம்சாட்டி,

"சுட்டு வீழ்த்தியே புத்தி வகுத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்;—பழி—கொள்ளுவேன்"

என்று தானளிக்கும் தண்டனையும் விஞ்சதுரை கூறுவதாகப் பாடுகிருர்.

"சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ?

என்று வ. உ. சி. தன் உறுதியைப் புலப்படுத்துவதாகப் பாடுகிருர். 1908 மார்ச்சுத் திங்களில் சாட்சி சொல்லச் சென்ற பாரதி இவ்வுரையாடலை நேரில் கேட்டுணர்ந்து இப்பாடல்களைப் பாடியுள்ளார்.

இவ்வாறு பாரதியார் நேரடியாகவும் நாடகமுறையிலும் விடுதலைப் போராட்டத் தலைவர்களைப் போற்றிப் புகழ்கிருர்.

கோகலே சாமியார் பாடல் என்னும் பாடலில் கோகலே தன் எண்ணம் ஈடேறுமோ அல்லது கர்சன் பிரபுவால் நிறைவேருமல் போய் விடுமோ என்று கூறுவதாகப் பாரதியார் பாடுகிருர்.

மிதவாதியாகிய கோகலேயைத் தீவிரவாதியாகிய பாரதியார் இப்பாடலில் போற்றுகிறாரா அல்லது எள்ளுதல் குறிப்புடன் பாடுகிறாரா என்ற ஐயம் ஏற்படுகிறது. ஏனெனில் 'புதிய கட்சித் தலைவரை நோக்கி நிதானக் கட்சியார் சொல்லுதல்' என்னும் முறையில் திலகரை நோக்கி,

> *"வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம் அன்றி*
> *வேறெவர்க்கும திராஜ்யம்—சிறு*
> *பிள்ளைக ளுக்கே உபதேசம்—நீர்*
> *பேசிவைத்த தெல்லாம் மோசம்"*

என்று மிதவாதியார் பேசுவதாகப் பாரதியார் பாடுகிறார். எனவே கோகலே சாமியார் பாடல் பற்றிய சூழலை வைத்து நோக்கினால் தான் உண்மை புலனாகும்.

விடுதலை வீரர்களுள் ஒருசாராரைச் சாடும் பாரதியார் 'பழித் தறிவுறுத்தல்' எனும் தலைப்பிட்டுக் கிளியை நோக்கிப் பாடு வதாகப் பாடுகிறார்.

> *"தாயைக் கொல்லும் பஞ்சத்தை தடுக்க முயற்சியுறார்*
> *வாயைத் திறந்து சும்மா—கிளியே*
> *வந்தே மாதர மென்பார்"*

என்று உளம்நொந்து பாடுகிறார்.

விடுதலை வீரர்களுக்குள் இருந்த பிரிவுகளையும் அப்பிரிவுகளுக் கிடையே இருந்த வேற்றுமையுணர்வையும் பாரதி பாடல்கள் புலப் படுத்துவது குறிக்கத்தக்கது.

விடுதலைப்போரில் தமிழகம் பின்தங்கிய நிலையில் இருப்பதாக பாரதி உணர்ந்தார். எனவே, தமிழ் மக்களிடையே தேசிய உணர்வையும் ஒற்றுமை உணர்வையும் வலியுறுத்திப் பாட எண்ணிய பாரதியார் தமிழ்மொழி, நாடு, இனம் ஆகியவற்றின் பழம் பெருமையையும் இன்றைய நிலையையும் எதிர்காலப் போக்கையும் மிக அழுத்தமாகப் பாடுகிறார்.

தமிழ்த்தாயின் கூற்றாக ஒரு பாடலைப் படைத்துத் தன் மக்களைப் பார்த்துப் புதிய சாத்திரம் வேண்டுவதாகப் பாடுகிறார். 'தமிழ்ச்சாதி' எனும் பாடலில் பழமைக்கும் புதுமைக்கும் இடையில் தமிழ்மக்கள் திண்டாடும் நிலை பாடப்படுகிறது. "இருதலைக் கொள்ளியினிடையே" என்று அதற்குத் தலைப்பு இடப்பட்டுள்ள தாகக் கூறுவது[15] பொருத்தமாக உளது.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு"

என்பதே பாரதி காட்டும் தேசியமாகும்.

சிவாஜியும் குருகோவிந்தரும்

பாரதியின் தேசியப் பாடல்களுள் இருபாடல்கள் குறிக்கத் தக்கவை. சத்ரபதி சிவாஜி தன் படைவீரர்களுக்கு உரைக்கும் முறையில் 187, அடிகளுடைய நெடும்பாடலைப் பாடியுள்ளார். பாரத நாட்டின் பெருமை, அது பகைவர் கையில் படும் அவலநிலை, அத்தகைய பகைவரை எதிர்க்க வேண்டிய இன்றியமையாமை, நாட்டுப் பற்றின் சிறப்பு ஆகியவற்றைப் பாடி விடுதலைப் போராட்ட உணர்வைச் சிறப்புற வெளிப்படுத்துகிறார்.

திலகர் வழிநின்று சிவாஜியை வாழ்த்தும் பாரதியார் சிவாஜிக்குப் பகையான ஔரங்கசீப்பை இங்குப் பழித்துப் பேசாமல் இந்து முசுலீம் வேற்றுமையைக் காட்டாது வெள்ளையரையே பகையாக உருவகித்துப் பாடுகிறார்.

1907 மே 18ல் இந்தியா நாளிதழில் சிவாஜியின் பிறந்தநாளை முன்னிட்டுப் பாரதியார் 'சிவாஜியின் குலதெய்வமும் ஆரிய ஜனங்களின் வீரதேவியுமாகிய பவானிக்கு வணக்கம்' கூறியுள்ளார். அதில் இந்து தர்மம் மகமதிய அரசர்களால் அழிவுறாமல் காக்கப் பட்ட நிலையை வெளிப்படையாக எடுத்துக்கூறி அதுபோல இன்று வெள்ளையரால் அழிவுறாமல் காக்க வேண்டுமெனக் கூறுகிறார்.[16]

அக்காலப் பகுதியை ஒட்டியே இப்பாடல் எழுந்திருக்க வேண்டும். பாடலில் முகமதியரைப் பற்றி வெளிப்படையாகச் சாடாமல் வெள்ளையரையே பகையெனக் குறிப்பால் காட்டிப் பாடுகிறார். 'இந்தச் செய்யுளிலே நமது மகமதிய சஹோதரர்களுக்கு விரோதமாகச் சில வசனங்கள் உபயோகிக்க நேர்ந்திருப்பது பற்றி விசனமடைகிறோம்'[17] என்று அவரே பின்னர் வருந்தி எழுதியுள்ளார்.

குருகோவிந்தர் பாடலில் பாஞ்சால சிங்கமான குருகோவிந்தர் தம் தாய்நாட்டைக் காக்க ஆற்றிய செயல்களை நாடகம் போல வருணிக்கிறார். தம் உயிரையே பலியிடத் துணிந்த ஐந்து வீரர்களை எடுத்துக்காட்டிப் பாடுவதன் மூலம் நாமும் தியாகத்திற்கும்

போராட்டத்திற்கும் ஆயத்தமாக வேண்டுமென உணர்த்துகின்ருர். ஒவ்வொரு வீரரையும் கோயிலுக்குள் சென்று ஒளித்துவைத்து விட்டு ஆட்டைப் பலிகொடுத்துக் குருதியுடன் வெளிவந்து மற்ருெருவரை அழைத்துச் செல்லும் காட்சியை அழகுறப் பாடி நம மனத்தில் தியாக உணர்ச்சியைப் பதியவைக்கிருர்.

இவ்வாறு சிவாஜி, குருகோவிந்தர் போன்று புறநானூற்றுத் தாயினை எடுத்து விளக்கி, (இந்தப் பெருமாட்டியின் பெயர் இப்போது தெரிய இடமில்லை.) இவளைப்போன்ற தாய்மார்கள் பாரத கண்டத்திலே இக்காலத்தில் அநேகர் பிறக்குமாறு ஈசன் அருள் புரிந்தாலல்லவோ நமது குறைகளுக்கெல்லாம் முடிவு ஏற்படும்'' என்று எழுதியுள்ளார்.[18]

இவ்வாறு புராணம், இலக்கியம், வரலாறு ஆகிய பகுதி களிலிருந்து இணையான செய்திகளை எடுத்துக்காட்டி விடுதலை உணர்வைத் தூண்டுவது பாரதியாரது பாடல் முறையுள் ஒன்ருகும்.

இம்முறையின் வளர்ந்த நிலையையே பாஞ்சாலி சபதத்தில் காண்கிருேம். பாரதி ஆங்காங்கே பாரதக் கதையின் பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கின்ருர். தனியே பாரதக் கதையை எடுத்துக் கூறிக் குறியீடாக விடுதலைப்போரை அமைத்துள்ளார். பாரத மாதாவைப் பாஞ்சாலியாக உருவகித்துப் பாஞ்சாலி சபதத்தைப் பாடியுள்ளார்.

பாரதியின் பாடல் வடிவங்களும் உத்திகளும்

பாரதியார் பெரும்பாலும் பாமரரிடையே செல்வாக்குப் பெற்றி ருந்த இசைப்பாடல்களையே தம் பாடல்களுக்கு வடிவங்களாக எடுத்துக்கொண்டுள்ளார். அதிலும் மக்களிடம் பரவலாகப் பெருமை பெற்றிருந்த காவடிச்சிந்து, தாயுமானவர் ஆனந்தக் களிப்பு, நொண்டிச்சிந்து, நந்தனுர் சரித்திரக் கீர்த்தனைகள், கண்ணிகள், வள்ளலார் பாடல்கள், கிளிக்கண்ணிகள் ஆகிய இசைப்பாடல் வடிங்களில் பாடுவதன் மூலம் மக்கள் மத்தியில் தம் பாடல்களைப் பரப்பி விடுதலை உணர்வை ஊட்ட எண்ணினுர்.

மரபு வழிப்பட்ட பஞ்சகம், நவரத்தினமாலை, பள்ளியெழுச்சி, தசாங்கம் ஆகிய சிற்றிலக்கிய மரபுகளையும் யாப்பு வடிவங்களாகிய விருத்தம், ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை, வஞ்சி விருத்தம், கொச்சகக்கலிப்பா ஆகியவற்றையும் புயன்படுத்தி யுள்ளார்.

இந்திய நாட்டின் பழம்பெருமைகளான வேதம், இராமாயணம், மகாபாரதம், கீதை முதலியவற்றை நினைவூட்டுவது பல பாடல்களில் காணப்படுகிறது.

ஆரியர் என்ற சொல்லை பாரதியார் பல இடங்களில் பயன் படுத்தியுள்ளார். 'ஆரிய' என்ற சொல்லை உன்னதமான அல்லது ஒப்பற்ற என்ற பொருளிலேயே பாரதியார் பயன்படுத்தி யுள்ளார்.[19]

பாரதி பாடல்களின் பாதிப்பு

பாரதியாரின் பாடல்கள் அக்காலத்தில் மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. 1908-ல் பாரதியாரின் தேசியப்பாடல்கள் தெருவெல்லாம் முழங்கின.

சில பாடல்களில் சில அடிகளைப் பாடக்கூடாதென அரசாங்கம் தடைசெய்துள்ளது.[20]

பாரதியாரின் தேசியகீதங்களின் முதல், இரண்டாம்தொகுதிகள் பர்மா அரசாங்கத்தால் 1928, ஆகஸ்டு 7-ஆம் தேதியிட்ட ஆணையினால் பறிமுதல் செய்யப்பட்டன. அதையொட்டிச் சென்னை மாகாணக்காவலரும் செப்டம்பரில் அவற்றைப் பறிமுதல் செய்தனர்[21] என்பது, அவரது பாடல்களைக் கண்டு அரசினர் அஞ்சியதைப் புலப்படுத்தும்.

அவர் பாடல்கள் சட்டமன்றத்தில் சர்ச்சைக்குப்பிறகு 1929 சனவரி 5-ல் தடையிலிருந்து விடுபட்டன.

காங்கிரஸ் மேடைகளில் சொற்பொழிவுகளுக்கு முன் பாரதியார் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. நாடகங்களில் பாரதியார் பாடல் களைப் பாடியதற்காகப் பல நடிகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலையுணர்வை எழுப்பும் வகையில் மக்கள் மத்தியில் பாரதி பாடல்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன என்றும், அப்பாடல்களைக் கண்டு ஆங்கில அரசே அஞ்சியதென்றும் அறிகிறோம்.

வேல்ஸ் இளவரசருக்கு வாழ்த்து

பிரிட்டிஸ் இளவரசருக்கு வரவேற்புச் சொல்லிப் பாடவேண்டிய சூழல் பாரதிக்கு எவ்வாறு ஏற்பட்டதெனத் தெரியவில்லை,

அப்பாடல் பாடிய காலத்துக்கு முன் 1905 டிசம்பர் 25-ல் பக்கிம் சந்திரரின் வந்தேமாதரம் பாடலைப் பாடினார். அப்பாடலுக்குப் பின் பாரதி 1906 பிப்பிரவரி 24-ல் 'வந்தேமாதரம்' என்னும் பாடலைப் பாடியுள்ளார்.

இவ்வாறு முன்னும் பின்னும் விடுதலை உணர்வைப் பாடிய பாரதியார் இப்பாடலைப் பாடியதற்குக் காரணம் அவர் ஏற்றிருந்த இதழாசிரியர் பணி என்று கூறப்படுகிறது[22]

மொத்தத்தில் இப்பாடல் பாரதியாரின் தூய இசைப்பெருக்கிலே ஒருகணம் தோன்றி மறைந்த சுருதிபேதம் என்றும் சொல்லத்தான் தோன்றுகிறது என்பது திரவியம் அவர்களின் முடிவாகும்.[23] பாரதியின் விடுதலை உணர்வு தொடக்க நிலையில் இருந்த சூழலில் அங்ஙனம் பாடினாரோ எனலாம்.

பாரதியின் தேசியப் பாடல்களை அவற்றின் வரலாற்றுப் பின்னணியோடு படித்தால்தான் அதன் முழுப்பொருளையும் நன்கு புரிந்துகொள்ளமுடியும்.

பாரதியின் மொத்தப் படைப்புக்களுள் தேசியப் பாடல்கள் பிற பாடல்களினும் அளவில் குறைவே; எனினும் ஆற்றல் மிக்கவையாய் அக்கால மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தித் தம் பணியை இனிதே நிறைவேற்றின.

பாரதி நாட்டு விடுதலைக்கு மட்டுமே பாடி நின்றுவிடவில்லை; தமிழுக்குப் பழமையிலிருந்து விடுதலையளித்தார்; சமுதாயத்துக்கு மூடப்பழக்கத்திலிருந்து விடுதலையளிக்கப் பாடினார்; பெண் விடுதலையைப் பெரிதும் போற்றினார்; ஆன்ம விடுதலையைப் பாடுகிறார். இருபதாம் நூற்றாண்டைப் 'பாரதியுகம்' என்பது சற்றும் மிகையில்லை.

குறிப்புக்கள்

1. சுதந்திரப் போராட்டம், ப. 87.
2. பாரதியும் பாரததேசமும், ப. 19.
3. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப. 24.
4. மேலது, ப. 32.
5. பைந்தமிழ்ச்சாரதி பாரதி, ப. 29.
6. பாரதி, நான் கண்டதும் கேட்டதும், பக். 44.
7. மேலது, ப. 16.
8. பைந்தமிழ்ச் சாரதி பாரதி, ப. 28.
9. பாரதி தரிசனம், ப. 62.
10. சுதந்திரப் போராட்டம், ப. 101.
11. இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம், ப. 153.
12. சுதந்திரப் போரட்டம், ப. 135.
13. மேலது, ப. 135.
14. பைந்தமிழ்ச்சாரதி பாரதி, ப. 66.

14a. மேலது. ப. 36.

15. பூம்புகார் பிரசுரம், ப. 48.
16. பாரதி தரிசனம், ப. 89.
17. பாரதியும் பாரதமும், ப. 22.
18. பாரதி தரிசனம், பக். 3, 107.
19. பாரதியும் பாரததேசமும்-முன்னுரை, ப. 12.
20. பைந்தமிழ்ச் சாரதி பாரதி, ப 39.
21. தேசியம் வளர்த்த தமிழ், ப. 11.
22. மேலது, ப. 15.
23. மேலது, ப. 16.

துணை நூற் பட்டியல்

1. இளசைமணியன் (தொ. ஆ.), பாரதி தரிசனம்–1, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1977.

2. கண்ணன், ஆர். கே., புதுநெறி காட்டிய பாரதி, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1965.

3. கனகலிங்கம், ரா., என் குருநாதனுர் பாரதியார்.

4. குருசாமி, மா. பா., பலகோணங்களில் பாரதி, 1978.

5. சிவஞானம், ம. பொ., விடுதலைப்போரில் தமிழ்வளர்ந்த வரலாறு, இன்பநிலையம், சென்னை, 1970.

6. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பழனிப்பா பிரதர்ஸ், 1974.

7. துரைராசு, ஜே., பாரதியார் பாடல்களில் தேசியம் வெளியிடப்படாத எம்.ஃபில் ஆய்வேடு, (மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை).

8. பாரதியார், பாரதியார் கவிதைகள், பூம்புகார், பிரசுரம்.

9. பி. ஸ்ரீ., பாரதி நான் கண்டதும் கேட்டதும், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1961.

10. பிபன் சந்த்ரா முதலியோர், (தமிழாக்கம்) சுதந்திரப் போராட்டம், தேசீய புத்தக டிரஸ்ட் வெளியீடு, 1973.

11. பெரியசாமித்தூரன், ம. ப., பாரதியும் பாரத தேசமும்.

12. மீனாட்சிசுந்தரம், கா. (தமிழாக்கம்), பாரதி பாநிலை, மெர்க்குரிபுத்தகக் கம்பெனி, சென்னை, 1972.

13. விசுவநாதன், சு., பாரதிக்கு விடுதலை, சேகர், பதிப்பகம், சென்னை, 1972.

14. வேங்கடசாமி, மு., பைந்தமிழ்ச்சாரதி பாரதியார், பாரிநிலையம், சென்னை, 1964.

15. ஜீவானந்தம், பாரதி வழி, இரண்டாம் புத்தகம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1969.

பாரதியாரும் பாரத முஸ்லிம்களும்

பேராசிரியர் சி. நயினர் முகம்மது

ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி

முன்னுரை

பாரதியார் மகாகவி என மக்களால் மதித்துப் போற்றப் படுகின்றார். இவரது சமுதாயப் பாடல்கள் இன்றும் உணர்ச்சி யூட்டவல்லன. ஞானப்பாடல்கள் என்றும் அருளமுதாகச் சுவை பயப்பன. எனினும் இவரின் நாட்டுப் பாடல்களே அன்று நாட்டு மக்களின் பாராட்டை ஈட்டித்தந்தன எனலாம். 'தேசிய மகாகவி' என்று இவர் ஒருவரைத்தான் கூறமுடியும் என சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் கூறுகிறார். இத்துறையில் இவர் சிறந்து விளங்குவதனை இது குறிக்கும்.

காலப்பின்னணி

இந்தியப் பெருநாடு அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்தது. நாட்டுவளத்தை ஆங்கிலேயர் வரியாக வாரிச்சென்றனர்; வரி தருவோர்க்கு ஆட்சியில் பங்கில்லை; கல்வியில்லை; சுகாதார வசதியில்லை; வளர்ச்சித் திட்டமில்லை. பஞ்சம், பட்டினி, நோய் முதலியவற்றால் வருந்தினர். பாமரராய் விளங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டிருந்தனர். நாட்டு நலனில் நாட்டங்கொண்ட நல்லறிஞர் அவைக்கூடினர்; ஆலோசித்தனர்; துயரத்திற்குரிய தீர்வு சுயாட்சியே எனக்கண்டனர். சுயாட்சி பெறுவது எளிதான காரியமா? இந்தியாவில் பல மதங்களைச் சார்ந்தோர் பலமொழிகளைப் பேசுவோர் உள்ளனர். உடை, உணவு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றிலும் வேற்றுமை! அத்தனைப்பேரும் ஒன்றுபட்டால்தான் வேரூன்றிவிட்ட அந்நியர் ஆட்சியை அகற்றமுடியும். தாதாபாய் நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், காந்தியடிகள முதலிய தலைவர்கள் மக்களை ஒன்று திரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். தேசியத்தில் ஆர்வங்கொண்ட பாரதியாரும இந்திய மக்களின் ஒற்றுமையை வலியுறுத்திப் பாடல்கள் பாடினர்; உரை நடையிலும் உணர்ச்சி ததும்ப எழுதினர்.

பாரதநாட்டில் இந்துக்கள் முஸ்லிம்கள், கிருத்தவர்கள். சீக்கியர், பார்சிகள் முதலிய பல சமயத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்களுள் இந்துக்கள் பெரும்பான்மையினர்; முஸ்லிம்கள் அடுத்த நிலையினர். ஆங்கிலேயரோ பிரித்தாளும் சூழ்ச்சியினைக் கொண்டு முஸ்லிம்களைத் தூண்டிவிட்டனர். ஆதலின் பாரதியார் பொதுவாகச் சமயங்கள் அனைத்தையும் போற்றியபோதிலும் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு முக்கிய இடம் தந்துள்ளார்.

இம்முயற்சியில் தோன்றிய கவிதைகள் பல; கதைகள் சில; கட்டுரைகள் பல; இவற்றுள் பாராட்டும் பாங்கின பல; கண்டனைக் கணைகளும் உள. இப்படைப்புகளில் இரு நிலைகள் காணப் படுகின்றன. ஆரம்பப் படைப்பில் வேகம்; பிந்திய படைப்புகளில் ஞானம். ஒன்றில் தேசியம் மிகுந்துளது. அடுத்ததில் ஆன்மநேயம் மிகுந்துளது.

சாதி சமயங்களாலும் மொழிகளாலும் வேறுபட்டுள்ள பாரத மக்களின ஒற்றுமையை வலியுறுத்திப் பொதுவாகப் பல பாடல்கள் பாடியுள்ளார். இங்கு முஸ்லிமகள் குறித்தவற்றைக் காண்போம்.

எங்கள் துருக்கர்

பட்டொளி வீசிப் பறந்திடும் தாயின் பணிக்கொடியை வாணிக்கும்போது,

"*இந்திரன் வச்சிரம் ஓர்பால்; அதில்*
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்..." எனவும்
(மாதாவின் துவஜம் 3 : 1)

முரசுப்பாட்டில்,

"*தீயினைக்கும்பிடும் பார்ப்பார்—நித்தம்*
திக்கை வணங்கிடும் துருக்கர்" *(12 : 1)*

எனவும் குறிப்பிடுகின்றார். இவற்றில் இந்துக்களையும் முஸ்லிம்களையும் அடுத்தடுத்துக் கூறுகின்றார். இருபெருஞ் சமுகங்களும் இணைந்திருப்பின் நாட்டிற்கு நலன்மிகுந்துவரும் என்பதை உணர்த்துகின்றார். துருக்கி மேற்கு ஆசியாவிலுள்ள ஒரு முஸ்லிம் நாடு. அக்காலததில் இஸலாமிய உலகிற்குத் தலைமையாகத திகழ்ந்தது. ஆதலின முஸ்லிம்களைத் துருககர் எனவும் அழைப்பர். கொடிப்பாட்டில் எங்கள் துருக்கர் என்றழைப்பதில் பாசமும், நேசமும் தேச உறவும் ஒளிவீசுகின்றன. உருவமற்ற ஓர் இறைவனை வணங்கும் நம்மை 'திககை வணங்கும்

துருக்கர்' என்று கூறிவிட்டாரே என வருந்துவது உண்டு. மக்காவிலுள்ள ஆதியிறை ஆலயமாகிய க:.பத்துல்லாவை நோக்கி முஸ்லிம்கள் தொழுகின்றனர். ஆதலின் திக்கைநோக்கி வணங்கும் துருக்கர் என்று விரித்துக் கொள்வோமாயின் பொருள் பொருந்திவிடும்.

வீரவணக்கத்தில் ஒருவிளக்கம்

இந்தியப் பெருமக்கள் தம்மைப்பற்றியும் தம் நாட்டைப்பற்றியும் தாழ்வாகக் கருதியிருந்தனர். வெள்ளையரின் அறிவாற்றலை வியந்து பாராட்டினர். இம்மயக்கத்திலிருந்து நாட்டு மக்களை விடுவித்து வீறுகொண்டெழச் செய்ய வீரப்பெருமக்களுக்கு விழா எடுத்துக் கொண்டாட முற்பட்டனர். சத்திரபதி சிவாஜிக்கு விழா எடுத்தனர்; இது முஸ்லிம்களுக்கு மனவருத்தத்தினை உண்டாக்கியது. சிவாஜி அவுரங்கசீப் மன்னரின் தளபதி அப்சல்கானைத் தந்திரத்தினால் கொன்று மராட்டியப் பேரரசை நிறுவினார். சிவாஜியைக் 'கொள்ளைக்காரன்' என்றும் 'பாதகன்' என்றும் பத்திரிகைகளுக்கு எழுதினர். இந்துக்களும் அவுரங்கசீப் சகோதரரைக் கொன்று ஆட்சிக்கு வந்தான் எனறும் அக்பரும் அரசியல் கொலை செய்தார் என்றும் எழுதினர். இப்பிரச்சினை குறித்து பாரதியார் 4 கட்டுரைகள் எழுதியுள்ளார். இவற்றில் பாரதியாரின் தேசியம் ஒளிவீசுகிறது. ஒரு பக்கத்திலே வீழ்ச்சியுற்ற மக்களுக்கு உணர்ச்சியூட்டவேண்டும்; இன்னொரு பக்கத்திலே ஒற்றுமைகாக்கவேண்டும். இச்சிக்கலான சாதனையில் பாரதியார் வெற்றிகண்டுவிட்டார் எனலாம்.

சத்திரபதி சிவாஜி தன் சைன்யத்தை நோக்கிக் கூறுவதாக இயற்றியுள்ள செய்யுளில்,

> *''வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்*
> *பாதமும் பொறுப்பளோ பாரததேவி''* **(16-17)**
> *''தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை''***(65)**
> *''செற்றினி மிலேச்சரை தீர்த்திட வம்மின்''* **(137)**

முதலிய தொடர்களை ஆண்டுள்ளார். இவற்றால் முஸ்லிம்களின் மனம் புண்பட்டுவிடக் கூடாதே என்று எண்ணிய பாரதியார், 17-11-1906 இல் வெளியான 'இந்தியா' இதழில் இச்செயயுளுக்கு வரைந்துள்ள குறிப்புரையில்,

''இந்தச் செய்யுளிலே நமது மகமதிய சகோதரர்களுக்கு விரோதமாகச் சில வசனங்கள் உபயோகிக்க நேர்ந்ததுபற்றி

விசனமடைகிறோம். இக்காலத்து மகமதியர்கள் பாரத பூமியின் சொந்தபுத்திரர்கள் என்பதையும் ஹிந்துக்களும முகமதியாகளும் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகள் போல நடந்துகொளள வேண்டும் என்பதையும் பலமுறையும் வற்புறுத்தியிருக்கிறோம்'' என்று குறிப்பிட்டு வீர ரசத்தைமட்டும் கவனிக்கும்படி வேணடுகிறார்?[2]

இப்பகுதியில் பாரதியாரின் உணர்ச்சியும் உள்ளநெகிழ்ச்சியும் புலப்படுகின்றன.

அடுத்த ஆறுமாதங்களில் கொண்டாடப்பட்ட சிவாஜி விழாவை முன்னிட்டு பவானி தேவிக்குக் கூறிய வணக்கத்தில்,

''மகம்மதிய ராஜாக்கள் அதர்மத்திலே சிந்தை வைத்தபோது சத்ரபதியாகிய சிவாஜி மகாராஜாவைத் தோற்றுவித்து அவருடைய தோளுக்கும் வீரவாளுக்கும் வல்ல கைகொடுத்து மஹாராஷ்டிர ஸ்தாபனம் செய்தவள் நீ'[3] எனவும் சுய சரிதையில்,

''வீரர் வாழ்த்த மிலேச்சர் தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்'' (25-4)[3]

எனவும் குறிப்பிடுகின்றார். இவற்றைக்கூர்ந்து நோக்கினால் இவ்வாறு பாரதியார் கூறுவனவெல்லாம் முஸ்லிம் மன்னர்களைப் பற்றியதேயன்றி முஸ்லிம் பொதுமக்களையல்ல என்பது பெறப்படும்.

கி. பி. 8-ம் நூற்றாண்டு முதலாக வட இந்தியாவிற்குள் முஸ்லிம் மன்னர் படையெடுத்து வந்துள்ளனர். இவர்களுடன் பரிவாரங்களும் வந்தன. போரின் போது சில மறச்செயல்கள் நடந்திருக்கலாம். ஆனால் இந்தியாவில் உள்ள பலகோடி முஸ்லிம்கள் இவர்களின் வழிவந்தவரல்லர். இஸ்லாமிய சோதியை ஏந்திவந்த முஸ்லிம் மெய்ஞ்ஞானிகளின் போதனையாலும், இஸ்லாமிய அறவழியில் நடந்த அரபு வணிகர்களின் அன்பு வழியாலும் இங்குள்ள மக்கள் பலர் இஸ்லாமிய நெறியை ஏற்றுள்ளனர். ஆதலின் இந்திய முஸ்லிம்களில் மிகப்பலர் இந்தியரே. இதனை பாரதியாரும்,

> ''...இந்தியாவிலுள்ள முஸல்மான்களில் பலர் ஹிந்து சந்ததியார். அவர்களுடைய நெஞ்சில் ஹிந்து ரத்தம் புடைக்கிறது''[4]

எனக்கூறி உறுதிப்படுத்துகிறார். முஸ்லிம்கள் பாரதத் தாயின் சொந்தப் புதல்வர்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளதை முன்னரே கண்டுள்ளோம்.

ஆதலின் பாரதியார் மிலேச்சர் என்றும் அந்நியர் என்றும் அதர்மம் செய்து அல்லல்படுத்தினர் என்று கூறுவன மன்னரைக் குறித்தனவேயன்றி முஸ்லிம் மக்களைக் குறித்தனவல்ல எனக் கொள்ளல் வேண்டும்.

பாரதப் புதல்வர்

11-8-1906 இல் வெளியான 'இந்தியா' இதழில்,

"இந்தியா இந்துவுக்குமட்டிலும் சொந்தமில்லை; மகமதியருக்கும் சொந்தமே. அநாகரீக இடைக்காலங்களில் நமது மூதாதையர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக அந்நிய தேசத்துப் பொய்ச் சரித்திரக்காரர் கூறும் கதைகளை நாம் கருதவே வேண்டியதில்லை"5

என்று கூறுகின்றார். இதனால் இந்து முஸ்லிம் சகோதரரிடையே வேற்றுமையை வளர்க்கும் வகையில் வெளி நாட்டார் வரைந்துள்ளவற்றைப் புறக்கணித்துவிட்டு ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

இந்திய முஸ்லிம்களையும் 'ஹிந்து ஜாதியார்' என்றே கருதுகிறார். இந்தியாவில் பிறந்தவன் 'இந்திய ஜாதி' அல்லது 'ஹிந்து ஜாதி' என இந்திய தேசிய இனத்திற்கு (Indian Nationalism) விளக்கந்தருகிறார். 'ஆரிய சம்பத்' என்பதை விளக்கி உலக அற்புதங்களில் ஒன்றாகத் திகழும் தாஜ்மகாலையும் சேர்த்து மகிழ்கின்றார்.7 இவ்வாறு பாரதியார் 'இந்து', 'ஆரியன்' என்னும் சொற்களால் இந்துக்களை மட்டுமல்லாமல் முஸ்லிம் உள்ளிட்ட அனைவரையும் குறிப்பிடுகின்றார்.

தேசியத்தில் முஸ்லிம்கள்

சுதந்திரம் பெறுதற்குத் தேசியக்கல்வி உறுதுணையாகும் எனத் தேசத் தலைவர்கள் கருதினர். வங்கப் பிரிவினையையும் எதிர்த்தனர். இவற்றால் நாட்டு மக்களை ஒன்றுதிரட்ட முற்பட்டனர். பிரித்தாளும் சூழ்ச்சிகொண்ட ஆங்கிலேயர் முஸ்லிம்களை இவற்றிற்கு எதிராகத் தூண்டிவிட்டனர் ஆட்சியாளரின் வலையில் விழுந்தோர் சிலர்; தேசிய அணியில் சேர்ந்தோரே பலர்.

"கீழ்பெங்காளத்திலே சில சுயபுத்தியில்லாத மகமதியர்கள் மட்டும் சுதேசிய முயற்சிக்கு விரோதமாக இருக்கிறார்களே அல்லாமல் மற்றபடி இந்தியாவில் பெரும்பான்மையான

இந்தியர்கள் நம்முடன் பொதுநோக்கம் உடையவர்களாகவே
இருக்கிருர்களென்பது யாவரும் அறிந்த விஷயம்.''[8]

என இகழ்ச்சியும் மகிழ்ச்சியும் தோன்றக் குறிப்பிடுகின்ருர்.

தேசிய இயக்கத்திற்கு ஆதரவாக இருந்த முஸ்லிம் பெரியார்கள் பலர்; அவர்களைப் பாரதியார் மகான்களென்றும மேலோர் என்றும் தேசத்தலைவர்கள் என்றும் பாரட்டுகின்ருர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வருமாறு:

ஸையது ஹுசேன் இமாம்
மௌலவி லியாகத் ஹுசேன்
மௌலவி அப்துல் கபூர்
ஏ. ரசூல்
அப்துல் ஹலீம் கஸ்நவி
பக்ருதீன் டயாப்ஜி
மிர்ஜா ஸமியுல்லா பேக்
மௌலாஞ முகமதலி
மௌலாஞ ஷௌகத்தலி
யாகூப் ஹுசேன் சேட்
பெய்ய ஜிஞ
மகமதாபாத் நவாப்

தேசியத்திற்குத் தடையாகவும் எதிராகவும் இருந்தவர்களைக் கண்டிக்கத் தவறவில்லை; இவ்வகையினர் சிலரே. இவருள்ளும் பாரதியாரால் குறிப்பிடப்பட்டவர் டாக்கா நவாப் ஸலிமுல்லாகானே.[9] அறிவும் ஆளுமையும் செல்வமும் செல்வாக்குமுள்ள ஆகாகான் தேசியத்திற்கு ஆதரவு தராமலிருப்பதற்கு வருந்தியுள்ளார்.[10]

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு யோசனைகள்

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு இருசாராரும் மேற்கொள்ள வேண்டியனவாக மேலும் சிலவற்றைக் குறிப்பிடுகின்ருர்:

1. இந்துக்கள் இஸ்லாமிய சாஸ்திரங்களையும் முஸ்லிம்கள் இந்து வேதங்களையும் படித்தறிதல்.
2. இந்துக்கள் முஸ்லிம்களை மிலேச்சரென்றும் முஸ்லிம்கள் இந்துக்களைக் காபிர் (இறை நம்பிக்கை இல்லாதவர்) என்றும் வெறுக்காதிருத்தல்.
3. திருமணம் முதலிய விழாக்களில் இந்துக்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம்கள் இந்துக்களையும் அழைத்து உபசரித்தல்.

4. இந்தியாவில் தோன்றி நன்மைபுரிந்த இருசமய மகான்களுக்கும் விழா எடுத்தல்; இந்துக்கள் சிவாஜிக்கு விழா கொண்டாடுவது போல அக்பருக்கும் விழா கொண்டாடுதல்.

5. இந்துக்களின் கொள்கைக்கியங்கி முக்கியமான விழாக்களில் முஸ்லிம்கள் பசுக்களைக் கொல்லாதிருத்தல்.

6. இருசாராரும் பகைமைநீங்கி, பாசம் கொண்டு சகோதரர்களாக ஒன்றிவாழ்தல்.

அல்லாஹ் துதி

பாரதியார் ஆன்மநேய ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கும் பாடல்களில் அல்லாஹ்வைப்போற்றித் துதிக்கின்றார்.

''பேருயர்ந்த ஏஹோவா அல்லாலாஉ நர்மம்
பேணுமவர் பதமலரும் பேணவேண்டும்''

(பாரதி அறுபத்தாறு ஸர்வமதா ஸமரஸம்—64 : 4) எனவும்

''அல்லா யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவரும் தாளுய்......
உலகெலாம் காக்கும் ஒருவனே''

(விநாயகர் நான்மணிமாலை—3 : 6 - 9) எனவும் குறிப்பிடுகின்றார். பொட்டல புதூர் முஸ்லிம்களின் கூட்டத்தில் பேசும்போது,

''அல்லா அல்லா அல்லா''

எனும் பல்லவி பயின்றுவரும் இனியபாடலை மனமுருகிப் பாடியுள்ளார். 2 சரணங்கள் தொடர்ந்து வருகின்றன. முதல் சரணத்தில்[11] ''பல்லாயிரங்கோடி அண்டங்கள் வானவெளியிலே நில்லாது சுழன்றியங்கச் செய்யும் நாயகன்; சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ்ஜோதி'' என்றும், இரண்டாவது சரணத்தில்[12] ''எல்லாரும் வந்தேத்துமளவில் யமபயங் கெடச் செய்பவன்'' என்றும் போற்றுகின்றார். இவற்றில் இஸ்லாமிய இறைக்கோட்பாடு இனிது அமைந்துள்ளது.

தராசு கதையில்வரும் ஜிந்தாமியான் சேட்,

> ''ஹிந்துக்களுடைய வேதம் பழமையானது, அதிலும் நம் குரானைப் போலவே அல்லாவைத்தான் புகழ்ந்து பேசுகிறது. ஆனால் அல்லா என்கிறதுக்கு அவர்கள் பாஷையிலே 'ப்ரஹ்ம' என்கிறார்கள்; அதிலே ரிஷிகள் என்று பாடினவர்கள் அல்லாவினுடைய உண்மையை அறிந்தவர்கள்''[13]

என்று ஒரு சாமியார் சொல்லியதாக அமைத்து இந்துக்களின் வேதத்திலும் அல்லாஹ்வின் புகழ் பேசப்படுவதைக் குறிப்பிடு கின்றார்; இங்கு இருசமய ஒருமைப்பாடும் இனிது விளங்குகிறது.

நபிகள் நாயகம்

நபிகள் நாயகம் பற்றியும் மதிப்புடனும் பக்தியுடனும் குறிப்பிடு கின்றார். அவர்களின் திருநாமத்தைக் கூறும்போது இஸ்லாமிய மரபுப்படி ஸலவாத்து (வாழ்த்து) கூறுகின்றார். நபிகள் நாயகம் மக்காவிலிருந்து மதினாவிற்குப் புறப்பட்டுச் சென்றபோது பகை வர்க்கஞ்சி தௌர் குகையில் மறைந்திருந்தார்கள். அப்போது குகையின் வாயிலில் பகைவீரர் வந்ததையறிந்த ஹஸ்ரத் அபூபக்கர் அஞ்சினார். நபிகள் நாயகம் அந்தச் சூழ்நிலையிலும் 'அல்லாஹ்வின் நாட்டபடியே நடக்கும்' எனக் கூறிவிட்டார்கள். இந்த நம்பிக்கை பாரதியாரை மிகவும் கவர்ந்துவிட்டது.

> "இந்தச் சமாசாரத்தை நான் வாசித்ததுமே என் மனதில் முகம்மது நபியிடமிருந்த மதிப்பு ஆயிர மடங்கு மிகுதியாயிற்று"[14]

என்று கூறி "முகம்மது நபி மஹா சுந்தர புருஷர், மஹா சூரர், மஹாஞானி, மஹாபண்டிதர், மஹாபக்தர், மஹா லௌகிகதந்திரி'[15] என்று வியந்து பாராட்டுகின்றார்.

இத்தகு மேலோர்,

> *"எடுத்த காரியம் யாவினும் வெற்றி*
> *எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி*
> *விடுத்த தாய்மொழிக் கெங்கணும் வெற்றி*
> *வேண்டுமுன்னர் அருளினர் அல்லா"*[16]

எனவும் பாடி மகிழ்கின்றார். நம்பிக்கை எனும் தலைப்பிலும் நபிகள் நாயகத்தை வியந்து போற்றுகின்றார். பாலையில் தோன்றிய ஞான ஊற்று என்றும் பாராட்டுகின்றார்.[17] புதிய ஆத்தி சூடியில் பரம்பொருளை வாழ்த்துமிடத்து,

"முகம்மது நபிக்கு மறையருள் புரிந்தோன்" (காப்புச் செய்யுள்—4) எனப் புதுமுறையிலே காப்புப் பாடுகின்றார்.

ஒரு தொடரிலேயே இறை, மறை, நபி ஆகிய இஸ்லாத்தின் மூன்று கூறுகளையும் ஒருசேர உணர்த்தி விடுகிறார்.

இஸ்லாம்

இஸ்லாத்தின் சிறப்பு பற்றியும் கூறுகிறார்.

"எதிர்காலத்தில் இஸ்லாம் மதம் மிகுந்த மகிமையும் ஒளியும் உடையதாய் உலகத்துக்கு எண்ணிறந்த நன்மைகள் செய்யப் போகிறதென்று இவர் உறுதியாக நம்புகிறார். இவரது நம்பிக்கை நிறைவேறும் என்பதற்குப் பல அடையாளங்கள் இக்காலத்தில் உலகெங்கும் தோன்றுவதால் நானும் இவருடைய கருத்தைப் அங்கீகாரம் செய்கிறேன்"

என்று கூறுவதில் இஸ்லாம் எதிர்காலத்தை ஈர்க்கும் கொள்கைகளைக் கொண்டுள்ளது எனும் கருத்தைப் பாரதியார் உறுதி செய்கின்றார்.

கதைகள்

பாரதியார் படைத்த கதைகளுள் மூன்று முஸ்லிம்களைப் பற்றியன. ஒன்று வேடிக்கைக் கதை. அதன் பெயர் 'அந்தரடிச்சான் சாஹிபு கதை', ஏனைய இரண்டும் சமூகம் பற்றியன.

துளஸீபாயி

இக்கதை 'சக்கரவர்த்தினி' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. நான்கு அத்தியாயங்களைக் கொண்டது. ஆனால் முதல் அத்தியாயம் கிடைக்கவில்லை. துளஸிபாயி எனும் ரஜபுத்திர நங்கையும் அப்பாஸ்கான் எனும் மொகலாய படைததலைவனும் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். இருவரும் பண்பாளராகச் சித்தரிக்கப்படுகின்றனர். இருவர் சார்ந்த மதங்களுக்கும் களங்கம் ஏற்படாமல் கதை பின்னப்பட்டுள்ளது. இந்து முஸ்லிம் ஒற்றுமை இக்கதையின் கருவாகும். உடன் கட்டை ஒழிப்பு, விதவைமணம் முதலியனவும் பேசப்படுகின்றன.

ரெயில்வேஸ்தானம்

இது பலதார மணம் கூடாது என்பதைக் கருவாகக் கொண்ட கதை. தென்காசி ரயில் நிலையத்தில் கதை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒரு முஸ்லிம் செல்வனுக்கு அவன் சிறிய தந்தை தன் மூன்று புதல்வியரையும் வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்துவிடுகின்றான். மனைவியருள் போட்டியும் பொறாமையும் ஏற்படுகின்றன. கணவன் கண் கலங்குகிறான். ஒருத்தியை வைத்துக்கொண்டு மற்ற இருவரையும் விலக்க எண்ணுகிறான்.

யாரை விலக்குவது? ரயில் வந்துவிடுகின்றது; கதை நின்று விடுகின்றது. சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்த இக்கதையைப் படித்த ஒரு முஸ்லிம் பாரதியாரிடம் வந்து, மனைவியின் சகோதரியைக் கணவன் மணம்புரிவது இஸ்லாத்தில் விலக்கப்பட்டுள்ளது பற்றிக் கூறினார். பாரதியார் தன்கதையில் நேர்ந்துவிட்ட பிழைக்கு வருந்தினார். பிழை திருத்தம் செய்யவும் முற்பட்டார்.

தொடர்ந்து கோஷாபற்றி விவாதம் நடைபெற்றது. உரையாடலின் போது விடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையிறுத்த முஸ்லிம் நண்பர் காலதேசங்களுக்குப் பொருந்துமாறு ஆசாரங்களை மாற்ற முகம்மதுநபி உத்தரவு கொடுக்கவில்லை என்று கூறினார்.

"உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமோ?
நீங்கள் கொரான் முழுவதும் வாசித்திருக்கிறீர்களோ?"

என்று பாரதியார் வினவினார். இவ்வினாக்கள் நபிகள் நாயகத்தின் போதனையும் திருக்குர் ஆன் வசனங்களும் மக்கள் வாழ்விற்குத் தடையாக இருக்கமாட்டா என்ற பாரதியின் நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றன.

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்" (கும்மி. 2:2)

எனக் கும்மிப் பாட்டில் பாரதி குறிப்பிடுகின்றார்.

பெண்களை வீட்டில் சிறைப்படுத்திவைப்பது இஸ்லாமிய முறையன்று. பாலுணர்ச்சியைத் தூண்டும் உறுப்புக்களை உரியமுறையில் மறைத்துக்கொண்டு வெளியில் சென்று பெண்கள் தங்களின் பணிகளைக் கவனித்துவருவதற்குத் தடை கிடையாது. பாரதியார் வலியுறுத்தியுள்ள கல்வியுரிமை, மணவுரிமை, மணவிலக்குரிமை, சொத்துரிமை முதலிய பல உரிமைகளையும் வழங்கியுள்ள இஸ்லாம் இவ்வாறு சிறைப்படுத்தாது ஆதலின் பாரதியாரின் இக்கருத்து இஸ்லாமிய நெறியைக் குறித்தது அன்று எனக் கருதலாம்.

முஸ்லிம்களின் பழக்கம்

பாரதியார் படைப்புகளில் முஸ்லிம்களைக் கண்டோம். வாழ்க்கையிலும் முஸ்லிம்களுடன் பழகுவதில் சிறந்து விளங்குகின்றார். இஸ்லாம் மார்க்கத்தில் பற்றுடைய ஒரு முஸ்லிம் நண்பருக்கும் தமக்கும் மிகுந்த நட்பேற்பட்டு வளர்ந்து வந்ததாக பாரதியார் குறிப்பிடுகின்றார்.[19] பாண்டிசேரியில் வாழ்ந்தபோது ஒரு

காக்கா கடையில் தேநீர் அருந்திவந்தார் என்று பாரதியாரின் சீடர் ரா. கனகலிங்கம் கூறுகின்றார்.[20] கடையில் இருந்தபோது முஸ்லிம் நண்பர்கள் பாரதியாரிடம் வந்துபோவார்கள் என்று செல்லம்மாள் பாரதி கூறுகின்றார்.[21] பாரதியார் முஸ்லிம்களுடன் வெறுப்பின்றிப் பழகிப் பாசத்தைச் சொரிந்துள்ளார். முஸ்லிம்கள் கூட்டங்களிலும் பேசியுள்ளார்.

முடிவுரை

இதுவரை கண்டவற்றால் பெறப்படுவன :

பாரதியார் தம் பாடல்களிலும் கட்டுரைகளிலும் கதைகளிலும் இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார் ; முஸ்லிம்களின் தேசியப்பற்றையும் தேசத் தொண்டையும் பாராட்டியுள்ளார் ; கொள்கைகளையும் கோட்பாடுகளையும் போற்றியுள்ளார் ; அல்லாஹ்வையும் நபியையும் நெஞ்சுருகி வாழ்த்துகின்றார். முஸ்லிம்களும் இந்துக்களைப் போன்று பாரதப் புதல்வர் என்றும் கூடி வாழ்ந்து நாட்டு நலனைப்பேண வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாரதி வழி போற்றுவோமாக !

1. தாயின் மணிக்கொடி பாரீர்!—அதைத்
   தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (பல்)
இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
   எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும்—அதன்
   மாண்பை வகுத்திட வல்லவன் யானே? (தா. 3) மொத். 10

2. தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
   தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலு மொன்றாய்—எங்கும்
   ஓர்பொரு ளானது தெய்வம் (முரசு. 4)
தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,—நித்தம்
   திக்கை வணங்கும் துருக்கர்;
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
   கும்பிடும் ஏசு மதத்தார் (மு—12)
யாரும் பணிந்திடும் தெய்வம்,—பொருள்
   யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வ மொன்று;—இதில்
   பற்பல சண்டைகள் வேண்டாம் (மு—13) மொத். 31

3. அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந்தானாய், திருமகள், பாரதி,
உமையெனுந் தேவிய ருகந்த வான் பொருளாய்,
உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல், (வி.நா.மாலை. 849)

4. ஆத்தி சூடி யினம்பிறை பணிந்து,
மோனத்திருக்கு முழுவெண் மேனியன்;
கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப் பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

5. கும்மியடி! தமிழ் நாடு முழுதும்
   குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி;
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
   நன்மை கண்டோ மென்று கும்மியடி (கும்மி 1)
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
   றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
   விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி 2)

அடிக்குறிப்புகள்

1. பாரதியாரின் பாதையிலே, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1976. பக். 66.
2. பாரதி தரிசனம் முதற் பாகம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1975, பக். 336–337.
3. மேற்படி இரண்டாம் பாகம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1977, பக். 89.
4. மகாகவி பாரதியார் கட்டுரைகள், அருணா பதிப்பகம், மதுரை, 1964. பக். 271.
5. பாரதி தரிசனம் முதற்பாகம், பக். 194.
6. மகாகவி பாரதியார் கட்டுரைகள். பக். 44.
7. மேற்படி பக். 44.
8. பாரதியார் தரிசனம், இரண்டாம் பாகம், பக். 191.
9. மேற்படி பக். 157.
10. பாரதியார் தரிசனம் முதற்பாகம், பக். 197.
11. பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ்செய்தருள் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்சோதி
12. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாதவ ராயினும்தவ மில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும் வந்தேத்துமளவில் யமபயங்கெடச் செய்பவன்.
13. பாரதியார் கதைகள், பக். 468.
14. மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 55.
15. மேற்படி, பக். 57.
16. மேற்படி, பக். 56.
17. 'அரபுநாட்டுப் பாலைவனங்களிடையே எந்நாளும் வற்றாத ஞான ஊற்றாகத்தோன்றி முன்னமிகுந்த விஷப்பூண்டுகளையெல்லாம் அழித்தொழித்துவிட்டு, எத்தனையோ கோடி ஜனங்களின் ஞான தாகத்தை ஆற்றிவருகின்ற முகம்மது (அலைகி வஸல்லம்) மேற்குத் தேசங்களையா சேர்ந்தவர்?' மகாகவி பாரதியாரின் சக்ரவர்த்தினி கட்டுரைகள், பக். 54–55.
18. மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 220.
19. மேற்படி, பக். 220.
20. என் குருநாதர், புக்ஸ் (இந்தியா) லிமிடட், சென்னை, 1954, பக். 54.
21. பாரதியார் சரித்திரம், பாரி நிலையம், சென்னை, 1977, பக். 112.

அரசு தொல் பொருள் ஆய்வகம்
எண் 6217
தேதி ....
...அகம்-சென்னை

தேசியம் வளர்த்த பாரதி

டாக்டர் திருமதி சு. சிவகாமசுந்தரி
தமிழ்ப் பேராசிரியர், துறைத்தலைவர்
திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, கோவை

"என் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்று பராசக்தியிடம் வரங்கேட்டவர் மகாகவி பாரதியார். நாட்டின் விடுதலையே மூச்சு, ஒற்றுமையே உயிர்த் துடிப்பு என்ற இலட்சியத்தோடு பாட்டெழுதியவர் பாரதியார். தன் கவிதைகளைப் பற்றிப் பாரதி, "பண்ணளவு உயர்ந்து என் பண்; பா அளவு உயர்ந்தது என் பா" என்று ஆண்மையோடு சொல்லுவான்.

> சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
> சொல்புதிது சோதிமிக்க
> நவகவிதை எந்நாளும் அழியாத
> மகாகவிதை, என்று நன்கு
> பிரான்செனும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
> புலவோரும் பிறருமாங்கே
> விராவுபுகழ் ஆங்கிலத்தீங் கவியரசர்
> தாமுமிக வியந்து கூறிப்
> பராவியென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
> போற்று கின்றார்"

என்றும், "கவியரசர் தமிழ்நாட்டில் இல்லை" எனும் வசை தன்னால் கழிந்ததாகவும் கூறிப் பெருமைப்படுவான். தணியாத தமிழ்க்காதல் தேசபக்தியாகக் கனிந்து, சுதந்திர வேட்கை நாட்டுப் பற்றாக மலர்ந்து தமிழ்க் கவிதைகளால், எழுத்துகளால் தேசியம் வளர்த்தவன் பாரதி. "தமிழால் தேசியத்தையும், தேசியத்தால் தமிழையும் வளர்த்த தேசியக்கவி பாரதி" என்பார் வ. ரா. பாரதியின் "கவிதைச்சாறுமாந்தி'க் களித்த பல்லோரும் அவனைப் பலபடப் பாராட்டியுள்ளனர். கவிமணியின் கண்ணில் பாரதி "பாட்டுக்கொரு புலவன்". "பாரதி பைந்தமிழ்த் தேர்ப்பாகன்; செந்தமிழ் தேனி; சிந்துக்குத் தந்தை; குவிக்கும் கவிதைக்குயில்; கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு; காடு கமழும் கற்பூரச் சொற்கோ; நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" என்று புகழாரம்

சூட்டி மகிழ்ந்தார் புரட்சிக்கவி. பாரதி தேசியத்தை மட்டும் வளர்க்கவில்லை. பாரதி காலத்துத் தமிழ் வளர்ச்சியின் வீச்சையும் ஆழத்தையும் "கற்பூரச் சொற்கோ" என்ற சொல் சக்தியோடு வளர்ந்த விதத்தையும் தெளிவாக்குகிறது. பாரதி தமிழை ஆண்ட விதத்தையும், தேசியம் வளர்த்த போக்கையும் இதைவிட எப்படிக் காட்ட முடியும்?

தன் கவிதைச் சக்தியால் மக்களை கிறுகிறுக்க வைத்த பாரதி முப்பத்தி ஒன்பது ஆண்டுகள் (1882—1921) வாழ்ந்தான். தமிழ்க் கவிதை உலகத்தில் அவன் ஒரு ஆகப் பெரியவன் வாழ்க்கையில்-கண்ணெதிரில்-காணக்கிடைக்காத பொன்னையும், முத்தையும், வைரத்தையும், வைடூரியத்தையும் தன் கவிதைகளில் கொட்டி அளந்தான். இந்திய அரசியலில் அவன் வாழ்ந்த காலம் மிக முக்கியம் வாய்ந்ததாகும். ஆங்கில ஏகாதிபத்தியத்திற் கெதிரான விடுதலை இயக்கத்தின் சுதந்திர முழக்கம் நான்கு திசைகளிலும் எதிரொலித்தது. பாரதத்தாயின் விலங்கொடிக்கும் ஆவேசம் சொல்லிலும், செயலிலும், மூச்சிலும், பேச்சிலும் நிறைந்து காணப்பட்டது. அந்நிய நாகரிகமும், அடிமைப் புத்தியும் கால் கொண்டிருந்தது. இந்திய மொழிகள் என்கிற யானை ஆங்கிலம் என்ற முதலை வாய்ப்பட்டிருந்தது. அடிமை மோகம் அகலக் கால் பரவியிருந்த அந்தப் பொழுதில்தான் பாரதியின் பிறப்பு, வளர்ப்பு, மறைவு எல்லாமே நிகழ்ந்தது. ஆனால், பாரதியோ 'சுதந்திர வேள்வியில்' தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். சுதந்திர இயக்கத்தின் முன்னோடும் பிள்ளைகளில் ஒருவனானான்; இயக்கப் பங்கு பல இன்னல்களைத் தந்தன. அவன்பட்டபாடு அவன் பாட்டுக்குப் பட்டைத் தீட்டின. எழுத்துகள் வீறும் வேகமும் பெற்றன. நெஞ்சக்குமுறல்களைப் பாட்டாக வடித்தான். வசனமாக வெளியிட்டான். அவனது எழுத்துகளில் அவனது ஆத்மா துடித்ததைப் போல இந்தியாவின் ஆத்மாவும் துடிப்பதைக் காண்கிறோம். அடிமையுற்ற ஒரு நாட்டின் சகலதுறைகளிலும் விடுதலை வேண்டுகிற புரட்சிக்கவிஞர்களின் படைப்புகளில் இந்த "ஆத்மத் துடிப்பை" ஒரு பொதுப் பண்பாகக் காண்கிறோம். ஆந்திரக் கவிஞன் குருசாத அப்பாராவ் தனது "கன்னியாசுல்க்கம்" என்ற புதினத்தில் "என் இந்தியாவே! இந்தச் சின்னப் பெண்ணின் உணர்ச்சிக் குமுறல்கள்; இந்த நாடு முழுவதும் வெடிக்கப் போகிறது; அந்த உணர்வால்தான் நீயும் விடுதலையடையப் போகிறாய். இன்னும் இவள் போல எத்தனைப் பெண்கள் தோன்றப்

போகின்றார்களோ ?" என்றான். இந்த வரிசையில் கவிஞன் பாரதியும் ஒருசேரக் குரல் கொடுக்கத் தமிழ் மொழியைப் "பண்டிதச் சிறை" யிலிருந்து மீட்டுப் பாமரர் புகழுக்கு இலக்காக்கினான்.

பாரதி, "ஊற்று நீர்க் கூவலின் உள் உறையும் மீனாக" அல்லாமல் எங்கும் பறந்து திரியும் சிட்டுக்குருவியாக விளங்கினான். அவனது பத்திரிகை அனுபவம் பல படிப்பினைகளைத் தந்தன, உலக நிகழ்ச்சிகளோடு உறவு படுத்தின. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் நடந்த உலகத்தைக் குலுக்கிய-வரலாறறு முக்கியத் துவம் வாய்ந்த ரஷ்யப் புரட்சி அவனிடத்தும் பாதிப்பை ஏற்படுத் தியது. புதிய ரஷ்யாவை வரவேற்றுப் பாட்டிசைத்தான்.

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ" என்று
பாட்டிசைத்தான்.

"விடுதலை வேண்டிப் போராடிக் கொண்டிருந்த சகல ஆசிய நாடுகளும் இக்குரலைப் புதிய ஆவலுடன் கேட்டன. எழுச்சியையும் வேகத்தையும் வளர்த்துக் கொண்டன" என்று கூறுவார் வரலாற்று ஆசிரியரான பணிக்கர். உலகப் பிரச்சினைகளை அணுகும் பொழுது பாரதியார் அப்பிரச்சினைகளின் தன்மையை விட இந்திய தேசிய விடுதலைக்கும், அப்பிரச்சினைகளுக்குமுள்ள தொடர்பையே முக்கியமாகக் கவனித்தார். ருஷ்யப் புரட்சி பற்றியும், மாஜினியையும், பெல்ஜியத்தையும் பற்றிப் பாடும் பொழுது, ஆங்கில அரசாங்கத்திற்குத் தப்பிப் புதுச்சேரியில் வாழ்ந்தார் என்பதை நாம் மறத்தலாகாது. எண்ணற்ற தேச பக்தர்கள் சிறை, தூக்குமேடை, சித்திரவதை, நாடுகடத்தல் முதலிய தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

"எழுதரிய பெருங் கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே இறப்பதுண்டு"

என்ற பாரதியின் பாடல் வரிகள் தேசபக்தர்கள் பட்ட வேதனை களுக்காகக் கண்ணீர் விடுவதைக் காட்டுகிறது.

"ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி"
"இடிபட்ட சுவர்போலக் கலி விழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ"

என்றும் பாரதி உணர்ச்சி வசப்பட்டுப் பாடுகையில் கண்டறியாதன கண்ட, கேட்டறியாததைக் கேட்ட, படித்தறியாததைப் படித்த வியப்புணர்ச்சி, அற்புத உணர்ச்சி கொடி கட்டிப் பறக்கிறது. "யுகப் புரட்சி" என்று கூறும்பொழுது அதற்குள் பொதிந்து கிடக்கும் பொருள் வெள்ளத்தை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். "கிருதயுகம்" பாரதி விழைந்த கற்பனை உலகைக் குறியிட்டு நின்றபதம் என்பதை அவரது பாடல்களிலிருந்து அறியலாம்.

"துயர்கள் தொலைந்திடுக; தொலையா இன்பம்
விளைந்திடுக
வீழ்க கலியின் வலியெலாம்
கிருத யுகந்தான் மேவுகவே"

எனத் தோத்திரப் பாடல்களிலும் குறிப்பிடுகிறார். தேசியக்கனல் விளைத்த இந்த நம்பிக்கைதான் அவன் எழுத்துகளுக்கு அடிநாதம். தேசியம் அவனது கவிதைகளுக்கு உந்து சக்தி ஆயின. மக்களிடம் தேசிய உணர்வைப் பரப்பத் தமிழால் துணிவு பெற்றான் பாரதி. தொண்டாற்றும் திறன் பெற்றான்; சுதந்திரம் என்பது தண்ணீர் ஊற்றி வளர்ப்பதன்று கண்ணீரால், தியாகச் செந்நீரால் காக்க வேண்டிய பயிர்.

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி—யஞ்சிடோம்"

என்ற வீறார்ந்த உணர்வை மக்களிடை வளரச் செய்தான். "தொந்தே போயினும், வெந்தேமாயினும்" வந்தேமாதரம் என்று உவந்தே சொல்லும் உறுதி பெருக வேண்டுமென்று உருகிப் பாடினான். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே" என்று அறிவுறுத்தி, நாட்டின் நலன் நாடி கூட்டுமுயற்சிகள் மேற்கொள்ளவும், சமய சாதிப் பாகுபாடுகளையும், மொழி, கருத்து மாறுபாடுகளையும் கடந்து பொதுப் பகையை எதிர்க்கும் போராட்டத்தில் ஒருமித்த உணர்வுடனும், உறுதியானப் பிடிப்புடனும் முனைந்து செயலாற்ற முடுக்கி விட்டன அவன் எழுத்துகள்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பாரதியின் தேசியத்திற்குச் சக்தியாக அமைந்தது. "விடுதலை வேட்கையின் உண்மையான தூதன் இந்திய தேசியத்தின் உண்மையான ஞானி. தன்கால வாழ்வின் இனிமையை மேலும் உயர்த்துகின்றவனுமே மகாகவி என்ற பெயருக்குத் தகுதியுடையவன்" என்பார் டாக்டர் இராதா கிருஷ்ணன். பாரதி தொடாத, பாடாத பிரச்சினைகளே இல்லை. சமயச் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம், பெண் விடுதலை, தேசியக் கல்வி, உலக அரசியல், நாட்டு விடுதலை, மொழிப் பெருமை, மனிதாபிமானம் இப்படிப் பலவற்றையும் பற்றி எழுதியிருக்கிறான். சிறு காவியங்கள் பாடியுள்ளான். காலத்தை வெல்லும் மோகனக் குயில் பாட்டு—இவை அனைத்திற்கும் உயிரோட்டம் தேசியம்தான். கொச்சை மாந்தரின் இழிவழக்கென்று கருதப்பட்ட "மக்கள் தமிழை" இகழ்ந்து அதற்கு இலக்கிய உயர்வு கொடுக்க மறுத்த காலத்தே மக்கள் தமிழ்தான் உயிர்ப்புள்ள, துடிப்புள்ள தமிழ் எனக் கண்டு அவர் வழங்கும் எளிய சொற்களைக் கவிதைகளில் கையாண்டு அவற்றுக்கும் இலக்கிய தேசிய வாழ்வு அளித்தான். "ஆடுது, ஓடுது, பாயுது" போன்ற வினைச் சொற்களையும், 'அடி, அடா, ஐயா' போன்ற நேயச் சொற்களையும், குத்தல், தொளைத்தெடுத்தல், பாப்பா, சின்ன, கன்னங்கரிய போன்ற சாதாரண எளிய வழக்குகளையும் வியத்தகு முறையில் கையாண்டு தேசிய வடிவம் கொடுத்தான். பாரதியின் எழுத்துகளில் காட்டாற்றின் வேகம், பொய்கையின் அமைதி, புயலின் சுழற்சி, தென்றலின் சுகம், இடியின் முழக்கம், மின்னலின் வெட்டு, மழைக்கால மண்ணின் புதுமணம், பூவின் ஒளி மணந்து கிடப்பதற்குக் காரணமே தேசிய அடியோட்டந்தான். "பாரதியின் தமிழில் ஒரு ஒளி எங்கும் பரந்து விளங்கக் காண்கிறோம். அந்த ஒளிக்கீற்றின் முன் ஆனந்தக் கனவுகள் நனவுகளாக முன்னிலைப் படுகினறன. அந்த ஆனந்தம் கற்பவரது ஆன்மாவை ஈர்த்துப் பிடிககிறது. காலத்தால் அழிக்க முடியாத அந்த ஈர்ப்புக்கு அடித்தளம் தேசியமே!" தமிழ்த் தேசிய உணர்வுக்குப் பாரதி வித்திட்டதால்தான் அவருக்குப் பின் ஒரு கவிஞர் பரம்பரை 'எங்குந் தமிழ் எதிலுந் தமிழ்" என்ற உணர்வைத் தோற்றி வளர்த்து வருகிறது எனபதை மறுக்க முடியாது.

பாரதியின் எழுத்துகளை அவற்றின் உருவ அமைதி கொண்டு மூன்று வகைப்படுத்தலாம். 1. கவிதை 2. வசன கவிதை 3. உரைநடை. அவற்றையே அவை தோன்றியதன் அடிப்படையில், பொது, சிறப்பு என இருபிரிவுள் அடக்கலாம். அகவல்,

வெண்பா, கட்டளைக் கலித்துறை, குறள்வெண் செந்துறை, கலிப்பா, ஆசிரியவிருத்தம், வஞ்சி விருத்தம் முதலிய பழைய யாப்பு வகைகளோடு சிந்து, கிளிக்கண்ணி, ஆனந்தக் களிப்பு, பள்ளு, குடுகுடுப்பைக்காரன் பாட்டு, அம்மாக்கண்ணு பாட்டு, நவரத்தினமாலை, பஞ்சகம், தராங்கம் முதலிய பிற்கால வடிவங்களையும் கையாளுகிறார். தன் பாடல்கள் பலவற்றிற்கும் பாரதி பண்ணும் வகுத்துள்ளான். புன்னாக வராளி, பைரவி, நாத நாமக்கிரியை, காம்போதி, ஹிந்துஸ்தான், பியாக், தோடி, பூபாளம், வசந்தா, கானடா, சுருட்டி, முகாரி இப்படிப் பல ராக வகைகள். 'அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா'' என்ற கவிமணியின் வாக்கே நினைவுக்கு வருகிறது. ஒருவன் என்ன? பாரதியே தன் பாட்டைப் பல சமயங்களில் பாடியிருக்கிறுர்.

''பின்னர் ஊழிக் கூத்துப் பாடலைப் பாடும்படி வேண்டினுன் நீண்ட நேரம் கண்களை மூடியிருந்தவாறு அமர்ந்திருந்தார். முகத்திலே ஒரு துடிதுடிப்பு, தேகம் முழுவதிலும் ஒரு வேகம், ''வெடிபடும் அண்டத்திடி பல தாளம்போட'' என்ற சொற்கள் கம்பீரத்தோடு வெளிவந்தன; ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு அடியும், அவரது ஆத்ம சக்தியிலிருந்து பொருளும், ஆற்றலும் பெற்று எங்கள் மனக்கண் முன் கூத்தாடின. உலகம் தகர்வது, ஊழி முடிவது ஒவ்வொன்றும் கண்முன் நிகழ்வது போலவே இருந்தது. பாட்டின் பொருளோடு ஒன்றுபட்டு, லயித்து, அவர் பாடும்பொழுது அவர் கண்கள் சுழன்றன. கருவிழிகள் மேலேறி மறையத் தொடங்கின ''ஊழிக் கூத்தில் அகப்பட்டு விட்டோம்'' என்ற பீதி எங்களுக்கும் உண்டாயிற்று. சங்கீதத்தின் ஆற்றலை நான் அன்று உணர்ந்தது போல என்றும் உணர்ந்ததில்லை''. என்ற பகுதியைக் காட்டாகக் காட்டலாம். பாரதிக்கு இயல்பாகவே அமைந்திருந்த இந்த உணர்வால்தான் ஞாலத்தைத் தழுவி அவன் நெஞ்சம் நிறைந்து தளும்பியது. தேசிய விடுதலை இயக்கப் பணியில் ஈடுபட்டுக் கல்கத்தா, சூரத் ஆகிய இடங்களில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டான். சென்னை ஜனசங்கம் என்ற ஒரு அமைப்பை சென்னையில் நிறுவிப் பல ஆக்க வேலைகளைச் செய்தான். தேசியத் தலைவர்களோடு தொடர்பு கொண்டான். 1919 பிப்பிரவரியில் காந்தியடிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறான். திலகரைச் சந்தித்துள்ளான். சகோதரி நிவேதிகாவைச் சந்தித்து ஞானகுருவாக ஏற்றுக்கொண்டு இருக்கிறான். இப்படிப் பாரதியின் 39 ஆண்டுகால வாழ்வு பல துறைப்பட்டதாக இருந்தாலும், அந்த வாழ்வின் கனவுக்கும்,

நினைவுக்கும் செயலுக்கும் உயிரோட்டமாக இருந்தது அவனது தேசியப் பார்வைதான். "தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும் ஒன்றையொன்று தழுவியே வளர்ந்தன. பழமையின் பெருமை புதுமையின் பொலிவு கைகோர்த்து வளைய வந்தன.

"ஆயிர வருட மன்பிலா வந்நியர்
ஆட்சியில் விளைந்த அல்லல்களெண்ணில"

என்று வரலாற்றைச் சுட்டிக் காட்டுகிறான்.

1905-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதியன்று சென்னை கடற்கரைப் பெருங்கூட்டத்தில் பாரதியார் பாடிய வங்க வாழ்த்துக் கவியில்,

கற்பகத் தருபோல எது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தோம் ந க்கோர்விதம்
பொருளும் அந்நியர் ஈதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கரம் நோக்கியாம்
அவனி வாழ்தல் ஆகாதென நன்கதை
வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழிய! வாழிய!

என்று சுதேசி தேசிய உணர்வு சுடர் விட்டெரியப் பாடியிருந்தான். வீரமும், விவேகமும் கொலுவீற்றிருந்த நாட்டில், அடிமைச் சேற்றிலே உறையும் புழுக்களைப் போலப் புன்மை வாழ்வுவாழ மனமொப்பியமை கண்டு மனங் கொதித்தான்.

வீமன் திறலும் அவற்கிளைய
விஜயன் திறலும் விளங்கி நின்ற
சேமமணுப் பூந்தட நாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி வெறுங்
காம துகர்தல் இரந்துண்டல்
கடையாம் வாழ்க்கை வாழ்ந்து பின்னர்
ஈமம் புகுதல் இவை புரிவர்
என்னே கொடுமை ஈங்கிதுவே.

என 1906-இல் எழுதிய இப்பாட்டில் நாட்டு மக்களின் அவல நிலையை எண்ணி நைந்துருகுகின்றான். இழந்த பெருமையை, மறைந்த மாண்பை, பறிகொடுத்த புகழை, தவறவிட்ட தலைமையை நாடு மீண்டும் எய்தத் துடிக்கிறான்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பாரதியின் தேசியத்தின் இன்னுயிர் எனலாம்.

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று மொழி, மாநில பாகுபாடுகளுக்கு மேம்பட்டு நின்ற நாட்டின் ஒருமையையும், உறுதியையும் அவனது பாடல்கள் கொடுத்தன.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்.

என்று அவன் இன்பக் கனவு கண்டாலும் இந்த ஒருமைப் பாட்டையே பாட்டில் வடித்துக் கொடுத்தான். தாயின் மணிக் கொடியின் கீழ் அணி, அணியாய்த் திரண்டுள்ள எழுச்சிக் காட்சியை அவன் பாடும் பொழுது இந்திய ஒருமைப்பாட்டுச் சித்திரத்தையே தீட்டுகிறான்.

செந்தமிழ் நாட்டுப் பொருநர், கொடுந்தீக்கண்மறவர், சிந்தை துணிந்த தெலுங்கர். காலனுமஞ்சக் கலங்கும் மராட்டர், மாதர்கள் கற்புள்ள வரையும் பாரில் மறைவரும் சீர்த்திகொள் இராஜபுத்திர வீரர், பஞ்ச நதத்துப் பிறந்தோர், துஞ்சும் பொழுதும் தாயின் பதத் தொண்டு நினைந்திடும் வங்கத்தினர் இவர்களைப பாரதி அணி வகுத்து நிறுத்திக் காட்டி நம்நாடு ஒன்றே என்ற சொந்த உணர்வும், நமது நாடு நம்முடையதே என்ற உரிமை உணர்வும் பின்னிப் பிணைய தமிழ் உணர்வும், விடுதலை உணர்வும் சங்கமமாகிப் பெருக்கெடுததோடுவது தான் பாரதியின் தேசியம்.

சிந்தையிலாயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்த இந்நாடு தாழ்வுற்று விடுதலைத் தவறிக் கெட்டுப் போய்விடக் கூடாது; அண்டிப் பிழைக்கும் அடிமை வாழ்வின் ஆணிவேரையே அகற்றி விட வேண்டும்; தொண்டு நினையத் தூவென்று தள்ள வேண்டும்; பாதகம் செய்பவரின் முகத்தில் உமிழ்ந்து மோதி மிதித்து விட வேண்டும்; சாதியில் இழிவு கொண்ட மனிதரென்பார் இந்தியாவில் இருக்கக் கூடாது; மனிதர் உணவை மனிதர் பறித்தலாகாது; தனி ஒருவனுக்கு உணவில்லையெனின் ஜகத்தையே அழிக்கும்

நோன்பை மேற்கொண்டிருக்க வேண்டும். எல்லோரும் இந்நாட்டு மன்னராய் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானராய் வாழும் இலட்சிய பாரத சமுதாயத்தைத் தியாகத்தினால் உருவாக்க வேண்டும்; தொண்டினால் வலுவாக்க வேண்டும்; தேசபக்தியால் நிலையாக்க வேண்டும் என்பதே பாரதியின் தேசியம்.

தேசம் உயரத் திட்டங்கள் பலவற்றைப் பாரதி தீட்டினான். இரும்பைக் காய்ச்சி உருக்குவோம்; இயந்திரங்கள் வகுப்போம்; கரும்பைச் சாறுபிழிவோம்; கடலில் மூழ்கி முத்து எடுப்போம்; இந்த உலகத்தில் நம்மைக் காப்பவர் நாமே என்றுணர்ந்து ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்; காசினி நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்; வியத்தகு பணிகள் மேற்கொண்டு வினை யாற்றும் நேரத்தில் அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாத சின்னஞ்சிறு பொருள்களையும் சிறப்பாகச் செய்வோம்; குடைந்து பொன்னையும், பொருளையும் எடுக்கும் நேரத்தில் குடைகளும், உழுபடைகளும் கூடவே செய்வோம். ஆர்ப்பரிக்கும் இயந்திரங்களை வார்த்தெடுக்கும் வேளையில் ஆணிகளும், கோணிகளும், ஊசிகளும் செய்வதையும் ஒதுக்கி விடமாட்டோம். எங்கள் தலை வானோக்கி நிமிர்ந்து நிற்க, எங்கள் கால்கள் மண்ணில் உறுதியாக ஊன்றிப் பாவிப் பதிந்திருக்கும். ''சந்திர மண்டலத்தியல் கண்டு தெளியும்'' நேரத்திலேயே சந்தித் தெருப்பெருக்கும் சாத்திரங் கற்போம். இவ்வாறு பாரதம் ஆற்ற வேண்டியப் பணிப் பட்டியலைப் பாரதியார் விவரித்து, தேசியத் திட்டங்களின் சாரத்தை இசையில் வடித்துக் காட்டி மகிழ்ந்தானெனில் மிகையில்லை.

பாரதியின் விடுதலைத் தாகம், வேட்கை, பாரத நாட்டின் பெருமையைக் காப்பது இவற்றில் தீவிர தேசியத்தையே கையாளுகிறான்.

'' தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவான்?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவ னாகி
நாயென வாழ்வோன் நமரிலிங் குளனோ?
பிச்சை வாழ்வுகந்து பிறருடைய ஆட்சியில்''

அச்சமுற்றிருப்பது அவசியமில்லை என்று ஆணித்தரமாகக் கூறினன். இப்படியிருப்பதற்குக் காரணம்? பாரத சமுதாயத்

திடமுள்ள குறைதான் ! இதைப் பாரதி நினைந்து, வருந்துவதுடன் எள்ளி நகையாடவும் செய்கிறான்.

நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடீ
கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ—கிளியே!
நாளில் மறப்பாரடீ !
ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக் கோர்கணமும்—கிளியே!
வாழத் தகுதி யுண்டோ?
மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்—கிளியே !
இருக்க நிலைமை யுண்டோ ?
பழமை பழமை யென்று !
பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை—கிளியே !
பாமர ரேதறி வார் ?
பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம்கண்ணுற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ.

இங்ஙனம் தமிழ்ச் சாதியினிடத்தும், இந்தியர்களாகிய மக்களிடத்தும் உள்ள குறைகள் உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காண முடிந்த பிறகு பாரதியின் மனத்தில் ஒரு மாற்றம் தோன்றினாலும் தேசியப் பார்வையில் மாற்றம் தோன்றவில்லை. நாடு அடிமைப் பட்டுக் கிடப்பதற்குக் காரணம் நம்முடைய அறியாமை, கல்வியின்மை, மூட நம்பிக்கைகள், பைத்தியக்காரப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கையின்மை, உறுதியின்மை என்கிறான். அடிப்படையில் இந்தக் குறைகளைப் போக்கினாலொழியச் சுதந்திரம் வாராது என்பதை ஏறத்தாழ இந்தக் காலத்தில்தான் மகாத்மா காந்தியடிகளும் உணர்த்தத் தொடங்கினார்.

"வீரர் முப்பத்திரண்டு கோடி விளைவித்த பாரதத்திலே" பண்டைத் தமிழ்க் கவிஞர்களின் சரியான பிரதிநிதியாக இருந்து தேசியத்தோடு தமிழை வளர்த்து ஒரு புதுநெறி காட்டினான். பாரதியின் சிந்தனை சிறியன சிந்தித்தறியாதது. தமிழ்த் தேசிய மென்றோ, பாரதத் தேசிய மென்றோ கூறமுடியாது. உலகளாவிய வீரமும், நல்லெண்ணமும், ஆவேசமும், ஆக்கமும் கொண்டு மனிதசாதி முழுவதையும் வாழ்விக்க வந்த நல்லிசையாய்ப் பாரதியின் தேசியம் விளங்கியது. சமுதாய வாழ்வைச் சீரழியவைக்கும் பிரிவினை எண்ணங்களுக்கும், பேத உணர்வுகட்கும் எட்டாத தேசியம் பாரதியினுடையது. சுதந்திரவிடியலுக்கு முதல் தாம்பூலம் வைத்து வரவேற்க எழுந்தவை அவனது மாண்புமிகு எழுத்துகள். "சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்" என்று தேசபக்திக்கு, தேசப்பற்றுக்குத் தேசியத் திற்குப் புது நெறி வகுத்தவன் பாரதி.

"பாரதபூமி! பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்இந் நினை வகற்றாதீர்"!

எனச் 'சுருக்'கென்று மனதில் தைக்கக் கூறியவன் பாரதி.

"பேதமை யகற்று; நின் பெருமையை மறவாது போராடு! போரெனில் இது போர்! புண்ணியத் திருப்போர்!" என்கிறார். கூற்றினுக்குயிர் கோடி கொடுத்தும் சுதந்திரப் பேற்றினைப் பெறுவதுதான் பாரதியின் லட்சியம் "அன்னை கண்ணீர் எவ் வகையிலும் துடைப்பேன். இன்றேல் என்னுயிர் துடைப்பேன்" என்று வீரச் சபதமேற்று "துஞ்சு மட்டும் இப்பாரத நாட்டிற்கே தொண்டாற்றத் துணிவோம்" என்று மற்றவர்களையும் கூற வைத்து "மற்றை நாட்டவர் முன் நின்றிடும் பொழுது மண்டுமென் வெட்கத்தினாணை" என வாழ்வதுதான் பாரதியின் தேசியம். "பொன்னுயிர் நாட்டை ஒற்றுமையுடைத்தாய், சுதந்திரம் பூண்டது வாகி இன்னுமோர் நாட்டின் சார்பிலதாகிக் குடியரசு இலங்கச்" செய்யும் கனவை நனவாக்க வேண்டுகிறார்.

"பொய்மை தீர மெய்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வைய முழுதும் வண்மை யொழிய"

விடுதலைக்கு வித்திட்டு,

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு";

என்ற விளைச்சலைக் கண்டு ஆனந்திப்பது தான் பாரதியின் தேசியம்.

பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்.
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.
ஒன்றென்று கொட்டு முரசே!—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.''

அடிமை வாழ்வகன்று, இந்நாட்டார் விடுதலையார்ந்து, செல்வம், குடிமையில் உயர்வு, கல்வி ஞானமும் கூடி ஓங்கிப் படிமிசை தலைமை எய்த வேண்டும். இதுவே பாரதி வளர்த்த தேசியம்.

சொல்லில் தேசியத்தை விதைத்து, சுவையில் தேசியத்தை வளர்த்து, பொருளில் தேசியத்தை விரிவாக்கி வளத்தில் வாழ்வுத் தேசியத்தை அறுவடை செய்தவன் மகாகவி பாரதி.

தேசியம் இல்லாமல் பாரதி இல்லை
பாரதி இல்லாமல் தேசியம் இல்லை

இது முக்காலும் உண்மை!
வெறும் புகழ்ச்சியில்லை!

சான்றாதார நூற்கள்

1. பாரதியார் கவிதைகள், சக்தி காரியாலயம், சென்னை, 1957.
2. பாரதியார் கட்டுரைகள், சக்தி காரியாலயம், சென்னை, 1961.
3. ராமசாமி, வ., மகாகவி பாரதியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974.
4. தூரன், பெரியசாமி, பாரதி தமிழ், அமுத நிலையம், சென்னை, 1954.
5. வையாபுரிப்பிள்ளை, எஸ், தமிழ்ச் சுடர் மணிகள், பாரி நிலையம் சென்னை, 1968.
6. மீனாட்சிசுந்தரம், தெ. பொ., இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1965.
7. மீனாட்சிசுந்தரம், டாக்டர் கா. பாரதி பாநிலை, இளங்கோ வெளியீடு, 1972.
8. பணிக்கர், கே. எம்., ஆசியாவும் மேற்கத்திய ஆதிக்கமும்.
9. குருசாத அப்பாராவ், கன்னியா சுல்க்கம், நேஷனல் புக் டிரஸ்டு, 1943,
10. சுந்தரம், டாக்டர், இராம., பொருள் புதிது சுவை புதிது, ஒப்பரவு அச்சகம், சென்னை, 1978.
11. ஞான சம்பந்தன், அ. ச., இன்றைய இலக்கியம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, 1971.
12. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பூம்புகார் பிரசுரம், 1974.
13. மகாராஜன், எஸ்., தெய்வமாக்கவி, பழனியப்பா பிரதாஸ், 1974.
14. கைலாசபதி, க., இருமகாகவிகள், என்சிபி எச் பிரைவேட் லிமிடட், 1962.
15. சிவகாமசுந்தரி, டாக்டர், சு., அறம் வெல்லும், அன்பு வடிவு வெளியிட்டகம், தஞ்சாவூர், 1971.
16. விஜயபாரதி, எஸ்., மகாகவி பாரதி-ஒரு திறனாய்வு, வானதி பதிப்பகம், 1978.
17. பாரதி தமிழ், அமுதநிலையம், 1953.
18. இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும், சென்னைப் பல்கலைக் கழகம், 1974.
19. தமிழகம் தந்த மகாகவி, மேகலைப் பதிப்பகம், சென்னை, 1962.

பாரதியின் கண்ணன் பாட்டில் உள்ளடக்கம்

டாக்டர் சி. கனகசபாபதி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

இந்திய இலக்கியத்தில் கண்ணன் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்திய இதிகாச இலக்கியமாகிய மகாபாரதத்தில் கிருஷ்ணன் என்ற பாத்திரம் இடையர்குலத் தலைவனாகவும், பாண்டவர்களுக்கு உதவும் தோழனாகவும், விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகவும் தோன்றுகிறான். கிருஷ்ணன் என்ற கடவுட் பெயர் இந்திய வேத இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை.

வியாசர் படைத்த மகாபாரதம் என்ற இதிகாச இலக்கியம் இந்திய தேசிய இலக்கியமாகக் காணப்படுகிறது. இதில் இந்திய தேசிய மரபு என்றால், நல்லதைச் சார்ந்து தீயதை வென்று அழிக்கும் தன்மையது என்பதைக் கிருஷ்ணன் என்ற கடவுள் மனித வடிவில் தோன்றிச் சாதிக்கிறான்.

மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ள பகவத்கீதை காலத்தால் பிற்பட்டது. இதில் கிருஷ்ணன் என்ற கண்ணன் கடவுளின் மனித வடிவமாக உயர்ந்து நிற்கிறான். வேத இலக்கியத்தில் குறிப்பாக உணர்த்தப்படும் பக்தி நெறி, பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் மீது விரிவாக விளக்கப்படுகிறது.[1]

பாரதி வேதங்களில் பக்திக்கு இடமுண்டு என்று காண்கிறார். கீதையின் பக்திநெறியையும் விளக்குகிறார்.[2]

கீதையில் உள்ள பக்திக் கருத்தமைப்பு இந்திய தேசிய மரபில் வழிவழியாக இடம் பெற்று வரும் வரலாறு கொண்டது. கீதையின் கருத்தமைப்பில் பக்தியைப் போலவே ஞானமார்க்கமும் உணர்த்தப் பட்டாலும், கருமமார்க்கம் அதற்கே உரிய முழுத் தன்மையில்

---

1. இந்திய வரலாறு–முதல் பாகம், முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ, பக். 68-69.
2. வேதரிஷிகளின் கவிதை, சுப்பிரமணிய பாரதி.

வெளியிடப்படுகிறது. பற்றற்ற வினைசெயல் வழி என்ற கரும மார்க்கமே கீதையின் சமயக் குறிக்கோள். பகவத்கீதையின் காலத்தில் நான்கு வருண அமைப்புக்குப் பொருத்தமாக அமைந்த கருமமார்க்கமே இது.

மௌரியர் காலப் பகுதியில் தோன்றி, குப்தர் காலப் பகுதியில் வளர்ந்த வைணவம் என்ற சமயப் போக்கு, அவதாரம் என்ற பெயரில் பல வட்டாரக் கடவுளர் வழிபாடுகளையும் புராணங்களையும் தொகுத்துத் தனதாக்கிக்கொண்டு மேலும் வளர்ச்சி கண்டது. சமுதாயத்தில் நான்கு வருண அமைப்பைக் காண்பதற்காகவே அத்தகைய தொகுப்பும் கலவையும் வைணவத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்டன.

இப்போது தமிழகத்துக்கு வருவோம். தமிழகப் பழங்கால இலக்கியமாகிய சங்க இலக்கியத்தில், குறிப்பாகச் சொன்னால், கலித்தொகையில் மகாபாரதக் கதை மேற்கோளும் மகாபாரதக் கிருஷ்ணன் குறிப்பும் வருகின்றன. திருமால் பரிபாடலில், திருமாலுடன் பலராமனும் நாராயணனும் விஷ்ணுவும் கிருஷ்ணனும் இணைக்கப்படுகிறார்கள்.

ஆனால் பத்துப் பாட்டில் விஷ்ணு-ஆயர்பாடிக் கண்ணன் இணைவு காணப்படவில்லை. இதனால கலித்தொகை, பரிபாடல் காலத்தில் தமிழகததின் இடையர் இனக்குழுக் கடவுளான மாயோன் என்ற திருமாலுடன் நாராயணன, விஷ்ணு, கிருஷ்ணன், பலராமன் ஆகிய கடவுளா இணைக்கபபட்டனா என்று தெரிய வருகிறது. இவர்களில் கிருஷணன திருமாலுடன் இணைநதது சற்றுப் பிந்திய காலம் என்று அறியலாம். சிலப்பதிகாரம் திருமாலுடன் மேலே கூறிய கடவுளர் இணைந்ததைக் குறிப்பிடுகிறது.[3]

கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் தமிழக வைணவத்தின் நிலையைக் காண முடிகிறது. சிலப்பதிகாரததில் வழிபபோக்கன் என்ற பாத்திரமாக வரும் மாங்காட்டு மறையவன் திருவேஙகடத்திலும் திருவரஙகத்திலும் திருமாலின் நின்ற கோலத்தையும் படுதத கோலததையும வருணிககிறான். இது திருமால்-கண்ணன் இணைவைக் காட்டுகிறது. திருவேங்கடம்

---

3. வைணவமும் தமிழும, History of Tamil Literature,
ஈ. எஸ். வரதராஜையர், ப. 236.

கோவிலில் இத்தகைய வடவர் தென்னவர் தேசிய வழிபாட்டு இணைவு முதலில் உண்டாகிக் காலப் போக்கில் தெற்கே மேலும் பரவி வந்திருக்கலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணன் வழிபாடு பற்றி ஆய்ச்சியர் குரவையில் ஒருசில குறிப்புகள் வருகின்றன. இவை அந்தணர் வகுப்பைச் சார்ந்தவர் செல்வாக்கு மேலோங்கி வரமுயன்று கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. சமணமதக் குறிக்கோள்தான்-அருகன் மீது வழிபாட்டுடன்—முதன்மையாகவும் விரிவாகவும் சிலப்பதி காரத்தில் இடம் பெறுகிறது. அப்போது வணிகர் வகுப்பின் செல்வாக்கே சமுதாயத்தில் மிகுந்திருந்தது.

தமிழகத்தில் பல்லவ அரசர்களின் ஆட்சிக் காலத்தின் முதல் கட்டத்தில் சமணமும் பௌத்தமும் ஆதரவு அளிக்கப்பட்ட நிலைமை இருந்தது. இரண்டாம் கட்டத்தில் அந்த நிலைமை மாற்ற மடைந்தது. நிலவுடைமையாளர்களின் செல்வாக்கு மீண்டும் உயர்ந்து, அரசர்களின் ஆதரவு சைவத்துக்கும் வைணவத்துக்கும் கிடைத்தது. மீண்டும் நான்கு வருண அமைப்பை அரசர், அந்தணர் தலைமையில் காப்பதற்குச் சைவமும் வைணமும் துணை நின்றன. தமிழகத்தில் அத்தகைய மாற்றம் அடைந்த காலம் பக்தி இயக்கக் காலம் என்று குறிக்கப்படுகிறது.

ஆழ்வார்கள் பாடியுள்ள வைணவ பக்தி இலக்கியத்தில் விஷ்ணுவின் அவதாரம் என்ற நிலையில் கண்ணன் என்ற கிருஷ்ணன் காட்சி தருகிறான். அந்தக் கண்ணனிடம் தமிழகத்தின் திருமாலுக்கு உரிய அலங்காரங்களும் குணங்களும் கதைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இதுவும் வேறொரு வகையான தேசிய சமய இணைவு என்று கூறலாம். சிறப்பாகக் கூறவேண்டுமானால், ஆண்டாளின் கண்ணன் பாடல்களில் தமிழகத்தைச் சேர்ந்த திருவில்லிபுத்தூர் என்ற திருத்தலமும், அதில் வாழ்ந்த ஆய்ச்சியர் களும், பறவை விலங்குகளும், நப்பின்னையும், சிறுபறையும் அனைத்துக்கும் மேலாக அந்தத் திருவரங்கத் தலைவனிடம் தானே தலைவி என்ற நிலையில் காதலுடன் பக்தி கொண்ட அகத்திணை மரபு சார்ந்த தனித்தன்மையும் இங்கே குறிப்பிடத்தக்கன.

ஆண்டாளின் பக்தியிலுள்ள தமிழக அகத்திணை மரபு சார்ந்த தனித்தன்மை (பாவனையாக அல்லாமல், உண்மையாக வெளிப்பாடு

கொண்டது) வட இந்திய வைணவ இலக்கியத்தில் அதற்கு முன்பு யாரிடத்திலும் எங்கும் இல்லாத புதுமை. பிற்காலத்தில் மீராவிடம் இதைப் போன்ற பக்தி நிலை காணக் கூடியதாக இருக்கிறது.

இந்திய இலக்கியத்தில் கண்ணன் பாட்டின் படைப்பு முறைகள்

இந்திய இலக்கியத்தில் கண்ணன் பாட்டைப் பல மாநிலக் கவிஞர்கள் பாடியுள்ள படைப்பு முறைகளை அரவிந்தர் ஆய்ந்துள்ளார்.[4] கண்ணனை மனித உணர்ச்சியுடன் படைத்துக்கொண்டு இறைமை நிலையை உணர்த்துதல் என்பது முதல் படைப்பு முறை. இது வித்யாபதி, சண்டிதாஸ் என்ற வங்காளக் கவிஞர்களிடம் காணப்படுகிறது.

கண்ணனைத் தன்னுணர்ச்சி வெளிப்பாடாகப் பாடுதல் என்பது இரண்டாவது படைப்பு முறை. இது இராஜபுதானப் பெண்கவி மீராபாயிடம் விளங்குகிறது. டாக்டர் சாவித்திரி சின்ஹா என்ற இந்தி ஆய்வாளர் கண்ணன் பாட்டிலுள்ள ஆறு படைப்பு முறைகளைப் பின்வருமாறு விளக்குகிறார்.[5]

1. கண்ணன் வடிவத்தில் விஷ்ணுவை அறிவுவார்ப்பாகப் படைத்தல்; இது வல்லபாசாரியார், சைதன்யர் ஆகிய இருவரிடமும் உள்ளது.

2. கண்ணன்-ராதையை உணர்ச்சி வார்ப்பாகப் படைத்தல்; இது வித்யாபதியிடம் உண்டு.

3. கண்ணனை விளையாட்டு வடிவத்தில் இனிமையுறக் காட்டுதல்; இதைச் சூர்தாஸிடம் காணலாம்.

4. கண்ணனைத் தன்னுணர்ச்சி வார்ப்பாகச் சித்தரித்தல்; இம் முறையில் பாடியிருப்பவர் மீராபாய்.

5. கண்ணனைப் புலனின்ப நுகர்ச்சி வடிவமாக உருவாக்குதல்; இப்படிப் பாடியவர்கள் ரீதிகால கவிஞர்கள்.

6. கண்ணனைத் தற்காலப் புதுவாழ்வுக்கு உந்துதல் குறியீடாகப் படைத்தல்; இது மைதிலி சரண்குப்தாவிடம் பார்க்கத் தக்கது.

---

4. The Foundations of Indian Culture, Aurabindo, P. 359.
5. Indian Literature, Krishna Kavya Tradition, Dr. Savitri Sinha.

இந்த ஆறுபடைப்பு முறைகளிலும் கண்ணனின் பாத்திரப் படைப்பு வெவ்வேறு வகைகளில் உருவாவதைக் காணலாம். தெய்வம், மனித வடிவ தெய்வம், தெய்வ வடிவ மனிதன், மனிதன் என்ற பாத்திர உருக்களில் கண்ணன் தோன்றுகிறுன் என்று கூறலாம்.

பாரதியின் கண்ணன் தனிப்பாடல்கள்

பாரதி கண்ணனைப் பாடியவை: 1. கண்ணன் தனிப் பாடல்கள், 2. கண்ணன்பாட்டு, 3. பாஞ்சாலி சபதம். கண்ணன் தனிப்பாடல்களில் ஒன்று தேசிய கீதங்களில் சேர்ந்துள்ள ‘சுதந்திரதாகம்’.

‘சுதந்திரதாகம்’ என்ற தலைப்பு, புதிதாக மாற்றப்பட்ட ஒன்று. புதுச்சேரியில் ‘இந்தியா’ பத்திரிக்கையில் இதை வெளியிட்ட பாரதி இதற்குத்தந்தது ‘ஸ்ரீகிருஷ்ணதுதி’ என்ற தலைப்பு. இந்தத் தேசியப் பாடல் பாரதியாரை அரசாங்கத்தாரின் கண்களில் குற்றவாளியாகத் தோன்றும்படி செய்தது என்ற விவரத்தைத் தருகிருர் வ. ரா.[6] 1907-இல் நடந்த சூரத் காங்கிரசில் தீவிரவாதிகளின் பலம் கூடியதும், திலகர் தரிசனமும், விபின் சந்திர பாலரின் வீராவேசப் பேச்சும் பாரதியிடம் ஏற்படுத்திய தாக்கமே இந்தத் தேசியப்பாடல்.

இது கண்ணன் மீது துதிப்பாடல் என்ற கவியுருவத்தில் அமைந்திருக்கிறது. பாரதத்தாய் நாடு தன் முன்ஞட்பெருமை போல இந்நாட்பெருமை பெற வேண்டும் என்று கண்ணனிடம் வேண்டிப் பாடியிருக்கிருர். இந்தப் பாடலில் கண்ணன் மகாபாரதக் கிருஷ்ணன் வடிவத்தில் தீயதையும் அரக்கரையும் அழித்திடும் வீரவடிவத்தில் வருணிக்கப்படுகிருன்.

கண்ணன் தனிப்பாடல்களைப் பார்க்கும்போது, பாரதி கண்ணனை விஷ்ணுவாகவும், கிருஷ்ணனுகவும், சிவனுகவும் பாடியிருப்பது தெரிகிறது. பெரும்பாலும் ஆழ்வார்களின் பக்தி நெறியில் தன்னுணர்ச்சி வெளிப்பாடாகப் பாடப்பட்டவை இவை; மகாபாரதக் கிருஷ்ணனை வேண்டுதல் செய்த பாடல் ஒன்றில் மட்டும் (கண்ணன் வேண்டுதலில்) இன்றைய சமுதாய மாற்றத்துக்குத் துணைநிற்க வேண்டும் என்ற புதிய மதிப்பு ஓரளவு இருக்கிறது. சில பாடல்களில் ‘மாரன் அம்புகள்’ என்றும் ‘சாயல் அரம்பை சதுர் அயிராணி’ என்றும் இடைக்காலக் கற்பனையில் பாடும் முறை இருக்கிறது.

---

6. மகாகவி பாரதியார், வ. ரா., பக். 32-33.

வைணவ பக்திப் பாடல் மரபில் உருவானுலும் புதிய மதிப்பை வழங்குவது பாரதியின் 'நந்தலாலா'. கண்ணன் மென்மையில் தோன்றுபவன் என்று சொல்லிவரும் பாரதி,

தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா

என்று பாடுகிறுர். இது கண்ணனை வன்மையில் தோன்றுபவன் என்று குறிப்பாக உணர்த்துகிறது. சத்துவம் என்ற குண விசேடத்தை விடவும் இராஜசம் என்ற குணவிசேடமே இன்று வேண்டத்தக்கது என்ற கருத்தமைப்பின் வெளிப்பாடு இது.

தெய்விகப் பெண்மையை ஷெல்லி புனைவியல் முறையில் பாடியதைப்போலத் தானும் பாட வேண்டும் என்று பாரதி பாடியது 'காற்று வெளியிடைக் கண்ணம்மா'. உலகத்தை, இயற்கையை, அழகை, காதலைப் பொய்யல்ல மெய் என்று உவகை ததும்பப் படைத்தது இது.

பாரதியின் கண்ணன் தனிப்பாடல்களில் ஆழ்வார்களின் பக்தி நெறிப்பாடல் மரபுதான் மிகுதி; மகாபாரதக் கிருஷ்ணன் பாடல் மரபு ஒரே ஒரு பாடலில் தான் வருகிறது.

பாரதியின் கண்ணன் பாட்டு

ஆழ்வார்கள் பாடிய விஷ்ணுவும் மகாபாரதக் கிருஷ்ணனும் பாரதியின் 'கண்ணன் பாட்டில்' காட்சி தருகிறுர்கள், சுபத்திரை, கர்ணன், அருச்சுனன் தேர்நடத்துதல், கீதை உரைத்தல், நாலு குலங்கள் அமைத்தல், பற்றற்ற வினைசெயல் வழியை உரைத்தல், இடையர்குலம் குறிக்கப்படுதல், கம்சன், யமுனை, மதுராபுரி, புல்லாங்குழல், ஆயர்பாடித்தெரு ஆகிய செய்திகள் மகாபாரதக் கண்ணனையே உருவாக்கி இனங்காட்டுகின்றன.

சக்கரம் குறிக்கப்படுதலும், இராமன், நரசிங்கன், புத்தன் என்ற வடிவங்களில் உதித்தலும் ஆழ்வார்கள் பாடிய விஷ்ணுவைச் சித்திரப்படுத்துகின்றன. ஆழ்வார்கள் பாடிய ஆயர்பாடிக் கிருஷ்ணன் பாரதியின் 'கண்ணன் பாட்டில்' இரண்டு இடங்களில் மட்டும் தோன்றுகிறுன்.

பாரதி பாடிய 'கண்ணன் பாட்டில்' காதல் வடிவில் கண்ணன் தோன்றுவது ஆழ்வார்களின் விஷ்ணு அல்ல; மகாபாரதக்

கிருஷ்ணன்தான். கிருஷ்ணன் என்ற கண்ணன்தான் மகாபாரதக் கதைகள் மூலம் தமிழ் மக்களுக்குத் தெரியவந்துள்ள எளிய கலைப் போக்கு உடையவன் என்பதாலும், பொதுமக்களைச் சார்ந்த இலக்கிய ஆக்கம் செய்ய முற்பட்டதாலும் பாரதி இப்படிப் படைத்திருக்கிறார்.

'கண்ணன் பாட்டில்' 1. கண்ணனை விளையாட்டு வடிவத்தில் இனிமையுறக் காட்டுதல், 2. கண்ணனைத் தன்னுணர்ச்சி வார்ப்பாகச் சித்தரித்தல், 3. கண்ணனைத் தற்காலப் புதுவாழ்வுக்கு உந்துதல் குறியீடாகப் படைத்தல் ஆகிய படைப்பு முறைகளைப் பாரதி மேற்கொள்கிறார்.

இந்த மூன்றில் கண்ணனைத் தற்காலப் புதுவாழ்வுக்கு உந்துதல் குறியீடாகப் படைத்தலே மிகுதியாகவும் வேகமாகவும் இருப்பதைக் காண முடிகிறது. இந்தப் படைப்பு முறைகளில் பாரதி தமது சம கால இந்தியக் கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய அளவில் நிற்கிறார். தேசியப் பண்பாட்டின் 'புதுப்பரிணும'னுகத் தோன்றுகிறார்.

கண்ணன் பாட்டில் பாரதி பழமையைப் புதுமைக்குப் பயன்படுத்துதல்

இயற்கை அழகை இன்பக்களியாக ஏற்றுப் போற்றும்படி கண்ணன் தாயாக இருந்து வழி காட்டுகிறான். நாலு குலங்களும் வேதங்களும் கோத்து வைத்தான் என்றும், ஆனால் அவைகளை மக்கள் நாசமாக்கினர் என்றும் கண்ணன் தந்தை நிலையில் பேசுகிறான்.

வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் பகைமை வெந்து நோகும்படி ஒரு கணத்தில் சக்கரத்தை எடுத்து மறுகணத்தில் பொசுக்கி விடுவான் கண்ணன் என்ற அரசன்.

பிரதிபலனை எதிர் பார்க்காமல் எந்தக் கருமத்தையும் செய்ய வேண்டும் என்றும், கல்வித்துறை ஆசிரியரும், எழுத்தாளரும் இதைப் பின்பற்ற வேண்டும் என்றும் கண்ணன் சீடனாக வந்து அறிவுறுத்துகிறான்.

பற்றற்ற வினைசெயல் வேண்டும் என்ற கரும மார்க்கத்துடன், இன்பங்களை அனுபவித்துக் கொண்டே அவா அறுத்தல் வேண்டும் என்ற ஞான மார்க்கத்தைக் கற்பிக்கிறான் கண்ணன்; சற்குருவின் வடிவில் தான் அதுவாதல் என்ற அத்வைதக் காட்சியைக்

கண்ணம்மா என்ற காதலியின் வடிவில் கவிஞன் காண்கிருன். இப்படியெல்லாம் பாரதி கண்ணனை வைத்துப் பேசும் தத்துவக் கருத்துக்கள் வெறுமனே பழம்பெருமை பேசுதலாக இல்லாமல், தற்கால வாழ்வுக்கு ஏற்புடையனவாக விளங்குகின்றன. பாரதியின் கண்ணன் குறியீடு பழமையைப் புதுமைக்கு இயைபுடன் பயன்பட வைக்கிறது.

கண்ணன் பாட்டில் இடைக்கால வாழ்வியலும் பண்பாடும்

இந்திய தேசிய வாழ்வில் இடைக்கால வாழ்வுப் பகுதி பழம் பெருமையையும் பழம்பெரும் பண்பாட்டையும் சிதைத்து, வெறும் சடங்குகளையும் மூடவழக்கங்களையும் போலித்தனங்களையும் புதர் போல் வளர்த்துக் கொண்டுவிட்டது. இது பாரதியின் இடைக்கால வாழ்வியலைப் பற்றிய ஒரு விமரிசனப் பார்வை. இந்தப் பார்வையை வெளியிடுபவராகப் பாரதி இருக்கிருர்.

1. *கோர்த்த பொய் வேதங்களும்—மதக்*
   கொலைகளும் அரசர்தம் சூத்துக்களும்
   மூத்தவர் பொய் நடையும் இள
   மூடர்தம் கவலையும் அவள் புனைந்தாள்

2. *மூவகைப் பெயர் புனைந்தே—அவன்*
   முகமறி யாதவர் சண்டைகள் செய்வார்

3. *ஞனியப் பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான்*

4. *சாத்திரம் ஏதுக்கடீ*
   ஆத்திரங் கொண்டவர்க்கே—கண்ணம்மா
   சாத்திரம் உண்டோடீ

5. *ஆரியர் முன்னெறிகள் மேன்மையென்கிருய்—பண்டை*
   ஆரியப் பெண்களுக்குத் தீமைகள் உண்டோ

6. *கடுமை யுடைய தடீ—எந்த நேரமும்*
   காவலுன் மாளிகையில்
   அடிமை புகுந்தபின்னும்—எண்ணும்போது நான்
   அங்கு வருவதற் கில்லை

இவ்விடங்களில் பொய்யான வேதம் கூறுதலும், பழமை வாதிகளின் போலித்தனமும், இளைஞர்கள் கவலைப்படுதலும், பொய் யான சாத்திர நம்பிக்கையும், பெண்கள் முக்காடு அணிவதும், அடிமைத்தளையும் ஆகிய இடைக்கால வாழ்வியல் நிலைமைகள் பாரதியால் விமரிசனம் செய்யப்படுகின்றன.

ஆனால் சில இடைக்கால வாழ்வியல் நிலைமைகளைப் பாரதி ஏற்றுக்கொள்கிறார்,

மந்திரியுண் டெந்தைக்கு விதியென்பவன்
முன்பு விதித்த தனையே—பின்பு
முறைப்படி அறிந்துண்ண மூட்டி விடுவான்

இதில் 'எல்லாம் விதிவசம்'—'விதியை வெல்ல முடியாது' என்ற இடைக்காலக் கருத்து கண்ணன் பெயரில் பாரதியால் பேசப்படுகிறது.

நாலு குலங்கள் அமைத்தான்—அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு கருமம்—இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவ ரென்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மையுண் டென்பான்

இதில் நாலுகுல அமைப்பு இருந்தபடியே இருந்தாலும், சாதி வேறுபாடு காட்டாத பண்பு வேண்டும் என்று பாரதியால் பேசப் படுகிறது. சாதிகளை வற்புறுத்தும் நூல்களையே பொசுக்கிவிடச் சொல்கிறார் பாரதி. சாதிமுறை கொண்ட சமுதாய அமைப்பை மாற்றிவிட வேண்டும் என்று இதற்குப் பொருள் கொள்ள முடியாது.

ஆதரித்தாற் போதும் அடியேனை நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லையென்றான்

இப்படிக் கவிஞனிடம் கூறியவன் கண்ணன் என்ற சேவகன். கூலி என்ன கேட்கிறாய் என்று கேட்டதற்கு அவன் கூலியே வேண்டாம் என்கிறான். இப்படிக் கூலி நிர்ணயமே இல்லாமல்,

பண்டமெலாம் சேர்த்து வைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்

கண்ணன் சேவகனாய் உழைக்கிறான். இதிலிருந்து பாரதி குறிப் பாக உணர்த்த வரும் கீதைத் தத்துவம் 'பிரதிபலனை எதிர் பாராமல் கருமம் செய்தல்' என்பதுதான். நிலவுடைமையாளர்

களுக்கு உகந்ததான ஒரு தத்துவமாக இடைக்காலத்தில் இருந்தது. இது தற்காலத்து முதலாளித்துவச் சமுதாயத்தில் கூலியே வேண்டாம் என்று, கூலிநிர்ணயமே எதிர்பார்க்காமல் தொழிலாளி உழைக்க வேண்டும் என்று உபதேசம் செய்ய முன்வருவது யதார்த் தமாக இல்லை. கூலி உயர்வுக்குப் போராட்டம் நடக்கும் இன்றைய வர்க்க முரண்பாட்டுச் சமுதாயத்துக்கு ஏற்புடையதாக இல்லாதது இந்தக் கீதைத்தத்துவம்.

அடிமை உணர்ச்சியைத் தூண்டும் ரசத்தின் வழியில் கவிஞர்கள் பாடக் கூடாது என்று தம்முடைய ரசக்கோட்பாட்டை விளக்கியவர் பாரதி. 'கண்ணன்-என் ஆண்டானில்' இதை மீறி விடுகிறார். நிலப்பிரபுவான ஆண்டைக்கு அடிமைத் தொண்டு செய்து, அடிவாங்கும் அரிசன விவசாயியை இதில் காட்டுகிறார்.

இவ்வாறு இடைக்கால வாழ்வியலைச் சார்ந்த பழமை நாட்டம் பாரதியின் கண்ணன் குறியீட்டில் சேர்ந்திருப்பதை நாம் பிரித்துப் பகுத்தாய்ந்து பார்க்கும்போது தெரிகிறது.

பாஞ்சாலி சபதத்தில் பழமையைப் புதுமைக்குப் பயன் படுத்துதல்

பாண்டவர் செய்த வேள்வியில் கண்ணனுக்கு முதலிடம் தரப்பட்டதைச் சகுனியும் துரியோதனனும் குறை கூறிப்பழித் தார்கள். ஆனால் தந்தை திருதராட்டிரன் அதை மறுத்துப் பேசினான்.

இவ்வாறு திருதராட்டிரன் கண்ணனைச் சார்ந்து கூறிய உரை யாடல், மூலநூலான வியாசர் மகாபாரதத்தில் உள்ள கருத்தமைப்பை ஏற்றுக் கொண்ட முறையில் வெளிப்பாடு பெறுகிறது.

'பாஞ்சாலி சபதத்தில்' மகாபாரதக் கிருஷ்ணன் விஷ்ணு வுடன் இணைந்து வருகிறான். மேலே காட்டிய முதல் இடம் தவிர, துச்சாதனன் எழுந்து பாஞ்சாலி துகிலை உரித்தபோது, பாஞ்சாலி கண்ணனுக்குச் செய்த பிரார்த்தனையும், கண்ணன் அருளால் துணிகள் புதிது புதிதாக வளர்ந்த நிலையும் பாடப்படும் இரண்டாவது இடம் இப்படி அமைந்துள்ளது. அடுத்த மூன்றாவது இடம், வீமனும் அருச்சுனனும் கண்ணன் பாதத்தின் மீது ஆணையிட்டுச் சபதம் செய்த கடைசிக் கட்டம். இந்த மூன்று இடங்களிலும் கண்ணனை விஷ்ணுவுடன் இணைத்தாலும் நேரே வந்து நடமாடும் பாத்திரமாகப் பாரதி சித்தரிக்கவில்லை.

பாஞ்சாலியின் பிரார்த்தனையைப் பார்க்கும்போது, கண்ணன் குறியீட்டைக் கொண்டு கருமமார்க்கத்துடன் பக்திமார்க்கம் இணைக்கப்படுவது தெரிகிறது.

'பாஞ்சாலி சபதத்தில்' மகாபாரதமும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும் இணைக்கப்படுவது தெரிகிறது. 'கண்ணனைத் தற்கால வாழ்வுக்கு உந்துதல் குறியீடாகப் படைத்தல்' என்ற படைப்பு முறை இங்கு உள்ளது. பாஞ்சாலியைப் பாரதநாடு என்றும், பாரத நாட்டின் அடிமைத்தளையறுக்கும் தேசிய விடுதலைதான் கண்ணன் தந்த தத்துவம் என்றும் பாரதி உணர்த்துகிறுர்.

'கண்ணன் என் தந்தை'யில் இடைக்கால விதிக் கொள்கை யைக் கூறிய பாரதி, பாஞ்சாலி சபதத்தில் விதியைத் தருமன் பேச வைத்து, ஆனல் வீமனும் அருச்சுனனும் அதை மறுத்துப் பேச வைக்கிறுர்.

கண்ணன் பாட்டு—இலக்கிய ஒப்பியல்

வங்காள இலக்கியத்தில் வைணவ மரபு வழியில் தாகூர் பாடிய ஒரு சில தனிப்பாடல்கள் இலக்கிய ஒப்பியலுக்கு இங்கே குறிப்பிடத்தக்கன. 'சிசு' (பச்சிளங்குழந்தை) என்ற பாடல், 'குழந்தையின் மீதுள்ள அன்பை-அநாதிக் காலமாக உள்ளதும் யாவற்றுக்கும் அடிப்படையானதுமான, மனித இனத்தின் உணர்ச்சியைக் காட்டுகிறது. வைணவத் தனிநிலைச் செய்யுள்களில் காணப்படும் குழந்தையின் மீது அன்பும் பாராட்டும் இதில் கவிதை வடிவம் பெற்று, வெளிப்பாடு ஆகின்றன.[7]

தாகூரின் 'சிசு'வைப் பாரதியின் 'கண்ணம்மா என் குழந்தை'யுடன் ஒப்பிடலாம். 'சிசு'வில் காணும் குழந்தை சாமானியக் குழந்தை. அந்தக் குழந்தையின் பிடிவாதமும், அதன் விசித்திர நடத்தையும், சாதாரண முறைகளுள் அடங்காத கற்பனைகளும், தன் ஆசை நிறைவேருதபோது படும் பெருந்துயரமும் அதன் சாமானியப் பண்புகளையே காட்டுகின்றன. பாரதியின் கண்ணம்மா என்ற குழந்தை, மனிதக் குழந்தையாக உருவெடுத்தது. ஆனுலும் தாகூரும் பாரதியும் உயிரின் உள்ளடங்கிய தத்துவமாக, உலகப் பொதுத் தன்மை வாய்ந்த குறியீடாகக் குழந்தையைப் படைத்திருப்பதைக் காணமுடிகிறது.

---

7. வங்க இலக்கிய வரலாறு, சுகுமார் ஸென்.

வங்காளத்தில் வைணவத் தனிப்பாடல்கள் 'பாவுல்கள்' என்ற நாட்டுப்புறப் பாடல்களால் பாடப்பட்டு வந்ததைக் கேட்டார் 'தாகூர்'. சாந்திநிகேதனத்தின் அருகில் பாவுல் பாடல் மந்திரம் போல் ஒலித்தது. அது அவர் மனத்தைக் கிளர்ச்சியுறச் செய்தது. ஒரு வைணவப் பெண்மணி எத்தனேயோ நாள் காலே வேளேயில் தாகூருடைய காலடியில் அமர்ந்து, கவிஞரின் மேசையில் வாடிய பூக்களேப் பிரசாதமாக வாங்கிக்கொண்டு போவாள். மேலும் வட மேற்குப் பகுதியைச் சேர்ந்த கபீர், மீரா, தாது, கேயான் தாஸ் முதலிய மறை ஞானிகளின் மறைஞானப் பாடல்கள் தாகூருக்குக் கிளர்ச்சியை ஊட்டின.

வைணவத் தனிப்பாடல்களிலிருந்து சில முக்கியமான குறியீடுகளே எளிதில் கண்டுகொண்டார் தாகூர். எங்கோ தொலே விலிருந்து தன்னேக் கூவியழைக்கும் குழலின் ஓசையைக் கேட்டு, ராதை கண்ணனே நாடிச் செல்வது தாகூரைத் தூண்டிய ஒரு குறியீடு. இதைத் தாகூரின் 'கீதாஞ்சலி'யில் கேட்கலாம்.[8]

தமிழகத்தின் வைணவ நாட்டுப்புறப் பாடல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் பாரதி. 'மாயக்காரன் அம்மா-அவன் மகிமைக்காரன் அம்மா' என்று பாடிவந்து குறி சொல்லும் பெண் மணியின் பாடலேக் கேட்டு அவர் இன்புற்ருர். ஆண்டாள், பெரியாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் பாடிய வைணவப் பாடல்களே அரவிந்தருடன் இருந்து ஆராய்ச்சியில் ஆழ்ந்தவர் பாரதி இதன் தாக்கமே பாரதியின் 'கண்ணன் பாட்டு'.

ஆனுல் பாரதிக்கும் தாகூருக்கும், இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இருக்கிறது. தாகூர் 'கீதாஞ்சலி'யில் தம்முடைய தனிமனிதத்துவம் சார்ந்த தேடலே முதன்மையாக அமைத்திருக் கிருர். தாகூர் பாரதியைப் போலச் சமுதாயம் சார்ந்த தேசியப் பிரச்சனேகளேக் 'கீதாஞ்சலி'யில் தேடிக்கொண்டு பாடவரவில்லே. காரணம் அப்போது தாகூர் தமது மனேவியையும் இரண்டாவது மகனேயும் கடைசி மகனேயும் இழந்த நிலே. சாந்தி நிகேதனம் பணத்தை விழுங்கிக் கொண்டிருந்த நேரம். அரசியல் துறையில் அடியெடுத்து வைத்து, ஆனுல் மனமுடைந்து, கவிதை மாளிகையின் உள்ளே தாகூர் பின் வாங்கிச்சென்ற நேரம்.

---

8. வங்க இலக்கிய வரலாறு, சுகுமார் ஸென்.

ஆனால் பாரதி 'கண்ணன் பாட்டில்' தேசியத்தின் பல பிரச்சனைகளையும் அணுகிப்பாடியிருக்கிறார். அப்போது புதுச்சேரியில் வைணவப் பாடல்களிலும் வைணவத் தத்துவத்திலும் பாரதி ஆழ்ந்திருந்தாலும் அவர் தேசியத்தின் யதார்த்தப் போக்குகளை மறந்து போய் விடவில்லை. அரவிந்தர், சண்டிதாசும், வித்யாபதியும் பாடிய கண்ணன் ராதை பற்றிய காதல் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். அரவிந்தர் அரசியல் துறையில் செயல்பட்டபோது, ஒருமுறை கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டபோது, அந்த நீதிபதியையும், நீதிபரிபாலன சபையையும், சிறைக்குள் இருந்த மரத்தையும், கண்ணனின் உருவமாகப் பார்த்ததாகத் தம்முடைய கவிதையொன்றில் (1939) குறிப்பிடுகிறார். அந்தக் கவிதையில் விடுதலை உணர்வைக் குறிப்பாகப் பாடியுள்ளார்.

நான் புயலின் மலையின் தலைவன்
நான் விடுதலையின் பெருமையின் பேருணர்வு.

ஆனால் காலப்போக்கில் அரவிந்தர் கீதையின் தத்துவ ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். கீதையில் அதிமானுடக் காட்சியை அவர் காண முற்பட்டார். அரவிந்தரிடம் இருப்பதை விடவும் பாரதியின் கீதை ஆராய்ச்சியில் சமுதாய-தத்துவ இணைவுள்ளதைக் காண முடிகிறது.

மலையாள இலக்கியத்தில் வள்ளத்தோள் கண்ணன் பாடல்களை மிகுதியும் பாடியிருப்பவர். கண்ணன் குறியீட்டில் மிகுந்த ஆர்வம் உடையவர். பி. இருதய குமாரியின் வள்ளத்தோள் பற்றிய சிறிய ஆய்வு நூலிலிருந்து சில ஒப்பீட்டுச் சான்றுகளை இங்கே காணலாம்.[9]

'நமது பதில்' (நமுதே மறுபதி) என்ற தேசியப் பாடலில் கீதையைக் குறிப்பிட்டு, இந்திய மரபின் பெருமையை வள்ளத்தோள் உணர்த்துகிறார். 'போதாது, போதாது' (போரா போரா) என்ற தேசியப் பாடலில் தேசியக்கொடியில் உள்ள சுழலும் சக்கரம் கிருஷ்ணனுடைய சுதர்சன சக்கரம் என்றும், அது தீமையின் கழுத்தை அறுக்கும் என்றும் குறிப்பிடுகிறார். இது பாரதி 'ஸ்ரீகிருஷ்ண துதி' என்ற தேசியப்பாடலில் கண்ணனையும் தேசிய விடுதலையையும் இணைத்த பாங்கை ஒத்திருக்கிறது.

---

9. Vallathol, Makers of Indian Literature, B. Hirdayakumari.

'மக்தலேனுமரியம்' என்ற கவிதையில் வள்ளத்தோள் கிறிஸ்துவைக் கிருஷ்ணனுகக் காண்கிருர். பாரதி 'யேசுகிறிஸ்து' என்ற கவிதையில்,

தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமைநித்தங் காப்பார்
நம் அகந்தையை நாம் கொன்றுவிட்டால்

என்றும்,

உண்மையென்ற சிலுவையிற்கட்டி
உணர்வை ஆணித்தவங் கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசுகிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்

என்றும் பாடியது கண்ணனையும் கீதையையும் உட்கொண்டு உள்ளன. வள்ளத்தோளின் 'ஒரு சித்ரம்' கிருஷ்ணன் மீது பாடப்பட்ட மகிழ்ச்சி துள்ளும் கவிதை. இது கண்ணனைச் சிறுபிள்ளையாகக் கருதிப் பாடியது. பாரதியின் 'கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை'யுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்கிறது.

'கர்மபூமியின் பிஞ்சுப்பாதங்கள்' (கர்ம பூமியோட பிஞ்சுகள்) என்ற வள்ளத்தோளின் கவிதை, கண்ணன் காளிங்கன் என்ற பாம்பின் மீது நடனமாடுவதைச் சித்தரிக்கிறது. இது வள்ளத்தோள் கண்ணனை வைத்து உணர்த்த விரும்பும் இராஜசம் என்ற உணர்ச்சி வெளியீடு. கண்ணன் என்ற தேசிய வாழ்வியல் தலைவன் இராஜச வடிவத்தில் தோன்றுபவன் என்ற குறியீட்டின் அழகும் வேகமும் இங்கே பார்க்கக் கூடியவை. இதேபோல் பாரதி 'கண்ணன்-என் அரசன்' என்ற கவிதையில் இராஜச உணர்ச்சியோடு குறியீட்டியல் கருத்தாக உணர்த்துவதைக் காணலாம்.

'ராதையின் சமாதானம்' (ராதாயூட கிரிடார்த்ததா) என்ற வள்ளத்தோளின் கவிதை கழிவிரக்கமான உணர்ச்சி வெளியீடு கொண்டது என்று பி. இருதய குமாரி மதிப்பிடுகிருர். ராதை கண்ணனைச் சந்தித்த நாட்களை நினைவு கூர்ந்து, துயரப்பட்டு, ஆனுல் அவனைப் போலவே உலகில் வாழ்ந்து கொண்டிருக்க விரும்புவதாக உணர்ச்சியை வெளியிடுகிருர்.

பாரதியின் 'ராதைப் பாட்டும்' கழிவிரக்க உணர்ச்சி வெளியீடாக இருப்பதைக் காணலாம்.

வள்ளத்தோள் தம்முடைய கண்ணன் பாடல்களில் எளிமையையும் இனிமையையும் தெளிவு சார்ந்த மொழியையும் நடையையும் பின் பற்றியிருக்கிறார்.

'என்மொழி' (என்டே பாஷா) என்ற அவருடைய பாடல் இதற்குச்சான்று. பாரதி 'பாஞ்சாலி சபதம்' முன்னுரையில் இப்படி வெளியிடுகிறார். இதனால் பாரதியிடமும் வள்ளத் தோளிடமும் வேர்ட்ஸ் வொர்த்தின் எளிமை என்ற நடையின் பாங்கு ஒப்பியலில் காணப்படுகிறது என்று மதிப்பிடலாம். ஆனால் வள்ளத்தோளிடம் மணிப்பிரவாளச் சொல்வளம் சில இடங்களில் தலைகாட்டுகிறது. பாரதி தம்முடைய 'ராதைப்பாட்டு' ஒன்றில் மட்டும் மணிப்பிரவாள நடையைப் பின்பற்றி அதற்குத் தமிழ் ஆக்க வடிவமும் தந்திருக்கிறார்.

வள்ளத்தோளின் பெரும்பாலான கருக்களும் பாத்திரங்களும் இந்தியப் புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கண்ணன் கதைகளில்தான் அவருக்கு ஈடுபாடு மிகுதி. இதுவே பாரதியிடமும் பொருத்தமாகக் காணக் கூடியதாக இருக்கிறது. "ஆண்கடவுளரும் பெண் கடவுளரும் எங்கோ வெளியில் இல்லை, நம்மிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்தவர்களாக இல்லை. இப்படியேதான் கடவுளருக்கு எதிராளிகளும் அரக்கர்களும்-அவர்கள் பூமியில்தான் வாழ்கிறார்கள். அவர்களை அறிவது நம்மை நாமே அறிவது போலாகும்...

அவர்களை அறிய எப்படியும் நேரம் அதிகமாகும். வளமான ஆழமான வாழ்வியலை அறிய முற்படுவது கடினமானதுதான். புராணம் நம்மைவிட்டுப் போய் விடவில்லை. நாம்தான் புராணத்தை விட்டு வந்து விட்டோம்.'' இவ்வாறு 'புராணமும், ஆங்கில-இந்திய எழுத்தாளரும்' என்ற கட்டுரையில் பி. லால் குறிப்பிடுகிறார்.[10]

மலையாளக் கவிஞர் உள்ளூர் தம்முடைய 'பக்தி தீபிகா' என்ற கவிதை நூலின் கடைசிப் பகுதியில் கீதையின் கரும மார்க்கத்தை விளக்குகிறார்.

மலையாளக் கவிஞர் ஆசான் இராமனையும் சீதையையும் மிகுதியாகப் பாடியுள்ளார். கன்னட இலக்கியத்தில் சீனிவாசா, இவம்பு ஆகிய கவிஞர்கள் இராமாயண தரிசனத்தில் ஈடுபாடு மிக்கவர்களாக இருக்கிறார்கள்.

---

10. Myth and the Indian Writer in English: A note, P. Lal.

தெலுங்கு இலக்கியத்தில் தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரி என்ற கவிஞர் கிருஷ்ணபிரகாசம் பாடியுள்ளார். திரிபுரனேணி இராம சுவாமி சௌத்ரி என்ற தெலுங்குக் கவிஞர் தருமனையும், கிருஷ்ணனையும் வெறுத்து, துரியோதனுதியரை ஆதரித்துப் பாடியுள்ளார்.

இந்தி இலக்கியத்தில் மைதிலிசரண் குப்தா போன்ற தற்காலக் கவிஞர்களின் சமுதாய முற்போக்குக் கருத்தோட்டத்தில் மகா பாரதக் கிளைக் கதைகளையும் கண்ணன் குறியீட்டையும் பயன் படுத்தி எழுதியுள்ளனர்[11] 'கண்ணன் பாட்டில்' பாஞ்சாலி சபதத்தில் பாரதி கண்ணன் குறியீட்டைச் சித்தரித்துள்ள கலைப் போக்குடன் இதை ஒப்பிடலாம்.

11. **Krishna Kavya Tradition, Indian Literature, Dr. Savitri Sinha,**

விடுதலை வேள்வியில் பாரதியின் பணி

ச. மெய்யப்பன்

துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பாரதி தேசப்பற்று மிக்க கவிஞர். இக்காலத்தில் தேசபக்தி என்னும் சொல் சரளமாக எடுத்தாளப்படுகின்றது. தேசபக்தி என்றால் என்ன? "தேசபக்தி என்பது, நம்மவருக்கு அன்னியரால் நேரும் தீண்டாமைகளை ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமேசெய்து கொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்புடையது" என்பது பாரதியின் விளக்கம்[1]. வேற்றவர் விளைவிக்கும் தொல்லையும் நம்மவர் விதித்துக் கொண்டு துன்பப்படுத்தும் தேவையற்ற சமூக அநீதியும் ஒழித்தற்குக் கொள்கின்ற உணர்வினையே பாரதி தேச பக்தியாக மதித்தார். இவை இரண்டையும் சுருக்கமாகக் கூறினால், ஒன்று, பிறநாட்டுக்கு அடிமை. இரண்டு, சமூக அநீதி; இக் கருத்தினையே பாலதண்டாயுதம் விரிவாக்கித் தேசபக்திக்கு இலக்கணம் கூறுவர்.

> "ஒரு தேசத்தின் நதிகளையும் மக்களையும் இயற்கைச் செல்வங்களையும் மட்டுமே பாடிக் கொண்டிருப்பதல்ல தேசபக்தி. ஏனெனில் இந்தக் காரியத்தை எல்லோருமே செய்து கொண்டிருந்தார்கள்; இவற்றுக்கும் மேலாய், இந்தநாட்டின் பழம் பெருமையைப் பாடுவதும், இந்த இயற்கைச் செல்வங்களை வழிபடுவதுமாகிய காரியத் தோடு, இந்த நாட்டில் இந்த நிமிஷம் வாழும் மனிதனைப் பற்றிப் பொறுப்புடன் சிந்திப்பதும் இந்த வளத்திற்கும் பெருமைக்கும் உரியவனாகவும் இணையாகவும் அவனை உயர்த்துவதும் எங்ஙனம் என்று சிந்திப்பதுமே தேச பக்தியாகிறது" என்பர்[2]

இத்தேசபக்தி, பாரதிக்கு மிகுதியாக இருந்தது, இந்த நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் இந்நாட்டு மக்களுக்குப் பாரத மக்கள் என்ற உணர்வு மங்கிப்போயிருந்தது. அப்போது பாரதி, "பாரத பூமி பழம் பெரும் பூமி; நீர் அதன் புதல்வர்; இந்நினைவு அகற்றாதீர்" என்று பாடினார். இது, அடிமை உணர்வை நீக்கும்

---

1. தீண்டாமை என்ற பாதகம்-கட்டுரை.
2. தமிழகம் தந்த மகாகவி-பக். 284.

தேசியக் கொள்கை. பெண்விடுதலை முதலியன சமூக அநீதியைச் சாடிப் பாடிய தேசியக் கொள்கை. இவ்விரண்டும் பாரதியால் தமிழகத்தில் பரப்பப் பெற்றன ; பாடல்களில் சாகாவரம் பெற்றன.

39 ஆண்டுகளே வாழ்ந்த பாரதி, தம் 23-ஆம் வயதில் தேசிய நீரோட்டத்தில் குதித்தார். எட்டயபுரச் சமஸ்தானப் புலவராகச் சில திங்களும், தமிழாசிரியராக 182 நாட்களும் பணியாற்றிய பாரதி 1904-ல் சுதேசமித்திரன் இதழில் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்தார். பத்திரிகைத் துறையே பாரதியின் தேசிய ஆவேசத் திற்கு நறும்புகையாயிற்று. எழுதத் துடித்த கைகள், தேசியம் பற்றி எழுதின ; தமிழாசிரியராக இருந்து விருத்தம் பாட வேண்டிய உள்ளம், இந்திய நாட்டு வருத்தம் பாடியது. இக்காலத்தில் 1905-ல் வங்காளப் பிரிவினை நடைபெற்றது இப்பிரிவினையால் நாடெங்கும் தேசிய உணர்வு கொழுந்து விட்டெரிந்தது. இது பாரதியையும் பாதித்தது. பக்கிம சந்திரரின் புகழ் பெற்ற வந்தேமாதரம் பாடலை இவ்வாண்டில்தான் மொழிபெயர்த்தார். இவ்வாண்டில் காசியில் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அடுத்த ஆண்டில் 1906-ல் கல்கத்தாவில் மற்றொரு மாநாடு நடைபெற்றது. இவ்விரண்டு மாநாடுகளாலும் பாரதி தேசிய விடுதலை இயக்கத்தில் தீவிர வாதியானார் ; திலகரின் சீடரானார். "சுயராஜ்யம் எமது பிறப் புரிமை, அதை அடைந்தே தீருவோம்" என்னும் தாரக மந்திரத்தைத் தலைமேற்கொண்டு பாடினார். பாரதியின் வாழ்வில் 1905-ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். அவரின் தேசிய உணர்வின் வளர்ச்சிக்கும் விரிவுக்கும் இவ்வாண்டு அடிகோலிற்று.

தேசிய இயக்கத்தை வளர்ப்பவர்களில் மூவகையர் உண்டு. ஒருவகையார் தலைமை தாங்கி இயக்கத்தை முடுக்குபவர்கள். திலகர், கோகலே போன்றோர் இப்பிரிவினர். மற்றொரு வகையார் தலைமைக்கு உட்பட்டுத் தொண்டாற்றுபவர்கள். திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளியம்மை, வாஞ்சிநாதன் போன்றவர்கள் இதில் அடங்குவர். வேறொரு வகையர் தம் எழுத்தால் தேசத்திருப்பணி செய்பவர்கள் ; மகாகவி பாரதி இவ்வகையைச் சார்ந்த முதன்மை எழுத்தாளர். பாரதியின் பாடல்கள் விடுதலைத் தீயில் நெய்யாக வார்க்கப் பெற்றவை. "பாரதியாரின் பாட்டைக் கேட்டால் செத்த பிணமும் உயிர்த்தெழும். அடிமைப்பட்ட தேசம் ஐந்தே நிமிடங் களில் விடுதலைபெறும்" என்று வெள்ளைக்கார நீதிபதி பின்ஹே குறிப்பிட்டுள்ளான்.

பாரதியின் தேசியப்பார்வை தேசவிடுதலையை மட்டும் நோக்கிய தன்று. தேச விடுதலைக்கு எவை எவை தடையாக உள்ளனவோ அவற்றையெல்லாம் சுட்டெரிப்பது. நம்நாடு அடிமைப்பட்ட தென்றால் அவ்வடிமைக்குக் காரணம் அச்சமே. இதனைப் பாரதியார் தெளிவாக உணர்ந்தார். பதவியில் இருப்பவர்கள் பதவி பறி போகுமே என அஞ்சினர்; செல்வர்கள் செல்வம் தொலையுமே எனக் கவன்றனர். ஏதுமற்றவர்கள் உயிர் போகுமே என நைந்தனர். இந்த அச்சம் நாட்டை அடிமைப்படுத்தியவனுக்கு ஆதாயமாயிற்று. இம்மூல காரணத்தைப் பாரதி உணர்ந்து, அச்சம் என்பதனைத் தொலைக்க வேண்டும் என்று பாடினார். அவர் பாடல்களில் ஊடுருவி நிற்கும் பாவிகம் ஒன்று உண்டென்றால் அது அச்சம் வேண்டாமையே.

"இன்னல்வந் துற்றிடும்போது அதற்கு அஞ்சோம்
ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்"
—(எங்கள் நாடு)

"அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"
—(பாரத ஜனங்களின் தற்கால நிலைமை)

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன் வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போ தும்கை கட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப்பார்.
—(பாரத ஜனங்களின் தற்கால நிலைமை)

அச்சம் வேண்டேன் அமைதி வேண்டினேன்
—(விநாயகர் நான்மணி மாலை)

இத்தகைய இடங்கள், பாரதி நெஞ்சு பொறுக்குதில்லையே என்று குமுறிப் பாடிய இடங்கள்; புதிய ஆத்திசூடியின் முதற் பாட்டே "அச்சம் தவிர்" என்பது. உச்சிமீது வான் இடிந்து வீழ்ந்தாலும் அச்சமில்லை அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே என்று உரக்க முழக்கமிட்டார். பாரதியின் பாடல்களில் அச்சம் போக்குதல், பெரிதும் இடம் பெறுதலால் இது அவரின் அடிப் படைக் கொள்கை எனக் கருதலாம். நாட்டுப்பற்று என்பது

அடிமை வயலில்-அச்ச நிலத்தில் விளைவதன்று. ஆதலின் வீரம் மிக்க விளை நிலத்திலேயே விடுதலைப் பயிர் தழைக்கும் என்று கருதி அதற்கேற்ப மக்களின் நெஞ்சங்களை வளர்க்கப் பாடினர்.

நாட்டின் அடிமைக்கு மற்றொரு காரணம் ஒற்றுமையின்மை. ஒரு நாட்டின் விடுதலைக்கும் விரைந்த வளர்ச்சிக்கும் ஒற்றுமையைப் போன்ற ஆயுதம் உலகில் இல்லை. இதனைப் பாரதியார் பெரிதும் வலியுறுத்தினர். ஒற்றுமையை வலியுறுத்தும்போது சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் பாடினர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் தொடர்புடைய கோட்பாடுகள். ஒன்றில்லையேல் மற்றொன்று முழுமை பெருது. ஆதலின் சுதந்திரம் என்பது சமத்துவமும் சகோதரத்துவமும் இல்லையேல் பயன்படாது; கிடைக்காது என எண்ணினர். வந்தேமாதரம் என முழங்கிய பாடலில்,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என அறிவுரை பகன்ருர். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது போல உலகறிந்த தொடராக அமைந்துவிட்டது. ஒன்றுபட்டால்தான் வாழ்வு உண்டு என்று முடிவாகக் கூறிய இந்த அழுத்தநடையில் பாரதியின் கருத்து எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது.

வந்தேமாதரம் என்னும் பாடல், பக்கிம் சந்திரர் பாடலின் மொழி பெயர்ப்பாக இருந்தாலும் பாரதியின் பார்வையில் இப்பாடல், தனிவீறுகொண்டு அமைகின்றது. சமத்துவமும் சகோதரத்துவமும் இப்பாடலில் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே
ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ
சீனத்த ராய்விடு வாரோ—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி—ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ

இச் சரணங்கள், சமத்துவமும், சகோதரத்துவமும் பேசுவன. வேதியராஞலும் வேறு குலத்தவர் ஆஞலும் பாரத நாட்டில் மானிடப் பிறவி பெற்றுவிட்டால் சமத்துவம் உடையவர்கள், பிறவியிஞல் வேறுபாடு, வேறு எங்கு வேண்டுமாஞலும் இருக்கலாம். பாரத நாட்டில் இருக்கக் கூடாது; இருக்க இயலாது என்பது பாரதியின் சித்தாந்தம்.

"முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்" எவ்வளவு பெரிய சூளுரை. பாரதியின் தேசியக் கண்ணேட்டம் அத்வைதக் கண்ணேட்டம்; ஒன்று பரம்பொருள்; நாம் அதன் மக்கள் என்று சமபத்துறையில் அவர் பாடியது போல முப்பது கோடி மக்கள் இருந்தாலும் அவர்கள் ஒருவரே என வலியுறுத்திஞர். இவ்வுணர்வு அவரது பாடல்களில் எங்கும் அடிநாதமாக ஒலிக்கிறது.

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

இந்திய நாட்டின் உயிர் ஒன்று; சிந்தனை ஒன்று என்று பாடிய பெருங்கவிஞர் பாரதியார். இத்தகைய தேசிய உணர்வினை நாட்டு மக்களிடைப் பரப்பிய முதற் கவிஞர், முதல் எழுத்தாளர் பாரதியாரே ஆவார். இந்திய தேசியம் என்பது விரிந்தது; பரந்துபட்டது. இப் பரப்பில் ஒருமை காண எண்ணியவர் பாரதியார். இந்தியத்தை நினைத்தால் இத் துணைக்கண்டத்தில் பல்வேறு மொழியும் பல்வேறு சமயமும் பல்வேறு நாகரிகப் பண்பும் இருத்தல் உணரலாம். இது ஒரு பன்மலர் மாலை; இம்மாலையில் பூக்கள் பலவாக இருந்தாலும் மாலை என்ற உணர்வு மேலோங்க வேண்டும் என்பது பாரதியின் வேட்கை; இதனையே அவரின் இந்திய தேசியம் வெளிப்படுத்தியது.

"புத்தன்மொழி எங்கள் அன்னைமொழி" என்று புத்தனின் போதனைகளைப் பாரதத்தாயின் வேதமொழியாகக் கண்டார்.

ஆத்தி சூடி இளம்பிறை யணிந்து,
மோனித் திருக்கு முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே''

சமய ஒற்றுமையில் இந்திய தேசியம் காணவிழைந்த பாரதியின் உள்ள வெளிப்பாடே இவ்வாறு பாட்டாகியுள்ளது.

இந்திய தேசியத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைப்பது ஒற்றுமையின்மையே.

கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடி என்ருல் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை என்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவோர்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்

இங்குச் சுட்டப்பெறும் நிகழ்ச்சி மிகமிகச் சாதாரணமானது. பாம்புக்குத் தலை ஐந்தா? ஆரு? இந்த விவாதத்தில், பகை. இப்பகையால், குடும்பப் பிளவு. இச் சாரதாரண நிகழ்ச்சியைக் காட்டியே இந்த நாடு எவ்வளவு பின்னிட்டுள்ளது என்று சிந்திக்க வைக்கின்ருர்.

பாரதியின் தேசியப் பார்வையில் மற்ருென்று, நாட்டில் அறியாமை மிகுந்திருப்பதைத் தொலைக்க வேண்டும் என்பது.

கஞ்சி குடிப்பதற் கிலர்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்

இந்த அடிப்படை அறிவுவந்தால், விடுதலை வேட்கை தோன்றும் என்பது பாரதியின் சித்தாந்தம். வயிற்றுப்பசி ஏன் என்ற கேள்வி தோன்றிவிட்டால் நாட்டுப்பிரச்சனைகளுக்கு முடிவு வந்துவிடும்.

ஏன் என்ற கேள்வி எழ வேண்டிய இடம் எது என்பது பாரதி யாருக்குத் தெரிந்திருந்தது. இக்கேள்வியில் தேசிய விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்குத் தெளிவாக இருந்தது.

இந்திய நாட்டில் தேசியக்கவி என்று மதிக்கத்தக்க பெருமை பாரதிக்கே உரியது என்றால் அது மிகையாகாது. நமக்குத் தொழில் கவிதை என்று தொழிலாளியாகப் புறப்பட்ட பாரதி, அத்தொழில் பயன்பட வேண்டிய இடம் நாட்டிற்கு உழைத்தலே என்று எண்ணினார். இவ்வெண்ணம் அவருடைய பாடல்கள் முழுவதும் ஒலிக்கின்றது. "வீரசுதந்திரம்", "இனிய சுதந்திரம்" என விடுதலையை வீரம்மிக்கதாகவும் இனிமை நிறைந்ததாகவும் பாடினார். சுதந்திரப் பெருமை, சுதந்திரப் பயிர், சுதந்திரதாகம், சுதந்தர தேவி, சுதந்திரப்பள்ளு என்னும் தொடர்கள், பாரதியின் வேட்கைத் தொடர்கள்; விடுதலை பெறுவதற்கு முன்பே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று" எனச் சுதந்திரம் அடைந்ததாகப் பாடிய இலட்சியக் கவிஞர் அவர். சுதந்திரத்தால் என்ன பயன் ? பாரதி குறிப்பிட்டார், "எல்லோரும் சமம்" என்று.

எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பது
உறுதியாச்சு.

பாரதி விரும்பிய சுதந்திரம் இதுவே. எல்லாரும் இல்லை உடையாரும்இல்லை என்ற பொதுவுடைமை உணர்வே இவரிடம் இவ்வாறு வெளிப்பட்டது. இச்சுதந்திரம் வந்து விட்டால் நாம் யார்க்கும் அடிமை இல்லை. இது எல்லாரும் கூறுகின்ற சுதந்திரம். இதற்கு மேலும் ஒருபடி சென்று ஆன்மிகத்துறைக்கு அடிப்படையிடுகின்றார் "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று உறுதி மொழி எடுக்கின்றார். யாருக்கும் அடிமை இல்லாதநிலை, உலகியல்; பரிபூரணனுக்கே அடிமையாகின்ற நிலை ஆன்மநிலை. இவை இரண்டும் கலந்த வாழ்வியலே அவர் விரும்பிய தேசிய வாழ்வு.

அடிமை எந்தக் கோணத்திலிருந்தாலும் பாரதி வெறுத்தார். "பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை"—இவ்வாறு

பாடியவர் பாரதி ஒருவரே. இந்த விடுதலை வருமானல் "சரிநிகர் சமானமாக" வாழலாம் என்று சமத்துவம் நிலை நாட்டினர்.

பாரதி புதுயுகம் படைத்த கவிஞர். "சுவை புதிது பொருள் புதிது வளம்புதிது சொற்புதிது சோதிமிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மாகவிதை" பாரதியின் கவிதை. சுவை, பொருள், வளம், சொல் ஆகிய இவற்றில் பாரதி புகுத்திய புதுமை என்ன? அப்புதுமையே தேசியம் என்னலாம். "பக்திசுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிஞர் சேக்கிழார் என்பர். பாரதியோ தேசியத்தினை, வீரம் ததும்பப்பாடிய புரட்சிக் கவிஞர். இவருடைய தேசியப் பார்வையில் அச்சமின்மை, ஒற்றுமை, அறிவு மூன்றும் நாட்டில் நிலைக்க வேண்டும். இதற்காகப் பாடிய அவர் மகாகவி. அவருடைய நூற்ருண்டு விழாவில் பாரதியைப் படிக்கும் நிலைமாறி ஆராயும் நிலைவளர வேண்டும். இவ்வாய்வு, வளரும் இந்தியத் திற்குத் துணையாக வேண்டும்.

பாரதி: குவெம்பு—ஓர் ஒப்பீடு

செ. இராமசாமி

கன்னடத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

எந்தவொரு கவிஞன், மனிதனையும் அவன் பிரச்சனைகளையும் பாடுகின்றானோ, சூழ்நிலை கற்றுத்தந்த அநுபவங்களைக் கவிதை யாக்குகிறானோ, சமுதாயத்தில் உயர் எண்ணங்களுக்குத் தன தெழுத்தை வித்தாக்குகிறானோ, மனிதகுல நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் கவிதையை உரமாக்குகிறானோ அந்தக் கவிஞனை 'மக்கள் கவிஞன்', 'மக்கள் சார்புடைய கவிஞன்' எனப்போற்றி மகிழலாம். அந்நோக்கில் கவிஞன் சமுதாயத்தின் ஒரு பொறுப்புமிக்க அங்கத்தினனும் ஆகிறான். தமிழகம் இருபதாம் நூற்றாண்டில் அப்படிப்பட்ட பொறுப்புமிக்க மக்கள் கவிஞர் சிலரைப் பெறும் பேறு பெற்றிருக்கிறது. அக்கவிஞர்களைப் பாரதி, பாரதிதாசன், பட்டுக் கோட்டை என வரிசைப்படுத்தலாம். பல பொருள்களைப் பாரதி பாடியிருந்தாலும், அன்றைய மிகப்பெரிய பிரச்சனையான விடுதலைப் போராட்டம் அவரது கவிதைகளை மிகப்பெரிய அளவில் ஆக்கிர மித்துக் கொண்டது. பாரதிக்குப் பிறகு வந்தவர்கள் பாரதியைக் காட்டிலும் அழுத்தமாகச் சமுதாயப் பிரச்சனைகளை அணுகியிருந் தாலும் பாரதியும் சமுதாயச் சீர்கேடுகளைச் சாடியிருக்கிறார். இலக்கி யத்தின் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கும்எழுத்தாளர் அரிது; அப்படிப்பட்ட அரிய எழுத்தாளர்களுள் கன்னடத்துக் குவெம்புவும் ஒருவர். குவெம்பு என்கிற கே. வி. புட்டப்பா, எழுச்சிமிக்க கவிஞர்; ஆற்றல் மிக்க நாவலாசிரியர்; கன்னடத்து ஷேக்ஸ்பியர்; சிறந்த அறிஞர்; பேராசிரியர்; பல்கலைக்கழகத்துத் துணைவேந்தர்- இப்படிப் பல துறைகளின் வாயிலாக மொழி, நாடு, ஒருமைப்பாடு இவைகளுக்காகத் தம் வாழ்க்கையைத் தேய்த்தவர் என்பதைக் காட்டிலும் அர்ப்பணித்துக் கொண்டவர் என்றால் சாலப் பொருந்தும்.

பாரதியின் தேசிய கீதங்களையும் கன்னடத் தேசியக் கவிஞர் குவெம்புவின் தேசியகீதங்களையும் ஒப்பிடுவதுதான் இக்கட்டுரையின் நோக்கமென்றாலும், பாரதியின் தேசிய கீதங்களில் காணும் சில முரண்பாடுகளைப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன்.

ஒரு கவிஞன் தன் வாழ்நாளின் பல காலகட்டங்களில் படைத்த இலக்கியங்களிலே முரண்பாடுகள் தென்படுவது இயல்பு. அது அவன் வளர்ச்சியாகவும் இருக்கலாம்; இருமை நிலைமை யாகவும் இருக்கலாம்.

பாரதியின் கவிதைகளிலே சுமார் ஐந்தில் ஒரு பங்கு தேசிய கீதங்களெனக் கூறலாம். இவைகளுள், பாரத நாடு பற்றியும், ஒருமைப்பாடு பற்றியும், தமிழ் பற்றியும், தமிழ்நாடு பற்றியும், நாட்டுத்தலைவர்கள் பற்றியும், நாட்டு மக்கள் பற்றியும் வடித்துள்ள கீதங்கள் அடங்கியுள்ளன. நாட்டையும், நாட்டுச் சிறப்பையும், மக்களையும் பாரதி நோக்கும் பார்வை சனாதனமானது. பாரதிக்கு நாடு என்றால் ஆரிய கண்டம்; பாரத மக்கள், ஆரியர்; பாரதத்தின் சிறப்புகளோ, வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள்தாம். நாட்டை மதத்தின் வாயிலாகவும் நாட்டுச் சிறப்புகளை மதம் சம்பந்தப் பட்ட கதை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் நோக்கும் பாரதியார்,

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே

என்றும்,

இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்

என்றும் சமதருமம் பேசி மகிழ்கிறார். மூடநம்பிக்கைகளைச் சாடு கிறார் பாரதி.

மந்திரத்திலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வதுண்டோ

என்று எச்சரித்து விட்டு, தமிழ்த்தாயை 'ஆதிசிவன் பெற்று விட்டான்' என்று கதையும் சொல்லுகிறார்; 'சதாகாலம் சிவோஹம் என்று சாதிப்பாயோ' என்றும்,

நிறுத்து வண்டி யென்றே—கள்ளர்
நெருங்கிக் கேட்கை யிலே—எங்கள்
கறுத்த மாரியின் பேர்—சொன்னால்
காலனும் அஞ்சுமடா

என்றும் போதிக்கிறார்;

'சாதிகள் இல்லையடி பாப்பா' (ஜாதி மதங்களைப் பாரோம்-உயர் ஜன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்) என்னும் பாரதியார்,

வேத மறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவருமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்
பண்டங்கள் விற்பவன் செட்டி—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி

என்று கூறிச் சாதிப் பாகுபாட்டை நிலை நிறுத்தவும் பார்க்கிருர்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'

என யதார்த்தமாக முழங்கும் பாரதி,

பாடுபடல் வேண்டா; ஊனுடலை
வருத்தாதீர்; உணவியற்கை கொடுக்கும்;
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல்
கண்டீர்

எனப் பிற்போக்குத் தத்துவங்களையும் தெளிப்பது வியப்பாக இருக்கிறது.

பாரதியின் பரம்பரைப்பற்றும், ஆரிய தர்மத்தின்பாலுள்ள காதலும்தான் இம்முரண்பாடுகளுக்குக் காரணமெனக் கூறலாம். இதுபோன்ற சில முரண்பாடுகள் குவெம்புவின் கவிதைகளிலும் இல்லாமலில்லை; ஆனுலும், மதம், உருவ வழிபாடு சம்பந்தமாக அவருக்கு எந்தப்பிரமையும் இல்லையென்று தெளிவாகத் தெரிகிறது.

பேய்களும் உலவாத மலைகளின் உச்சியிலே
எரிகின்றன இருளிலும் தீபங்கள் வரிசையிலே
பட்டணத்து ஏழைகளின் குடிசைகளிலோ
தின்பதும் படிப்பதும் அகல்விளக்கின் சுடரினிலே

மலைக்கோயில்களில் வீணுக எரியும் விளக்குகளைச் சுட்டிக் காட்டுகிருர் குவெம்பு.

'உயிரற்ற கற்களின் முன்பு அழுது புலம்பியது போதும்' என்று உருவ வழிபாட்டை மூடநம்பிக்கையென்று சாடுகிருர்.

பாரதி ஒரு எழுச்சிமிக்க புரட்சிக்கவிஞன் என்பதில் ஐயமில்லை. மனத்தின் அடித்தலத்தில் அன்பைச் சுமக்கும், மனித இனநலப் பற்றுடையவா். உணர்ச்சிமிக்க கருவிற்கு அவர் எடுத்தாளும் சொற்கள் வெடிகுண்டெனக் காத்திருக்க, சந்தம் கொடிமின்னலென

அதை உய்ப்பிக்க, அங்கே அவர் கவிதையிலே ஓர் எரிமலேயே வெடிக்கிறது. புதுக்கருத்துக்கள் வாயிலாகத் தமிழிலக்கியத்திற்குப் புத்துணர்ச்சியைத் தந்து அடிமைத்தனத்தைத் தலேவிதியென்று ஏற்று உழன்று கொண்டிருந்த தமிழரை-இந்தியரை எழுச்சியடையச் செய்து புரட்சிப் பெருநெருப்பிற்கு அக்கினிக்குஞ்சாகத் திகழ்ந்தவர்-ஒரு தலேமுறையின் விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதி.

குவெம்புவின் கவியாற்றலுக்கு அவர் படைத்த 25,000அடிகளேக் கொண்டு விளங்கும் இராமாயண தரிசனம் என்னும் காவிய வெள்ளமே சான்று.

பாரதியும், குவெம்புவும் நாட்டைப் பாடியுள்ளனர், நாட்டு மக்களின் ஒருமைபாட்டைப் பாடியுள்ளனர், தங்கள் வாழ்வின் மூச்சாகக் கருதிய மொழியைப் பாடியுள்ளனர்.

செப்புமொழி பதினெட் டுடையாள் எனிற்
சிந்தனே ஒன்றுடையாள்

எனப் பாரதத்தாயைப் பாரதி பாடிய வரிகள் பாரதியையும் குவெம்புவையும் ஒப்பிடும்பொழுது உயிர் பெறுகிறது.

பொன்னேப் பாடிய்வர்களேயும், தன்னேப் பாடியவர்களேயும் தமிழறியும். ஆனல் தமிழைப்பாடியவரும், தமிழ்மண்ணேப் பாடியவரும் பாரதிதான். இமயமுதல் குமரிவரை மண்ணே அன்னேயாகப் பாவித்துப் பாடினார்.

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும் என்போம்

என்றும்,

'தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது இந்நாடு, 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்றும் போற்றுகிருர். பாரத நாடு, பாரத தேசம், எங்கள் நாடு, பாரத மாதா, எங்கள் தாய் முதலிய பாடல்களில் இந்நாட்டுப் பெருமைகளேப்பாடி, பாமரர் நெஞ்சிலும் உணர்ச்சி கிளர்ந்தெழச் செய்திருக்கிருர்.

பாரதமண்ணே 'அன்னே பாரதமாத'வாக உருவகப்படுத்திப் பார்ப்பது இந்திய இலக்கியத்திலேயே காணும் ஓர் ஒற்றுமை. குவெம்பும் இதற்கு விதிவிலக்கல்ல. குவெம்புவின் நாட்டுப்பற்றைப் பின்வரும் வரிகள் உணர்த்தும்:

நாடு என்னுடையது, என் நாடு
என்றுதவனின் இதயமிடுகாடு
தொலைதேசம் சென்றாலும், சமயத்தில்
நினைந்து நினைந்துவக்காத
ஒருவனிருந்தால் இவ்வுலகில்
இடமில்லையவனுக்குச் சொர்க்கத்திலே—வீர
சொக்கத்திலே

* * *

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

எனப் பாரதி தமிழ் மண்ணைப்பாடினுன் ; குவெம்பு,

ஜய பாரத்தாயின் தவச்சேயே
ஜய ஹே கரு நாடகத்தாயே

எனப் பாரதத்தாயின் தவப்புதல்வியாகக் கருநாடகத்தைப் போற்றுகிருர்.

விடுதலை உணர்ச்சியைத் தூண்டும் சில பாடல்களிலும் இவ் விரு பெருங்கவிஞர்களில் ஒற்றுமையைக் காணலாம்.

பாரதியின் சுதந்திரப்பள்ளுப் பாடலின் கருவைக் குவெம்புவின்,

பறை சாற்றி வா சுதந்திரத்தை எல்லோருக்கும்
பறை சாற்றி வா சமத்துவத்தை எல்லோருக்கும்
பறை சாற்றி வா நற்பண்பை எல்லோருக்கும்
எல்லா உலகத்து எல்லா மகிழ்வையும்
எல்லோராலும் எல்லோரின் உயர்வை, வாழ்வை.

என்னும் பாடலிலும் காணலாம்.

பாரதியின் விடுதலையெனும் பாடலின் கருத்தை,

முடிவுற்றதோ ஒவ்வொருவன் கருவத்தின் காலம்
இது அனைவருக்கும் காலம்
'சர்வோதயம்', சர்வோதயம்'
சர்வோதயமே யுக மந்திரம்
சர்வோதயமே சுதந்திரத்திருத் தந்திரம்
உயர்வில்லை தாழ்வில்லை
சர்வ சமத்துவ சாம்ராச் சியமடா

எனும் குவெம்புவின் வரிகளில் காணலாம்.

போனுல் போகட்டும் தலை பறந்து
வீழட்டும் உடல் உதிரம் சொரிந்து
தாய்த்திரு நாட்டிற்குப் போர் புரிந்து

எனப்போர் முரசு கொட்டுகிறுர் குவெம்பு.

இன்றே நாளையோ அடிமையாண்டாளுக வேண்டும்
என்றின்றே கொதித்தெழுங்கள் நாளையெனப்போற்று

எனப்போராட்ட உணர்வைத் தூண்டும் குவெம்பு வெள்ளையரை மட்டுமில்லை ஆளும் வர்க்கத்தையே நமக்குப் புரிய வைக்கிறுர்.

கறுப்பரோ, வெள்ளையரோ, எவராளுல் என்ன சாம்ராச்சியம் எப்போதும் உழவனைச்சுரண்டும் விஜய நகரமோ? முகலாயராட்சியோ? வெள்ளையரோ? என் குருதிக்கு எல்லோரும் ஒட்டுணிகளே.

கறுப்பனே, வெள்ளையனே, ஆளும் வர்க்கமே சுரண்டும் வர்க்கம் எனப் புரிந்து கொண்டவர் குவெம்பு. நாட்டின் முழு வருமானத்தையே, குடியிலும், வைபவங்களிலும், தோள் தின வெடுத்தால் போர்களிலும் வீணடித்து, மிச்சம் மீதியைப் புண்ணியம் தேடிக்கொள்கிறேம் எனக் கோயில்கட்டி, கல்வெட்டுக்களில் தம் பெயர் பொறித்துக் கல்லிலே வாழ முயற்சித்த மன்னர்களைத்தான் வரலாற்றிலே காண்கிறேம்; மக்கள் நெஞ்சிலே வாழ்ந்தவரை அல்ல. வெள்ளையன் சென்று விட்டால் மட்டும் போதுமா? மக்களாட்சி மலரவேண்டி முன்கூட்டியே பாடி வைத்தார் குவெம்பு.

குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றிலெழுந்தது பார் குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்

எனப் பாரதியும் மக்களாட்சிக்கனவை இரஷ்யப்புரட்சியின் பின்னணியில் காண்கிறுர்.

இந்நாட்டு மக்களையும் அவர் தன்மைகளையும் பாரதி நன்ருகவே புரிந்து கொண்டிருப்பது ‘நெஞ்சு பொறுக்குதிலேயே’ ‘நெஞ்சில் உரமுமின்றி’ போன்ற பாடல்கள் வாயிலாக அறியலாம்.

குவெம்பு இதே கருத்தை இப்படிச் சொல்கிறார்,

நம் நாட்டிற்கு என்ன வந்தாலென்ன?
முடிவிற்கு கம்யூனிஸம்மே வந்தாலும்
போடுவோம் அதற்கும் மூன்று நாமம்
அதன் தோளிலும் பூணூல் விழும்
அதற்கும் செய்குவோம் லிங்காதாரணம்
வியப்பதற்கில்லை சிலுவைக்கட்டினாலும்
முந்தா நேற்று வரை மேற்கத்துப் பறைச்சேரி
இன்று நந்தவனமாக நகைக்கும் ரஷ்யா

என ரஷ்யப்புரட்சியைப் பாராட்டும் குவெம்பு கர்ஜிக்க ரோமம் சிலிர்த்து.

இதுவரை படுத்துறங்கிய ஆசிய
இளைஞரே கொதித்தெழுங்கள், விழித்தெழுங்கள்;
கேளுங்கள்,

எனச் சுதந்திரப்போருக்கு அறைகூவல் விடுக்கிறார். பாரதியும் ஜாரின் வீழ்ச்சியையும், மக்களாட்சியையும் பாடியிருக்கிறார். 'அங்கே ஆகா வென்றெழுந்ததுபார் யுகப்புரட்சி' யென இங்கும் புரட்சிக்கு வித்திடுகிறார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

எனப் பாரதி தேமதுரத் தமிழோசையில் மயங்குகிறார்; குவெம்பு விற்கோ,

கன்னடமே சத்தியம்
கன்னடமே நித்தியம்
மற்றவையாவும் மித்தியம்

நெஞ்சு பொறுக்குதிலேயே எனும் பாடலில் பாரதி நாட்டு மக்களிடையே நிலவிய உட்பூசல்களை, மதச்சண்டைகளை, நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத்திறமுமின்றி வஞ்சனை சொல்லும் கயவர் களையும், அச்சமும், பேடிமையும் அடிமைச்சிறுமதியும் உச்சத்திற் கொண்ட உதவாக்கரைகளையும் கண்டு நெஞ்சு வெதும்பிப் பாடியுள்ளார். இப்படிப்பட்டவர்களெல்லாம் உளந்திருந்தி, ஒன்று பட்டு மேம்பட குவெம்பு பாடுகிறார்.

மாண்டவர் பேர்லுள்ளவரைத் தட்டியெழுப்பு
பூசலிடும் பாமரரைச் சேர்த்து இழைத்து
வயிற்றெரிச்சல் தீயிலே கண்ணீர் சொரிந்து
ஒன்றுபட்டு வாழும் வண்ணம் வாழ்த்து.

மகாகவிகள் இருவரும், ஒரு மனத்தினராய், பாரதத்தாயின் தவப்புதல்வர்களாகத் திகழ்கிறார்கள். பாரதி இன்று நம்மிடையே இல்லாவிடினும் அவர் எழுத்துக்கள் வாயிலாக நம்மிதயங்களில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். குவெம்பு, நம்மிடையே 77 ஆண்டுகள் நிறைந்தவராக, ஒளி குன்றா மாணிக்கமாக ஜொலித்துக் கொண்டிருப்பது இந்தத் தலைமுறை பெற்ற பெரும்பேறு.

பாரதியாரின் சிறுகதைகள்

டாக்டர் ஆறு. இராமநாதன்

'அனைத்திந்திய தேசீயத்தின் விடிவெள்ளி'[1] என்றும், 'தேசீய போராட்டத்தின் ஆஸ்தான கவி'[2] என்றும், 'சர்வதேசீயவாதி'[3] என்றும் இன்றைய ஆய்வறிஞர்களால் புகழப்படும் பாரதியார் அப்புகழ் மொழிக்கு ஏற்பவே வாழ்ந்து காட்டியவர். சொல்லொன்று செயலொன்று என்றில்லாமல் சொன்னதைச் செய்து காட்டும் செயல்வீரராக அவர் வாழ்ந்தார். மனித குலத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றும் தாய்நாட்டின்மீது அவர் கொண்டிருந்த காதலும் அவர் எழுத்துகளில் பளிச்சிடுகின்றன. நாடு விடுதலை பெற்றால்தான் மக்கள் மேன்மையடைய முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாக அவர் நாட்டு விடுதலைக்கு ஓயாமல் பாடுபட்டார். விடுதலைப் போராட்டத்திற்கு உழைப்பதற்காக மக்களை ஒற்றுமைப்படுத்தி வீறு கொண்டு எழச்செய்யும் முயற்சியில் தன் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தினார். எழுத்துகள் மக்களைச் சென்றடையும் நோக்கில் எளிய சொற்களையும் புதிய புதிய உத்திகளையும் கையாண்டார். கவிதையிலும் உரைநடையிலும் புதிய புதிய இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தினார். இலக்கியத்துறையில் அவர் செய்த மாற்றங்களும் அறிமுகங்களும் தமிழிலக்கிய வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

பாரதியாரை 'மகாகவி' என்ற அளவிலேயே மக்கள் அறிந்திருக்கின்றனர். அவர் சிறந்த உரைநடை எழுத்தாளர் என்பதை அறிந்திருக்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் அவர் கவிதைகளின் சிறப்பேயாகும். அவர் உரைநடைப் படைப்புகள் சிறப்பானவைதான் என்றாலும் அவர் கவிதைமுன் அவை தோற்று விட்டன. எனவேதான் அவர் உரைநடை மக்களிடம் செல்வாக்குப் பெறாமல் போய்விட்டது. ஆனால் பாரதியாரை முழுமையாக அறிய வேண்டுமானால் அவர் உரைநடைகளைப் புறக்கணிக்கக் கூடாது. அவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பாரதியாரின் பங்கு மகத்தானது. பாரதியார் தாகூரின் சிறுகதைகளைத் தமிழில் மொழி

பெயர்த்து வெளியிட்டதன் வாயிலாகவும் தாமே பல சிறுகதைகளை எழுதி வெளியிட்டதன் வாயிலாகவும் தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டார். இதனை ஆய்வாளர்கள் மனப்பூர்வமாக உணர்ந்து பாராட்டுகின்றனர்.[4] பாரதியார், சிறுகதைகளைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து வருமாறு :

> பொய்க்கட்டுக் கதைகளைக் காட்டிலும் உண்மையான கதைதான் அழகு.........நம் சாதாரண வாழ்விலும் ஓர் அதிசயம் இருக்கிறது. தினசரி எழுதி வைத்தால் அதைவிட அழகான கதை கிடையாது.[5]

பாரதியார் கூறியதாக யதுகிரி அம்மாள் குறிப்பிட்டுள்ள குறிப்பு இது. பாரதியார் தம்முடைய கட்டுரையொன்றில் தாம் எழுதும் சிறுகதைகள் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார் :

> பொதுவாக நான் கதைகளெழுதும் போதும் வெறுமே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமேயன்றி ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. தர்ம போதனைக்கு வியாசங்களெழுதுவானேன் ? கதையென்றெடுத்தால் கற்பனைப் புனைவையே அதில் நான் முக்கியமாகக் கருதுவேன். எனினும் என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன.[6]

பாரதியாரின் கதைகளைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறும் கருத்துகளும் இங்கு நோக்கத் தக்கன :

> பாரதியார் எழுதிய சிறிய கதைகள் சம்பவங்களை உள்ளவாறே குறிப்பனவாக இருக்கின்றனவேயன்றிச் சம்பவங்களின் உணர்வு நிலையைக் காட்டுவனவாகவில்லை. மேலும், அவர் எழுதியுள்ள கதைகள் ' கட்டுக்கதைகள் ' என்று வகுக்கப்படத் தக்க முறையிலமைந்தனவே [7]

என்று டாக்டர் க. சிவத்தம்பி அவர்களும்,

> அவை (பாரதியார் எழுதிய கதைகள்) சிறிய கதைகள் என்ற அளவில் நின்றுவிட்டனவே தவிரச் சிறுகதைகளாக உயரவில்லை[8]

என்று டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

பாரதியார் சுமார் நாற்பது சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை அனைத்துமே ஆய்வாளர்கள் குறிப்பிடுவதுபோல் வளர்ச்சி பெறாத கதைகள் என்று கூற இயலவில்லை. அவர் கதைகளில் வாழ்க்கைச் சம்பவங்களை உள்ளவாறே தொகுத்துக்கூறும் கட்டுரைகளையொத்தக் கதைகளும் காணப்படுகின்றன; கற்பனைப் புனைவுடைய கட்டுக்கதைகளும் காணப்படுகின்றன; பொருளமைப் பாலும் கலையம்சத்தாலும் முழுமை பெற்ற சிறந்த கதைகளும் காணப்படுகின்றன. அவருடைய சிறந்த சிறுகதைகளுக்குக் காந்தாமணி, துளஸீபாயி, ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ணகுமாரி போன்றவற்றைக குறிப்பிடலாம். இவற்றில 'ஆறில் ஒரு பங்கு' மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

பாரததேசத்தை அந்நியராட்சியிலிருந்து மீட்கும் போராட்டத்தில் சாதிமத பேதமின்றி அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதையும் விடுதலைப் போராட்டத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துவற்காக வென்றே பாரதியாரால் எழுதப்பட்ட கதை இது. பாரதியாரின் கொள்கைகளையும் ஆவேசமான கருத்துகளையும் இக்கதையில் காணலாம். மேலும் அவர் காலச் சமுதாயத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் இக்கதை பயன்படுகிறது.

இக்கதையின் சுருக்கம் வருமாறு:

"போலீஸ் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற ராவ்பகதூர், சுந்தரராஜுலு நாயுடு தன்னுடைய ஒரே மகளான மீனாம்பாளைத் தனது ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் கோவிந்தராஜனுக்கு மணமுடிக்க விரும்புகின்றார். கோவிந்தராஜன் பிரம்மசமாஜத்தைச் சார்ந்தவன். பிரம்மசமாஜம் என்பது பாரதியார் குறிப்பிடுவது போல் 'ஜாதிபேதம் இல்லை, விக்ரஹாராதனை கூடாது, பெண்களும் ஆண்களும் சமானமாக ஒத்துப் பழகலாம்' என்பன போன்ற நவீன கோட்பாடுகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.[9] இந்த அமைப்பில் அவன் தொடர்பு கொண்டிருப்பதை நாயுடு விரும்பவில்லையானாலும் அவனைத் 'திருத்தி' விடலாம் என்பது அவர் நம்பிக்கை. அவர் எண்ணம் இவ்வாறு இருக்க கோவிந்தராஜனும் மீனாம்பாளும் மனமொத்த காதலர்களாகப் பழகுகின்றனர். ஆனால் அவன் நாட்டுப்பணியில் ஈடுபட முடிவு செய்தபோது பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப்பிடிக்க முடிவு செய்கிறான்.

கோவிந்தராஜன் நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருப் பதை அறிந்த அவன் மாமா அவனுக்குப் பெண்தரும் எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொண்டு மீனாம்பாளை வேறொருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார் மீனாம்பாள் இத்திருமண ஏற்பாட்டை விரும்பாமல் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து தன் எண்ணத்தைக் காதலனுக்கு எழுதி விடுகிறாள்.

மீனாம்பாளின் இறுதிக் கடிதத்தைக் கண்ட கோவிந்தராஜன் அதிர்ச்சியுறுகின்றான். அவள் பிரிவை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் இறந்ததாக முடிவு செய்து அவன் துறவுக்கோலம் பூண்டு வட இந்தியாவில் சுற்றுகின்றான். அந்த நிலையிலும் அவன் விடுதலைப் பணியை மட்டும் மறக்கவில்லை இறுதியில் மீனாம்பாள் இறக்கவில்லை என்றும் அவள் தந்தை இறந்துவிடவே அவளும் வடநாட்டில் தேசப்பணி செய்து கொண்டி ருப்பதாகவும் அறிகிறான். இறுதியில் காதலர்கள் இணைகின்றனர்.''

இதுவே கதைச் சுருக்கம்,

நம் நாடு அன்னியர்களிடம் அடிமைப்பட்டதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றிப் சிந்திக்கிறார் பாரதி. நம்மிடையே காணப்படும் ஒற்றுமையின்மையே அடிப்படைக் காரணம் என்பதை உணர்கிறார்.

நம்மில் ஆறில் ஒரு பங்கு மக்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருக்கிறோம். அவர்களின் நன்மை தீமைகளில் மேல் சாதியினர் அக்கரை கொள்வதில்லை. பஞ்சத்தில் மடிந்து போகும் அவர்களுக்கு உதவுவதுமில்லை. அவர்களைப் புறக்கணிப்பதால் அவர்கள நம் நாட்டிற்குள் நுழைய முயலும் அந்நிய எதிரிகளை வரவேற்று அவர்களோடு சேர்ந்து கொள்கின்றனர். தீண்டாமையை ஒழித்து, பொருளாதார நிலையில் அவர்களை உயர்த்தி அனை வரும் ஒற்றுமையுடன் போராடினால்தான் நாட்டுக்கு விடுதலை கிடைக்கும். இவற்றை எல்லாம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியே 'ஆறில் ஒரு பங்கு' என்ற இக்கதையைப் பாரதியார் எழுதியுள்ளார். கதைப் பெயரே அவர் நோக்கத்தைத் தெளிவுபடுத்து கின்றது. கதையின் முகவுரையில் பாரதியார் கூறியுள்ள கருத்து இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது. அவர் முகவுரை வருமாறு:

> ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக் கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு

> தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது. இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும்.

பாரதியார் இக்கதையை பள்ளர், பறையர் முதலியோர்க்கு அர்ப்பணம் செய்துள்ளதையும் ஈண்டு எண்ணிப் பார்த்தல் நலம்.

கதைத்தலைவன் கோவிந்தராஜன் பாரதியாரின் பிரதிநிதியாகவே காணப்படுகிறான். இப்பாத்திரத்தின் வாயிலாக பாரதியார் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்துகின்றார்.

முதலில் கதைத் தலைவன் நவீன கோட்பாடுகளைக் கொண்ட பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவன் என்று அறிமுகப்படுத்துகின்றார். அந்த அமைப்பில் சேர்ந்த காரணத்தால் அவனுடைய சாதியார் அவனுக்குச் செய்த கொடுமைகளை அவன் துணிவோடு எதிர் கொள்வதாகக் கூறுகின்றார். இது அக்காலச் சமுதாயத்தைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

பிரம்மசாரிகளாலேயே விடுதலைப் போராட்டத்தில் சிறப்பாகப் பங்கேற்க முடியும் என்பது பாரதியார் கருத்து இதனாலேயே கதைத் தலைவனைப் பிரம்மச்சரிய விரதம் மேற்காள்பவனாகப் படைக்கின்றார். விடுதலைப்போருக்கு எத்தகையோர் வேண்டும் என்பதை,

> பாரத தேசத்தை இப்போது பிரம்மசாரிகளே ரக்ஷிக்க வேண்டும்........பிரம்மசாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று; இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். (ப-ம். 444.)

என்று கூறுகின்றார். குடும்ப வாழ்க்கை கடமையாற்றுவதற்குத் தடையாக இருக்கும் என்பது அவர் கருத்து. அதே நேரத்தில் சுதந்திரப் போராட்டத்தில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் பக்குவம் பெற்ற ஆணும் பெண்ணும் மணந்து கொள்வது தவறல்ல என்பதை இக்கதை முடிவால் தெளிவுபடுத்துகின்றார்.

"நான்கு இதழ்கள் கூடின. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது" (ப-ம். 467)

ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால், ஸ்வதந்திரம் தானே சித்தியாகும் (ப-ம். 451)

என்றகொள்கையைக் கதைத் தலைவன் வாயிலாகப் பிரகடனப் படுத்தும் பாரதியார், துறவியாக அலையும் அவனை அம் முயற்சியில் ஈடுபடுத்துகின்றார். கோசல நாட்டில் ஏற்படும் பஞ்சத்தைப் போக்கி மக்களுக்கு உதவிட லாலா லஜபதிராய் மேற்கொள்ளும் பஞ்ச நிவாரணப் பணியில் அவனைக் கலந்து கொள்ளச் செய்கிறார். தீண்டாமையை ஒழிக்க வங்கநாட்டில் அசுவினிகுமார தத்தர் மேற்கொள்ளும் முயற்சியில் பங்குகொள்ளும் ஆர்வமுள்ளவனாக அவனைப் படைத்துக் காட்டுகின்றார்.

உன்னால் எனது தாய்நாட்டிற்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? எழுந்திருந்து வா பார்ப் போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப் போகிறீர்களோ? அட பாப ஜாதியே, பாப ஜாதியே (ப-ம். 453)

என்று மக்களைப் பார்த்துச் சீறச் செய்கிறார்.

கல்வி நிறுவனங்கள் வாயிலாகவும் பஞ்ச நிவாரணப் பணிகள் செய்வதன் வாயிலாகவும் தங்கள் மதத்தினைப் பரப்பும் பாதிரியார் களையும் ஏழைகளின் துயரங்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலை யுறாத மடாதிபதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பாரதியார்,

மடாதிபதிகளும் ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஹிந்து ஜனங்கள் ஆனந்தமடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! என்று கூறிக் கதையை முடிப் பதைப் சான்றாகக் கூறலாம். நமது இரத்தம் நமது சதை, நமது எலும்பு, நமது உயிர் ஹிந்து ஸ்தானத்து ஜனங்கள்—ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப்பிணி யால் மாய்ந்து போகின்றவர் (ப-ம். 455)

என்று நெஞ்சு நெகிழ உள்ளக் குமுறலோடு கூறச் செய்கின்றார் கதைத் தலைவனை. சுதேசத்தலைவர்கள் மீது ரிப்போர்ட் எழுதி

'ராவ் பகதூர்' போன்ற பட்டங்களை எளிதில் வாங்கும் கீழ்த் தரமான போலீஸ் அதிகாரிகளைக் கேலி செய்யச் செய்கிறார் (ப-ம். 440)

இவ்வாறு கதைத் தலைவன் கோவிந்தராஜன் பாரதியாரின் பிரதி பிம்பமாகவே படைக்கப்பட்டுள்ளான் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் ஒருங்கிணைக்கும் பாரதியின் போக்கினை இக்கதையும் தெளிவுபடுகித்துன்றது. மீனாம்பாள் கோவிந்தராஜனுக்கு எழுதும் கடிதத்தில் காளிதேவி, பாரத மாதா ஆகியன ஒரே பொருளில் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம் (ப-ம். 450).

'ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் (கதை) எழுதும் வழக்கமில்லை' என்று பாரதியாரே கூறியிருந்தாலும் கூட, உறங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டி யெழுப்பிச்சு தந்திரப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் செய்யும் மகத்தான நோக்கத்துடனேயே திட்டமிட்டு அவர் கதை எழுதி யுள்ளதை 'ஆறில் ஒரு பங்கு' தெளிவுபடுத்துகிறது. இதே கதைக் கருத்தை—அதாவது நாம் ஆறில் ஒருபங்கு மக்களைத தீண்டத் தகாதவர்களாக வைத்திருப்பதாலேயே நம்நாட்டை அந்நியரிடம் இழந்து விட்டோம் என்ற கருத்தை—விளக்குவதற்காகப் பாரதியார் 'பஞ்சகோணக்கோட்டை' என்ற கதையையும் எழுதியுள்ளார். மேலும், தான் உயிருக்கு உயிராகக் காதலித்த காதலனையே, திலகருக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டான் என்ற காரணத்திற் காகப் புறக்கணிக்கும் கதைத் தலைவியை 'ஸ்வர்ணகுமாரி' என்ற கதையில் படைத்துக் காட்டுகின்றார். பாரதியார் கதைகளின் சிறப்புகளுள் ஒன்று அவர் காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற மனிதாகளோடு அவர் படைக்கும் பாத்திரங்களைத் தொடர்பு கொள்ளச் செயவதாகும். லாலா லஜபதிராயோடு ஆறில் ஒரு பங்கு கதைத் தலைவனைத் தொடர்பு செய்வதை இங்கு சான்றாகக் காட்டலாம்.

இவ்வாறு கவிதைகள், கட்டுரைகள் வாயிலாக மட்டுல்லாது கதைகள் வாயிலாகவும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட மக்களைத் தயார்ப்படுத்தியவா் பாரதியார் என்பதை உணரலாம். அவர் கதைகளில் காணப்பட்ட தீவிரம்காரணமாகவே அவருடைய

'ஆறில் ஒரு பங்கு' கதையைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கி. பி. 1911-ல் தடை செய்தனர். தடை செய்ததற்கு அவர்கள் கூறிய காரணங்கள் என்ன என்பதைத் திரு. பெ. சு. மணி தமது 'பாரதி யாரும் தமிழ்ப் புலவர்களும்' என்ற நூலில் எடுத்துக்காட்டு கின்றார். அது வருமாறு:

> மதுரை திருநெல்வேலி மாவட்டங்களில் இதைப் படிப்போர் தொகை அதிகமாக உள்ளது.
>
> திருநெல்வேலி கொலை வழக்கில் (ஆஷ் கொலை வழக்கு) ஈடுபட்டோரின் கடிதப் போக்குவரத்தில் இக்கதையிலிருந்து மேற்கோள்கள் காட்டப் பட்டுள்ளன[10].

இச்செய்தி அவருடைய கதைகள் மக்களிடையே பரவி எழுச்சி யுறச் செய்தன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இதுவரை கண்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது நாம் பின்வரும் முடிவுகளுக்கு வர முடிகிறது.

பாரதியார் தலைசிறந்த உரைநடை படைப்புகளைப் படைத் திருந்தாலும் அவற்றையும் விட ஆற்றல் வாய்ந்த கவிதைகளை அவர் படைத்ததன் வாயிலாக அவருடைய உரைநடைப் படைப்புகள் புகழ் பெறாமல் போய்விட்டன.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பாரதியார் ஆற்றிய தொண்டினை நினைந்து போற்றும் ஆய்வாளர்கள் அவர் எழுதிய கதைகளை வளர்ச்சி பெறாத கதைகள் என்று சுட்டுகின்றனர். ஆனால் பாரதியார் கதைகளை ஆராயும்போது முழுமை பெற்ற சிறந்த சிறுகதைகளையும் அவர் எழுதியிருப்பதை உணர முடிகிறது.

தீண்டாமையை ஒழித்து, சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும் ஒற்றுமை உணர்வை வளர்க்கவும் உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்பிச் சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் களைத் தயார்ப்படுத்தவும் பாரதியார் திட்டமிட்டுச் சில சிறுகதை களைப் படைத்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

அவர் கதைகளுள் சில மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி விடுதலைப்போரில் அவர்களை உற்சாகமாக ஈடுபடத் தூண்டின என்பதைச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

குறிப்புகள்

1. க. கைலாசபதி, அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை- . 1970, ப-ம். 109.

2. கே. பாலதண்டாயுதம், இலக்கியத்தில் மனித நேயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்., சென்னை, 1975, ப-ம். 89.

3. க. கைலாசபதி, அடியும் முடியும், ப-ம். 109.
   கே. பாலதண்டாயுதம், இலக்கியத்தில் மனிதநேயம், ப-ம். 91.

4. டாக்டர் இரா. தண்டாயுதம், தமிழ்ச்சிறுகதை முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975, ப-ம். 21.

   டாக்டர் க. சிவத்தம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1960, ப-ம். 23.

5. யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள், அமுத நிலையம், சென்னை-14, 1980, ப–ம். 84.

6. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, ப-ம் 183.

7. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப-ம். 23.

8. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், ப-ம். 21.

9. பாரதியார் கதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை-1, ப-ம்.

10. பெ. சு. மணி, பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும், பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, 1981, ப-ம். 63.

கண்ணன் பாட்டில் பக்தியின் பலநிலைகள்

திருமதி சு. வள்ளியம்மாள்
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
காயிதேமில்லத் அரசு மகளிர் கல்லூரி, சென்னை-2.

இறைவனிடத்திலிருந்து பிரிந்து இவ்வுலகுக்கு வந்த ஆன்மா அப்பிரிவைத் தாங்க முடியாமல் தவித்து அவனை அடைதலை எண்ணி அன்போடு இடையறுது செய்யும் சிந்தனையே பக்தியாம்.

உலகத்து உள்ள பொருள் பிரம்மம் ஒன்றே; அதனையே மாயை பல பிரபஞ்சங்களாகப் பெருக்கிக் காட்டுகிறது. உலக உயிர்கள் அனைத்தும் பொம்மலாட்டப் பொம்மைகள். இறைவன் அவற்றின் உள்ளேயிருந்து அவற்றை இயங்கச் செய்கிருன் என்பது மெய் யுணர்ந்தோர் முடிபு. இதனையே கண்ணன் கீதையில், "எல்லாப் பொருட்களிலும் நான் இருக்கிறேன்"[1] என்று குறிப்பிடுகிருன்.

உலக உயிர்கள் ஒன்ருேடொன்று அன்பு கொள்கின்றன. இவ்வன்பில்லையேல் இன்பம் இல்லை. ஆனல் அன்பு கொண்ட உயிர்கள் அனைத்தும் ஒருநாள் பிரிந்தே விடுகின்றன. அப்போது இன்பத்துக்குக் காரணமாக இருந்த அன்பு துன்பத்துக்குக் காரணமாகிறது. எனவே, பிரியும் உயிரிடத்து அன்பு வைத்தல் பிழையுடைத்து; பிரியாத பொருளிடத்து அன்பு வைத்தலே பெருமையுடைத்து எனலாம்.

பிரியாத பொருள் இறைமை ஒன்றே. இவ்விறைமையுடைய பரமாத்மாவிடம் வைக்கும் அன்பை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டால் அதனின் வேறு பொருள் இல்லை என்பது புலப்படும். இவ்வன்பு முற்றுகிறபோது யாவுமே அவ்விறைமையேயாதலை உணர்தல் இயலும். அதுவரை, யாரிடமெல்லாம் துன்பத்துக்குக் காரணமான அன்பை வைத்திருந்தோமோ அவர்களும் கூட, அழியாத பரமான்மாவின் உருவமாகவே தோன்றுவார்கள். அத் தகைய பக்குவநிலை ஏற்பட்டு விட்டால் நம்மால் அன்பு வைக்கப் பட்டவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும், நம்மிடம் அன்பு வைத்தவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவலம் ஏற்படுவதில்லை.

---

1. *ஸ்ரீமத் பகவத் கீதை—தியானயோகம், சுலோகம் 30.*

ஞானி, ஒரே பரமான்மாதான் பற்பலவாகத் தோற்றமெடுத்துள்ளது என்று கண்டு கொள்கிறன். அவன் வெளியிலே தெரிகிற தோற்றத்தைப் பொய்த்தோற்றம் என்று ஒதுக்கிவிட்டு, உள்ளே இருக்கிற பரமான்ம உருவத்தை மட்டுமே கண்டு களிப்பான். பாரதி இத்தகைய மெய்ஞ்ஞானம் பெற்றவர் என்பதை,

முன்னோர்க ளெவ்வுயிருங் கடவுளென்றார்
முடிவாக அவ்வுரையே நான்மேற் கொண்டேன்
அன்னோர்கள் உரைத்ததன்றிச் செய்கை யில்லை [2]

என்று குறிப்பிடுவதால் உணரலாம்.

உலக உயிர்கள் அனைத்தும் கடவுளின் வடிவங்கள் என்ற உயரிய உள்ளம் கொண்டவர் பாரதி. எனவே அவ்வுயிர்களைக் கடவுளாகவே கண்டுவிட்டால், அவர்களிடம் கொள்ளும் அன்பு முற்றிலும் ஆண்டவனையே அடையும் என்பதை உணர்ந்தார்.

பாரதி பரம்பரைச் சைவராயினும்[3] தமிழ் மொழிப் பிரபந்தங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். வடமொழி, இந்தி, வங்காளம் ஆகிய மொழிகளின் பக்தி இலக்கியங்களைப் பயின்றவர். எனவே மனிதன் தன்னை அறிதற்குரிய அறிவொளியை நல்கி நிற்கும் கண்ணாகிய கண்ணனைத் தன் குலதெய்வமாகக் கொள்கிறார்.

எல்லா உயிர்களிலும் நானேயிருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ணபெருமான் [4]

என்று குறிப்பிட்ட பாரதியார், அக்கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை, காதலன், காந்தன், காதலி, ஆண்டான், குலதெய்வம் ஆகிய பதினன்கு கோணங்களில் காண்கிறார்.

சைவ சமயக் குரவர் நால்வர் இறைவனைத் தந்தை, தோழன், தலைவன், குரு எனக்கொண்டு வழிபட்டனர். தாயுமானவர் எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது இறைவனே என்று கண்டார். பாரதி கண்ணனைப் பல வேறு நிலைகளில் காண இக்கருத்துக்கள் உந்துதல்களாகியிருக்கலாம்.

---

2. *பாரதி அறுபத்தாறு—மரணத்தை வெல்லும் வழி, பா. 4*
3. *பாரதியார் கவிதைகள்—சுயசரிதை, முன்னுரை, பா. 20 : 2.*
4. *பாரதியார் கவிதைகள்—பாரத சமுதாயம், பா. 3 : 1.*

கண்ணன் பாட்டு பிறத்தற்கு முன்னமேயே கண்ணனைப் பற்றிய பல பாடல்களைப் பாரதி பாடிய போதிலும், கண்ணனின் நினைவு பாரதியின் நெஞ்சில் நிறைந்த காலத்தில் மலர்ந்தது கண்ணன் பாட்டே. பாரதி முருகன், வள்ளி முதலிய பல நிலைகளில் இறைவனைப் பாடியவர். ஆனல் வாழ்வு முழுவதும் திருவிளை யாடல்களை நிகழ்த்திய கண்ணனைக் குறித்த பாடல்களில்தான் பக்தியை முழுமையாக வெளிப்படுத்துகிறார் என்றால் மிகையாகாது.

பாரதியாரின் கண்ணன்பாட்டு இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைத் தெரிவிக்கிறது. தான் என்னும் தன்மையிழந்து இறைமையுடன் மானிடம் இரண்டற இணைதலே பக்தி நெறியில் உயிர்த்துடிப்பாக நிற்பது என்னும் உண்மையை உணர்த்துகிறது.

கண்ணன்—என் தோழன்

நட்பின் ஆழ்ச்சி, அகற்சி, உயர்வு ஆகியவற்றை விளங்க வைக்கும் கண்ணன்—அருச்சுனன் ஆகியோர் தம் உறவினை உள்ளத்தில் கொண்டவர் பாரதி. எனவே, தன்னையே அருச் சுனனாகக் கற்பனை செய்து தோழமைக்கு முதலிடத்தைத் தருகிறார்.

"இறைவனே எல்லோருக்கும் நண்பன்" என்பது சுவேதாஸ்வர உபநிடதம். சார்புகளின் துணையின்றி நெஞ்சம் நெகிழ்ந்து ஒன்றிய உணர்வால் கலந்து நிற்றலே தோழமையின் தனிச்சிறப்பு.

உண்மை நண்பன் தன் நண்பனின் வாழ்வில் இரண்டறக் கலந்து நின்று இன்னலகற்றுதல் போலவே கடவுளும் உண்மை அன்பனின் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் ஒன்றி நின்று அவனை ஒழுக்க வரையறைப்படுத்துகிறான். அதனை, சுபத்திரையை உடன் கொண்டு போக, நல்ல வண்ண மகளிர் வசப்பட, பாண்டவர் தம் காடுறை வாழ்வில் அவர் கலக்கமொழிக்க அழைத்தபொழு தெல்லாம் வந்து கண்ணன் அவர்க்கு உறுதுணையாகி நின்றமை யால் புலப்படுத்துகிறார் பாரதி.[5]

இறைவன் தன் அன்பனுக்கு என்ன பொருள் எப்போது வேண்டும் என்பதை உணர்ந்து கொடுக்கும் உயர் பண்பாளன்.[6] தன்னைச் சரணாகதியாக வந்தடைந்தவரைக் கணத்தில் காக்கும்

5. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தோழன், பா. *1 : 1—2 ; 2 ; 3 : 1—3, 6 : 2.*

6. „ „ „ „ பா. *4 : 1.*

இறைமை.[7] ஆன்மாக்களில் ஆணவம் தோன்றும்போது அதனை அடித்து வீழ்த்துவதும், கள்ளமோ பொய்மையோ கொண்டு நின்றால் அதனை அடியோடு அழிப்பதும் உண்டு.[8] இறைமை பேராற்றல் மிக்கது; பேரறிவுடையது. கண்ணன் இவ்வுலகுக்கு வந்ததே தீமையைத் தீர்த்து, நல்லவரைக் காத்தற்கே.[9] கண்ணனைத் தன் தோழனாகக் கண்ட பாரதி இவையனைத்தையும் அழகுற எளிமையுடன் விளக்கி நின்று, அவனை ஆழ்வார், "தின்னும் வெற்றிலையாகவும், பருகும் நீராகவும்" கண்டது போல 'மழைக்குக் குடையாகவும், பசி நேரத்துக்கு உணவாகவும்' காண்கிறார்.[10] இவ்வாறு தனக்கும், கண்ணனுக்கும் உள்ள நெருக்கத்தை அவன் இல்லையேல் சகத்தினில் தனக்கு வாழ்வேயில்லை[11] என்பதனால் வெளிப்படுத்துகிறார். இது பரமான்மாவை அவாவி நின்று அது கிட்டாவிடில் தனக்கு உய்தியில்லை என்றுணர்ந்த பக்குவப்பட்ட ஆன்மாவின் நிலையைக் காட்டுவதே.

கண்ணன்—என் தாய்

இறைவன் தன் மக்களாகிய உலக உயிர்களிடம் காட்டும் அன்பு எல்லையற்றது. அதைப் போன்றதே தாய் தன் குழந்தையிடம் காட்டும் அன்பும். எனவேதான், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று தாய் தெய்வமாக்கப்பட்டாள். தாயைத் தெய்வமாகக் கருத முடியுமானால், தெய்வத்தையும் தாயாகக் கருதல் இயலும். இவ்வடிப்படையிலேயே பாரதி கண்ணனைத் தாயாகக் காண்கிறார்.

பாரதி தன்னை, அத்தாயின் மடியில் தவழும் குழந்தையாகவே கருதுகிறார். கண்ணன் ஓங்கி உலகளந்த உத்தமன். வானம் அவனது கைகளாக விரிகிறது. மண் மடியாகிக் கிடக்கிறது.[12] கண்ணனைத் தாயாகக் காணும் ஞானக் குழந்தை பாரதி இயற்கைப் பொருட்களை எல்லாம் இறைமைத்தாய் தனக்களித்த விளையாட்டுப் பொருட்களாகவே கருதுகிறார்.[13]

---

7. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தோழன், பா. 1:3–4, 5:3–4.
8. ,, ,, ,, ,, பா. 5 : 1—2.
9. ,, ,, ,, ,, பா. 8 : 3—4.
10. ,, ,, ,, ,, பா. 3 : 4, 4 : 2, 6 : 1, 7 : 1—2, 9 : 2.
11. ,, ,, ,, ,, பா. 6 : 4.
12. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தாய், பா. 1 : 3—4.
13. ,, ,, ,, ,, பா. 1—6.

காக்கைச் சிறகினிலும் கண்ணனின் கரிய நிறம் கண்ட பாரதி, பறவைகள், விலங்குகள், ஊர்வன, சுறவுகள், மீன் வகைகள் ஆகிய அனைத்தையும் தன் நண்பர்களாகவே காண்கிறார்.[14] மெய்ஞ்ஞானம் பெற்ற பாரதி உலகப் பொய்ஞானத்தை எல்லாம் தான் கண்டு நகைக்கவே அவற்றைத் தன் தாய் புனைந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இறைவனை அன்னையாக வழிபடுவதால் காமம், குரோதம் முதலான தீமைகள் அனைத்தும் நம்மைவிட்டு விலகுகின்றன. உலக உயிர்கள் அனைத்தும் சகோதரர் என்ற உயரிய அனுபவம் உருவாக்கப்படுகிறது. கண்ணனைப் பெண்ணாக்கி, அன்னை வடிவிற் கண்டு உலகை அவளது மறுதோற்றமாகக் காணும், பாரதியின் அகமனத்தின் வளர்ச்சி போற்றற்குரியது. கண்ணனைத் தன் தாயாகக் கண்ட பாரதி, கற்பனை கடந்து, கடவுள் தன்மையிடத் தேயே சென்றுவிட்டார் எனலாம்.

கண்ணன்—என் தந்தை

இறைவனைத் தாயாகத் தந்தையாகக் காண்பது நம் இலக்கி யங்களில் மரபாக உள்ளதே. "எந்தையாய எம்பிரான்" என்பது திருச்சதகம்; "பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே" என்று கடவுளை விளித்தல் கிறித்துவ மரபு.

இவற்றை எல்லாம் தன் கருத்தில் கொண்டே பாரதி கண்ணனைத் தனிமனிதனின் தந்தையாகக் கண்டபின் அறிவுத் தந்தையாகவும் கண்டு வழிபடச் செய்கிறார்.

பொன்னைத் தூய்மைப்படுத்தப் புடமிடுவது போல இறைவன், தான் கரையேற்ற விரும்பும் நல்லவரை, மனம் நையும்வரை சோதனை செய்கிறான்.[15]

இறைவன் பெயர்கூற நாவு துணிவதில்லை. அவனை எங்கள் ஈசனென்றும், கண்ணனென்றும் அழைப்பர்.[16] அவனிடத்தில் முரண்பாடுகள் ஒருமைப்படுகின்றன.[17] அவன் ஊக்கமுடையார்க்கு உயர்வளிப்பான்[18] கீதையை மொழிந்த கண்ணன் இன்பம், துன்பம்

14. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தாய், பா. 8.
15. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தந்தை, பா. 2 : 4.
16. ,, ,, ,, ,, பா. 3 : 1–2.
17. ,, ,, ,, ,, பா. 4 : 3.
18. ,, ,, ,, ,, பா. 5 : 2.

என்ற பாகுபாடகற்றி, இரண்டனையும்—ஒருநிலையில்—சமநிலையில் கொள்ளவேண்டும் என்று உலக மக்களுக்கு உரைத்தவன் பாரதி. அவனைத் தன் தந்தையாகக் கண்டபோதும், அதனையே அவன் கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.[19] சீலம், அறிவு, கருமம் இவை சிறந்தவர் குலத்தினில் சிறந்தவர் என்ற கருத்துடையவன் கண்ணன்.[20] பற்றற்று சமநிலையில் நின்று இயற்றின் கருமம் யோகமாகிறது என்று குறிப்பிட்டு அதன் வழியில் நின்றவன் கண்ணன். எனவே, பாரதியின் தந்தையாகி நின்றபோதும் கண்ணனுக்கு வயது முதிர்ந்தும் வாலிபக்களை மாறவில்லை.[21] ஆண்டவனின் மாற்றுருவங்களாகி நிற்கிற அனைத்துயிர்களிடத்தும் அன்புவைக்குமாறு கூறுகிறான் கண்ணனும் தந்தை.[22]

கண்ணன் அண்டங்கடந்த ஐயன். அதனை உணர்ந்த பாரதி அவனை ஆன்றமைந்த அறிவு வழிச்செல்லும், மானிடத் தந்தை யாகக் கண்டமை மாண்புடைத்து.

கண்ணன்—என் சேவகன்

உலக உயிர்களுக்குத் தொண்டு செய்வது பெரும் பேறு. அதனையும் விளையாட்டாகவே செய்ய முடியும் என்று உலகுக்கு உணர்த்தத் தோன்றியதே கிருஷ்ணாவதாரம். உலகை ஆளும் மன்னனகத்தேயும், ஊரைத் துப்புரவு செய்யும் துப்புரவாளனகத் தேயும் உறைந்திருப்பவன் பரமனே. இருவர் செய்யும் தொழிலும் இறைவனுக்கே அர்ப்பணமாகின்றன என்பது கீதை உணர்த்தும் உண்மை. அதனை உள்ளத்திற் கொண்டே பாரதியார் கண்ணனைச் சேவகனாகக் காண்கிறார்.

எந்த வேளையில் யாவர் எவ்விடத்தில் எம்மை நினைப்பார் என்று எதிர்பார்த்துத் தன்னை வழிபடும் பக்தனின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வது இறைவனின் பொறுப்பாகிறது. எனவே கண்ணன் எளியனாகி, பாரதியின் சேவகனாகி அவருடைய தேவைகளை நிறைவு செய்கிறான்.

பாரதக்கண்ணன் "தன் ஆற்றலுக்குப் பாரதப்படையையே நடத்திச் சென்றிருக்கமுடியும். ஆனால் அவன் அருச்சுனனின் தேரோட்டியாதலையே தேர்ந்தான். இது கண்ணன் தன் வாழ்வு

19. *பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் தந்தை, பா. 6 : 2.*
20. *,, ,, ,, ,, பா. 8 : 2.*
21. *,, ,, ,, ,, பா. 9 : 1.*
22. *,, ,, ,, ,, பா. 10 : 2.*

முழுவதும் மக்கட் தொண்டனுகவே செயல்பட்டமையையே காட்டுகிறது'' என்கிருர் மகாத்மா காந்தி.[23] அவ்வாறே செய லாற்றுகிருன் பாரதியின் சேவகனுகிய கண்ணன். அவன் சேவகனுகி வந்தபோதும் தனக்குக் காசு பெரிதில்லே ஆன்மாக்களின் காதலே பெரிது[24] என்பதைப் புலப்படுத்துகிருன்.

பாரதியின் தெய்விகச் சேவகன் அவர் குடும்பத்தைக் கண்ணேக் காக்கும் இமையாக நின்று காக்கிருன்.[25] சாதாரண ஏவலனுய் நில்லாது பெண்டுகளேத் தாய்போல் ஆதரித்து நண்பனுய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்ப் பண்பிலே தெய்வமாய் நிற்கிருன்.[26] இறையின் அருட் பார்வையில் மூழ்கி நின்று கண்ணனும் சேவகன் தன் வீட்டில் கால் வைத்த நாள் முதலாய் அனேத்துச் செல்வங்களும் ஓங்கி வளர்ந்தமையை அழகுறக் கூறுகிருர் பாரதி.[27] கண்ணனே ஆளாகக் கொண்டு தான் கண்பெற்ற பேற்றைப் பாரதி புலப் படுத்துகிருர்.

கண்ணன்—என் சேவகன் என்னும் இப்பகுதி, செய்யும் தொழிலின் உயர்வை உணர்த்தியதுடன் இறைமையை மானிடத் துடன் ஒட்ட வைத்து வியத்தலே விரும்ப வைத்த பகுதி எனலாம்.

கண்ணன்—என் அரசன்

சேவகனுகி வந்த இறைமை அரசனுகியும் நின்று செயல்படும் ஆற்றலுடையது என்பதை வெளிப்படுத்த விரும்பிய பாரதி கண்ணனேத் தன் அரசனுகக் காண்கிருர்.

திருவுடை மன்னனேக் காணில் திருமாலேயே கண்டதாகக் கருதியவர் ஆழ்வார்கள். அவர்தம் கருத்துகளேத் தம்கருத்துள் கொண்ட பாரதி திருமாலின் மாற்று வடிவமாம் க்ண்ணனேயே திருவுடை மன்னனுகக் கண்டது பொருத்தமே.

இகல் வெல்லும் அரசர்க்கு இன்றியமையாதது காலம். அவ்வரசர்தம் வலி மிக்கதேயாயினும் அது கருதாது அதற்கு உரிய காலத்தையே கருதி அது வரும்வரை பகைமேற் செல்லார்

---

23. Hidu Dharma—M. K. Gandhi, P. 139.
24. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் சேவகன், அடி 38.
25. ,, ,, ,, ,, அடி 45
26. ,, ,, ,, ,, அடி 52-53.
27. ,, ,, ,, ,, அடி 57-60.

என்பார் வள்ளுவர்.[28] பாரதி தான் கண்ட கண்ணனும் அரசனும் ''பகைமைமுற்றி முதிர்ந்திடுமட்டிலும் பார்த்திருப்பதல்லாலொன்றும் செய்திடான்''[29] என்கிருர். ஏனையோர்தம் ஏச்சிற்கு நாணிலான்.[30]

எல்லையற்ற ஆற்றலையுடைய இறைவன் சாதாரண மனிதர்கள் பன்னெடுங் காலமாகச் செய்யும் வினைகளைச் சில விஞடிகளில் செய்து முடிப்பான் என்பதைப் பாரதி,

சக்க ரத்தை எடுப்ப தொருகணம்
தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்[31]

என்னும் தொடரால் விளக்குகிருர். மன்பதையில் மலிந்து கிடக்கும் மறத்தை மாற்றியமைத்து அறத்தை நிலை நாட்டுவது ஆளுவோன் கடமையே.

வேரும் வேரடி மண்ணுமி லாமலே
வெந்து போகப் பகைமை பொசுக்குவான்[32]

என்ற சொற்களால் பாரதி கண்ணன் உலக மக்களின் நன்மைக் காகவே தீமையை அடியோடு அழிப்பவன் என்பதை உணர்த்து கிருர். துரியோதனனை அழித்தமைக்குச் சினந்த உதங்கரிடம் கண்ணன் ''நற்பயிர் வளரத் தீமைதரும் களைகளைக் களைதல் போல உலக அமைதி ஏற்பட அதற்கு ஊறுகி நிற்கும் துரியோதனன் போன்ற தீயோரைக் களைந்தேயாதல் வேண்டும்'' என்று கூறிய தாகக் குறிப்பிடுவார் சுவாமி இராமகிருஷ்ணனந்தா.[33] இதுவும் கண்ணன் பகைமையொழித்தமைக்குரிய காரணம் கூறியது.

இறைவனின் இன்னருள் பெற்ருல் கூழாங்கல்கூட வைர மாவதுண்டு. அதுபோலக் கண்ணனின் அருள் பெற்ற பாரதி அவனுல்தான் மதியுடைமந்திரியாகவும், பெருஞ்செல்வம் பெற்ற வனுகவும், வேதநுட்பம் விளங்கியவனுகவும் மாறியதைக் கவினுறக் காட்டுகின்ருர். இறைவனே உலகத்து மறங்களை எல்லாம் அழிக்கும் மன்னவன் என்பதை உறுதிப்படுத்துகிருர் பாரதி.

---

28. திருக்குறள், 481, 485.
29. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் அரசன், பா. 1.
30. ,, ,, ,, ,, பா. 3 : 4
31. ,, ,, ,, ,, பா. 11 : 1-2.
32. ,, ,, ,, ,, பா. 10 : 1-2.
33. Sri Krishna-The Pastoral and King Maker, P. 119.

கண்ணன்—என் சீடன்

மனிதன் தன் குழந்தையிடத்து அன்பு கொள்வது போலவே தம் மாணவரிடத்தும் எல்லையற்ற பாசம் கொள்ளுதல் இயல்பு. அப்பாசமும் கண்ணனும் மாணவனுக்கே செல்லுதலைக் கருதிப் பாரதியார் கண்ணனையே தம் மாணவனாகக் காண்கிறார்.

கண்ணன் தன் பக்தன் உள்ளத்திலே கருவங்கொண்ட போதில் ஓங்கியடித்திடும் இயல்புடையவன். பாரதியின் உள்ளத்தில் செருக்கு மிகுந்தபோது அவரை நல்வழிப்படுத்த எண்ணித் தன் புகழ் மொழிகளால் அவரது புலமையை வியந்தும் அகப்பற்றுறச் செய்கிறான்.[34]

ஆன்மாவில் யான் என்ற அகந்தை இயல்பாய் முகிழ்வது. கண்ணனின் உரைகளும் அதனுடன் சேர்ந்து மேலும் மேலும் மிகுந்து "வெறும்வாய் மெல்லும் கிழவிக்கு அவலாயிற்று"[35] அகந்தையின் எல்லையில் நின்ற ஆசிரியர் கண்ணனும் சீடனின் நிலைக்கு இரங்கி,

முத்தனுக் கிடநான் முயன்றதோர் இளைஞன்
பித்தனென் றுலகினர் பேசிய பேச்சு

தன் நெஞ்சினை அறுத்ததாகக் குறிப்பிடுகிறார். கண்ணனின் போக்கால் பாரதியின் நெஞ்சில் அகந்தையும் மமதையும் ஆயிரம் புண்ணுற்றன.[36]

கண்ணனும் சீடனை நல்வழிப்படுத்தக் கருதி, தன்னுடன் தங்குமாறு வேண்ட அவன் தனக்கொரு தொழிலைக் காட்டுவதாயின் பாரதியுடன் தங்குவதாகக் கூறுகிறான்.[37] அதனை அளித்தும் அவனைத் திருத்தமுடியாத பாரதி வெகுண்டு பின் விழி நீர்சோரத் தன் தோல்வியை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறார்.[38]

கண்ணன் மீண்டும் வந்து தனக்கு ஒதுக்கப்பட்ட தொழிலைப் புரிந்து நன்மொழி கூறி நகைத்து மறைந்தான். பின்னர்

---

34. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் சீடன், அடி 24.
35. ,, ,, ,, ,, அடி 25-26.
36. ,, ,, ,, ,, அடி 71.
37. ,, ,, ,, ,, அடி 100-104.
38. ,, ,, ,, ,, அடி 130-135.

ஆசிரியரின் உள்ளத்தில் தோன்றி ஒன்று நிகழ்த்துவானுயினன். கண்ணன்-என் சீடன் என்ற பகுதியின் உயிர்நிலையே இங்குத் தான் உள்ளது.

> மகனே, ஒன்றையாக்குதல், மாற்றுதல், அழித்திடல்
> எல்லாம் நின் செயலன்றுகாண். தோற்றேன் என நீ
> உரைத்திடும் பொழுதிலே வென்ருய்;உலகினில் வேண்டிய
> தொழிலெலாம் ஆசையும் தாபமும் அகற்றிய புரிந்து
> வாழ்க நீ.[39]

என்று பாரதிக்கு உணர்த்துகிருன்.

கண்ணனைச் சீடனுய்க் கண்டதன் பயனுக அகந்தை ஒழிந்து பற்றற்றுக் கடமையாற்ற வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்திஞர் பாரதி. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் பாரதி கொண்ட உறுதி சிறிது சிறிதாக விரிந்து பரந்து செல்லுதலின் விளக்கமாகவே உள்ளது கண்ணன்-என் சீடன்.

கண்ணன் என்—சற்குரு

அறிவாகிய சுடர் ஒன்றுள்ளது; அதன் ஆடல்தான் உலகம் என்பது பாரதியின் கொள்கை.[40] கண்ணன் உலகில் அவதார மெடுத்து வந்தபோது நிகழ்த்திய வாழ்க்கையை ஊன்றிக் காண் போமாயின் அங்கு உணர்ச்சி மிகுந்திருத்தலைக் காணலாம். அது போலவே சற்குருவாகித் தோன்றிய போதும் தான் வடமதுரை யரசனுகி வாழ்ந்தமைக் கேற்ப உலகியல் இன்பங்களில் ஆழ்ந்து கிடப்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குகிருன்.[41]

எனினும் மனிதனின் புறத்தோற்றத்தைத் துணைக்கொண்டு எவரையும் எடைபோட்டு விடக்கூடாது என்று உணர்த்துவது போல அவன் கூறிய அறிவுரைகள் அமைந்துள.

கண்ணனுகிய சற்குரு, "தன்னை மறந்து விண்ணையளக்கும் அறிவு பெறுமாறு கூறுகிருன். அவ்வறிவு தோன்றும்போது உலகத்துள்ள பொருட்களுள் எவை எவை நிலைப் பொருட்கள், எவை எவை நிலையிலாப் பொருட்கள் என்று உணர்தல் இயலும்.[42]

---

39. *பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் சீடன், அடி 145-150.*
40. *பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் சற்குரு, பா. 12 : 4.*
41. ,, ,, ,, ,, பா. 5.
42. ,, ,, ,, ,, பா. 7.

சித்தத்திலே சிவம் நாடுவார், புறவுலகுக்கு இறுமாந்தவராகித் தோன்றிய போதிலும் அனைத்தும் ஆண்டவனின் திருவிளையாடல் களே என்று உணர்ந்து சோர்வகற்றிச் செல்வர்,[43] என்று ஞானியர் தம் நிலையை அழகுறக் காட்டி, பாரதியும் ஞானியாக வாழ்த்து கிறான்.[44]

வாழ்க்கைத் தத்துவத்தைச் சாறுபிழிந்து கொடுப்பது போலக் கண்ணனைத் தன் சற்குருவாகக் காணும் பாரதி தன் இறைமைத் தத்துவங்களை எல்லாம் சாருக்கி அவற்றைக் கண்ணனின் கூற்றாக வடிக்கின்றார்.

கண்ணம்மா—என் குழந்தை

குழந்தைகள் இறைவனின் தூதர்கள்; அவரிடத்துப் பெற்றோர் கொள்ளும் அன்பும் தூய்மையானது. ஆகவே எண்ணற்ற எழில் மிகு விளையாடல்களை இயற்றும் இறைவனையும் குழந்தையாகக் கண்டு பிள்ளைத்தமிழ் பாடும் பழக்கம் நம் மக்களிடையே பரவியது.

பித்தரே அனைத்துயிரும் கடவுளென்று
பேசுவது மெய்யானால் பெண்டிரென்றும்
நித்தநும தருகினிலே குழந்தை என்றும்
நிற்பனவும் தெய்வமன்றோ நிகழ்த்துவீரே[45]

என்றார் பாரதி. அதன் பயனே கண்ணனைக் கண்ணம்மாவாக்கிப் பின்னர்க் குழந்தையாகக் காணுதலும் குழந்தைமை இன்பத்தை எல்லாம் கண்ட பாரதி கண்ணம்மாவாம் குழந்தையைத் தன் கண்ணிற்கு ஒளி கொடுக்கும் பாவையாகக் காணுதலுமாம். தன்னு யிரையே அக்குழந்தையின் உயிராக்குகிறார். குழந்தையின் மழலை யிலே துன்பங்கள் தீர்வதையும் முல்லைச் சிரிப்பாலே தன் மூர்க்கந் தவிர்வதையும் எடுத்துக் காட்டுகிறார்.[46] சீர் பெற்று வாழ்வதற்கே கண்ணம்மாவைப் போல் செல்வம் பிறிதில்லை[47] என்றுணரு மளவுக்குப் பாரதி கண்ணம்மாவின் குழந்தமையில் ஆழ்ந்து போகிறார். சுருங்கக் கூறின் கண்ணம்மா—என் குழந்தை கவிதையின் அமுதச்சுவை அரசோச்சும் பாடல் எனலாம்.

---

43. *பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் சற்குரு, பா. 9:3-4.*
44. *,, ,, ,, ,, பா. 12 : 1.*
45. *பாரதியார் கவிதைகள்-சுயசரிதை-பாரதி அறுபத்தாறு, பா. 17:3-4*
46. *பாரதியார் கவிதைகள்-கண்ணம்மா-என் குழந்தை, பா. 8.*
47. *,, ,, ,, ,, பா. 10 ; 2.*

கண்ணன்—தீராத விளையாட்டுப்பிள்ளை

தவழ்ந்து வந்து, மழலை மிழற்றி அன்பு தந்த தெய்வக் குழந்தையாகி வந்த கண்ணன் வளர்ந்து செய்த விளையாட்டுக்கள் பாரதியின் உள்ளத்தில் தோற்றுவித்த பாடல்களே கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை. இப்பாடல்களில் கண்ணன் ஆயர் பாடிப் பெண்களிடம் குறும்பு செய்து விளையாடி நின்ற செய்திகளே பேசப்படுகின்றன. அவன் செய்யும் ஒவ்வொரு செயலும் பிள்ளைமையின்பத்தை நல்கி நிற்கும் பேரின்ப விளையாட்டுக்களாகவே நிற்கின்றன.

கண்ணன் பக்தர்களிடத்துச் செய்யும் சோதனைகள் அனைத்துமே ஆன்மாக்களுக்கு இன்பமளிப்பன என்பதையே இப்பகுதி சுட்டுகிறது.

கண்ணன்—என் காதலன்

ஆண்டவனை அடைய விரும்பிய மனிதன் தன் முரட்டுத்தனம் முதலானவற்றை விட்டு மென்மை, அமைதி முதலிய பெண்மைக் குணங்களையுடையனுதல் தோற்றப் பொலிவால் தெரிந்து கொள்கிறோம். கவிஞர்கள் பலரும் தங்களைக் காதலியராக்கி இறைவனைக் காதலனுக்கிப் பல பாடல்களைப் பாடினர். புராதன யகூதி அற நூல்களில், சாலமன் கீதம், கீதங்களுக்குள் மேலான கீதம் என்ற நூல் படிப்போருக்குக் காதல் கீதமாகவே தோன்றும்" என்பார் ஆசிரியர் H. R. கிருஷ்ணன்.[48] இதுவும் உலகக் கவிஞர் பலரும் நாயகநாயகி பாவத்தைப் பயன்படுத்தியதையே காட்டுகிறது.

பாரதியும் முன்னர்ப் பல கவிஞர்கள் சென்ற அவ்வழியைப் பின்பற்றிப் பாடுகிறுர். பரமனை அடைய விரும்பிய ஆன்மா தூண்டிற் புழுவினைப் போல் துடித்துநிற்கிறது. அவனை அடைவதில் தடை ஏற்பட்டதும் கூண்டுக் கிளியாகி நோகிறது என்கிறுர். கட்டினின்று விடுதலை பெருத ஆன்மாவின் நிலையே இங்குக் கூண்டுக் கிளியாகக் கூறப்படுகிறது.[49]

உண்மை உறவாகிய இறைமையை விரும்பும் ஆன்மாவுக்கு ஏனைய உறவுகள் எல்லாம் துன்பஞ் செய்வனவே.[50] அவ்வான்மாவுக்குத் தன்னைச் சுற்றியிருக்கிற உலகத்தில் நாட்டம் செல்லுதல்

---

48. பாரதியுகம், பா. 187.

49. பாரதியார் கவிதைகள்-கண்ணன்-என் காதலன், பா. 1.

50. ,, ,, ,, ,, பா. 2.

இயலாது.[51] ஆனால் ஆண்டவன் தன் கடைக்கண் பார்வையை அருளினால் உலகம் முழுதும் தனக்கு இன்பஞ் செய்யவே தோன்றியது என்பதை உணர்ந்து கொள்ளும்.[52]

மேலும், கண்ணனும் காதலனை விரும்பிய தலைவியொருத்தி, தன் தோழியர் பலவாறு கண்ணனைப் பேசுவது கேட்டுச் சினந்து "எத்தனை பொய்களடி! என்ன கதைகள்"[53] என்று சலிக்கிறாள். உண்மையுணராத உயிர்களின் கற்பனைகளே இவை என்பதே பாரதியின் எண்ணமாயிருத்தல் வேண்டும். உலக ஒலிகளிலிருந்து ஒதுங்க விரும்பிய பக்குவப்பட்ட ஆன்மா அவற்றை எல்லாம் ஒதுக்கித் தனித்திருக்க விரும்புகிறது.[54] புரட்சிப் பெண்ணைக் கண்ட புரட்சிக் கவிஞன் பாரதி, "கண்கள் உறங்க வொரு காரணமுண்டோ கண்ணனை இன்றிரவு காண்பன் முன்னே" என்பது பக்குவமடைந்துவிட்ட ஆன்மா இறைவனை அடைவதில் கொள்ளும் தீவிரத்தையே காட்டுகிறது—உறுதிப்படுத்துகிறது.[55]

கடவுளையடைய விரும்பும் பக்தனுக்கு இடையிடையே சோதனை ஏற்படும் என்பதைத் தன் உள்ளத்தில் கொண்டு கண்ணனாகிய காதலனை அடைதற்கு இடையூறாக வேடன் தோன்றியதாகக் குறிப்பிடுகிறார் பாரதி.[56] எனினும் பாஞ்சாலிக்கு அருள் செய்த கண்ணன் நம்பியவர்களைக் கைவிடமாட்டான் என்பதை வற்புறுத்த வேடனைக்கண்டு அஞ்சிக் கண்ணா என அபயம் வேண்டி வீரிட்டதால், வேடன் மறையக் கண்ணன் அங்கு நின்றதாகக் கூறுகிறார்.[57] இப்பாடலும் இறைவனை நம்பினார் கெடுவதில்லை என்பதைச் காட்டுகிறது.

பாரதியாகிய தலைவி தன் தோழியைத் தூதனுப்பித் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு பணித்ததுடன் இறைவன் தன்னிடத்து மையலை ஏற்படுத்திப் பின்விட்டு நீங்குவது முறைமையன்று என்று கூறுகிறாள்.[58] மணிவாசகர் தன்னை ஏற்றுக் கொள்ளாத இறைவனிடத்துச் 'சிரிப்பிப்பன்' என்று கூறியது போல[59].

---

51. பாரதியார் கவிதைகள்—கண்ணன்—என் காதலன், 1 பா. 3-4,
52. ,, ,, ,, ,, 1 பா. 5—7.
53. ,, ,, ,, ,, 2 பா. 4.
54. ,, ,, ,, ,, 2 பா. 4 : 2.
55. ,, ,, ,, ,, 2 பா. 5 : 1.
56. ,, ,, ,, ,, 3 பா. 6 : 1.
57. ,, ,, ,, ,, 4 பா. 12.
58. ,, ,, ,, ,, 4 பா. 4 : 1.
59. திருவாசகம்—நீத்தல் விண்ணப்பம், பா. 49.

ஆற்றங் கரையதனில் முன்னமொரு நாள்எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்[60]

என்று கூறித் தன்னை இறைவன் இணைத்துக் கொள்ளுதற்குரிய இன்றியமையாமையைக் குறிப்பிடுகிறார்.

கண்ணனை மறந்து தான் வாழ்தல் இல்லை என்பதை "கண்ணன் முகமறந்து போனால் இந்தக் கண்களிருந்து பயனுண்டோ?"[61] என்று தன் தோழியிடம் குறிப்பிட்டு இறைவனன்றி இவ்வுலகில் ஆன்மாவுக்கு வாழ வழியில்லை என்பதைப் புலப்படுத்துகிறார்.

கண்ணனைக் கணவனாக அடைந்துவிட்ட ஆன்மா முழு அமைதி பெறுகின்றமையை,

பங்கமொன்றில்லாமல்—முகம்
பார்த்திருந்தாற் போதும்
மங்களமாகுமாம் பின்னோர்
வருத்த மில்லையடி[62]

என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

கண்ணம்மா—என் காதலி

நாயகன் நாயகி பாவம் என்பது இறைவனைக் காதலனாக்கித் தன்னைக் காதலியாக்கிப் பாடுவதேயாம். ஆனால் இறைவனைக் காதலியாக்கித் தன்னைக் காதலனாக்கித் தமிழிலக்கியத்தில் புதுமை செய்தவர் பாரதி. "காதலியாகப் பாடாதிருந்தால் பாரதி கண்ணன் பாட்டில் வெற்றியடைந்திருப்பாரென்பது ஐயமேயாம்"[63] என்று குறிப்பிடும் பேராசிரியர் கோவிந்தசாமி, தாகூர் ஓரிடத்தில் இறைவனைக் காதலியாக வருணிக்கிறார் என்ற செய்தியையும் தருகிறார்.[64] சூஃபி முறையில் பொதுவாகப்பாடும் பக்தன் காதலன்; இறைவனே காதலி என்பர்; இத்தகைய பாடல்கள் பாரசீக உருது மொழி இலக்கியங்களில் உள்ளன என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

---

60. *பாரதியார் கவிதைகள்-கண்ணன்-என் காதலன்*, 4 பா. 5.
61. ,, ,, ,, ,, 6 பா. 1.
62. *பாரதியார் கவிதைகள்-கண்ணன்-என் காந்தன்*, பா. 3 : 3—4.
63. *பாரதி கவித்திறன்*, ப. 62.
64. *பாரதி கவித்திறன்*, ப. 62.

இயற்கையுடன் இரண்டற இணைந்திருப்பவன் இறைவன்; அவனது மாற்றுருவமே உலகமெல்லாம் என்பதைக் கருதிய பாரதி கண்ணம்மாவின் சுட்டும் விழிச் சுடர்களாகச் சூரிய சந்திரரையும், அவள் விழிக்கருமையை வானக்கருமை என்றும், அவளணிந்த கருநீலப் புடவையில் பதித்த வயிரம் நக்ஷத்திரங்கள் என்றும் அவளது புன்னகையே மலரொளி என்றும் நெஞ்சினலையே கடலலை என்றும் அவள் குரலினோசை குயிலோசை என்றும்[65] கண்டு வியந்து நின்றமை உலகப் பொருட்களனைத்தையும் படைத்தவனின் பேரழகாகக் கண்டு வியந்தமையேயாம்.

அகத்துறையில் 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்னும் துறையைப் போலவே பக்தியிலும் நெறித்த திரையிலும் நீல விசும்பிலும், திரித்ததுறையில், சின்னக்குமிழ்களில், மேகக் கூட்டங்களில்[66] எங்கும் காதலியாம் கண்ணம்மாவின் கவின்மிகு முகமண்டலத்தைக் கண்டு நின்றமை பாரதியின் பக்தியின் முதிர்வையே சுட்டுகிறது. இறைவனோடு தனக்குள்ள உறவு பல பிறவி தொடர்புடையது[67] என்பதை முன்பு சீதையாகி, அருச்சுனனாகி, பிரகலாதனாகி, யசோதரையாகி இறைவனை அடைந்தமையைக்[68] குறிப்பிடுவதால் உணரலாம்.

பரமான்மா, சீவான்மா ஆகியவற்றின் தொடர்பை உணர்ந்து அதனை எய்தப் பெறுத ஆன்மா, பாடிப் பரவசமாய் நிற்கவே தவம் பண்ணியதில்லை[69] என்பதே பாரதியின் முடிந்த முடிபு.

இவ்வாறு ஒன்றையொன்று உணர்ந்து இணைந்துவிட்ட சீவான் மாவையும், பரமான்மாவையும் வலிந்து பிரித்தால் பயனின்றிப் போகும் என்பது,

பாயுமொளி நீ எனக்குப் பார்க்கும் விழி நானுனக்கு
தோயும் மது நீ எனக்குத் தும்பியடி நானுனக்கு[70]

என்னும் பாடலால் கூறப்படுகிறது.

---

65. பாரதியார் கவிதைகள்-கண்ணம்மா-என் காதலி, 1 பா 1, 2.
66. ,, ,, ,, ,, 2 பா 4; 5 பா 1 : 4.
67. ,, ,, ,, ,, 4 பா 4 : 2.
68. ,, ,, ,, ,, 4 பா 4 : 3-4, 5.
69. ,, ,, ,, ,, 5 பா 4 : 4
70. ,, ,, ,, ,, 6

பலவேறு வகையாகப் பக்திகொண்டு பரமனின் அன்பினை வேண்டிய பாரதி இறுதியில் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்து விட்டு என்னை அடைவாய்[71] என்ற கண்ணனின் வாக்குப் படியே தன் திறமை, தகுதி என்பனவற்றைக் கருதாது, பரம் பொருள் பரங்கருணையால் தன்னையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று சரணுகதியடைந்து கூறுவனவே கண்ணன்-என் ஆண்டாள், கண்ணம்மா-எனது குலதெய்வம் என்னும் பகுதிகளாக உள்ளன.

ஒவ்வோருயிரிலும் பிரமம் உறைகின்றது என்பதை உணர்பவன் அச்சத்தை ஒழித்து விடுகிருன் என்பது சுதோபநிடதம். அதை உணர்ந்த பாரதி,

உயிர்களெலாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்
பயிலும் உயிர்வகைமட்டும் இன்றியங்கும்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வங்கண்டீர்[72]

என்று துணிந்தனர். அத்துணிவைப் பயன்படுத்தியே அச்சமின்றித் தோழனுக, தாயாக, தந்தையாக, சேவகனுக, ஆண்டானுக, சீடனுக, சற்குருவாக, காதலனுக, காந்தனுக, காதலியாகப் பல நிலைகளில் கண்டு இறைமை தலைமையாகவும் அடிமையாகவும் செயல்படும்; எந்த நிலையில் இருப்பினும் தன் பக்தர்க்கு அருள் செய்வதே இறைமையின் இயல்பு என்பதைப் புலப்படுத்துகிருர்.

---

71. ஸ்ரீமத் பகவத்கீதை, மோக்ஷ ஸன்யாஸ யோகம், சுலோ. 66
72. பாரதியார் கவிதைகள்-சுயசரிதை-பாரதி அறுபத்தாறு, பா. 18:1-2.

பாரதியின் சர்வதேச நோக்கு

இரா. இரகுபதி, எம். ஏ., எம். பில்.,
ஆய்வாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030.

தமிழக இலக்கிய வரலாற்றிலே புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கி வைத்தவர் மகாகவி பாரதி. பாரதிக்கு முன் தமிழ் இலக்கியத்தில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்"[1] என்னும் உலக ளாவிய பார்வையைச் சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனாரின் புறப்பாட்டின் மூலமாகக் காண்கிறோம்.

அதற்குப்பின் தமிழ் இலக்கியத்தில் இடைக்காலத்தில் இந்த உலகு தழுவிய பார்வை, தூர்ந்துபோய் விட்டது. அதனைத் தூரெடுத்துச் செப்மைப்படுத்தியவன், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய நம் மகாகவி பாரதி.

"இந்தச் சகாப்தத்தின் ஆதார ஸ்ருதிகளை—தேச விடுதலை, பொதுவுடைமை, சர்வ தேசியததைச் சார்ந்த தேசிய நெறி என்கிற ஆதாரச் சுருதிகளைக கவனித்து அறிந்தவன் பாரதி".[2] "ஆங்கில வீறுணர்ச்சிக் கவிஞர்கள் ஷெலலியின் மனித நேய அணுகு முறையும், சமத்துவ நோக்கும், புரட்சிகரமான சிந்தனைகளும் தமிழ்க் கவிஞனான பாரதியை மிகவும் கவர்ந்து இழுத்தன. பாரதி இளமைப் பருவத்தில் தனது இலட்சியங்களை வெளிப்படுத்தி ஷெல்லிதாசன் என்ற புனை பெயரில எண்ணற்ற கட்டுரைகளை எழுதியுள்ளான் என்பது குறிப்பிடத்தகுந்தது. ஷெல்லியின் மீது கொண்ட பெரும் மதிப்பினால் ஷெல்லி சங்கம் என்ற அமைப்பினைத் தன் சொந்த ஊரில் ஏற்படுத்தி அதன் உறுப்பினர்களுக்கு ஷெல்லியின் பாடல்களின் நயங்களைப் படித்தும் விளக்கியும் வந்தான் என அறிகின்றோம்"[3].

"ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியைப் 'பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை' என்றே இலக்கிய விமர்சகர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர். அதேபோலத் தமிழகம் தந்த தேசிய மகாகவியான சுப்ரமணிய பாரதியையும் 1905—1907 ஆண்டுகளின் 'ரஷ்யப் புரட்சியின் குழந்தை, என்றே சொல்லி விடலாம். ஏனெனில் 1905-ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து இந்தியாவில் எழுந்த

தீவிரவாதத் தேசிய இயக்கத்தின் போதே, பாரதி தேசபக்தி பொங்கித் ததும்பும் கவிதைகளைப் படைத்த தேசியக் கவியாகவும், அரசியல் பத்திரிகையாளராகவும் மலர்ச்சியுற்று மணம் பரப்பத் தொடங்கினார்.'[4]

திறமான புலமைக்கு எப்பொழுதும் தலை வணக்கம் செய்தவர் பாரதியார். தனக்கு முந்திய கவிச்செல்வத்தை எல்லாம் தனதாக்கி அதிலே தன்னையுங் கலந்து வெள்ளத்தின் 'பெருக்கைப் போல்' கவிப் பெருக்குப் பாய்ச்சிய பாரதி 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை' அவை திறமான புலமையுடையனவெனில் தனதாக்கத் தவறியதில்லை"[5]

என்ற ஆழ்ந்த இக்கூற்றுகள் அனைத்தும் பாரதி தமிழ் இலக்கியத்தின் பரப்பையும், நோக்கத்தையும் எந்த அளவுக்கு விரிவாக்கினான் என்பதை நன்கு காட்டும்.

பாரதி சுதேசமித்திரன் இதழில் பல்வேறு அரசியல் கட்டுரைகளை மொழிபெயர்த்தக் காரணத்தாலும், பல மொழி களையும், கற்றுத் தேர்ந்த காரணத்தாலும், தான் நடத்திய பத்திரிகையில் தலையங்கம், செய்திக் குறிபபுகள் போன்றவற்றைத் தரவேண்டிய காரணத்தாலும் அவருடைய அறிவாற்றல் (intellectual) மேலும் மேலும சிறந்து வளர்ந்தது.

அத்தகைய அறிவாற்றலைத் தன்னகத்தே கொண்ட அவர், தான் வாழ்ந்த சமுதாயத்தை விட்டுச சென்று விடவில்லை; அத்தகைய ஒப்பரிய அறிவாற்றலைப் பாரதி தன் நாட்டின், சமுதாயத்தின் பலவேறு துறைகளின் முன்னேற்றங்களுக்காகப் பயன்படுத்தினார். எனவேதான் மாஜினியின் சபதததை,

"எங்கள்

பொன்னுயர் நாட்டை ஒற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்ட துவாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியரசு யென்றதா இலக"[6].

என்று கவிதையாக்கி மாஜினியின் கருத்துகளை மக்கள் உள்ளத்தில் பதியச் செய்கிறார்.

மேலும்,

" விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்றும் மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனக மாளிகையு முண்டாம்
அளக்கருந் தீதுற் றாலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற ஓங்கி நிற்பர்
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே"

என்று பெல்ஜிய நாட்டிற்கு வாழ்த்துக் கூறுகின்றார். இதுவன்றிச் சோவியத் நாட்டில் ஜார்மன்னன் வீழ்ததப்பட்ட நிகழ்ச்சியினை மிக்க மகிழ்ச்சியோடு,

" மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப் புரட்சி
கொடுங் கோலன் அலறி வீழ்ந்தான்"

என்று பாடி 'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு' அங்கே சோவியத்தில் அமைந்து விட்டது. 'ஓ...இந்திய மக்களே...இங்கே எப்போது அமையப் போகிறது' என்று மக்களைப் பார்த்துக் கேட்பதுபோல் பாடி மகிழ்கிறார்.

மேலும் உரைநடையிலும் பிரெஞ்சுப் புரட்சியில் வால்டேர், ரூஸோ போன்றவர்கள் எழுப்பிய முழக்கங்களான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற முப்பெரும் முழக்கங்களோடு வெளியிட்ட அரசியல் பத்திரிகையான இந்தியாவில் 1906-ஆம் ஆண்டு சூன் மாதம் முதல் செப்டம்பர் வரை,

—Russia in the Thores of Revolution Again
ருஷ்யாவில் மறுபடியும் ராஜாங்கப் புரட்சிச் சின்னங்கள் (30—6—1906)

—Go Ahead Russia
ருஷ்யாவின் தீவிர அபிவிருத்தி (7—7—1906)

—Dissolution of Duma
ருஷ்யப் பார்லிமெண்டின் கலைவு (28—7—1906)

—Russian Revolution
ருஷ்யாவிலே ராஜாங்கப் புரட்சி (1—9—1906)

—The Death of Trepoff-one Tyrannical Wretch the less

டரேபோவின் மரணம்—உலகத்துப் பாதகர்களில் ஒருவன் குறைந்து போய் விட்டான் (22—9—1906.)

என்று பல விமர்சனக் குறிப்புகளையும் எழுதுகிறார். தன் கதைகளிலும் பாரதி சோவியத் புரட்சியைப் பற்றியும், லெனின பற்றியும் பல குறிப்புகளைத் தருகின்றார். 'பேய்க் கூட்டம்' என்ற தமது கதையில் ''ருஷ்யா விஷயம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று தூங்க முயற்சி செய்தால் மனம் இணங்கவில்லை...பிறகு எனக்கு ருஷ்யக் குடியரசின் தலைவனாகிய லெனின் என்பவனுடைய ஞாபகம் வந்தது. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி, லெனினுக்கு லட்ஷம் பக்கத்திலே''[10] என்று சோவியத் புரட்சியின் தலைவரைக் கதை படிக்கும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

சோவியத் யூனியனை மட்டுமல்லாது உலகில் எங்கெங்கு மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றதோ, அங்கங்கெல்லாம் மக்கள் அந்த அநீதிகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணமுடையவர் பாரதி.

எனவே ஈஜிப்ட் (எகிப்து) நாட்டிலே டாண்டா என்ற இடத்திலே பிரிட்டிஷ் இராணுவ அலுவலர்கள் கிராம மக்களுக்குச் செய்த அக்கிரமத்தை ''டாண்டாவிலே நடந்த அக்கிரமம்' என்ற தலைப்பிட்டுத் தம் கட்டுரையை எழுதுகின்றார். 1906-ஆம் ஆண்டு ஆகஸ்டு 8-ஆம் தேதியன்று எகிப்திய தலைவர் முஸ்தபா கமால் பாஷா, ஐரிஸ் தேசியவாதிகள் மூலம் இந்திய தேசபக்தர்களுக்கு இலண்டனில் அறிமுகம் செய்து வைத்த போது, அக்கூட்டத்தில் சியாம்ஜி கிருஷ்ணவர்மா என்ற இந்திய தேசபக்தர் யுத்தம் கூடாது அமைதிவேண்டியதுதான். ஆனால் அது அடிமைத்தனத்துடன் கலந்த பேடி அமைதியாக இருக்கக் கூடாது. சுயாதீனத்துடன் கலந்ததாக இருக்க வேண்டும். சுயாதீனத்தை இடிப்பதைக் காட்டிலும் மரணமே விசேஷமானது என்று பேசி முடித்தவுடன் முஸ்தபா பாஷா மகிழ்ச்சியுடன் கிருஷ்ணவர்மாவைப் பாராட்டியதை மிகக மகிழ்வோடு பாரதி,

An Egyptian Patrist—ஓர் ஈஜிப்டிய தேசாபிமானி.

பராபவ வருஷம் ஆவணிமாதம் 3-ஆம் தேதி ஆகஸ்ட் மாதம் 18-ஆம் தேதி 1906:

என்ற தலைப்பும், நாட்குறிப்பும் இட்டுச் செய்தி விமர்சனத்தைத் தீட்டியுள்ளார்.

இன்னும் சீன தேசத்தில் அமெரிக்கரின் வணிகம் பெருத்து விட்ட காரணத்தால் சீன மக்கள் விழித்துக் கொண்டு அமெரிக்கர் களின் வணிகத்தையும் பொருட்களையும் ஒதுக்க வேண்டும் என்று எழுந்த போது, அதனைத் தம் இந்தியா பத்திரிகையில் “சைனாவில் அந்நிய தேச சரக்கு விலக்கம்” என்று தலைப்பிட்டுச் சீனத் தேச மக்கள் முடிவு செய்த,

1. எங்கும் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அன்னிய நாட்டுச் சரக்கைத் தலையெடுக்க வொட்டாமல் செய்ய வேண்டும்.

2. நமது நாட்டின் செல்வம் சிறிதேனும் வெளியில் போகக் கூடாது.

3. இச்சங்கத்தில் சேர்ந்தோர் அனைவரும் அன்னிய தேச சரக்கை ஜனங்கள் விலக்கும்படி அங்கங்கே தூண்டுவதற்கு உழைத்து ஜனங்களின் ஊக்கத்தை விருத்திப்படுத்துவார்.

4. முதன்முதல் இந்த “சுதேசிய ஊக்கத்தைப் போதித்துக் காலஞ்சென்ற ‘பந்த்ஹா (?) என்பவரின் உற்சவத்திற்கு இச் சபையே வேண்டிய திரவியம் கொடுக்க விருககிறது” என்கிற தீர்மானங்கள் நடந்தன. சீன தேசம் சுயாட்சியைப் பெற்றிருப் பதால் இந்த விஷயம் அவர்களுக்கு வெகு சுலபம், இன்னும் முற்றுப் பெறாது அமெரிக்க வியாபாரம் இவர்கள் ஊக்கததிற்கு எதிர் நிற்பதும் கடினம் அதற்கு ராஜாங்கம் போதுமான உதவி புரியவும் காத்திருக்கின்றது. ஆகையால் அது பிடித்ததை ரசிப்பதற்கு தடையேயில்லை. அதனால், நமது ஆசியாவிற்கு உண்டாகும் பெருமை பெரிதன்றோ! கொஞ்சம் கொஞ்சமாய், கீழ் தேசத்திலிருந்து ஆசியாவிருத்திக்கு வருவது நன்றாய்த் தெரிகிறது. இந்தியாவிலும் அதே ஊக்கம தயாராகக் கடவுளைக் கருதுகினறோம்.”[12] என்ற தீர்மானங்களை எழுதித் தன்னுடைய கருத்தையும் எழுதுகிறார். பாரதியின் உள்ளம் மெல்ல மெல்லத் தன் நாடு என்ற நிலையிலிருந்து, தன் நாடு இருக்கும் ஆசியாக் கண்டம் என்ற அளவிற்கு விரிவடைகிறது.

பாரதி இப்படி சர்வ தேசங்களில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து எழுதுகின்ற போது ‘கார்ட்டூனகளை’ வெளியிட்டு அவறறிற்கான விளக்கத்தையும் எழுதியுள்ளார். ‘ரெவியூ ஆப் ரெவியூஸ்’ என்ற பத்திரிகையில் வந்த கார்ட்டூனை,

Our Cartoon—சித்திர விளக்கம்

'கொட்டினால் தேள், கொட்டா விட்டால் பிள்ளைப்பூச்சி' "நாம் இந்தத்தடவை பிரசுரம் செய்திருக்கும் சிததிரத்திலே ஒரு புறம் அமெரிக்கா—'யுனைடெட் ஸ்டேட்ஸ்' அதிபராகிய மிஸ்டர் ரூஸ்வெல்ட் நாற்காலியிலே சாய்ந்து புகைபிடித்துக் கொண்டு வெகு உல்லாசமாகப் படுத்துக் கொண்டிருக்கிறார். அப்போது ஜப்பான் அரசராகிய மிக்காடோ வந்து மரியாதையாக விலகி நின்றுகொண்டு 'ஐயா...நான் உள்ளே வரலாமா?' என்று கேட்கிறார். அதற்கு ரூஸ்வெல்ட் வெகு கர்வத்துடன் 'நமது வீட்டுக்குள் வரக்கூடாது, வெளியே போ, தொந்தரவு செய்யாதே' என்று சொல்லுகிறார். இது முதல் காட்சி. இனி இரண்டாம் காட்சியிலே அதே மிக்காடோவுக்குக் கோபம் உண்டாகிக் கைத்தடியைக் கொண்டு ரூஸ்வெல்ட் தலையிலுள்ள தொப்பியை எற்றிததள்ளி விட்டு 'இப்போது என்ன சொலலுகிறாய்? இனியேனும் வரலாமா? சொல்' என்று கேட்கிறார். அதற்கப்பால்தான் ரூஸ்வெல்டிற்குப் புத்தி வருகிறது. ரூஸ்வெல்ட் மிகவும் சுமுகசதுடன் 'எனது பிரியமுள்ள ஜப்பானே, நீ எப்போது வருவாய் என்று காத்துக் கொண்டல்லவோ இருக்கிறேன்' என்று சொல்லுகிறார். இந்த வினோத சித்திரம் எதைக் குறிப்பிடுகிறதென்ற விஷயம் நேயர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். சில மாதங்களின் முன்பு அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலே பள்ளிக் கூடங்களில் வந்து வாசித்துக் கொண்டிருந்த ஜப்பானிய சிறுவர்களை அமெரிக்கர் பலவிதமான இமிசைகளுக்குட்படுத்தினார்கள். ஜப்பான் நயத்திலே சொல்லிப் பார்த்தது. அதை அமெரிக்கா கவனிக்கவில்லை, அதன் பேரில் ஜப்பான் போர் செய்யப் புறப்பட்டு விடுமென்ற சில வதந்திகள் உண்டாகி விட்டன. உடனே அமெரிக்கா (யுனைடெட் ஸ்டேட்ஸ்) தலைவராகிய மிஸ்டர் ரூஸ்வெல்ட் கலிபோர்னியா மாகாண கவர்மெண்டாருக்கு கட்டளை பிறப்பித்து ஜப்பானை மகாகவுரத்துடன் நடத்த வேண்டுமென்றும், ஜப்பானிய மாணாக்கர்களை எவ்விதமான இமிசைகளுக்கும் உள்ளாக்கலாகாதென்றும் கூறினார்"[13]

இந்தக் கார்ட்டூன் விளக்கத்தின் மூலம் பாரதியார் தன் வாசகர்களுக்குத் தான் எழுதும் செய்திக் குறிப்புகளை, விமர்சனக் கட்டுரைகளை மிக எளிதாக புரிய வைத்து—உலகளாவிய எண்ணங்களை வளர்க்கும் நோக்கத்தை நிறைவேற்றுகிறார்.

பாரதி இப்படி, சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானம், அமெரிக்கா, ஜப்பான், பாரசீகம் (பொசியம்) சீனா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிககா, எகிப்து, பர்மா, கிரேக்கம், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடந்த பல நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டு எழுதி உள்ளார்·

மேலும் பெண்கள் விடுதலையை வற்புறுத்தும் பாரதி, பெண்களின் முன்னேற்றத்திற்காகவே நடத்திய தன்னுடைய சக்கரவர்த்தினி இதழிலும் "ஸயாம் தேசத்திலே வெளிக் காரியங்களிளெல்லாம் புருஷர்களுக்குப் பெண்டிர் எவ்வளவோ துணை புரிகின்றார்கள். எவ்வளவு சுதந்திரமிருக்கின்றதோ அவ்வளவு சுதந்திரம் அந்த நாட்டில் ஸ்திரிகளுக்கு மிருக்கின்றது "[14]

என்று சயாமில், பர்மாவில், திபேத்தில், தென் ஆப்பிரிக்காவில் சோவியத்தில் இருக்கும் பெண்களின் சுதந்திர நிலைகளை எடுத்துச் சொல்லி இந்தியாவிலும் பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்று வற்புறுத்துகிறார். பாரதியின் இப்பத்திரிகைக் குறிப்புகளை வெறுமனே செய்திகளுக்காகவே வெளியிடப் பட்டவை என்று ஒதுக்கி விடமுடியாது.

எனவே, பாரதி பத்திரிகையாளன் என்ற முறையில் பல்வேறு நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்டித் தனனுடைய நாட்டு மக்களின் சிந்தனையை உலக மட்டத்திற்கு உயர்தத வேண்டும் என்றும் உலக மககள் விழிதெழுந்து அடிமைத்தளைகளை ஆங்காங்கே தகர்த்து வருகிறார்கள் நாமும் அந்தப் பணியில் விரைவில் ஈடுபட வேண்டும் என்றும், உள்ளார்ந்த உணர்வுகளை மக்கள் உள்ளததில் எழுப்பும் வண்ணமாகவே தன் கட்டுரைகளைத் தீட்டியிருககினறார்.

யோகசித்தியில் வரங்கேட்டபோது 'வையத் தலைமையையே கேட்ட பாரதியின் உள்ளத்தில் இத்தகைய 'சர்வதேச நோக்கு' அமைந்து கிடந்தது என்பதில் வியப்பேதுமில்லை

துணை நூல்கள்

1. புறநானூறு — கணியன் பூங்குன்றன் பாடல், 192, பாரிநிலையம், 1977, சென்னை-1.

புதுநெறி காட்டிய பாரதி, — கண்ணன் ஆர். கே., பக்கம் 1, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், 1965, சென்னை.

3. ஷெல்லியும் பாரதியும், — ஜான் சாமுவேல், ஜி, பக்கம் 55, மணி பதிப்பகம், 1980, சென்னை.

4. அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும் — ரகுநாதன், பக்கம் 5, நியூசெஞ்சரி புக் ஹவுஸ், 1977.

5. ஒப்பியல் இலக்கியம் — கைலாசபதி, க., பக்கம் 290, பாரி நிலையம், சென்னை, 1969.

பாரதியார் கவிதைகள் — மகாகவி பாரதியார், எஸ். ஆர். சுப்ரமணியபிள்ளை பதிப்பு, 1966.

7. பாரதியார் கவிதைகள் — மகாகவி பாரதியார், எஸ். ஆர். சுப்ரமணியபிள்ளை பதிப்பு, 1966,

8. பாரதியார் கவிதைகள் — மகாகவி பாரதியார், எஸ். ஆர். சுப்ரமணியபிள்ளை பதிப்பு, 1966.

9. அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும் — ரகுநாதன், பக்கம். 6. நியூ செஞ்சரி புக்ஹவுஸ், 1977.

10. பாரதி நூல்கள் வசனம் முதற்பகுதி (கதைகள்) — சுப்பிரமணிய பாரதி, சி. பக்கம். 97, அரசு வெளியீடு, 1959.

11. பாரதி தரிசனம் முதல் பாகம் — இளசை மணியன் (தொகுப்பு ஆசிரியர்) பக்கம் 243, நியூசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

12. பாரதி தரிசனம் இரண்டாம் பாகம் — இளசை மணியன் (தொகுப்பு ஆசிரியர்), பக்கம் 182-183, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

13. பாரதி தரிசனம் — இளசை மணியன் (தொகுப்பு ஆசிரியர்), பக்கம் 188-189, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

14. மகாகவி பாரதியாரின் சககரவர்த்தி கட்டுரைகள் — சீனி. விசுவநாதன் டி. வி. எஸ். (பதிப்பாசிரியர்கள்), பக்கம் 51, வானவில் பிரசுரம், 1979.

பாரதியாரின் உரைநடையில் தமிழ் இலக்கியக் குறிப்பு

செல்வி க. விசயா
ஆய்வு மாணவி, தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

மகாகவி பாரதியாரை அறியாதவர் இருக்க முடியாது. யாவராலும் போற்றப்படும் நல்லதொரு கவிஞராய் இன்றும் என்றும் திகழ்பவர். பாரதியாரைக் கவிஞர் என்ற அளவில் அறிந்தவர்கள் பலர்; அவர் ஒரு சிறந்த உரைநடை ஆசிரியராயும் திகழ்ந்தவர் என்பது பலருக்குத்தெரியாது.

பாரதியார் கவிதைகளில் கவனம் செலுத்தியது போலவே உரைநடையிலும் கவனம் செலுத்தியுள்ளார். மிக அருமையான கட்டுரைகளை உரைநடையில் தந்துள்ளார்; கதைகளையும் வழங்கியுள்ளார்.

பாரதியாரின் எளிய கவிதைகளைக் காணும் பலர் அவர் தொல்-லிலக்கியங்களை அறியாதவரோ என நினைத்துக் கொள்ள வாய்ப்புண்டு. ஆனால் உண்மை அதுவன்று. கவிதைகளிலும் தொல்லிலக்கியங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவரது உரைநடை நூல்களில் இலக்கியக் குறிப்புகள் நிறைய உள்ளன. அவற்றைக் கற்போர் அவருக்கு இலக்கியங்களில் இருந்த ஈடுபாட்டை, புலமையை அறிவது திண்ணம்.

இக்கட்டுரையில் 'பாரதியாரின் உரைநடையில் தமிழ் இலக்கியக் குறிப்பு' இடம் பெறுதலைக் காண்பதன் மூலம் அவரது இலக்கிய ஆர்வத்தை, புலமையைச் சிறிது காண முடியும்.

பாரதியாரின் நூலான, பாரதி பிரசுராலயம் (சென்னை) 1950-ல் வெளியிட்டுள்ள பாரதி நூல்கள் — 'கட்டுரைகள்' என்ற நூலை மட்டுமே கால எல்லை கருதி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நூலில் பாரதியார் 1. தத்துவம், 2. மாதர், 3. கலைகள், 4. சமூகம் என்ற நான்கு தலைப்புகளில் (707 பக்கம்) எழுதியுள்ள கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன.

பாரதியாரின் இலக்கிய ஆர்வம்

பாரதியாருக்குக் கவிதைகள் எழுதுவதில் மிகுந்த ஈடுபாடு இருப்பினும் தொன்மை இலக்கியங்களைக் கற்காமல் இல்லை. அவைகளையும் கற்றுத் தக்க இடங்களில் தம் நூல்களில் பெய்துள்ளார். இலக்கியங்களைப் பற்றி அவ்வப்போது இதழ்களில் வரும் கட்டுரைகளையும் படித்துத் தம்முடைய கருத்தை வெளியிட்டுள்ளார். 'ஆராய்ச்சித் தொகுதி' (மு. இராகவையங்கார்) என்ற நூலில் 'தமிழறிஞர்கள் எழுதிய கடிதப் பகுதிகள்' என்ற பகுதியில் சுப்பிரமணிய பாரதியார் எழுதியுள்ள கடிதமும் ஒன்று. அதில்,

> சென்ற முறை வெளிவந்த 'செந்தமிழ்ப்' பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் "வீரத் தாய்மார்கள்' என்ற அற்புத உரையைக் கண்டு மகிழ்ச்சி பூத்து அம்மகிழ்ச்சியைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுதலானேன்.

என்று குறிப்பிட்டுள்ளார்.[1] திரு மு. இராகவையங்கார் புறநானூறு பற்றி "வீரத்தாய்மார்கள்" என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். அதனைப் படித்துப் பார்த்தே இப்பாராட்டை நல்கியுள்ளார் பாரதியார்.

இன்று பலராலும் தள்ளி வைக்கப்பெறும் புராண நூல்களைக் கூடப் பாரதியார் விட்டு வைத்தாரில்லை. செவ்வந்திப் புராணம் என்ற நூலில் உள்ள முருக வணக்கப் பாடலைத் தம் உரைநடையில் பயன்படுத்தியுள்ளார்.[2] இதனால் பாரதியார் இன்ன இலக்கியம் என்று ஒதுக்கி விடாமல் எல்லாவற்றையும் கற்றுள்ளமை தெரிகின்றது.

பாரதியார் திடீரென்று தோன்றிய கவிஞர் அல்லர். "புலவன் ஒருவன் தோன்றுகிறான் என்றால், அவன் தன் இனத்தின் சென்ற காலத்துச் சிறப்பியல்களின் சுருங்கிய வித்தாக அமைகிறான்"[3] தமக்கு முன்பே வாழ்ந்த புலவர் பெருமக்களின் நூல்களையும் கற்றவர் பாரதியார் என்பது மறுக்க முடியாத உண்மை.

பாரதியார் உரைநடையில் எடுத்தாளும் நூல்கள்

பாரதியார் கட்டுரைகளில் தொல்காப்பியம் புறநானூறு, குறள், திருவள்ளுவமாலை, மூதுரை, நாலடியார், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருமந்திரம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல்கள், ஔவையார் பாடல்கள், வள்ளலார் பாடல், ராமாநுஜர் பாடல், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இவைகள் இடம் பெற்றுள்ளன.

பாரதியார் போற்றும் ஆசிரியர்கள்

பாரதியார் கட்டுரைகளில் இடம் பெறும் நூல்கள் மேற்கூறியவை களாக இருப்பினும் அவரது கட்டுரைகளில் வள்ளுவர், ஔவையார், தாயுமானவர் இவர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். இதனால் மற்ற ஆசிரியர்களைப் போற்றவில்லை என்பது பொருளன்று. மற்றவர் களுக்கும் உரிய இடம் அளித்துள்ளார். இம்மூவரை மட்டுமே பல இடங்களில் கூறுகின்றமையால் இம்மூவரும் அவர் உளம் கவர்ந்த ஆசிரியர்களாக இருக்கவேண்டும் என்பது இந்நூலினின்று முடிவாகின்றது.

பாரதியார் ஔவையாரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தமையை அவர் வாக்காலேயே காணலாம்.

"கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும்புலவராலேயே தம்மனை வரிலும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட ஔவைப் பிராட்டியே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும். "தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின் நூல்களை இழந்து விடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின் "மற்றச் செல்வங்களையெல்லாம் பறி கொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை, அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக் கொள்ளவல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதப்படமாட்டோம், அது மீண்டும் சமைத்துக்கொள்ள முடியாத தனிப்பெருஞ்செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்[4] என்றும், "ஔவையாரைப் போல் கவிதையும் சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண்மகன் இங்கு பிறந்திருக்கிறனா? ஏன் பிறக்கவில்லை? இதனின்றும் ஆண்மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத் திறமையில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?"[5] என்றும் அவர் கூறுவதினின்று ஔவைக்கு அவர் தந்துள்ள இடம், மதிப்பு பெறப்படும். இது போன்ற ஔவையைப் பல இடங்களில் போற்றுகின்றார்.

தமிழ் இலக்கிய ஆசிரியர்களை மட்டுமல்லாது பிற மொழி இலக்கிய ஆசிரியர்களையும் பாரதியார் போற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. "தெலுங்குப் பாஷையில் மிகச் சிறந்த காவிய மாக ஸ்ரீபாகவதத்தை எழுதிய 'போதன்ன' என்ற மகாகவி அந்த ஊரிலே (வொண்டிமிட்ட) பிறந்தவர். இவருடைய பாகவதம்

நம்முடைய இராமாயணத்தைப் போல ஸம்ஸ்கிருத நூலைத் தழுவி எழுதப்பட்ட வழி நூல் ஆயினும் படிப்பவருக்கு முதநூலத்தனை பெருமை தோன்றும்படி அமைந்திருக்கிறது. நாம் கம்பராமாயணத்தைக் கொண்டாடுவது போலத் தெலுங்கர் 'போதன்ன'வின் பாகவதத்தைக் கொண்டாடுகிறார்கள்'' என்று குறிப்பிடுகிறார் பாரதியார்[6].

பாரதியாரின் உரைநடையில் இடம் பெறும் இலக்கியக் குறிப்புகளைத் 1. தம் கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுவன, 2. தொல்லாசிரியர்கருத்தை விளக்க எழுந்தன என்று இரு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

தம் கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுவன

பாரதியாரின் உரைநடையில் இவ்வகையில் இடம் பெறும் இலக்கிய குறிப்புகளே மிகுதி. சான்றாக ஓர் இடத்தைக் காணலாம். 'இந்துக்களின் சிறப்பு' பற்றிக் கூறவரும்போது, பரமாத்மா ஒன்று. அவனுக்கு ரிஷிகள் பல பெயர் சொல்லிப் போற்றுகிறார்களென்று வேதம் சொல்லுகிறது.

பேரானந்தம் பேசி மறையனந்தஞ் சொல்லும்
பெரிய மௌனத்தின் வைப்பு

என்று தாயுமானவர் கூறுவதைச் சான்றாய்க் கூறுகிறார்.[7]

தொல்லாசிரியர் கருத்தை விளக்க எடுத்தன

தொல்லாசிரியர் கருத்தை விளக்க பாரதியார் இலக்கிய ஆட்சியைக் கையாளுமிடங்கள் சில. ஒரு சான்று,

வாசக ஞானம் பற்றித் தாயுமானவர் கூறும் கருத்தைக் கூறுகிறார்.

வாசக ஞானத்தினால் வருமோ சுகம் பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே

இதற்குப் பொருளும் கூறி, இதற்கு விளக்கமாய் வள்ளுவரின்,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்ற சான்று காட்டுகிறார்.[8]

மேற்கோள்களாலும் விளக்கங்களாலும் பாரதியார் வற்புறுத்தும் கருத்துகள் சமுதாயம் தொடர்பானவை பெண்டிர்

பெண்டிர் யாவராலும் மதிக்கப் பெறும்படி வாழ வேண்டும் என்ற கருத்துள்ளவர் பாரதியார். ''கணவன்மார், உடன்பிறந்தார், புத்திரர் முதலியவர்களால் நன்கு மதிக்கப்பெருமல் இழிவாகக் கருதப்பட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்துவிடுதல் நன்று'' என்று கூறியவர்,

மானமிழந்த பின் வாழாமை முன் இனிதே

என்ற தொடரை இனியவை நாற்பதிலிருந்து எடுத்துக்காட்டி வலியுறுத்துகிருர்.

குடும்ப வாழ்க்கை

குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கை முறைகளிலும் சிறந்தது என்கிருர் பாரதியார். இதனைக் கூறியவர் வள்ளுவரின்,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்
நல்லாற்றின் நின்ற துணை

என்ற குறளைக் காட்டியுள்ளார்.[10]

ஆடவர் பற்றித் தனியே எந்தக் கருத்தும் பாரதியார் கூரு விட்டாலும் இருபாலாருக்கும் உரிய கருத்துக்களாகச் சிலவற்றைக் கூறுகிருர். ஈண்டு ஒரு எடுத்துக்காட்டினைக் காணலாம். ''நம் முடைய அருமை நாட்டில் சுயாதீனத்தை நாட்டி பிறர் அஞ்சி மதிக்கும்படியாக நாம் ஜீவிக்க வேண்டியது'' என்று கூறியவர்,

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெத் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளலார்
கருமமே கண்ணு யினுர்

என்ற மூதுரைக்கு இணங்கியே நாம் நடக்க வேண்டும் என்கிருர்.[11]

சாதி

உலகத்தில் எந்தச் சாதியாரிடத்தும் குற்றம் இருக்கத்தான் செய்யும் என்கிருர். இதனை 'குற்றம் பார்க்கின் சுற்றமில்லை' என்று ஔவையாரே சொல்லியிருக்கிருர்கள் என்பது பாரதியார் கருத்து.[12]

சமயம்

சமயத்தைப் பற்றி பாரதியார் கருதுவன: எம்மதமும் சம்மதம், கடவுள் ஒருவரே போன்ற கருத்துக்கள். சான்று, வேதபுராணங்களில் சொல்லப்படும் மூர்த்திகளெல்லாம் ஒரே பரமாத்மாவின் கலைக ளென்பதை ஹிந்துக்கள் எப்போதும் மறக்கக் கூடாது. "ஒக்கத் தொழுகிற்றிராயின் கலியுகம் ஒன்றுமில்லை" என்று நம்மாழ்வார் சொல்கிறார். ஹிந்துக்கள் தங்களுடைய வேதப்பொருளை நன்ருகத் தெரிந்து கொண்டு தொழுவார்களானால் கலியுகம் நீங்கிப்போய் விடும்" என்பதினின்று கடவுள் ஒருவரே என்ற கருத்தை வலியுறுத் தியமை அறிய முடிந்தது.[13]

நம்பிக்கை:

நம்பிக்கை மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதது என்பது பாரதியார் கருத்து. நம்பிக்கைக் குறைவால் பயம், சந்தேகம், சோம்பல் முதலான குணங்கள் வந்துவிடும். நம்பிக்கையினால் ஆபத்துகளை வென்று விடலாம் என்று கூறிவிட்டு,

கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயமே

என்று நாவுக்கரசர் பாடியிருப்பதைச் சுட்டி நாவுக்கரசரின் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறார் பாரதியார்.[14]

இலக்கிய மதிப்பீடு

வசன நடை பற்றிக் கூறுகையில், "கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தன்மை ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்கமாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஒட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்தில் தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடை எழுதும்" என்று வசன நடை எப்படி அமைய வேண்டும் என்ற கருத்தை இயம்பினார்.[15] இந்த இடதகில் கம்பரின் "புவினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து" என்ற செய்யுளை நினைவு கூர்கிறார்.

பாரதியார்—உரையாசிரியர்

பாரதியார் உரைநடையில் இலக்கிய ஆட்சியைப் பயன்படுத்து வதோடு மட்டும் அல்லாமல் அவைகட்குப் பொருளும் வரைகிறார். பல இடங்களில் இலக்கிய ஆட்சிச் சான்ருகக் காட்டல், அதன்கீழ்

அதன் பொருள், இந்த முறையைக் கட்டுரைகளில் காண முடிகிறது. இதனால் தாம் ஒரு சிறந்த உரையாசிரியர் என்பதைக் காட்டுவதோடு மட்டுமன்றி தாம் அதற்குக் கொண்ட பொருளையும் நாம் அறியச் செய்துள்ளார்.

சான்று :

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல் வேறுபட்டார் தொடர்பு

இதன் பொருள்-வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது என்பதேயாம்''.[16]

முடிவுரை

பாரதியார் கூறவரும் கருத்துக்களை இலக்கிய ஆட்சியோடு கூறும் நயம் போற்றத்தக்கது. அவ்விலக்கிய ஆட்சியைப் பயன் படுத்தாமல் கூறினாலும் நாம் அவருடைய கருத்தைக் கொள்ளாமல் போவதில்லை; இருப்பினும் அவரது கருத்துக்கும் உரைநடைக்கும் அணி செய்வனவாய் இலக்கிய ஆட்சி அமைந்துள்ளது. எந்த ஒரு கருத்தையும் தமிழனிடம் சொல்ல வேண்டுமென்றால், தான் புதிதாய் சொல்லவில்லை; இவ்வாறே முன்பே இதனை இவர் கூறியுள்ளார் என்றால் தான் கூறுவது வலுப்பெறும் என்று அவர் எண்ணியிருக்கக் கூடும். இலக்கிய ஆட்சிக்குப் பொருள் கூறுவது, யாவரும் எளிதில் பொருள் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் தான்.

பாரதியார் ஒரு தமிழராய் இருப்பதாலும் தமிழ் இலக்கிய ஈடு பாடு உள்ளவராய் இருப்பதாலும் அவருடைய உரைநடையில் இலக்கிய ஆட்சி இடம் பெற்றுள்ளமையில் வியப்பில்லை. தமிழிடமிருந்து உண்மைத் தமிழன் பிரிய மாட்டான்; பிரித்தும் பார்க்க முடியாது.

பாரதியின் உரைநடை நூல்களை வைத்துக் கொண்டு அவரது நடையைப்பற்றித் தனியே ஆய்வு செய்யலாம். மிகுதியான வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. ''இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்'' என்ற கொள்கையுடைய பாரதியாரின் உரைநடையில் வடமொழிச் சொற்களைக் காணும்போது வருத்தமாக உள்ளது. இருப்பினும் அரிய பல கருத்துக்களைத் தமிழில் துணிந்து இயம்பியுள்ளாரே என்று நினைக்கும்தொறும் மனம் மகிழ்கிறது. காலச்சூழலே நடையில் வடசொற்கள் இடம் பெறக் காரணம்.

பாரதி மண்டபத் திறப்புவிழாவின்போது டாக்டர் ம. பொ. சி. கூறியுள்ள ஒரு கருத்தினை திரு ம. ரா. போ. குருசாமி அவர்கள் 'தமிழ்தந்த பாரதி' என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.[17] அதனையே ஈண்டும் கூறி இக்கட்டுரையினை நிறைவு செய்கிறேன்.

"பாரதிக்கு முன்னும் தமிழ் இருந்தது. ஆனால், தமிழ் இல்லாமல் பாரதி இல்லை".

குறிப்புகள்

1. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, (பாரி நிலையம், சென்னை, 2-பதி., 1964), ப. XL.
2. பாரதியார், பாரதியார் கதைகள் (தமிழகம், சென்னை, 1 பதி., 1957,) ப. 301.
3. ம. ரா. போ. குருசாமி, வித்தகர் வாழ்க்கை (மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 4-பதி., 1974), ப. 64.

   இந்நூலில் 'தமிழ் தந்த பாரதி' என்ற கட்டுரையில் பாரதி வாழையடி வாழையாகத் தமிழ் மரபில் வந்த கவிஞரே என்பதைப் பாரதியாரின் சில கவிதைகளைச் சான்று காட்டி நிறுவியுள்ளார் ஆசிரியர்.
4. பாரதியார், பாரதியார் கட்டுரைகள் (மாதர்), (பாரதி பிரசுராலயம் சென்னை, 5-பதி, 1950), ப. 246.
5. பாரதியார், பாரதியார் கட்டுரைகள், ப. 247.
6. ,, ,, ,, (கலைகள்), ப-ள். 400-4 1.
7. ,, ,, ,, (கலைகள்), ப. 336.
8. ,, ,, ,, (தத்துவம்), ப. 44.
9. ,, ,, ,, (மாதர்), ப. 239.,
10. ,, ,, ,, (சமூகம்), ப. 500.
11. ,, ,, ,, (தத்துவம்), ப. 81.
12. ,, ,, ,, (கலைகள்), ப. 367.
13. ,, ,, ,, (தத்துவம்), ப. 2,
14. ,, ,, ,, (தத்துவம்), ப-ள். 39-40.
15. ,, ,, ,, (கலைகள்), ப. 392.
16. ,, ,, ,, (தத்துவம்), ப. 14.
17. ம. ரா. போ. குருசாமி, வித்தகர் வாழ்க்கை, (மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 4-பதி., 1974), ப. 68.

தமிழ் இந்திக் கவிதை இலக்கியங்களில் பாரதியார், பாரதேந்து ஆகியோருக்குப் பிற்பட்ட கவிஞர்களின் தேசிய உணர்வு

திருமதி ஜெயலக்ஷ்மி சுப்ரமணியன்
இந்தித்துறை (ஆராய்ச்சி மாணவி)

தேசிய உணர்ச்சி

தேசிய உணர்ச்சி எந்த ஒரு நாட்டிற்கும், எக்காலத்திற்கும் ஏற்ற, அந்நாட்டின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கின்ற ஒருநல்லுணர்ச்சி. அடிமைப்பட்ட நாட்டின் மக்கள் அத்தளையினின்றும் விடுபட்டுத் தன்னிச்சைபோல் வாழநினைக்க விழைவதும், நாடு விடுதலையடைந்த காலத்து அந்நாட்டு மக்கள் அரசியல், சமூகம், தர்மம், இலக்கியம் ஆகிய பலநிலைகளிலும் முன்னேறத் துடிப்பதும் இயற்கையே. இந்த இயல்பான உணர்வின் காரணமாகத்தான் தேசத்தையும், தேசிய வாழ்க்கையையும், தேசியத் தத்துவங்களையும் பொருள்களாகக் கொண்டுப் பாடப்பாடும் 'தேசியப்பாடல்கள்' மக்களிடையே விழிப்புணர்ச்சியை எக்காலத்தும் தூண்டிக் கொண்டிருக்கும் கருவிகளாக அமைகின்றன. இதுவே இத்தேசியப் பாடல்களின் இன்றியமையாமைக்கும், மேன்மைக்கும், அழியாப் புகழுக்கும் காரணம்.

கட்டுரைப் பொருள்

தமிழில் தேசியப் பாடல்களுக்கு முன்னோடி மகாகவி 'பாரதி' எனில், இந்தியில் அடிமைத்தனத்தால் அடைந்த இழிநிலை, அக்கால அவக்கேடு, சுதந்திர உணர்ச்சி, தேசியம், பாரதத்தாய் போன்ற புதுப் பொருட்களைக் கொண்டு பண்ணிசைத்தவர் 'பாரதேந்து ஹரிச்சந்திரர்' என்பவர். தேசத்தின் எப்பகுதியில் இருப்பினும் இந்தியன் அன்று தன் இழிநிலைக்குக் கண்ணீர்விட்டு, விடுதலைக்கு விழைந்தான் என்ற கண்ணோக்கில் இவ்விருவரும் முதற்பொருளாகச் சமூகநீதியான காவியம் படைத்தனர். இவ்விருவரின் பெயர்களாலேயே காலவரையறைகளும், யுகங்களும் குறிக்கப் படுகின்றன என்பதொன்றே இவ்விருவரின் தனித்தன்மைக்கும் சான்று. இவர்கள் வழிவந்தோர் பாடல்களில் தேசியம் வளர்ந்தமையைச் சுருங்கக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாரதி, பாரதேந்து யுகம்

பாரதேந்து யுகத்தில் அக்கால நிலைக்கேற்ப ராஜபக்தியும் தேச பக்தியும் இரண்டறக் கலந்திருந்தன. ஆனால் அதற்குப்பிறகு மஹாவீர் ப்ரசாத் திவிவேதியின் காலத்தில் பாரதத் தாயையே வணங்கி, அவள் அடிமைத் தளையை நீக்க ஆவல்கொண்ட பல கவிஞர்கள் தம்நாட்டுப்பற்றை வளர்க்க பாக்கள் இயற்றினர். மைதிலிசரண்குப்தா, ராமநரேஷ், திரிபாடி, மாகன்லால் சதுர்வேதி போன்றோர் இவர்களுள் முதன்மையானவர்கள். பத்ரிநாராயண் பட், பகவான் நாராயண பார்கவ், டாகுர் ப்ரசாத் ஷர்மா, ப்யாரேலால் வ்ருஷ்ணி, ராமசரித் உபாத்யாய், லல்லன் ப்ரசாதா ஷர்மா, ராய்தேவி பிரசாத் பூர்ண, மன்னன் த்விவேதி ஆகியோரும் பாட்டாளிகள், குடியானவர்கள் ஆகியோரின் இழிநிலை, பொருளாதாரச் சுரண்டல், சமூக விழிப்புணர்ச்சி இவற்றைப்பாடிப் பாரதத் தாயின் மக்களைச் சாதி, சமய, கலாசார ஒருமைப்பாட்டின் மூலம் ஒற்றுமைப்படுத்த விழைந்தனர். கலாசார விழிப்புணர்ச்சியே இவர்கள் பாடல்களின் முக்கியக் கரு. விடுதலை வேட்கையைத் தட்டி எழுப்பும் இவர்தம் பாடல்கள் சுதந்திரத் தாகம், நாட்டுப்பற்று, இந்தியத்தாய் வாழ்த்து ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன.

இவ்வமயம், தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் 'நமக்குத் தொழில் கவிதை' எனவும், 'நாட்டுக் குழைத்தல்' எனவும் உறுதிகொண்டு விடுதலைக்காகப் பா இசைத்தார் பாரதியார். பொருளாதார வளம் நிறைந்த பாரதம், சாதி ஏற்றத்தாழ்வுகளற்ற பாரதம், ஒருமைப்பட்ட பாரதம், மனிதப் பண்பாடு நிறைந்த பாரதம் இவையே இக்கவிஞரின் கனவுகள். இவரைப் போலவே, ஆனால் காந்தியைத் தன் இலட்சியப் புருஷராகக் கொண்டு கவிதை புனைந்தவர்களுள் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை தலைசிறந்தவர். ராஜாஜி அவர்களால் 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது; காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' என்று புகழப்பட்டவர். பாரதிக்குப் பிறகு கவிஞர் இல்லையே என்ற ஏக்கத்தைப் போக்கிய சிறந்தகவி.

காந்தியுகம்

தேசிய வரலாற்றில் காந்தியின் வரவால் ஏற்பட்ட புத்துணர்ச்சியைத் தன்பாக்களால் பரப்ப விழைந்த கவிஞர்கள் அக்காலச் சரித்திரத்திற்குக் கவிதை படைத்தவர்கள். பாரதியின் பரம்பரையில் வந்தவர்களுள் புரட்சிக் கவிஞராகப் பாரதிதாசன் வீறு நடை போட்டார். பழைய கோட்பாடுகளுக்கும், புதிய தலை

முறையின் வேட்கைக்கும் பாலமாகவும் இருசாராருக்குமே ஏற்ப அமைந்த காந்தீயக் கொள்கைகளைத் தம் இலட்சியமாகவும் கொண்டு காந்திவழி நடந்தவர் காந்தீயக் கவிஞர் நாமக்கல்லார். தம் ஊரின் பெயரைக் கொண்டு போற்றப்படும் ஒரே தேசியக்கவி இவரே. சமூகவிழிப்புப் பெற அச்சமின்றி அறைகூவலிட்ட விடுதலையுணர்வுப் பாக்களுக்குப் பாரதி பா—'ரதி'யாகவும் (பாக்க ளென்னும் இரதத்தின் சாரதியாகவும்), தேசியக் காதல் உணர்ச்சி விஞ்சிய கவிதைகளுக்கு 'ரதி'யாகவும் (காதல் தேவதை) திகழ்ந்த காரணத்தால் அக்காலத்திலேயே கவிதை புனைந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல்லார் ஆகியோர் பாரதிக்குப் பின்னர் தான் புகழ்பெற முடிந்தது.

இந்தியில் த்விவேதிகாலக் கவிஞர்கள் அனைவருமே காந்தீயக் கவிஞர்களாகத்தான் உருப்பெற்றனர். மைதிலிசரண் குப்தா, ராம ரேஷ்த்ரிபாடி, மாகன்லால், ஸோஹன்லால் த்விவேதி ஆகியோர் இந்திய தேசியத்தில் காந்தீயக் கொள்கைகளால் ஏற்பட்ட மாறு தல்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர். இவர்களின் பாடல்கள் அக்கொள்கைகளுக்கு மொழிவழி வடிகால்களாக அமைந்தன.

இந்திய தேசியத்தின் தனித்தன்மை

பாரதத்தில் தேசிய உணர்ச்சி கலாசார மறுமலர்ச்சியின் மூலமாகவும், தார்மீக ரீதியாகவும் வளர்ந்தது. ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், தியசாபிகல் சமாஜம், இராமகிருஷ்ண மடம் போன்ற பற்பல மறுமலர்ச்சித் திட்டங்கள் வாயிலாகப் பண்பாட்டு மேன்மைக்குப் புனரமைப்பு கிடைத்தது. இவற்றைத் தோற்றுவித்த மாமேதைகளும், அவர்வழி நடந்த பெரியோர்களும் பாரதநாட்டை ஒருமைப்படுத்தவும், தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிடவும், மனிதாபிமானக் கொள்கைவழி சமூகம் அமைக்கவும் பாடுபட்டனர். இச்சூழ்நிலையில் இத்தார்மீக உணர்வின் அடிப்படையில்தான் யுகபுருஷன் காந்தியின் நடை முறைக் கொள்கைகள் தேசியத்திற்குச் சாத்வீக நெறியில் அதுவரை உலகம்காணாத் தனித்தன்மையை அளித்தன. நாட்டின் விடுதலைக்கு வேறு பல நாட்டினரைப் பின்பற்றாமல் முன்னைய நம் நாகரிகத்திற்கு முரண்படாமல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்களும் சிந்தனை களும் அக்கால சமூகத்தின் விழிப்புணர்ச்சிக்கும், முன்னேற்றத் துக்கும் சாலச் சிறந்தனவாய் அமைந்தன. அவற்றின் பிரதிபலிப்பு அக்காலக் கவிதைகளின் இலட்சியமாகத் திகழ்ந்தது.

உலகறியா வரலாற்று உண்மையான இச்சாத்வீகப் போரிற்கு அடிப்படைக் கொள்கைகளாய் அமைந்த சத்தியம், அஹிம்சை, தியாகம், கருணை ஆகியவை இந்திய தேசியத்தின் தனிச் சிறப்புகள் எனலாம். சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும், யாவற்றிலும் சீலமாம் சத்திய இயல்பை ஏற்று அஹிம்சைவழி நடந்து காந்தி அருளிய மார்க்கம், சண்டை ஓய்ந்தபின் மற்ற நாடுகளும் விரும்பும் ஓர் தனிமார்க்கம். யுத்தக் கொடுமைகள் ஒழியவும், மனிதத்தன்மை மேலோங்கவும், உண்மை அமைதி காணும் சமூகம் அமைக்கவும் காந்திவழி மிக எளிய நடைமுறைக் கொள்கைகளை ஏற்றிருந்தது. எனவே மனித உள்ளுணர்வுகளின் தூண்டுதலாலும், சமூகப் பிரதி நிதியாய்த் தன்கடமையை நிறைவேற்றும் எண்ணத்தாலும் அக் காலக் கவிஞர்கள் காந்தீயவழிப் பாடல்கள் இயற்றினர். இந்தியில் குப்த, ஸோஹன்லால், சதுர்வேதி, த்ரிபாடி, சுபத்ராகுமாரி செள ஹான் ஆகியோரும் தமிழில் ராய. சொக்கலிங்கம், எஸ். டி. சுந்தரம், கவியோகி சுத்தானந்த பாரதி, பெரியசாமித் தூரன், திருச்சிற்றம் பலக் கவிராயர் ஆகியோரும் காந்தீயத்தின் மேன்மை விளக்கும் கவிதைகள் வடித்துள்ளனர்.

காந்தீயக் கவிதை—தமிழ்

மகாகவி பாரதியின் 'காந்தி பஞ்சகம்', 'நவரத்ன மாலை', 'சுதந்திரப் பள்ளு' ஆகியவற்றில் காந்தீயமே ஊடுருவி இருப்பதைக் காணலாம். நாமக்கல்லோவெனில் காந்தீயம் நம் உடமை; அதைக் காப்பது நம் கடமை என்றார். உப்புச்சத்தியாக்கிரகத்தின்போது பாடப்பட்ட 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடல்மகிமை நமக்குத் தெரிந்ததே. சேலத்தில் 22-10-1922 அன்று ஒரு சிறப்புரையில் மூதறிஞர் இராஜாஜி குறிப்பிட்டார்— 'அன்பு நிறைந்த தொண்டிலும், பல கலைகளிலும், புதிய நூல் களிலும் தன் நன்மக்கள் வாயிலாக நமதருமைத்தாய் விளங்கி வருகிறாள். தமிழ்த்தாய் பெற்ற நன்மக்களுள் ஒருவராகிய நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் தேசியபக்தியை நான் நான்கு அறிவேன். இராமலிங்கம் பிள்ளையின் பாடல்கள் சிற்சில சமயங்களில் தேசியக் கவிச்சக்கிரவர்த்தி ஸ்ரீ சுப்ரமணிய பாரதியாருடைய பாடல்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றன. இக்கவிஞர்கள் காந்தியடிகளை மனிதராகவும் அவர்கடைபிடித்த நெறியைச் சமூக நெறியாகவும் கொண்டு பாடினர்.

சத்தியம், அஹிம்சை, சுதேசிமனப்பான்மை, கதரியக்கம், சமதர்மக் கோட்பாடு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை,

முன்னேற்றத் திட்டம் ஆகிய சமூக வழிமுறைகளுக்காக இவர்கள் இந்தியப் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்த தெய்வநம்பிக்கை, கடவுள் வழிபாடு, பக்தி, இறையியல் ஆகியவைகளிலும்கூட தேசிய உணர்வுக்கு உகந்த எண்ணங்களை வடித்தனர். மேலும் அன்பு, கருணை, ஒற்றுமை, தியாகம் போன்ற மனிதத் தன்மைகளுக்கும் ஏற்றம் அளித்து தேசியத்துடன் கூட பரந்தநோக்கில் மனிதாபிமானத்தையும் இவர்தம்பாடல்கள் கருப்பொருட்களாகக் கொண்டன.

தமிழில் 'தமிழ்க்கடல்' அவர்களின் காந்தி கவிதைத் தொகுப்பு மரபுவழிக் கவிதைகளில் காந்தீயத் 'திவ்யப்பிரபந்தமே' எனலாம். திருவேங்கடசாமியின் 'காந்தியடிகளின் நெஞ்சுவிடு தூது', அசலாம்பிகையின் 'காந்திபுராணம்', சுத்தானந்த பாரதியின் 'காந்தி காலக்ஷேபம்' ஆகியவையும், கிராமீயப் பாட்டின் பாணியில் அமைந்த கொத்தமங்கலம் சுப்புவின் 'காந்தித் தாத்தா கதை'யும் இவண் குறிப்பிடத்தக்கன. இவற்றில் கவிதைகளின் பொருள்வளம், சொல்வளம் இரண்டிலுமே பழையநெறியும் காலத்திற்கேற்ற கருத்துக்களும் இணைந்து தேசியத்தின் மேன்மையையும், காந்தீய தேசியக் கோட்பாடுகளையும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் வெளிப்படுகின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் பாரதிவழி வந்தாலும், தனிச் சிறப்புக்கள் பலபெற்றவர். 1929-ஆம் ஆண்டு 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு' என்ற நூலை இயற்றினர். அந்நூலில் காந்தி வழிநின்று அவர் தீண்டாமைக் கொடுமையைச்சாடிப் பாடியுள்ளார். 'கதர் இராட்டினப்பாட்டு' 1930-ல் வெளிவந்தது. சாதியை எதிர்க்கும் இவரது தீவிர எண்ணம் 'பாரதியின் உள்ளம்' வாயிலாக அறியக் கிடைக்கிறது. 'புரட்சிக்கவி' என்ற பட்டம் பகுத்தறிவு நெறிக் கருத்துக்களை அஞ்சாநெஞ்சத்துடன் பரப்பமுயன்றபொழுது இவருக்குக் கிடைத்தது. சமுதாயத்தைச் செல்லரித்துச் சீர்கெடவைத்திருக்கும் எண்ணங்களையும், ஏற்பாடுகளையும், அவற்றுல் விளையும் கோரக் கொடுமைகளையும், ஆணவத் திமிர்த் தாண்டவங்களையும் கண்டு கொந்தளித்த கவிஞராக இவர் புரட்சிக்குரலை எழுப்பினர். அவர்தம் பாடல்களின் பொதுவுடைமைக் கொள்கைகளையும், புரட்சி எண்ணங்களையும் கொண்டு வளர்ந்த தமிழ்க் கவிஞர்கள் பலர். அவர்களுள் பாரதிதாசனுக்குப் பிறகு நம்நினைவில் நிலைப்பவர்கள் பாலபாரதி, சுத்தானந்தயோகி, வாணிதாசன், சுரதா, சுரபி, சாலை இளந்திரையன், தே. ப. பெருமாள், இளங்கம்பன், தமிழ்க் கண்ணன், பொன்னடியான் ஆகியோர்,

காந்தீயக் கவிதை—இந்தி

இந்தியில் மைதிலிசரண்குப்தவிற்குப் பின்னர் இயற்றப்பட்ட கவிதை இலக்கியத்தில் காந்தீயத்தின் கோட்பாடுகள், அவைகளின் விளக்கம், மேன்மை ஆகியவை பாட்டுக்குரிய பொருள்களாம். த்ரிபாடியின் 'பதிக்' சிறுகாப்பியத்தில் சத்தியம், அஹிம்சை இவையே காவியத் தலைவனின் கொள்கைளாய் அமைந்துள்ளன. ஸ்ரீதர்பாடக் இயற்றிய 'பிரமர்கீத்'ன் குறியீட்டுக் கவிதையில் காந்தீய தேசியத்தின் தத்துவங்கள் புதுவிதமாக உருப்பெற்றன. பெண்புலவர் சுபத்ரா குமாரி சௌஹான் அவர்களது 'விஜயீ மயூர்' கவிதையில் மயில் சத்யாக்கிரகத்தின் சின்னம். ஸோஹன்லால் த்விவேதியின் 'ப்ரபாதீ', 'பைரவி', 'பூஜாகீத்', 'சேதனு', 'யுகாதார்' 'முக்திகந்தா', 'காந்தியயன்' ஆகியக் கவிதைத் தொகுப்புகளின் பாக்கள் காந்தீய தேசிய இலக்கியத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுக்கள். இக்காலக் கவிதைகள் குறுகிய மனப்போக்கைத் தவிர்த்து விரிவான தேசியத்திற்கும், மனிதாபிமானக் கொள்கைகளுக்கும் வழிவகுத்தன.

த்விவேதியுகத்திற்குப்பின் கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சியை அடிப்படையாகவும், காதல், இயற்கை, அழகு, மனத்தின் உள்ளுணர்வுகளை மையமாகவும் கொண்டு எழுதப்பட்ட 'சாயாவாதி' யுகத்தில் தேசிய உணர்வு ஒரு அனுபவபூர்வமான துல்லிய உணர்வாக வடிக்கப்பட்டது. டாக்டர் நகேந்திரவின் சொற்படி ஒருபுறம் இக்கவிஞர்கள் பாரதத்தின் உட்பூசல்களையும், வேற்றுமைகளையும் தவிர்க்க தேசிய உணர்வுக்கு அறைகூவல் விடுத்தனர் எனில், மறுபுறம் மக்கள் அன்னியராட்சியினின்றும் விடுதலைபெறச் சுதந்திர வேள்வி வளர்க்கவேண்டியே பா இசைத்தனர். சூர்யகாந்த் த்ரிபாடி நிராலா, ஜயசங்கர் ப்ரஸாத், சுமித்ராநந்தன் பந்த், பாலக்கிருஷ்ண சர்மா நவீன், சுபத்ராகுமாரி சௌஹான், ராம்தாரி சிம்ஹ தினகர் போன்றோர் இந்தியாவின் பழம்பெரும் புகழை நினைவூட்டித் தேசிய ஒற்றுமைக்காகவும், விடுதலைக்காகவும், பண்பாட்டை நிலைநாட்டவும் மக்களிடையே அழியா வேட்கையை வளர்த்த கவிஞர்கள். இவர்களின் காந்தீயவழிப் பாடல்கள் தேசிய உணர்வை மனிதனின் இன்றியமையாத இயற்கை உணர்வாகவே சித்தரித்தன. அவர்களின் மொழிநடையில் பொருள்நயமும், சொல்நயமும் இவ்வுணர்வுக்கு ஏற்ப அமைந்திருந்தன. த்ரிசூலின் 'ராஷ்ட்ரீய மந்த்ர' (1921), 'குப்த'வின் 'ஸ்வதேச சங்கீத' (1925), ஜகந்நாதப்ரஸாத் மிலிந்தின் 'ஜீவன் சங்கீத்' (1922-36), தினகரின் 'ரேணுகா'

(1935), கேதார்நாத் மிச்ர ப்ரபாத்தின் 'ஜ்வாலா' (1929), மகேஷ் சந்த்ர ப்ரஸாத்தின் 'காங்கிரஸ் சதக்' (1936) போன்றவை பண் பாட்டு மறுமலர்ச்சி, தேசிய உணர்வு, தியாக மனப்பான்மை ஆகிய வற்றை வெளிப்படுத்தி, சமூக சீர்திருத்தத்திற்கான மூடநம்பிக்கை எதிர்ப்பு, தேசப்பற்று, விழுப்புணர்ச்சி, எழுச்சிமிக்க ஆக்கபூர்வமான கோட்பாடுகள் ஆகியவைகளையும் பொருள்களாகக் கொண்ட பாடல்களுக்குச் சில சான்றுகள்.

பிற்காலம்

1938-ஆம் ஆண்டில் தேசிய வாழ்க்கையில் யதார்த்த ரீதியாக ஏற்பட்ட மாறுதல்களின் பிரதிபலிப்பாக, இலக்கியமும் சமுதாய நோக்கில் யதார்த்தமாகப் பிரச்சனைகளின் தலைவிரிகோலத்தைக் கண்டு அதிவீறு கொண்ட முற்போக்கு உணர்வுக்கு வழிவகுத்தது. வர்க்கப்போராட்டங்களும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் அறவே நீங்கப் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த விழைந்த காலத்தின் பிரதிபலிப்பு காவியத்தில் முற்போக்கு இலக்கியம் என அழைக்கப் பட்டது. இந்தியில் 'சாயாவாதி' கவிஞர்களே இம்மாறுதல் களுக்கும் குரல் கொடுத்து மிக உயர்ந்த காவியப்படைப்பை ஈந்தனர். 'குருக்ஷேத்ர', 'ஜயபாரத்', 'நகுல்', 'உன்முகத்', 'ரஷ்மிரதி', 'விக்ரமாதித்ய', 'இதிகாஸ்கே ஆன்ஸீ', இவைகளின் கருப்பொருட்கள் வாழ்வின் பிரத்தியட்சமான உண்மைகளே. முற் போக்குக் கவிஞர்கள் பாக்களில் இவை இன்னும் செயல்ரீதிவழி ஈடுபாட்டுடன் தெளிவாகக் கூறப்பட்டன. ஆகவே சமுதாய முன்னேற்றமே இந்தி இலக்கியத்தில் தாரகமந்திரமாக ஏற்கப் பட்டது. இந்த எண்ணமும் தேசியக் கவிதைகளின் ஓர் ஆக்க பூர்வமான தூண்டுதலேயாகும். நாகார்ஜுன், ராங்கேய ராகவ், சிவமங்கல், சிங்க் சுமன், த்ரிலோசன், பாரத்பூஷன் அக்ரவால் போன்றவர்கள் இத்தலைமுறையைச் சார்ந்தவர்கள்.

தமிழ்ப் பற்று

விடுதலைக்கு விழைவுகொண்ட காலம் முதலே தமிழ்க் கவிஞர்கள் தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு என்று தமிழுக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் குரல்கொடுத்து வந்தனர். இவற்றிற்குத் தனிப்பெரும் பாக்கள் இசைத்தவர்கள், பாரதி, பாரதிதாசன், நாமக்கல்லார் வழிவந்த அனைத்துப் பாவலர்களும்; பிற்காலத்து முடியரசன், ஐ. உலகநாதன், சுரதா, பொன்னிவளவன் ஆகியோர்

பாடல்களிலும் இவற்றுக்கு இடமுண்டு. தேமதுரத் தமிழோசையில் இராமலிங்கம் பிள்ளை குறிப்பிட்டபடி "மொழிப்பற்று என்பதும், இனப்பற்று என்பதும் பிறமொழியினையும், பிற இனத்தவரையும் குறைத்துப் பேசுவதல்ல. நம் மொழியிலுள்ள சிறந்த அறிவையும் நம் இனத்தவர்கள் மேற்கொண்டு வாழ்ந்த சிறந்த கொள்கைகளையும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதேயாம்." எனக் கொண்டு தேசிய உணர்வுப் பயிருக்கு இம்மொழிப்பற்றின் உரம் இட்டு வளர்த்தல் இந்திய பண்பாட்டுப் பரந்த நோக்கின்கண் பற்றுக்கொண்ட தேசியக் கவிஞர்களுக்குச் சிறப்பாக அமையும்.

முடிவுரை

இவ்வாறு தேசியக் கவிதைகள் பாரதநாட்டு விடுதலை வேட்கையில் துவங்கி, பண்பாட்டுப் புனரமைப்பு, சமூக விழிப் புணர்ச்சி, சமதர்மக் கொள்கை, தார்மீக ஆன்மீக வளர்ச்சி, சமூக சீர்திருத்தம், ஒருமைப்பாடு போன்ற உயர்ந்த பல கோட்பாடுகளையும் உள்ளடக்கி இந்தி, தமிழ் இலக்கியங்களின் பலவகைப்பட்ட கால கட்டத்திற்கும் நோக்கிற்கும் ஏற்ற பொருள்களாக அமைந்தன.

"மேதினியிற் சோதிவிளக்கு"
(பாரதிதாசன் பார்வையில் பாரதி)

கு. மங்கையர்க்கரசி எம்.ஏ., எம்.பில்.,
தமிழ் இலக்கியத்துறை, பல்கலைக்கழக இணைவகம் சென்னை.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இணையற்ற இந்தியக் கவிஞர் சிலருள் குறிப்பிடத்தகுந்தவர் பாரதியாவார். மலரினும் மெல்லியப் பொருளாகக் கவிதையை நினைந்து பெண்மைச் சாயல்/மென்மைச்சாயல் கலந்து பலர் கவிதையை எழுதிக் கொண்டிருந்த வேளையில் வீறுபொங்க ஆவேசத்தோடு கவிதையை எழுதியவர் பாரதி. காரணம், அவர்தம் கவிதைக்கெனத் தேர்ந்து கொண்ட கருத்தும் (content) களனும் (form) அப்படி. அறிய பொருளை யாவர்க்கும் விளங்கும் எளிய சொல்லில், எளிய நடையில் வீறு பொங்கப் பாடியதால்தான் அவர் மகாகவியானார் அத்தகைய கவிவேந்தரை இன்னொரு கவிவேந்தர், 'ஸ்ரீசுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம்' எவ்வாறு மதிப்பீடு செய்கின்றார் என்பதைக் காணலாம்.

பாரதியாரின் படைப்புத்திறம், படைப்புச்சூழல், படைப்புப் பொருள் ஆகியன பற்றி ஏழு கவிதைகளில் 380 வரிகளில் திறனாய்கிறார். பாரதிதாசன் சில இடங்களில் பாரதியின் உள்ளத்தை வெளிக் காட்டுகிறார்; சில இடங்களில் பாடல்களின் உருவத்தைக் காட்டுகிறார், சில இடங்களில் உள்ளடக்கத்தைக் காட்டுகிறார். எத்துணை வகையாகப் பாரதியைப் பகுத்தாய்ந்த போதிலும் அத்தனையிலும் பலசிறப்பு அம்சங்களையே காண்கிறார். மொத்தத்தில் பாரதியைப் பற்றிய பாவேந்தரின் திறனாய்வு பாராட்டுமுறைத் திறனாய்வாகவே அமைந்துள்ளது. ஆனால் நெறி பிறழாமல் தகுதியறிந்து பாராட்டுகிறார். பாரதியைப் பற்றிய பாவேந்தரின் பாராட்டுகள் இன்று பல திறனாய்வாளர்களால் ஒத்துக் கொள்ளப் பட்டும் விரித்துரைக்கப்பட்டும் வருவதினின்றும் பாவேந்தரின் தீர்க்கதரிசனமான பாராட்டுத்திறத்தை எண்ணி வியக்கலாம்.

பாரதியை மூன்று நிலைகளில் வைத்து மதிப்பிடுகிறார் பாவேந்தர். தமிழ், தமிழகம் என்ற உணர்வில் அரும்பி இந்திய விடுதலை என்ற உணர்வில் விரிந்து உலக வாழ்க்கை (லௌகீக நெறிகள்) என்பதில் மலர்கின்றன பாரதியின் கவிதைகள்.

பாரதியின் கவிதைத் திறத்தையும், செயல் திறத்தையும், எண்ண ஓட்டங்களையும் பாவேந்தர் பின்வருமாறு மதிப்பிடுகின்ருர்.

'பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனெருவ
செந்தமிழ்த் தேனீ சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் —கவிமுரசு!

நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கவிதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன். நாட்டிற்
படரும் சாதிப்படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்!
என்னென்று சொல்வேன் என்னென்று
சொல்வேன்!

என்று வியந்து புகழ்கின்ருர். பழமையைச்சாடி, புதுமையை வரவேற்றுப் புரட்சிக்கு வித்திடும் யுகக் கவிஞராகக் காண்கிருர்.

முதல் நூலுக்கு வழிநூலும் வழிநூலுக்குச் சார்பு நூலுமாகச் சில பொருள்களையும் மரபுகளையுமே கொண்டு தமிழ்க் கவிதை பெருகிக் கொண்டிருந்த வேளையில், பாரதி புதிய முறையில் புதிய பொருளைப் பாடியதை எழுச்சியோடு வரவேற்கிருர்.

'உய்வகை காட்டும் உயர் தமிழுக்குடிப்
புதுநெறி காட்டிய புலவன்'

என்றும்

'எழுத்தில் சிங்க ஏற்றின் குரலைப் பாய்ச்சியவன்'

என்றும்,

'நதிப் பெருக்கைப் போல் கவிதை
நற்பெருக்கின் இன்ப ஒலி'யை

எழுப்பியவன என்றும்,

'பொழிந்திடு செவ்விய உள்ளம் கவிதை உள்ளம்
பூண்டிருந்த பாரதியாராலே இந்நாள்
அழுந்தியிருந் திட்டதமிழ் எழுந்ததென்றே
ஆணையிட்டுச் சொல்லிவிடுவோம் அன்னை மீதில்'

என்றும் பாரதியின் கவிதைப் போக்கைக் கோடிட்டுக் காட்டுகிறார். இத்தகைய புதிய போககில் 'கிராமிய நன்ஞகரிகத்தையும், 'கீர்த்தியுறத் தேசியத்தையும்'' சராசரபசேர் லௌகிகத்தையும்' சொனனதோடு சமூக இழிநிலேகளையும் அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழகத்தில் நிலவும் சாதிக் கொடுமைகள், பிறப்பில் உயர்வு தாழ்வு காணும் நிலே ஆகியவற்றைப் பாரதி வன்மையாகக் கண்டிபபதைப பாவேந்தர் எடுத்துக்காட்டுகிருர். படைப்பாளரின் திறமையைப் பொறுத்து மலா மட்டுமல்ல, சருகுகூட மணம் பெறலாம; திறமையுள்ள குயவன் கையில் கிடைத்த களிமண்ணைப போல, பாரதியின் விரல இடுககில் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளும், மன விகாரங்களும் கவிதைப் பொருள்களாகச் சிக்கிக் கொண்டு அழகு பெற்ற போதுதான் கவிதைச் சோலேயின் ஒரு பகுதியில் ஒளியே விழததொடங்கியது, சமூக நரகங்கள் கவிதைச் சொர்க்கங்களாயின.

தமிழ், தமிழ்நாடு, தமிழர் என்ற உணர்வுகள் மின்னல் கீற்றுகளாய்த் தமிழ் இலககிய வரலாற்றில் பல இடங்களில் பளிச்சிட்டுக் கிடக்கின்றன. பாரதியின் பாடல்களிலும் பளிச்சிடுகின்றன. ஆயின் பாரதியிடம் மட்டுமே இவ்வுணர்வுகள் மக்கள் குரலாய் அல்லது சாதாரண மக்களும் மேற்கொள்ளும் உணர்வாய் வெளிப்படுகினறது. அதனுல்தான் ஆயிரக் கணக்கான பாடல்களைப் பாடிய கமபனும் அளிக்க வொண்ணுத தமிழுணர்வைப் பாரதி அளித்தான் என்று பாவேந்தர் கூறுகிருர். செந்தமிழ் நாட்டுக்குப் பெருமையை, செந்தமிழரின திறததை, செநதமிழின் மேன்மையைப் பாரதி கூறியது கவிதையழகிற்காக அல்ல; (Poetic fancy) காலத்தின் தேவைக்காக. கதம்பப் பண்புகளும் கலவை நாகரிகங்களும் மிகுந்த இந்திய நாட்டில வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழரின் இடம் என்ன என்ற சிநதனேயின் வெடிபபுததான் பாரதியின் மொழி இன, நாட்டுப்பற்றுப் பாடல்கள். இதை முழுமையாக உணர்ந்தவர், உட்கொண்டவர் பாவேந்தர் ஒருவர்தான். அதனுல்தான் பாவேந்தர் தொட்டுக்காட்டிய இவ்வுணர்வுகளைப் பாவேந்தர் இலங்கச் செய்தார். பல்லவிக்குச் சரணமானுர்.

சிக்கல்கள் அல்லது தேவைகள் எவையாயிருப்பினும் அவற்றையும் கடந்து பிரபஞ்சத்தை அவாவிநின்று பாடவல்லவனே தலைசிறந்த கவிஞன். மானுடம் என்பது கவிதையின் பொருள்; பிரபஞ்சமே கவிதைக் களன். பாரதியின் கவிதைநெறி இந்த அடிப்படையில்தான் விரிகிறது. இதைப் பாவேந்தரே பின்வருமாறு குறிப்பிடுகினருர்.

'பாரதியார் உலகக்கவி !—அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர் !
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்'

என்று பாரதியின் உலகப் பார்வையைக் காட்டுகிருர், 'ஞானரத' மேறி, வானவெளி தாவி அவர் படைத்த கதைகளும், கட்டுரை களும், கவிதைகளும், உலக நோக்குடையவையாகும். சமுதாய இழிநிலைகளைப் பாரதி விரித்துப் பாடியது, உலகில் மக்கள் எங் கெல்லாம் தாழ்ந்து அல்லல் படுகின்ருர்களோ அத்தனை பேருக்கும். பொருந்தும்.

கவிதையில் பாடுகின்ற பொருள்கல்ல, பாடப்படும் முறைதான் முதன்மையானது. நடைமுறைச் சிக்கல்களாயினும் நடைமுறைக்கு அப்பாற்பட்ட கற்பனைத் தேரோட்டமாயினும், எதுவாயினும் அவை கவிதை என்ற லயத்தில் வந்துசேரும் போதுதான் அழகு பெறு கின்றன. ஒரு கவிஞன் உலகநடப்புகளை ஒடிஒடித்தொட்டுக் காட்டினலும் அவன் அடிப்படையில் கவிஞைக இருககின்ருனு? அவன் படைப்பில் கவிதைப் பெற்றி இருக்கினறதா என்று அறிவது இன்றியமையாதது. பாவேந்தர், பாரதியிடமும் இதைத் தான் சோதித்துப் பார்க்கிருர். பாரதியின் கவிதைகளை உரை கல்லில் உரைததுப் பார்த்தபின்தான் அவரை 'மகாகவி' என்று முழங்குகின்ருர் மேலும் பாரதியை, 'புதுநெறி காட்டிய புலவன்', 'கவிதைக் குயில்', 'கவிமுரசு', 'சொற்கோ', 'அறிஞன்', 'நாவலர்', 'பாவலர்', 'உலககவி', 'அண்ணல்', 'சீருயர்ந்த கவிஞர்' 'மாகவிஞர்', 'தூய்மைக் கவிஞர்', எனறு பல திறத்தில் மதிப்பிடுகின்ருர். ஒரு படைப்பாளியைபபற்றி இன்னெரு படைப்பாளி புகழ்கின்ற புகழ்ச்சியிது. இந்தப் புகழ்ச்சி மொழிகள் ஏறக் குறைய 35 ஆண்டுகட்கு முனபே பிறந்திருககின்றன. இன்று இவை ஒவ்வொன்றும் உண்மை என்று ஆய்வாளர்களால் உறுதி செய்யப்படுகின்றன.

'மகாகவி' என்ற தலைப்பில் பாரதியை உலக கவியாக்கிப் பாவேந்தர் எழுதிய பாடலுககுரிய சூழலும் பின்னணியும் அறிய வேண்டியது. ஆனமீகததில் லௌகிகததையும், பேரின்பத்தில் சிற்றின்பததையும் கலநது பாரதி எழுதியதாக அன்றைய விமர் சகர்கள் விரித்துரைத்து பாரதியைக் கவிஞராகவே ஏற்றுக் கொள்ள மறுத்தனர். இவ்விரிரைசளுக்கு விருததியுரை செயது தம் வார இதழில் எழுதியவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியாவார்.

இவர்களின் கருத்துகளை மறுத்துப் பாரதியின் கவிதைச் சாரங்களையெல்லாம் தொகுத்துத் தந்து அவரை 'மகாகவி' ஆக்கிக் காட்டுகின்ருர் பாவேந்தர்.

பாரதியுடன் பத்தாண்டுகளுக்கு மேல் நெருங்கிப் பழகியவர் பாவேந்தர். பாரதியின் கவிதைகளை மட்டுமின்றி பாரதியையும் அளவுக்கு அதிகமாக நேசித்துள்ளார். அடிமை இந்தியாவைக் கண்டு பாரதி ஆத்திரப்பட்டு எழுதுவதில் அவர் முரட்டுத் தனம் தெரிந்தாலும் அடிப்படையில் குழந்தை உள்ளம் கொண்டவர். பாரதியின் உள்ளம் '**தங்கு தடையற்ற உள்ளம்**', '**சமத்துவ உள்ளம்**', '**பெரிய உள்ளம்**', '**இன்புள்ளம்**', '**அன்புள்ளம்**', '**பச்சை அன்புள்ளம்**', என்று பாவேந்தர் எழுதுகின்ருர். '**உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்**' என்று பாரதி தம் கவிதையில் ஓரிடத்தில் சொல்வதை இங்கு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

கனகசுப்புரத்தினம் பாரதிக்கு தாசனு என்று இன்று பலர் விஞக்குறி வரைகின்றனர். பாரதியின் பாவேந்தர் கொண்டிருக்கும் ஈடுபாட்டை அறியும்போது இந்த விஞ எழுவதற்கு நியாயமே இல்லை என்று தோன்றுகிறது. பாரதியின் வாழ்க்கை முறையில் ஈடுபாடு கொள்கின்ருர். பாரதியை அவர் சமுதாயம் புறக்கணித்ததைக் கண்டு துயரப்படுகிருர் பாரதியின் கவிதைகளில் தம்மையே பறிகொடுக்கின்ருர். ஒருவரைக் குருவாக ஏற்றுக் கொள்வதற்கு இவையே போதுமானவையாகும். மேலும் பாவேந்தர் எழுதிய ஏழுகவிதைகளில் எந்த இடத்திலும் பாரதியை முரண்பட்டு விமர்சிக்கவில்லை. மாருக இதுவரை எந்தக் கவிஞரும் மதிப்பிடாத நிலையில் இலக்கிய நயத்தொடு பாரதியைப் புகழ்ந்து பாடுகிருர். பாரதி நூற்ருண்டு விழாக்காணும் இந்நாளில் பாரதியை ஒரு கலங்கரை விளக்கமாக எண்ணிப் பாவேந்தர் பாடிய வரிகளே காலத்தை வென்று நிற்கும் தன்மை வாய்ந்தவை. பாரதியின் கவிதைகள்

'காதினிக்கும் நல்ல கருத்தினிக்கும் —அஃதிந்நாள்
மேதினியில் சோதி விளக்கு'

என்ற பாவேந்தரின் கூற்று புகழுரையல்ல, பொன்னுரையாகும், முழுமை பெற்ற முத்திரை வரிகளாகும்.

BHARATHI POET REVOLUTIONARY

BY

PROF. DR. SINGARAVELU

Prof. of Tamil & Chairman, Board of Studies in Tamil, Osmania University

Subramania Bharathi, popularly called Bharathi by Tamils is a great poet and prose writer who introduced a new diction and style into Modern Tamil Language. Bharathi had been an ardent student of the Tamil language and literature since his boyhood and would recite beautiful Tamil verses and collect beautiful ideas available in the language and won the apprecia- tion of the scholars of the period. A keen observer of nature and society and lover of freedom, Bharathi inaugurated an epoch in Tamil poetry which became multipled with new concerns and that came into play as a result of a general awakening in the country - concerns which are political, cultural, social, religious and economical.

The Morning Star of Modern Tamil:

Tamil language which is as ancient as the hills and rivers of the country, faced a trying situation in the Modern period when Bharathi was born. Owing to change of political situation in the country, Tamil language suffered neglect and under- standing for want of patronage among other things. Only a few scholars belonging to the courts of petty chieftains and others, or patronised by some rich people or by Mutts wrote poetry. The language which held sway since the time of lost Lemuria continent had such a rich heritage as Tholkappiam Grammar, the enormous Sangam works, the great epics, the hymns of Nayanmars and Alwars, the Bharatham, the Kamba Ramayanam and the commentaries of great scholars, which were all forgotten by Tamil scholars.

The Tamil Language having a history of 5000 years suffered heavily in the hands of self seekers. They recited poems in Tamil praising selfish men neglecting the Tamil tradition and culture. Thus darkness covered the whole Tamil horizon. It was at that time that Poet Subramania Bharathi rose like the Morning Star dispelling the darkness and brightening the Modern Tamil World through his revolutionary melodious poems and prose works. His poems were written in a language which was appreciated by literates and non-literates and were closely related to life of the time. It brought a revolutionary change in the field of Tamil poetry and thus Bharathi could be symbolized as Morning star of Modern Tamil. The poets who followed Subramania Bharathi adopted the same mode and added rich treasures of poetry and prose in Tamil fully suiting to modern needs and temperament. His disciple Kanaga Subbu Rathinam, who proudly called himself Bharathi Dasan meaning the humble disciple of Bharathi adopted the methods of Bharathi in reciting verses and prose works and improved the modern Tamil, bridging the gulf between spoken and written Tamil which existed before Bharathi emerged on the Tamil literary realm. The Poet himself says in one of his epistle poem that his poetry contains everything he knew and that by his entering the poetic world of Tamil he has erased the impression that there is no poetic king in Tamil to adorn the Tamil language. Further he adds that his poem contains new taste, new ideals, new fertility and new words. He contends that his poems are immortal. This idea is expressed by the following lines of Bharathi :

puviyaṉaittum porrita vaṉpukaḷ pataittut tamiḷ
moḷiyaip pukaḷilerrum
Kaviyaracar tamiḷ nāṭṭuk killaiyeṉum vacai
yeṉṉār kaḷinta tanrē
cuvai putitu, poruḷ putitu, valam putitu corputitu,
cōti mikka
nava kavitai, eṉṉāḷum aḷiyāta makā kavitai

These lines bring out the poet's pride in his own poetry and his ambition to bring fame to Tamil Language and to make the language popular in the whole world. Bharathi unlike

the other poets does not show any false modesty but proudly declares that he is the king of all poets and that his mission is to restore to Tamil its glory that it had.

An Uncompromising Revolutionary of Tamil language:

Bharathiar was pained that the people in the country neglected the study of their mother tongue in taking up the study of the English. Bharathiar was opposed to the study of other languages at the expense of the mother tongue. This does not mean that he opposed the study of other languages. His aim was that the first importance should be given to one's own mother tongue before acquiring knowledge in other languages. If mother tongue is neglected, it would mean neglect of one's own culture and civilisation, in which the springs of creativity of the society remain. Bharathiyar realised this even at a tender age. His father like other parents of that period admitted him into an English institution. Bharathiyar was so agitated at this that he ignored the will of his father and refused to study English at the cost of his own mother tongue. He left the institution and condemned this attitude in the poems of his autobiography. He says that those who have studied English at the expense of their mother tongue would be ignorant of such literary luminaries Kamban and Kalidasa, astronomer Bhaskaran, the great grammarian Panini and Lord Shankara. Thus, this kind of study results in completely forgetting one's own culture and achievement of the past. Further this study of English resulted in the loss of a thousand rupees to his father and brought thousands of evils to him. He is prepared to proclaim this fact in forty thousand temples.

Kamban enroru manitan vālntatum
Kālitasan kavitai punaintatum
umpar vānattuk kōḷaiyum mīnaiyum
ōrntaḷantatōr Bāskaran māṭciyum
namparuntira lōṭoru panini
ñāla mīti lilakkaṇam kaṇṭatum
impar vāḻvi nirutikaṇ ṭunmaiyin
iyal puṇarttiya Sankara nūrramum

anna yāvu marintilar bāratat—
tāṅkilam payil paḷḷiyuṭ pōkunar
celavu tantaikkō rāyiran cēnratu
tītenekkup pallāyiram cērntana
nalamo reṭṭu ṇaiyun kaṇṭilenitai
nārpa tāyiraṅ koyilil colluvēn.

These lines as is well known clearly show the defect in the system of education which costed a heavy loss to the society of the period. Thus his poems created a turning point in the field of education, and the study of one's own mother tongue.

Society and Caste System:

India is famous for its cultural heritage. Particularly the South Indian or Tamil civilisation has a very ancient history which bears testimony to its exposal of great ideas. This society had its caste system based on profession. Grouping the people on the basis of profession is a usual phenomenon which is prevalent in every country and society, but the mankind is one. The Purananuru verses proclaim to the world that "Every country is my country and every man my kinsman". The poet Thiruvalluvar says that all are equal by birth and that people differ in respect of skill. The poetess Avvaiyar also emphasises that, "there are only two castes. One that has a charitable disposition and the other that is not so." No one supports the division of people on the basis of birth. In the evolution of human history and in the ways of living certain things good or bad enter the society knowingly or unknowingly, and extend their roots in it. Most of the evils of society are due to this factor and the sooner we get rid of these the better would be for us. The caste system is one such evil which divided the people and paved the way for foreign rule and also for the growth of hatred in the country. This fact was realised by Bharathi who vehemently condemned the caste system. Further this caste system led to the system of untouchability which is far more dangerous to the country's unity. Bharathiar, who always fought for the freedom of the country throughout his life also fought against the caste system in our country. The freedom of the country without freedom to the individual is

meaningless and will remain incomplete. This is the idealism of Bharathiar who boldly practised it in his life, thus incurring its displeasure of many caste Hindus of his period. He not only preached oneness of humanity but also oneness of creations. The following verses bear this out :–

Freedom, Freedom, Freedom
To the Pariahs, to the Tiyas, to the Pulayas, Freedom
To the Paravas, to the Kuravas, to the Maravas, Freedom
Come let us work together without doing bad to any
Come let us have good education and wisdom
and will live together in this country.
Let there not be poor and slave and
Let there not be any oppressed.

This idea is well emphasised in the following stanzas in Tamil :

viḍutalai ! viḍutalai ! viḍutalai
paṟaiya rukku minku tīyar
pulaiya rukkum viḍutalai
paravarōṭu kuṟava rukkum
maṟavarukkum viḍutalai
tiṟamai koṇṭa tīmaiyaṟṟa
toḻil purintu yāvarum
ternta kalvi ñāṉameyti
vāḻva minta nāṭṭilē
ēḻaiyeṉṟum atimaiyeṉṟum
evaṉumillai jātiyal
iḻivu koṇṭa maṉitareṉpa
tintiyāvil illāiyē

The poet here proclaims that there is no oppressed or untouchable person in India. The eradication of untouchability and caste system, the poet tells, will be like nectar to Indian society. If the Indian society has to live a long life, casteism should be completely wiped out from the society.

cāti iraṇṭoliya vērillai yenre
tamil makaḷ colliya col amilta meṉpōm

In a poem addressed to a child entitled 'Pāppā pāṭṭu' he declares, 'O Baby, there are no castes in our society, saying high and low

on the basis of birth is a sin' says the poet in the following lines :

cātikaḷ illaiyadi pāpā kulat-
tāḷcci uyarcci colal pāvam
niti, uyarta mati, kalvi anpu
niṟaiya uṭaiyavarkal mēlor

Freedom and Emancipation of Women

Indian women who in ancient days enjoyed equality of rights like men were nobly treated and highly respected by the society. In Tamil country women occupied a very important place in every walk of life. They were not considered mere objects of beauty and attraction but as symbols of strength and chastity, the base for a happy and prosperous society. The women folk of Sangam period enjoyed equal rights with men and chose their own life partners. There were many women poets even during Sangam period. The poetess Avvaiyar is one whose poetry contributed morality and who was highly respected by all the kings and chieftains of Tamil land of that time and she averted many wars, reformed many kings by her timely advice. The great author Tiruvalluvar in one of his couplets says, 'What is lacking provided the wife is excellent? What is there, if the wife is not excellent'?

illaten illaval manpanal ullaten
illaval manak katai

There were a number of poetesses in Sangam period and they were as heroic as men. Pon Mutiyar, Putha pantiyan Theviyar, Kakai Patiniyar, Naccallaiyar, Vennikkurattiar are a few of those belonging to the Sangam, who were the moulders of Tamil society and culture. They were highly honoured by the then Tamil kings and were highly respected wherever they went. There was a number of sea erosions in Tamil country. The seas which destroyed the Tamil land could not destroy the deep rooted Tamil civilisation which was preserved in the heart of women. Kannaki of Cilappatikaram showed incredible strength of mind in proving that her husband was not guilty and that only the king was at fault. Alone in a foreign capital, she created a revolution in a big

city like Madurai and destroyed the bad people who afflicted the society. No wonder her chastity and valour was admired by the emperor Chera King Senguttuvan, who built a temple in the capital of the Chera country. In the festival he arranged for worshipping Kannaki, almost all the kings who ruled in our country at that period including the King of Ceylon participated and bowed before the idol of the Lady Kannaki who came from a merchant family of Pumpuhar. This example testified to the status women enioyed in ancient society. This secret is of the underlying character of Tamil and Indian civilisation. Chastity and good qualities of women are the soul of the society, without which the society cannot exist and flourish. Owing to change in circumstances and outlook of men, the freedom of women was restricted and they wore not allowed to have education, which forms a basic necessity and right of women. Further the property right was also denied to them. They were not allowed to go out of the house and mingle in the society. The quality of chastity was strictly enforced on women and not on men. Such was the plight of women. The widows in the houses were treated with contempt and were expected to do all the household work. Apart from this, they were kept out of holy functions such as marriage. In short the women should obey the father and mother when they were young, they should obey the husband and mother-in-law and others after marriage, they should obey the son when he grows up, and they should not desire anything for their confort throughout their life span. Some literary works were also written describing them as devils inflicting harm to the society. Apart from these things, in some parts, the system of child marriage was also introduced and a girl at tender age was married to a lad unknown to rhe and if something happened to the boy before she came of age, she had to remain a widow for the rest of her life. Like this, so many cruelties were perpetuated on women during the period of Bharathiar. Bharathiar as a social reformer and revolutionist vehemently reacted and recited many verses denouncing the oppression of women in society. Under the titles "Puthumaippen" 'Peṇkaḷ Vāḷka', 'Peṇkaḷ Vidutalaik Kummi' and 'Pen Vidutalai'

the poet extensively supports the freedom of women. He says that the people who try to enslave others are not human beings but are mad people only. He condemns this as mad action. The human beings which are with wisdom cannot be made as slaves and if somebody does, they are made people, says the poet in the fellowing lines:

arivu koṇṭa maṉita uyirkalai
atimaiyākka muyalpavar pittarām

Further the poet shows the advantage if men and women are treated as equals in the following lines:

āṇum peṇṇum nikareṉak koḷvatāl
arivilōnki iv vaiyam talaiilakumāl

If we treat man and woman as equals, the intellectual achievement of the country will be more. The world will become fertile through the hard work of both the sections of the society. This principle of giving equality of freedom to both will result in higher economic development and a better happy atmosphere in the society. Psychologically also this kind of oppression is very dangerous for future generations. The poet says

"nilattiṉ taṉmai payirkkuḷ a tākumām
nicatt oṉṭum maṭamaiyum koṇṭatāy
talattil maṇpuyar makkaḷaip peṟṟiṭal
cālavē yaritāvatōr ceytiyām"

The poet says that the quality of the crop depends upon the nature of the land which is responsible for its growth. The mother who is having a lower status in the family and in the society and immersed in ignorance cannot give birth to a child of great intelligence and of great accomplishment. By this example the poet emphasises that the status of women who are the mothers of the society should be raised at all costs for the benefit and well being of the entire society and that of the country. Further the poet says that if the ladies walk upright and if they look straight, if they have a higher form of education with deep knowledge, the lady of purity and perfection will bring no disgrace. This idea is well expressed by the poet in the following lines:

"nimirnta nannaṭai nērkoṇṭa pārvaiyum
nilattil yārkkum ancāta neṟikaḷum
timirnta ñāṉac cerukkum iruppatāl
cemmai mātar tiṟampuva tillaiyām"

From the above examples it is clear that the poet is condemning the oppression of women and encourages women to act very strongly against this cruelty. The poet says that the people who thought that the women should not touch books passed away or got defeated. The people who locked the ladies inside the house were put to shame and stood before us with bowed head. We women are capable of getting degrees and we have now come forward to frame laws and regulations for the country. We have come to prove that women are in no way inferior to men in wisdom and in efficiency. The lines of Bharathi are as follows:-

ēṭṭaiyum peṇkaḷ toṭuvatu pāvameṉ
ṟeṇṇi yiruntavar māyntu viṭṭār
viṭṭukkuḷḷē peṇṇai pūṭṭivaippō meṉṟa
vintai maṉitar talai kaviḻntār
paṭṭankaḷ āḷvatum caṭṭankaḷ ceyvatum
pāriṉil peṇkaḷ naṭatta vantōm;
eṭṭu maṟiviṉil āṇukkinkē peṇ
iḷaippillai kāṇeṉṟu kummiyati.

The examples given above show that the poet strove for the emancipation of women in our country. The dream of Bharathi has come true now and we are really proud that this country is now ruled by a lady.

Economic disparities and poverty :

